

நேதாஜியும் கிழக்காசிய விடுதலைப்போரும்

ஆக்கியோன்:

குன்றக்குடி மு.வீராசாமி



நேதாஜியும்
கிழக்காசிய
விடுதலைப் போரும்

942

ஆக்கியோன்:

குன்றக்குடி மு. வீராசாமி

முதற்பதிப்பு
ஜூலை 1965

விலை ரூபாய் நான்கு

காரைக்குடி சௌத் இந்தியா பிரசில்
அச்சிடப்பெற்றது

பொருளடக்கம்

மதிப்புரை

— o —

பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் நமது தாய் நாட்டைக் கைப்பற்றிய பிறகு, சிப்பாய்க்கலகம் என்று வழங்குகிற முதலாவது இந்திய சுதந்திரப்போர் 1857-ம் ஆண்டில் நடைபெற்றது. அப்போரில் நமது முன்னோர்கள் தோல்வியடைந்தார்கள். அப்பால் நமது தாய்நாடு சுதந்திரம் அடைவதற்காக சுமார் 90 வருட காலமாக, 'அன்னிய நாட்டுச் சரக்குகள் நிராகரிப்பு', 'சுதேசியம்', 'ஒத்துழையாமை', 'சத்தியாக்கிரகம்', 'உண்ணுவிரதம்' முதலிய பற்பல கொள்கைகளை அநுசரித்து, அவ்வக் காலங்களுக்கேற்ப, நமது தலைவர்களால் பல இயக்கங்கள் நடத்தப்பட்டன. நமது நாட்டை அடக்கியாண்ட ஆங்கில ஆட்சியும் அந்தந்த இயக்கங்களுக்குத் தகுந்தபடி சமாளித்துக் கொண்டுவந்தது.

தேசபக்தர் நேதாஜி சுபாஷ்சந்திரபோஸ் 1918-ம் ஆண்டில் இங்கிலாந்தில் படித்துக்கொண்டு இருந்தபோது முதலாவது உலக யுத்த சமாதான உடன்படிக்கை ஏற்பட்டது. அதுசரியானமுறையில்ஏற்படவில்லை, அதன் காரணமாகவே இரண்டாவது உலக யுத்தம் எதிர்காலத்தில் கட்டாயமாக ஏற்படுமென்றும், அவ்வமயத்தில் இந்திய சுதந்திரத்தை, இங்கிலாந்தின் எதிரி நாடுகளின் உதவியால் இந்தியாபெறவேண்டுமென்றும் முடிவு செய்திருந்தார். இதற்குக் காரணம் என்னவென்றல் சமாதானகாலங்களில் பிரிட்டிஷ் ஆட்சிமுறை குடியேற்ற நாடுகளில் மிகவும் சிறந்ததென்றும், அவர்கள் கட்டுப்பாடு அதிக பலமுடையதென்றும் அதனல் 50 துப்பாக்கிகள்கூட இரகசியப் புரட்சிக்காக

இந்தியாவில் சேகரிக்க முடியாதென்றும், நேதாஜி அறிந்திருந்தார். தவிர பிரிட்டிஷ் இந்திய இராணுவத்தின் மனப்பான்மையை சமாதான காலத்தில் மாற்ற முடியாதென்றும், உலக யுத்த சமயத்தில்தான் மாற்றமுடியுமென்றும் நன்கு அறிந்திருந்தார்.

பிறகு, தாய் நாட்டில் நேதாஜி, காங்கிரஸ் இயக்கத்திலோ அல்லது இரகசியப்புரட்சி இயக்கத்திலோ மற்றும் வேறுபல கொள்கைகளை அனுசரித்து, தாய் நாட்டின் சுதந்திரத்திற்காகப் பாடுபட்டபோதிலும், ஐரோப்பாவுக்கு அடிக்கடி சென்று ஜெர்மனி, இத்தாலி முதலிய நாடுகளில், எதிர்கால யுத்தத்திற்காக பலவித ஏற்பாடுகள் நடைபெறுவதைக் கவனித்து வந்தார்.

இரண்டாவது உலகயுத்தம் ஆரம்பமானவுடன் நேதாஜி சிறையிலிருந்து வெளியேறி, ஜெர்மனிக்குத் தப்பிச் சென்று அங்கிருந்த யுத்தக் கைதிகளிலிருந்து இந்திய தேசிய ராணுவம் நிறுவி, பின்னர், ஜப்பானிய சர்க்கார் இந்திய சுதந்திரத்திற்காக வேண்டிய உதவி புரிவோம் என்ற வாக்குறுதியின் பேரில் நம் வீரத் தலைவர் கிழக்காசியா வந்து இந்திய தேசிய ராணுவத்தை அங்கீகரித்து, அதைப் பலப்படுத்தி இந்திய சுதந்திர தற்காலிக அரசாங்கத்தை ஏற்படுத்தி இந்திய சுதந்திர புனிதப் போரை நடத்தியது யாவரும் அறிந்ததே.

இறுதியில், கிழக்காசிய யுத்தத்தில் ஜப்பானியர் தோல்வி யடைந்த பின்னர், வெற்றி பெற்ற ஆங்கிலத் துருப்புக்கள் கிழக்காசியா வருவதற்குச் சில நாட்களுக்கு முன்னர், 13—8—1945 அன்று, சிங்கப்பூரில் நடந்த பொதுக் கூட்டத்தில் நேதாஜி சொன்னதாவது:- இந்திய சுதந்திரப் போருக்காக கிழக்காசியாவில் வதியும் இந்தியர்கள் அனைவரும் உயிர் துறந்தாலும் அவர்கள்

சொத்துக்கள் யாவும் பறிபோனாலும் அத்தியாகம் அவ்வளவு பெரிதல்ல என்றுரைத்தார். ஏனெனில் இச்சுதந்திரப் போர் எதிர்காலத்தில் தாய் நாட்டிலுள்ள கோடிக் கணக்கான நமது மக்கள், அவர்கள் சந்ததிகள் சுதந்திரமாக பல்லாயிரக் கணக்கான வருடங்களுக்கு சாஸ்வதமாக வாழ வேண்டுமென்ற நோக்கத்துடன் நடத்தப்பட்டதென்றும் கிழக்காசியாவில் நடைபெற்ற இயக்கத்தின் ஆர்வமும் அனுபவமும் நமது தாய்நாடு முழுவதும் வெகு சீக்கிரத்தில் பரவு மென்றும் பிரிட்டிஷ் இந்திய ராணுவத்தின் மனப்பான்மை தேச சுதந்திரத்தின் சார்பாக மாறுமென்றும் அதன் மூலமாக நமது தாய்நாடு விரைவில் சுதந்திரம் அடையு மென்றும் விளக்கினர்.

பின்னர், இங்கிலாந்தின் பிரதமர் அட்லி, இந்திய சுதந்திரத்திற்காகத் தூதுகோஷ்டி (க்ரிப்ஸ் மிஷன்) அனுப்புந்தருவாயில் வெளியிட்ட ஓர் அறிக்கையில்: பிரிட்டிஷ் இந்திய இராணுவத்தினர் தற்போது சுதந்திர மனப்பான்மையை அடைந்து விட்டன ரென்றும் அதன் காரணமாக இந்தியாவை இந்தியர்களிடம் ஒப்படைத்து விட வேண்டுவது அத்தியாவசியமென்றும் குறிப்பாக விளக்கியிருந்தார். பிரதமர் அட்லி இவ்வாறு அபிப்பிராயப்பட்டதற்கு பற்பல காரணங்கள் இருந்த போதிலும் முக்கிய காரணம் கிழக்காசியாவில் நடைபெற்ற இந்திய சுதந்திர இயக்கம் அதிமுக்கியமென்று கூறுவது மிகையாது.

கடைசியாக 15—8—1947ல் நமது தாய்நாடு பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து விடுதலை பெற்று சுதந்திரம் அடைந்தது. நாட்டின் சுதந்திரத்திற்காக 1857ல் நடந்த முதலாவது சுதந்திரப் போரிலிருந்து இறுதியில் 1947ல் தாய்நாடு சுதந்திரம் அடையும்வரை தாய்நாட்டின்

சுதந்திரத்திற்காக நடத்தப்பட்ட பற்பல இயக்கங்களின் தாரதம்மியங்களை தற்போது பரிசீலனை செய்வது உசிதமல்ல. ஆயினும் நமது தாய் நாட்டின் சுதந்திரத்திற்காக கிழக்காசியாவில், இரண்டாவது உலகயுத்தத்தின்போது நேதாஜி தலைமை தாங்கி நடத்திய இந்திய சுதந்திரப் போர் பெரிதும் காரணமாகும். அவர்கள் பெருந்தியாகம் செய்திருக்கின்றனரென்பதில் யாதொரு ஐயமுமில்லை.

அப் புனித சுதந்திர இயக்கத்தை, இனிய எளிய நடையில் யாவர்க்கும் சுலபமாக விளங்குமாறு, மலாயா நாட்டின் பினங்குமாவட்ட இந்திய சுதந்திர சங்கத்தில் பணிபுரிந்த திரு. கு. மு. வீராசாமி அவர்கள் இப்புத்தக மூலமாக விவரித்திருக்கிறார். நடந்தேறிய, அதிக சிக்கலுள்ள சரித்திரத்தை விளக்கமாக விரித்துரைத்திருக்கின்றார். இதனை தாய்நாட்டிலும் ஏனைய வெளிநாடுகளிலும் வதியும் தமிழர்கள் மட்டுமல்லாமல் இந்தியர்கள் எல்லோரும் படித்தறிய வேண்டுவது அத்தியாவசியம். சுதந்திரம் பெற்ற பிறகு நமது தாய்நாடு எவ்வளவோ முன்னேற்றம் அடைந்திருக்கிற தென்பதில் ஐயமில்லை. எதிர்காலத்தில், இன்னும் முன்னேற்றமடைய இந்தியர்கள் பற்பல வகையிலும் பணிபுரிந்து வரவேண்டுவது அத்தியாவசியம். அவ்வித தேசத்தொண்டு புரிவதற்கு இப்புத்தகம் வழிகாட்டியாக ஏற்பட்டிருக்கின்றது.

ச. சி. அழகப்பன்
எம். பி. பி எஸ்., எப். ஆர், சி எஸ்.
மேஜர் ஜெனரல், இ. தே. ரா.

499, பூந்தமல்லி பெரியசாலை,
வேப்பேரி, சென்னை.
29—7—65.

முகவுரை

நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்களால் கிளர்ந்தெழுந்து கிழக்காசியாவில் ஆரம்பிக்கப்பட்ட இந்திய சுதந்திரப் போராட்டத்தில் தன்னலமற்ற தொண்டு புரிந்த இளம் இந்திய தேச பக்தர்களில் பினங்கைச் சேர்ந்த திரு. வீராச்சாமியும் ஒருவர். இந்திய சுதந்திர சங்கத்தின் பினங்குக் கிளையின் பிரச்சாரப் பகுதியில் திரு. வீராச்சாமி பணியாற்றியதன் மூலம் நேதாஜியின் தலைமைத்துவத்தின் கீழ் இயங்கிய இந்திய தேசீய இராணுவம், ஆஸாத் ஹிந்த் அரசாங்கம் ஆகியவற்றின் நோக்கங்களை அவர் நன்கு அறிந்துகொண்டவர். இந்திய சுதந்திரத்திற்காக இந்தியாவிற்கு வெளியே கிழக்கு எல்லையில் நடைபெற்ற வீரப் போராட்டம் இருபது ஆண்டுகளுக்கு முற்பட்டதெனினும் மயிர்க் கூச்செரியும் நேதாஜியின் வீர வரலாறு பற்றியும் கிழக்காசியாவில் திரட்டப்பட்ட இந்திய தேசீய இராணுவம் பற்றியும் விரித்துரைக்கும் ஆற்றல் திரு, வீராசாமியிடம் இருக்கிறது.

திரு, வீராசாமி உடல் நலம் குன்றி மூன்றுமாத காலம் கட்டாய ஓய்வெடுக்க நேர்ந்தது, இந்தியாவின்—குறிப்பாக தமிழ் பேசும் இந்தியர்களின்—நல்லதிர்ஷ்டம் எனக்கூறவேண்டும். நண்பர்களின் இடையருத் தூண்டுதல் காரணமாக அந்த மூன்று மாத ஓய்வில் இந்திய தேசீய இராணுவத்தின் வரலாற்றை எழுதத்துவங்கினர். சுதந்திர இயக்கத்

தின்போது ஒப்பற்ற சேவைபுரிந்த, கோலாலம்பூரி லிருந்து வெளிவரும் தமிழ்த் தினசரியான "தமிழ் நேசன்" திரு, வீராசாமியின் வரலாற்றுக் கட்டுரையை அதன் ஞாயிற்றுப் பதிப்பில் இருபத்து நான்கு வாரங்கள் தொடர்ச்சியாகவெளியிட்டுசிறப்பித்தது.

முதல் வாரமே கட்டுரையின் தரத்தைப் பாராட்டி "நேசன்" ஆசிரியருக்கு வாசகர்களிடமிருந்து கடிதங்கள்வரத்தொடங்கியது, பாராட்டுதற்குரியது.

திரு ராஷ்பிஹாரி போஸ் அவர்களால் தோற்றுவிக்கப்பட்டு, நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்களின் தலைமையில் வெற்றிகண்ட இந்திய சுதந்திர இயக்கத்தின் தொட்டில் என மலாயாவை வர்ணிப்பது மிகத்தகும். ஆகவே இருபது ஆண்டுகளுக்குப் பின்னர் சுதந்திர இயக்கத்தின் முழு வரலாற்றையும் மலேயாவிலேயே எழுதுவதென்பது மிகப் பொருத்தமே. இருபத்திரண்டு அத்தியாயங்கள் கொண்ட இருபத்துநான்கு கட்டுரைத் தொடர்களையும் சிரமம் பாராதுதிரு, வீராசாமி எனக்கு அனுப்பிவைத்தார். 1941—1945க்கு இடையில் நிகழ்ந்த கிழக்காசியப் போர் இந்திய சுதந்திர இயக்கத்தின் பிறப்பு, இந்திய சுதந்திரப் படையின் தோற்றம், போர் முடிவு, கடைசியாக முறையாக அறிவிக்கப்பட்ட நேதாஜியின் சைகோன் விமானப் பயணம், பார்மோஸாவில் விமானம் நொறுங்கி நேதாஜி மரணமுற்றதாக வெளிவந்த அறிவிப்பு ஆகிய நிகழ்ச்சிகளை திரு வீராசாமி சித்தரித்திருக்கிறார்.

திரு வீராசாமியின் கட்டுரையை நான் படிக்கத் தொடங்கியதும் நான் நேரடியாகக் கண்ட அந்தச் சம்பவங்கள் என்னுள் மீண்டும் உயிர்பெறத் தொடங்கின. இந்திய சுதந்திரப் போராட்டத்தில்

நேதாஜி ஆற்றிய தொண்டு, தாய் நாட்டிற்காக அவர் புரிந்த தியாகங்கள், அடைந்த துன்பங்கள் ஆகியவற்றை அறிந்து கொள்ளும் உரிமையுடையது வருங்காலச் சந்ததி. ஆகவே திரு வீராசாமி, அவர் எழுதியுள்ள கட்டுரைத்தொடர்களைப் புஸ்தக வடிவில் வெளியிட முனைந்திருப்பது மகிழ்ச்சிக்குரியது. அதன் மூலம் எதிர்காலத்தில் இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் உள்ள தமிழ் இளைஞர்கள் அனைவரும் அதனை என்றென்றும் படிக்கும் வாய்ப்புப் பெருகும். இருபது ஆண்களுக்கு முன் புரிந்த தியாகத்தின் அறிகுறியாக திரு வீராசாமி மீண்டும் இந்தத் தொடர் கட்டுரை வாயிலாக இந்திய தேசீய இராணுவத்திற்கும் இந்தியாவிற்கும் தொடர்ந்து சேவைபுரிய முன் வந்துள்ளார்.

இந்த முன்னுரையை எழுதுவதற்குச் சில தினங்களுக்கு முன்புதான் நேதாஜியின் 67வது ஆண்டு பிறந்த நாளை 1964ம் ஆண்டு ஜனவரி மாதம் 23ந் தேதி இந்திய அரசாங்கம் தபால் தலைகளை வெளியிட்டு நினைவு கூர்ந்தது. இதை ஒரு குறிப்பிடத் தக்க சக நிகழ்ச்சி என இங்கு கூறுவது மிகப் பொருந்தும். அத்துடன் நேதாஜியின் வாழ்க்கை வரலாறு, அவர் ஆற்றிய தொண்டு ஆகியவற்றை விளக்கும் புகைப்படக் கண் காட்சி ஒன்றும் இன்று தான் பம்பாயில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. இவ்வித கண்காட்சி ஒன்று இந்தியாவில் நடை பெறுவது இதுவே முதல் முறையாகும்.

எஸ். ஏ. ஐயர்

முன்னாள் விளம்பர, பிரச்சார அமைச்சர்
ஆஸாத் ஹிந்த் தற்காலிக அரசாங்கம்.
1943—1945.

பம்பாய்
7–2–1964

FOREWORD

* * *

Shri K. M. Veerasami of Penang is one of those selfless young Indian patriots who were inspired by Netaji Subhas Chandra Bose to come forward and make their maximum contribution to the Indian Independence Movement in East Asia. Shri Veerasami had a grandstand view of the I. N. A. and the Azad Hind Government led by Netaji as Shri Veerasami was attached to the Publicity and Propaganda Department of the Indian Independence League in Penang. He is very well qualified to narrate the thrilling story of Netaji and the I. N. A in East Asia nearly 20 years after the curtain was rung down on theepic fight for India's freedom launched outside India's eastern border.

Shree Veerasami's illness and three months of cumpulsory rest proved a blessing in disguise for India, and especially for Tamil-speaking Indians. He used those three months to write the story of the I. N. A. as strongly urged by his friends, and the "TAMIL NESAN", the Tamil daily of Kuala Lumpur which played a notable part during the Independence Movement, published Shri Veerasami's narrative in serial

form in 24 issues of its Sunday Magazine Section. It is noteworthy that soon after the first instalment was published, readers began writing letters to the Editor expressing their appreciation of the vividness of the narrative.

Malaya may well be described as the cradle of the Indian Independence movement organised by Rash Behari Bose and led to victory by Netaji Subhas Chandra Bose. It is, therefore, quite fitting that the whole story must be retold after 20 years, in Malaya itself. Shri Veerasami took the trouble to send me the entire serial of 24 articles containing 22 chapters covering the period 1941 to 1945, that is, from the outbreak of East Asia war and the birth of theIndian Independence Movement and the I. N. A. till the end of the War and Netaji's last known flight from Saigon and the announcement of his death in a plane crash on Formosa Island.

When I read Shri Veerasami's narrative I began to live all over again those stirring events of which I had also been an eye-witness. Posterity has a right to know what Netaji did for India's freedom and the great sacrifices and sufferings he underwent for the cause of the Motherland. I am, therefore, very happy to know that Shri Veerasami

has decided to bring out his articles in book form so that it may be available in a handy form to the Tamil youth inside and outside India at any time in future. Shri Veerasami is thus rendering a signal service to the I.N.A. and to India in continuation of his sacrifices of 20 years ago.

It is a remarkable coincidence that only a few days ago, on January 23, 1964, Nataji's Birthday, commemoration postage stamps were issued by the Government of India to celebrate Netaji's 67th Birth Anniversary. And today a photographic exhibition depicting Netaji's Life and Work was opened in Bombay. This is the first time that an exhibition of this kind is being held anywhere in India.

S. A. AYER,
Ex-Minister of Publicity and Propaganda
Provisional Government of Azad Hind,
1943—1945.

Bombay,
7th February,
1964.

சிறப்புரை

'செயற்கரிய செய்வார் பெரியர்', நினைத்தற்கே அரிய மகத்தான சாதனைகளைச் செய்தவர் நேதாஜி. எந்த வழியிலும் பாரதநாட்டை அந்நிய ஆட்சியினின்றும் விடுவிக்கவேண்டுமென்ற ஒரே இலட்சியத்திற்காக வாழ்ந்தவர்; மறைந்தவர். பிரிட்டனுக்கு எதிரான நாடுகளின் துணைகொண்டு இந்தியா சுதந்திரம் பெற வழிசெய்துவிடலாம் என்று உறுதியாக எண்ணினர். அதனால் பல இன்னல்களுக்கிடையே காவலினின்றும் தப்பி, யாரும் அறியாவண்ணம் நாட்டைவிட்டு வெளியேறி ஜெர்மனி சேர்ந்தார். முதலில் ஜெர்மனியிலும் பிறகு கிழக்காசியாவிலும் இந்திய சுதந்திர இயக்கத்தை நடத்தினர். சிங்கப்பூரில் இந்திய சுதந்திர தற்காலீக அரசாங்கம் அமைத்து அதற்குப் பல நாடுகளின் அங்கீகாரமும் பெற்ருர். தியாகச் செம்மல்கள் பலர் இருந்த சிறைக்கோட்டத் தீவான அந்தமானும் நிக்கோபாரும் முதன்முதல் சுதந்திரத்தை ஸ்பரிசித்தன. அத்தீவுகளில் தேசீயக் கொடி கம்பீரமாகப் பறந்தது. இந்திய தேசீய ராணுவம் ஒன்றை நிறுவி, பிரிட்டன் அமெரிக்க நாடுகளுக்கு எதிராக யுத்தப்பிரகடனம் செய்தார். "சலோடில்லி" என்று டில்லியை நோக்கி முன்னேறியது இந்திய தேசீய சைனியம். நேதாஜியின் இயக்கந்தான் நம் நாடு விரைவில் சுதந்திரம் பெற வழிகோலிற்று என்ருல் மிகையாகாது. அந்தப்புனித இயக்கவரலாற்றைத் தெளிவாகக் கூறுகிறது இந்நூல்.

இந்நூலாசிரியர் அன்பர் கு. மு. வீராச்சாமி இந்திய சுதந்திர இயக்கம் நடைபெற்ற காலத்தில் மலேயாவில் இருந்தவர். இயக்கத்தில் பூரண பங்குபெற்றவர்.

இளமையிலிருந்தே ஸ்ரீஜத் சுபாஷ் சந்திரபோஸிடம் விசேஷ பக்தி கொண்டவர். 1936ல் பிறந்த தன் முதல் மைந்தனுக்கு சுபாஷ் சந்திரன் என்று பெயரிட்டு மகிழ்ந்தவர் (துரதிர்ஷ்ட வசமாக 1950ல் அவர்மைந்தன் சுபாஷும் நேதாஜியைப் போல் விபத்துக்குள்ளாகி அகால மரணம் அடைந்தான்).

தேசபக்தி மிக்க நண்பர் கு. மு. வீ. தமிழ் அன்னை யிடத்தும் தணியாக் காதல் உடையவர். பேராசிரியர் வ. ரா. வின் அன்பிற்குரியவர்; ஆசிபெற்றவர். இளம் பிராயந்தொட்டு தமிழில் கதை, கட்டுரைகள் எழுதிக் கைவந்தவர். பதினேழாவது வயதிலேயே அவருடைய முதல் கட்டுரை மலேயாவில் இந்திய மித்திரனில் வெளி யாயிற்று. 'குமர'னில் அன்னாரின் சிறுகதைகள் நிறைய வெளி வந்தன. இந்திய சுதந்திர இயக்கம் நடந்த காலத்தில் பினாங்கிலிந்து வெளியான பூர்ணஸ்வராஜ் பத்திரிகையில் அன்பர் கு. மு. வீ. யின் எழுத்துப் பரிணமித்தது.

இந்த நூற்றாண்டின் வீர மகாபுருஷரான நேதாஜி கிழக்காசியாவில் நடத்திய இந்திய சுதந்திர இயக்க வரலாற்றை அந்த இயக்கத்தில் பங்குபெற்ற நூலா சிரியர் தெளிவாக எளியநடையில் திறம்பட எடுத் துரைத்திருக்கிறார். அந்த இயக்கத்தில் சம்மந்தப்பட்ட வர்கள் இதனைப் படிக்குந்தொறும் உணர்ச்சி வசப்படா மல் இருக்க முடியாது. தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் இந்நூலை அவசியம் படிக்கவேண்டும்.

இந்தநூலைத்தந்த கு. மு. வீ. அவர்கள் பல்லாண்டு வாழ்ந்து தாய்நாட்டிற்கும் தமிழுக்கும் இன்னும் பல தொண்டாற்ற எல்லாம் வல்ல இறைவன் திருவருள் புரிவாராக.

ஜெய்ஹிந்த்

பட்டுக்கோட்டை
9—1—65

S. தேவராஜன்
லெப்டிணட் இ. தே. ரா.

முன்னுரை

❋ ❋

இரண்டாவது உலகப்போர் முடிவுற்றுச் சில மாதங்களுக்குப் பிறகு, 1946ம் ஆண்டு ஆரம்பத்தில் நான் சத்திர சிகிச்சைக்கு ஆளானேன். சிகிச்சைக்குப் பின்னர், மூன்று மாதங்கள் பூரண ஓய்வு எடுத்துக் கொள்ளும்படி டாக்டர் எனக்குக் கட்டளையிட்டார். ஓய்வென்ருல் உடலுக்கு பூரண ஓய்வு; நடமாட்டமுமின்றி வீட்டிலே அடைபட்டுக் கிடக்க வேண்டிய நிலை.

இந்நிலையிலே உபயோகமான காரியம் எதிலாவது ஈடுபடலாமா என்று யோசித்தேன். இதற்கு முன்னரே எனது ஆருயிர் நண்பர் சிலர் கிழக்காசிய இந்திய சுதந்திர இயக்கத்தின் வரலாற்றைத் தொகுத்து, ஒரு நூல் எழுதும்படி வற்புறுத்தி வந்தார்கள். உண்மையில் அதற்கு உடன்பட மறுத்துவந்தேன். காரணம் அவ்வளவு பெரியகாரியம் நம்மால்ஆகுமா என்ற சங்கையே. நாளாக ஆக, அதை முயன்று பார்க்கலாமா என்ற எண்ணம் உதித்தது. என்னை எழுதும்படி தூண்டிய நண்பர்களும் எழுத்தாளர்களே. அதோடு சுதந்திர இயக்கத்தில் பூரணப் பங்கு பற்றியவர்கள். அவர்கள் என்னைத் தூண்டுவதில் அர்த்தமிருக்கத்தான் வேண்டுமென்ற நம்பிக்கையும் பிறந்தது. எழுதத் தொடங்கினேன். எத்தனையோ தடைகள் இடையில் தோன்றினுலும், இறைவன் திருவருளால் ஒருவாறு நூல்பூர்த்தியடைந்தது.

கிழக்காசிய விடுதலைப்போரில், நேதாஜின் நிலையான பங்கை, வரலாற்றுப் போக்கில் எழுதியிருக்

கிறேன். மாசற்ற நேதாஜின் தேசபக்தியையும் உதார குணத்தையும் தமது உயரிய-இறுதி இலட்சியத்திற்காக அவர் எதையும் தியாகம் செய்யத் தயாராக இருந்தார், செய்தார் என்பதையும் தமிழர்கள் அறியும்படி செய்ய வேண்டுமென்பதே என் ஆசை. போராட்டத்தின் புனிதத் தன்மையையும் மகத்துவத்தையும் எடுத்துக்காட்ட பூரண சிரத்தையுடன் முயன்றிருக்கிறேன் கூடுமான வரை சொந்த அபிப்பிராயம் பரிமாறுவது தவிர்க்கப்பட்டிருக்கிறது. மிகுந்த சர்ச்சைக்குரிய விஷயங்களை இயக்கத்தின் போக்கைக் கொண்டே விவரித்திருக்கிறேன். மிகைப் படுத்துதலோ, ஆதாரமற்ற செய்திகளோ—ஊகங்களோ அறவே விலக்கப்பட்டிருக்கின்றன.

இவ் வரலாறு எழுதுவதற்கு நான் முக்கிய ஆதாரமாகக் கொண்டது இந்திய சுதந்திர இயக்கத்தின் சார்பில் பினாங்கிலிருந்து வெளிவந்த "பூர்ண ஸ்வராஜ்" தமிழ்த் தினசரிப் பத்திரிகை யாகும். அதன் ஆசிரியர்களுக்கு நான் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த உயரிய தேசாபிமானம் கொண்ட உழுவல் நண்பர்களுடனே இணைந்து, இயக்கத்தில் தொண்டு செய்யும்பாக்கியம் எனக்கும்கிடைத்தது. அந்தநாட்களை என்றும்பெருமையாக நினைவில் வைத்துக்கொள்வேன்.

இந்த நூல் 1946ம் ஆண்டிலேயே வெளிவந்திருக்க வேண்டியது. எனது முயற்சிகள் முற்றுப் பெறவில்லை.

கோலாலம்பூர் செல்வாக்கு மிக்க தினசரியான "தமிழ் நேசன்" ஞாயிறு பதிப்பில் 1963ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 7ந் தேதி முதல் செப்டம்பர் மாதம் 15ந் தேதி வரை இருபத்து நான்கு வாரங்கள் தொடர்

கட்டுரையாக வெளிவந்தது. கட்டுரைகளை மிகச் சிறப்பான முறையில் வெளியிட்டுவந்த அதன் பிரதம ஆசிரியர் திரு. முருகு. சுப்பிரமணியன் அவர்களுக்கும் துணை ஆசிரியர்களுக்கும், நிர்வாகத்தினருக்கும் நான் நான் பெரிதும் கடமைப்பட்டவனாவேன்.

"நேசனில்" கட்டுரை வெளிவரத் தொடங்கியது முதலே, அதன் வாசகர்கள் காட்டிய ஆர்வம் என்னை இறும்பூதெய்த வைத்தது. அவர்களது பாராட்டுதல்களுக்கு நன்றி. இயக்கம் பிறந்து வளர்ந்த இடமல்லவா மலாயா! நிகழ்ச்சிகளைக் கண்ணாரக் கண்டு, காதாரக் கேட்டவர்கள் மலாயா மக்கள். அவர்களில் இந்திய சுதந்திர இயக்கத்திலே நேரடியாகப் பங்குகொண்டவர் பல்லாயிரவர். அவர்களுடைய ஒப்புதல் பெற வாய்ப்பு ஏற்பட்டது ஒரு நல்ல அம்சமாகும். இப்புத்தகத்திற்கு சிறப்பான அணிந்துரை ஒன்று வழங்கிய பெரியார் திரு. எஸ். ஏ. ஐயரவர்களுக்கும் சிறப்புரை வழங்கிய அன்பர் தேவராஜன் அவர்களுக்கும் எனது நன்றி கலந்த வணக்கங்கள்.

இதனை நல்ல முறையில், அழகாக அச்சிட்டு உதவிய காரைக்குடி சௌத் இந்தியா அச்சகத்தார்க்கும் அதன் நிர்வாகி திரு என். மீனாட்சிசுந்தரம் அவர்களுக்கும் எனது பாராட்டுதலும் நன்றியும்.

இந்நூல் வெளிவருவதற்கு ஊக்கம் தந்து, உதவி செய்த என் உத்தம நண்பர்கள் அனைவருக்கும் நான் மிகுதியும் கடப்பாடுடையவனாவேன். குறைகளைப் பொறுத்தருள வேண்டுகிறேன்.

நேதாஜியின் ஆதர்ஸமாம் இரவியையும் அதனுல் ஈர்க்கப்பட்ட மேன் மக்களின் நெஞ்சமாம் சூரியகாந்த மலரையும் போற்றுவோம். அவை நிரந்தரம் வாழ்க.

இப்புனித இயக்கத்தில்:

உயிரீந்தார் எண்ணில்லார்: உடலந்தேய
உழைத்திட்டார் கணக்கற்ருர்: உடமையெல்லாம்
அயர்வில்லா தளித்திட்டார் பல்லோர்; இன்று
அவர்தமக்கே இந்நூலை அளிக்கின்றேனே

பினங்கு
23-1-1965

—கு. மு. வீராசாமி.



தீரர் நேதாஜி

தோற்றம்

1941-ஆம் வருடம் டிசம்பர் மாதம் 8ந் தேதி கிழக்காசியா யுத்தம் மூண்டது. ஜப்பானியர் மலாயாவில் கரையிறங்கித் துரிதமாக முன்னேறிக் கொண்டு வந்தனர். பிரிட்டிஷ் துருப்புக்கள் 'வெற்றிகரமாக வாபஸாகிக் கொண்டே இருந்தன. முடிவில், 1942 பிப்ரவரி 15உ 'தூரகிழக்குப் பிரதேசத்தின் ஜிப்ராஸ்ட்' ரான சிங்கப்பூர் வீழ்ச்சியடைந்து "ஷோனன்" என்ற நாமகரணம் சூட்டப்பெற்றது.

ஜப்பானின் வெற்றியைக் கண்டு இந்தியர்கள் குதூகல மடைந்துவிடவில்லை. ஆனால், அதை வெறுக்கவுமில்லை. இந்தியர்கள் பிரிட்டிஷ் எதிர்ப்புணர்ச்சியை இயற்கையாகப் பெற்றவர்கள். தங்கள் தாய் நாட்டை அடிமைப் படுத்தி அதைச்சுரண்டும் ஒரு வர்க்கத்தார் என்ற முறையிலே அவர்களிடம் ஒரு வெறுப்புணர்ச்சியுடையவர்கள்.

இந்நிலையில் ஜப்பான் ராணுவத்தைச் சேர்ந்த மேஜர் பூஜிவாராஎன்பவர் மலாயாவின் பிரதான நகரங்களிலேஉள்ள இந்தியர்களைக் கண்டுபேசி, இந்தியர்கள் தங்கள் தாய்நாட்டை அடிமைத் தளையிலிருந்து விடுவிக்க முயல வேண்டுமென்றும், அதற்கு ஏற்றதருணம் இதுவேயென்றும் இந்தமுயற்சிக்கு நிப்பன் அரசாங்கம் தன்னாலான சகல உதவிகளையும் அளிக்கச் சித்தமாக இருப்பதாகவும் சொன்னார். ஆங்காங்கே இந்திய சுதந்திர சங்கங்கள் தோன்றலாயின.

மலாயாவிலுள்ள இந்தியத் தலைவர்கள் இ. சு. இயக்க சம்பந்தமாய் தங்களுக்குள் ஆலோசித்து ஒரு முடிவுக்கு வருவதற்காக 1942ம் வருடம் மார்ச் மாதம் 9, 10 தேதிகளில் சிங்கப்பூரில் ஒரு மாநாடு நடத்தினர். ஜப்பானியரின் அந்தரங்க நோக்கத்தை நன்றாக அறிந்து கொள்ளாமல் ஒன்றும் செய்யக்கூடாதென்ற முடிவுக்கு அவர்கள் வந்தனர். மேலும் மிகப் பொறுப்பு வாய்ந்த இந்திய சுதந்திர இயக்கத்தை நடத்துவதற்கு அறிவிலும் ஆற்றலிலும் சிறந்த தலைவர் வேண்டுமென்றும் கருதப்பட்டது. இதற்கு முற்றிலும் தகுதிவாய்ந்தவரான சுபாஷ் சந்திரபோஸை தூரக்கிழக்குப் பிரதேசத்துக்கு வந்து தலைமையை ஏற்கும்படி அழைப்பதெனவும்முடிவு செய்யப்பட்டது.

சிங்கை மாநாடு

இந்நிலைமையில் திரு. ராஷ் விகாரி போஸிடமிருந்து இந்தியத் தலைவர்களுக்கு ஓர் அழைப்புவந்தது. ஸ்ரீராஷ் விகாரி போஸ், வங்கப் புரட்சி இயக்கத்தைச் சேர்ந்தவர். 1916-ம் வருடம் வைஸ்ராய் ஹார்டிஞ்ச் மீது வெடி குண்டெறிந்துவிட்டுத் தப்பிச்

டோக்கியோ மாநாடு

சென்று நீண்டகாலமாக ஜப்பானிலேயே வசிப்பவர். இவருடைய அழைப்பை ஏற்றுக்கொண்டு, மலாயாவிலிருந்தும் தாய்லாந்திலிருந்தும் முக்கியமான பிரதிநிதிகள் தோக்கியோவுக்குச் சென்றனர். துரதிருஷ்டவசமாக பிரதிநிதிகள் சென்ற விமானங்களில் ஒன்று விபத்துக்குள்ளாகிவிட்டது. அதில் தாய்லாந்துப் பிரதிநிதிகளான சர்தார் பிரீதம் சிங், சுவாமி சத்தியானந்த பூரி, காப்டன் அக்ராம், மலாயா பிரதிநிதிகளில் ஒருவரான திரு. நீலகண்டய்யர் ஆகியோர் புகழுடம்பெய்தினர்.

மாநாடு 1942 மார்ச் மாதம் 28, 29, 30 தேதிகளில் ஸ்ரீ ராஷ் விகாரி போஸ் தலைமையில் ஆங்கு நடைபெற்றது. இந்த மாநாட்டில்,

கிழக்காசியா வாழ் இந்தியர்களைக்கொண்டு இந்திய சுதந்திர இயக்கத்தை நடத்துவதற்கு அது தக்க தருணமென்றும்,

அந்நியர் சம்பந்தமோ தலையீடோ இல்லாத பரிபூரண சுதந்திர இந்தியாவை நிர்மாணம் செய்வதே இயக்கத்தின் லட்சியம் என்றும்,

இதற்காக இந்தியர்களைக்கொண்டு இந்தியர்களால் நடத்தப்படும் இந்திய தேசிய ராணுவம் ஒன்று அமைப்பதென்றும்,

தேவைப்படும் தரை, கடல், ஆகாயப்படை உதவிகளை நிப்போனியரிடமிருந்து பெற்றுக்கொள்வதென்றும் தீர்மானிக்கப்பட்டன.

மேலே கண்டவைகளை செயலில் கொண்டுவருவதற்காக கிழக்காசியாவின் பல பாகங்களிலும் உள்ள

இந்தியப் பிரதிநிதிகளின் மாநாட்டை ஜூன் மாதம் பாங்காக்கில் கூட்டுவதென முடிவு செய்யப்பட்டது.

தோக்கியோ மாநாட்டுத் தீர்மானப்படி 1942ம் வருடம் ஜூன் மாதம் 15உ முதல் 23உ வரை கிழக்காசியா இந்தியர்களின் மாநாடு பாங்காக்கில் குதூகலமாக நடைபெற்றது. இம் மாநாட்டுக்கு ஜப்பான், மஞ்சுகோ, ஹாங்காங், பர்மா, மலாயா, ஜாவா, தாய்லாந்து—ஆகிய நாடுகளிலிருந்து 120 பிரதிநிதிகள் விஜயம் செய்திருந்தனர்.

பாங்காக் மாநாடு

இதில் தோக்கியோ மாநாட்டின் தீர்மானங்கள் மீண்டும் ஊர்ஜிதம் செய்யப்பட்டன. மேலும் சுதந்திர இயக்கம் பற்றியும் இந்தியாவைப் பற்றியும் நிப்பொன் அரசாங்கம் தன்னுடைய கொள்கைகளை விளக்கி, துலக்கமான ஓர் அறிக்கை வெளியிட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

காரிய சபை ஒன்று அமைக்கப்பட்டது. இதன் தலைவர் திரு, ராஷ் விகாரி போஸ். அங்கத்தினர்கள்:— திருவாளர்கள்; என். ராகவன். கே. பி. கே. மேனன், ஜெனரல் மோகன் சிங், கர்னல் கிளானி ஆகிய நால்வர். திரு, சுபாஷ்சந்திரபோஸ் கிழக்காசியா வந்து தலைமை ஏற்கும் வரை இக் காரிய சபையே இயக்கத்தை நடத்தி வருவதென முடிவு செய்யப்பட்டது.

கிழக்காசியாவெங்கும் இ. சு. சங்கங்கள் ஸ்தாபிக்கப் பட்டு, ஜரூராக வேலைகள் நடைபெற்றன. இந்திய தேசிய ராணுவம் அமைக்கப்பட்டது; ஜெனரல் மோகன் சிங் அதன் சேனாதிபதியானார். பொதுமக்களிடையே உற்சாகம் பீறிட்டெழுந்தது.

சில நாட்களில் இ. சு. சங்க காரிய சபைக்கும், நிப்பொன் அதிகாரிகளுக்குமிடையே பூசல் மூண்டது.

பூசல்பிறந்த வரலாறு

பாங்காக் மாநாட்டுத் தீர்மானத்தை அனுசரித்து நிப்பொன் அரசாங்கம் தனது அபிப்பிராயத்தை வெளியிடாதது ஒன்று.


இ. சு. சங்கத்துக்கும் நிப்பொன் அரசாங்கத்துக்கு மிடையே நல்லுறவை ஸ்தாபிப்பதற்காக ஏற்பட்ட 'இவாகுரு கிக்கான்' (கர்னல் இவாகுரு தலைமையில் அமைக்கப்பட்ட சபை. கிக்கான்—சபை) ஸ்தாபனத்தின் அனுவசியத் தலையீடு இரண்டு. இவை காரணமாக பிணக்கு ஏற்பட்டது.

இந்நிலையில் இ. தே. ராணுவத்தைச் சேர்ந்த கர்னல் என். எஸ். கில்லே, பிரிட்டிஷ் உளவாளி எனச் சந்தேகித்து ஜப்பானியர் கைதுசெய்தனர். இதைப் பற்றி இ. சு. ச. காரியசபையைக் கலக்கவே இல்லை. இவ்வடாத செயலைக் கண்டித்து காரியசபையிலுள்ள அங்கத்தினர்கள் நால்வரும் ராஜிநாமாச் செய்தனர்.

நிலைமையின் போக்கு சீர்கேடுறுவதைக் கண்ட தலைவர் ரா. வி. போஸ் சிக்கலை நிவர்த்திப்பதற்காக தோக்கியோ சென்றார். இதற்கிடையே இவாகுரு கிக்கான் தூண்டுதலினால் இளைஞர் இயக்கம் ஆரம்பிக்கப் பட்டது. தவறான வழிகளில் அவர்கள் வேலைசெய்ய ஆரம்பித்தனர்.

ராஷ் விகாரி போஸ் தோக்கியோவிலிருந்து திரும்பினார். 1943 ஏப்ரலில் ஷோனனில் கிழக்காசியா இந்திய சுதந்திர இயக்கப் பிரதிநிதிகளின் மாநாடு ஒன்றை நடத்தினார்.

அக்கூட்டத்தில் இந்திய சுதந்திர இயக்கத் தலைமையை ஏற்று நடத்த திரு. சுபாஷ்சந்திரபோஸ் விரைவில் வரப்போவதாக திரு. ரா. வி. போஸ் அறிவித்தார்.





நேதாஜி (2—7--43) சிங்கப்பூர் வந்திறங்கிறவுடன்
கர்னல் பான்ஸலே கைகுலுக்கி வரவேற்கிறர்



நேதாஜி, படைஅணிவகுப்பை பார்வையிடுகிருர்
பான்ஸலேயுடன்

1. நேதாஜியின் பிரவேசம்

ஜெய்ஹிந்த் !

சூரியன் உதித்தவுடனே சேதனப் பிரகிருதி மட்டுமேயன்றி அசேதனப் பிரகிருதியும், புதிய ஜீவனையும் உற்சாகத்தையும் பெற்றுத் திகழ் கிறது. இவற்றினை யொப்பவே நாட்டில் ஒரு புதிய ஆதர்ஸம்—ஓர் கிளர்ச்சி—ஓர் தருமம்—ஓர் மார்க்கம் தோன்றுமே யானால், மேன்மக்களின் நெஞ்சம் அனைத்தும், இரவியைநோக்கித் திரும்பும் சூரியகாந்த மலர் போல, அவ்வாதர்ஸத்தை நோக்கித் திரும்புகின்றன,

—மகா கவி பாரதியார்

நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் ஐரோப்பாவிலிருந்து தோக்கியோ வந்து சேர்ந்துவிட்டாரென்ற நற்செய்தி 1943ம் வருடம் ஜூன் மாத மத்தியில் கிடைத்தது,

இது கிழக்காசியா வாழ் இந்தியர்களின் மனதை ஆகர்ஷித்து, ஆனந்தக் கடலில் ஆழ்த்தியது. தாங்கள் நீண்ட காலமாக எதிர்பார்த்துக்கொண்டிருந்த அரிய சந்தர்ப்பம் விரைவில் நெருங்கிவிட்டதாக எண்ணினர். நேதாஜி சுபாஷ் பாபுவிடமிருந்து முதன் முதல் வந்த வார்த்தையாவது:—இப்பொழுது நான் முதல் அடி எடுத்து வைத்துவிட்டேன். இந்தியாவின் எல்லைப் புறத்திலிருந்து நான் அதிக தூரத்திலில்லை. 1941-ம் வருடம் ஜனவரி மாத முதல் எனது போக்குவரத்துக்களை உலகின் எந்த சக்தியாலும் தடைசெய்ய முடியவில்லை. இந்தியாவின் கடைசி சுதந்திர யுத்தத்தில் கலந்துகொள்ளும் பொருட்டு, நான் இந்திய எல்லையை கடந்து உள்ளே பிரவேசிப்பதையும் எந்த சக்தியாலும் தடுக்க முடியாதென்பது திண்ணம் என்பதே.

கிழக்காசியாவின் சகல பாகங்களிலிருந்தும் நேதாஜிக்கு உற்சாகமான செய்திகள் வந்து குவிந்தன. அந்த உற்சாகமான வரவேற்புகளைப் பெற்றுக்கொண்ட நேதாஜி போஸ், தோக்கியோ வானொலி நிலையத்திலிருந்து 1943-ம் வருடம் ஜூன் மாதம் 29ந் தேதி இரவு கிழக்காசியாவிலுள்ள இந்தியர்களுக்கு ஒரு வானுரை வழங்கினர்.

அதில், கிழக்காசிய இந்தியர்கள் தமக்கு அளித்த உற்சாகமான வரவேற்புக்காகவும், அருமைத் தாய் நாட்டின் சுதந்திரத்திற்கான முயற்சிகளில் மனப்பூர்வமான ஒத்துழைப்பைத் தருவதாக உறுதி கூறியதற்காகவும் வந்தனம் தெரிவித்துக்கொண்டார்.

மேலும் அவர் கூறினர்:—ஒவ்வொரு இந்தியனும், அவன் எங்கிருந்தாலும் சரியே இறுதி வெற்றிக்காக நடைபெறும் இந்தப் போரில் பங்கெடுத்துக்கொண்டாக வேண்டும்.

'இந்தியாவுக்கு வெளியிலிருக்கும் இந்தியர்கள், இந்த மகத்துவம் வாய்ந்த உலக நெருக்கடியைப் பயன் படுத்திக்கொண்டு, தங்கள் கடமையைச் செய்தால்தான் இந்தியா சுதந்திரம் அடையுமென்பது என் தீர்மான மான அபிப்பிராயம்' என்று கூறினர்.

இவ்வார்த்தைகள் கிழக்காசியாவிலுள்ள சகல இந்தியர்களின் உள்ளங்களிலேயும் திட நம்பிக்கையை உண்டுபண்ணின. அவருடைய தலைமையில், பெருமை வாய்ந்த தங்கள் தாய்நாட்டின் விடுதலைப் போராட்டத் திலே கலந்துகொள்ளும் நன்னுளை எதிர்நோக்கிக் கொண்டிருந்தனர்.

நேதாஜியை இந்தியர்கள் மட்டும் வரவேற்ருர்கள் என்பதில்லை. கிழக்காசியாவாழ் 100 கோடி மக்களும் மிகுந்த நம்பிக்கை கொண்ட மனதினராய் வரவேற் ருர்கள். உலகம் புகழ் உத்தமத் தலைவருக்கு நிப்பொன் அளித்த வரவேற்பை என்னென்று சொல்வது? தோக்கியோவிலுள்ள பிரதான பத்திரிகைகளெல்லாம் பிரமாதமாக வரவேற்று வாழ்த்தின. இவ்வரவேற்பு நேதாஜியை பெருமிதமடையச் செய்துவிட்டது. அவர் தமக்கு நிப்பொன் அளித்த வரவேற்புக்கு பிரதியாக, வாஞெலியிலே நன்றி தெரிவித்தார். ஜூன் மாதம் 8ம் தேதி நிப்பொனியர்களுக்காகச் செய்த அந்த வானுரை யில் அவர் குறிப்பிட்டதாவது "நான் ஒரு முடியணிந்த மன்னனுகவோ, ஒரு பெரிய வல்லரசின் பிரதிநிதி யாகவோ இருந்திருந்தால், நீங்கள் எனக்களித்த உபசாரமெல்லாம் சம்பிரதாயமான நேசப்பான்மையைக் காட்டுவதற்காகத்தான் என்று எண்ணியிருப்பேன். ஆனல், நானே இரண்டுமில்லை. ஒரு காலத்தில் மேன்மையுற்றிருந்த ஒரு தேசத்திலிருந்து வந்திருக் கிறேன். எனது நாட்டின் சுதந்திரத்தையும், இன்ப

வாழ்க்கையையும் பறித்துக்கொண்டுவிட்ட எதிரியுடன் உறுதியுடனும் இடைவிடாமலும் வாழ்நாள் முழுமையும் போரிட்டு வந்திருக்கிறேன். இவையே எனது நற்சாட்சிகள்'.

கிழக்காசிய இந்திய சுதந்திர இயக்க நடவடிக்கையிலே நேதாஜி பிரவேசம் ஒரு புதிய அத்தியாயத்தை தோற்றுவித்ததென்று கூறலாம். 1943-ம் வருடம் ஜுலை மாதம் 2-ம் தேதி அவர் திரு. ராஷ்பிகாரி போஸுடன் விமானத்தில் ஷோனுன் வந்து இறங்கினர்.

ஷோனுன் வருகை

விமானக்கூடத்தில், பிரமுகர்களும் இ. சு. ச. தலைவர்களும் உத்தியோகஸ்தர்களும் மாதர் பகுதி நிர்வாகஸ்தர்களும், நிப்பொன் உயர்தர அதிகாரிகளும் கூடியிருந்தனர். ஆஸாத் ஹிந்த் பௌஜ் வீரர்களும் அணிவகுத்து நின்றனர். அவர்கள் மூன்று முறை ஆரவார கோஷம் செய்து தங்களுடைய பிரதிக்ஞையையும் உறுதியையும் சுபாஷ்சந்திர போஸுக்கு தெரிவித்துக்கொண்டார்கள்.

நேரத்திற்குத்தக்க வீரத்தலைவரும், அவர் நீண்ட காலமாக எதிர்பார்த்துக்கொண்டிருந்த ராணுவமும் முதன்முதலாக சந்தித்தது அன்றேயாகும். அன்றுதான் இந்த ராணுவமும், இது எதிர்பார்த்துக்கொண்டிருந்த தளபதியும் முதன் முதலாகச் சந்தித்த தினமாகும்.

தொண்டர்கள் (போர் வீரர்கள்) தலைவருக்கு ராணுவ அணிவகுப்பு மரியாதை செய்தனர். நேதாஜி இதை மிகுந்த சந்தோஷத்தோடு ஏற்றுக்கொண்டு; 'வீரர்களே! சுதந்திர வீரர்களே!! எனது வாழ்க்கை

யிலேயே இத்தினம் மிகவும் பிரசித்தமானது என்ற ஒரே வார்த்தையுடன் நான் திருப்தியடைகிறேன் என்று உணர்ச்சியுடன் கூறினர்.

போஸ் பாபு குதூகலத்தோடு நம்பிக்கை குடிகொண்டவராய்க் காணப்பட்டார். நீண்டதூரம் பிரயாணம் செய்து வந்ததினுல், களைப்போ அசதியோ அவரிடம் காணப்படவில்லை.

இந்தச் சந்தர்ப்பத்தில் கிழக்காசியா இந்திய சுதந்திர இயக்கத் தந்தை ராஷ் பிகாரிபோஸ் ஒரு பத்திரிகைப் பேட்டியின் போது கூறினர்:—

இது என் வாழ்நாளிலேயே மிகவும் பெருமையும் குதூகலமும் அளிக்கும் சந்தர்ப்பங்களில் ஒன்ருகும். ஏனெனில் இந்திய யுவர்களின் வீராதிவீரரும் மாபெரும் சீலருமான என் தாய்நாட்டன்பர் ஒருவர் இன்று என்னுடன் இருக்கிருர். வீரர் சுபாஷ் பாபு ஒரு விநாடியும் அயர்ச்சிகொள்ள மாட்டார் என்பதை நான் அறிவேன். வீரமும் துணிவும் ஆக்கமும் அவரிடம் உருப்பெற்றிருக்கின்றன. ஒரு கப்பலானது கடற் கொந்தளிப்பில் அகப்பட்டிருக்கும்பொழுது சுக்கானைத் திருப்பும் கைகள் திடமும் உறுதியும் பெற்றவைகளாக இருக்க வேண்டும். இந்திய சுதந்திரப் போராட்டத்தில் அவ்வித கொந்தளிப்பான நேரங்களில் இதுவும் ஒன்ருகும். ஆகவே, வீரர் சுபாஷ் பாபுவை நான் இரு கரங்களையும் நீட்டி வரவேற்றுள்ளேன், என்ற வார்த்தைகள் அந்த சமயம் இங்கு ஏற்பட்டிருந்த நெருக்கடியான நிலைமையையும் தக்க தருணத்திலே நேதாஜி தோன்றினர் என்பதையும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் எடுத்துக்காட்டின.

தலைமைப் பதவி

இந்திய சுதந்திர இயக்க சரித்திரத்தில், 1943 ஜூலை மாதம் 4ந் தேதி மிகவும் மகத்துவமும், புனிதமும் பொருந்திய தினமாகும். அன்றுதான் சுபாஷ் சந்திரர் இயக்கத்தின் தலைமைப் பதவியை ஏற்றுக் கொண்டார்.

பிரசித்திபெற்ற சிங்கப்பூர் 'கத்தே' மாளிகையில் மலாயாவிலே ஏன்? தூர கிழக்குப் பிரதேசத்திலேயே மிகப் பெரிதான 'கத்தே' கட்டடத்தின் பிரமாண்டமான மண்டபத்தில், கொடிகளும் தோரணங்களும் அலங்கார மாகக் காணப்பட்டன. மேடை மீது மகாத்மாவின் படம் பிரதான இடம் பெற்றிருந்தது. எழுச்சிஉண்டுபண்ணும் சுலோக அட்டைகள் சுவர்களையும் தூண்களையும் அழகு படுத்தின. கிழக்காசியாவின் பல பாகங்களிலிருந்தும் அதாவது நிப்பொன், மஞ்சுகோ, ஹாங்காங், சயாம், பர்மா மலாயா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளும், இந்திய தேசிய ராணுவத்தைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்களும் விஜயஞ்செய்திருந்தனர்.

கூடியிருந்தவர்களின் முகங்களிலே நம்பிக்கையும் உறுதியும் தைரியமும் காட்சியளித்தன. இந்தியாவின் சுதந்திரப் போர் ஓர் உறுதியான கட்டத்தை அடைந்திருப்பதாகவும், நம்பிக்கைக்குறிய தலைவர், பொறுப்பை ஏற்று நடத்திவரப்போவதாகவும் அனைவரும் கருதினர்.

தலைவர் ராஷ்பிகாரி போஸ், தமது பதவியை ராஜிநாமாச் செய்துவிட்டு, அப்பதவியில் சுபாஷ் போஸை இருந்துவரும்படி கேட்டுக்கொள்ளும்பொழுது கூறினார்:— இந்திய இளைஞர்களின் சக்தியும் ஆர்வமும் ஊக்கமும் உறுதியும் ஓர் உருவாகத் தோன்றியவர் திரு போஸ். அவர் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை

எதிர்த்துப் போராடிய அரும்பெரும் தலைவர்களில் தனிப்பெருமை வாய்ந்தவர். தமது வாழ்க்கையையே தேசத்திற்கு அர்ப்பணம் செய்தவர். கிழக்காசியாவிலுள்ள 20 லட்சம் இந்தியர்களும் சுபாஷ் பாபுவுக்கு அளித்த ஆர்வமிக்க வரவேற்பைக்கண்டு நான் பேரானந்தம் அடைகிறேன். கிழக்காசியா வாழ் இந்தியர்கள் அனைவரும் இவ்வரவேற்பின் மூலம் தங்களையும் தங்களைச் சேர்ந்த சகலத்தையும் சுபாஷ் பாபுவின் ஆக்ஞைக்கு சமர்ப்பித்துவிட்டதாக உறுதி கொடுத்துள்ளார்களென்று நான் கருதுகிறேன்.

'நண்பர்களே, நான் என் பதவியை ராஜிநாமாச் செய்துகொள்கிறேன். கிழக்காசிய இந்திய சுதந்திர சங்கத் தலைவராக சுபாஷ் சந்திரபோஸ் அவர்களை நியமனம் செய்துள்ளேன். இனி அவரே நமதியக்கத்தின் தலைவர். அவர் தலைமையில் பூரண வெற்றி கிட்டுமென நான் உறுதியாக நம்புகிறேன்' என்றார்.

பிறகு, நேதாஜி சுபாஷ் போஸ், மிகுந்த ஆரவாரத்தினிடையே எழுந்து பேசினார். அவருடைய பேச்சை அங்கு கூடியிருந்தோரனைவரும் மிகுந்த குதூகலத்தோடு, ஆனால், நிசப்தமாக ஏற்றுக்கொண்டனர். அவர் ஒரு போர் வீரனைப் போலவே பேசினார். கூட்டத்தினர்க்கு அவர் விடுத்த செய்தி, 40 கோடி இந்திய மக்களின் விடுதலைக்கு ஒலித்த சங்கநாதம்போல் முழங்கியது.

திரு, ராஷ்பிகாரி போஸ் அவர்களே, கிழக்காசிய இந்திய சுதந்திர இயக்கப் பிரதிநிதிகளே, கிழக்காசிய இந்திய சுதந்திர இயக்கத்தின் தலைவனாக என்னை நியமித்த கௌரவத்திற்காக, நான் உங்களுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் பணிவுடனேயே இந்தத் தலைமையை ஏற்றுக் கொள்கிறேன். நமது நாட்டிலும் வெளியிலும் இருக்கும் இந்தியர் அனைவருக்கும் திருப்திகரமான முறையில் நான்என்கடமையை நிறைவேற்றுவதற்கு ஆண்டவன் எனக்கு வலிமையை அளிப்பாராக! இந்த யுத்தம் ஆரம்பமானது முதல் இந்தியாவிலிருந்தபொழுதும், அங்கிருந்து வெளியேறிய பின்னும் நான் அடைந்த அனுபவங்களை நீங்கள் கேட்பீர்களானால், ஏதோ நமக்குத் தெரியாத தெய்வீக சக்தியொன்றுதான் நம்மைக் கெடுதல்களிலிருந்து காப்பாற்றி நமது முயற்சிகளை வெற்றிகரமான பாதையில் நடத்திச் செல்லுகிற தென்று நான் உணர்வது போலவே நீங்களும் உணர்வீர்கள். இந்த உணர்ச்சியானது எனது நன்னம்பிக்கையையும் தன்னம்பிக்கையையும் பலநூறு மடங்கு அதிகமாக்கிவிட்டது.

'நண்பர்களே! சுதந்திரத்தில் விருப்பமுள்ள ஒவ்வொரு இந்தியனும் செயல் புரியவேண்டிய தருணம் வந்துவிட்டது. யுத்த நெருக்கடியில் செயல் புரிவதென்ருல், முதன்மையாக வேண்டுவது ராணுவக் கட்டுப்பாடும் லட்சியத்தில் தளராத நம்பிக்கையும்தான். எனவே, கிழக்காசிய இந்தியர் அனைவரும் ஒரே தலைவனின் கீழ், ஒரு கற்பாறை போன்று உறுதியுடன் ஒன்றுபட்டு நமக்கு முன் நிற்கும் தீவிரமான போராட்டத்துக்கு தங்களைத் தயார் செய்துகொள்ளவேண்டும். அவர்கள் அவ்வாறே செய்வார்கள் என்பது என் நம்பிக்கை. நான், எனது தாய்நாட்டைவிட்டு வெளியேறியது ஒரு மகத்தான லட்சியத்திற்காகவென்றும், எனது நாட்டினர் மிகப் பெரும்பாலோரின் விருப்பத்திற்கிணங்கவே என்றும், நான் பலதடவை வெளிப்படையாகத் தெரிவித்திருக்கிறேன். அதுமுதல் பிரிட்டிஷ்

ரகசியப் போலீசாரின் தடைகள் எல்லாவற்றையும் மீறி, இந்தியாவிலுள்ள என் நாட்டினருடன் இடைவிடாது சம்பந்தம் வைத்துக்கொண்டிருக்கிறேன்.'

மேலும் அவர் கூறியதாவது:—

உலக நெருக்கடியின் நசுக்குதலால், தங்கள் சொந்த நன்மையைக் கருதியாவது, பிரிட்டிஷார் இந்தியாவின் சுயாட்சிக் கோரிக்கைக்கு இணங்கி விடுவார்களென்று இந்தியாவிலுள்ள எனது நண்பர்கள் சிலர் ஒரு காலத்தில் நம்பினர்கள். இப்பொழுது இந்த நண்பர்களின் மயக்கம் தெளிந்திருக்கும். ஏனெனில் யுத்த காலத்திலும் யுத்தம் முடிந்த பின்னும் பிரிட்டிஷார் இந்தியாவை முன்னைவிட ஈவிரக்கமின்றி சுரண்டவே எண்ணுகிறர்கள் என்பது இப்பொழுது ஸ்பஷ்டமாக விளங்கிவிட்டது.

மேலும் நேதாஜி பேசினர்:— உங்களில் என்னைப் போல் மற்ற நாடுகளில் நடந்திருக்கும் சுதந்திர இயக்க சரித்திரங்களைப் படித்திருப்பவர்கள் ஒரு விஷயத்தைக் கவனித்திருக்கலாம். அதாவது ஒரு நாடு சுதந்திரம் பெறுவதற்கு இரண்டு விஷயங்கள் முக்கியமானவை; ஒன்று அனுகூலமான சர்வதேச நிலைமை, மற்றொன்று வேண்டிய அளவு தியாகமும் முயற்சியும்.

பிரிட்டிஷ் சாம்ராச்சியம் எவ்வளவோ சக்தியும் பலமும் வாய்ந்திருந்தும், அது பிறருடைய உதவியின்றி ஒரு காரியமும் செய்ய முடியவில்லை. எனவே, நாமும் நமக்கு எந்தெந்த விதத்தில் அனுதாபமும் உதவியும் கிடைக்கின்றனவோ அவை எல்லாவற்றையும் ஏற்றுக் கொள்வது சகஜம்தானே! சரித்திரத்தில் காணப்படும் எந்த சுதந்திர இயக்கமும் வெளிநாடுகளின் உதவி

யாலேயே வெற்றி பெறுவதற்கு முடிந்திருக்கிறது. தர்க்க ரீதியாக நிகழ்ச்சிகளைக் கவனித்தோமானால், நமது எதிரிகளின் எதிரிகள் என்ற காரணத்தால், மூவல்லரசினர், இயல்பாகவே நமக்கு நண்பர்களாகி விட்டார்கள். ஆகவே, அவர்களது அனுதாபத்தையும், அவசியமானால் உதவியையும் நாம் ஏற்றுக்கொள்வதில் பிசகொன்றுமில்லை.

'பர்மா, பிலிப்பைன் இரு நாடுகளின் விஷயமாகவும் நிப்பன் காட்டியுள்ள மனோபாவம், அதன் உண்மை யான சிரத்தைக்கும், நம்பிக்கைக்கும் தக்க அத்தாட்சி யாகும். ஆனால், இதை ஒதுக்கிவிட்டுப்பார்த்தால் கூட ஒரு மனிதன் என்ற முறையில் நான் எதற்காக நிப்ப னுடைய நோக்கங்களைச் சந்தேகிக்க வேண்டுமென்று எனக்குப் புலப்படவில்லை. வெளிநாட்டு ஆக்கிரமிப்பை முதன் முதலாக வெற்றிகரமாக எதிர்த்து தடுத்த ஆசிய நாடு நிப்பன்தான். ஆசிய நாடுகள் அத்தனையும் அடிமைத்தனத்திலிருந்து முற்றிலும் விடுவிக்கப்படாத வரையில், எந்த ஆசிய நாடும் வெளிநாட்டார் ஆக்கிர மிப்பிலிருந்து தான் பாதுகாப்பாயிருப்பதாக எண்ண முடியாது என்னும் உண்மையை வேறெவரையும் விட நிப்பனே நன்கு அறியும்.

'நான் அன்றொரு நாள் தோக்கியோவில் கூறியது போல பிரிட்டிஷ் அரசாங்கம் என்னை என் வாழ்நாள் முழுவதும் சிறைப்படுத்தி வைத்திருந்த பின்னும் என் மன வலிமையை சிதைக்க முடியவில்லை என்றால், வேறு எவராலும் அப்படி செய்ய முடியாது. சூழ்ச்சியில் மிக்கவர்களான பிரிட்டிஷ் ராஜ தந்திரிகளால் என்னைத் தாஜா பண்ணவோ, ஏமாற்றவோ முடியவில்லை யென்றால் வேறுஎவரும் அவ்வாறு செய்ய முடியுமென்று எதிர்பார்க்க முடியாது.

'நண்பர்களே, நமக்கு உலக நிலை, முன் எப்பொழுதையும்விட இப்பொழுது அதிக அனுகூலமாயிருக்கிறது. நிலைமைகளின் சேர்க்கையும் நமக்குச் சாதகமாகவே இருக்கிறது. எனவே, நாம் சுதந்திரம் பெறுவதற்கு தேவையாயிருப்பதெல்லாம் போதிய முயற்சியும் தியாகமும்தான். இந்த இரண்டிலும் நாம் யாருக்கும் குறைந்தவர்களல்லர். சென்ற மே மாதம் பிரிட்டிஷ் பொக்கிஷ மந்திரி ஸ்டாபர்ட் கிரிப்ஸ் இந்தியாவை விட்டுப் போன பின்பு, நமது முதல் சுதந்திர யுத்தம் நடந்த 85-வது வருஷ விழாவன்று, நமது தேசீயப் போராட்டம் அதன் மிகவும் மகத்துவம் வாய்ந்த ஸ்தானத்திற்கு வந்திருக்கிறதென்று நான் கூறியது உங்களுக்கு ஞாபகமிருக்கலாம். அது முதல் நாம் முன்னே செல்லும் வழியில் பல மைல் கற்களைக் கடந்துவிட்டோம். இவற்றில் மிகவும் முக்கியமானவை சென்ற ஆகஸ்ட் மாதச் சட்ட மறுப்பு ஆரம்பமும், மகாத்மாஜி கைதான பின் தொடங்கிய நாச வேலைகளுந்தான். இந்தியாவின் போராட்டத்தின் சரித்திரத்திலே 1942 ஆகஸ்ட் மாதம் நமது போர், சாத்வீகத்திலிருந்து நேர்முகமான போராட்டமாக மாறிய முக்கியமான மாறுதலுக்கு அறிகுறியாக விளங்கும்.'

நேதாஜி எதிர்காலத் திட்டம் பற்றி குறிப்பிட்டதாவது :—

நமது சக்திகளையெல்லாம் திறமை வாய்ந்த முறையில் ஒருங்கு திரட்டுவதின் பொருட்டு, ஒரு தற்காலிக சுதந்திர இந்திய அரசாங்கம் ஸ்தாபிக்க வேண்டுமென்று நான் எண்ணியுள்ளேன். இந்தியப் புரட்சியை ஒரு வெற்றிகரமான முடிவுக்கு நடத்திச் செல்வது இந்தத் தற்காலிக அரசாங்கத்தின் வேலையாகவிருக்கும், இந்த நோக்கத்திற்காக தற்காலிக அரசாங்கம் இந்தியா

வுக்கு உள்ளேயும் வெளியிலும் உள்ள இந்தியர்களை ஆயுதந்தாங்கி யுத்தத்திற்கு தயார் செய்யும். 1885-வது வருஷ முதல் நடந்து வரும் நமது சுதந்திர யுத்தத்தின் சிகரம் போன்ற முயற்சி இதுவே. புரட்சி வெற்றி பெற்று ஆங்கிலோ அமெரிக்க ஏகாதிபத்தியம் இந்தியா விலிருந்து வெளியேற்றப்பட்டுவிடுமானால், இந்தத் தற்காலிக அரசாங்கத்தின் காரியமும் முடிந்துவிடும். அதன் பின்னர் இந்திய ஜனங்களின் விருப்பப் பிரகாரம் இந்தியாவிலே ஒரு நிரந்தர அரசாங்கம் நிறுவப்படும்.

'நமது கடைசிப் போராட்டத்திற்கான எல்லா ஏற்பாடுகளும் முடிந்த பின்னர், இந்தியாவின் போரை, மூவல்லரசுகள், நமது பொது எதிரிக்கு எதிராகப் புரிந்து வரும் போருடன் இணைத்துவிடுவது சாத்தியமாகும். இந்தப் பொது யுத்தத்தில் கலந்துகொள்வதன் மூலம், நாம் நமது இறுதி சுதந்திரப் போருக்கு நம்மைத் தயார் செய்துகொள்ளுவோம். இந்தப் புனித லட்சியத்திற்காக நமது ரத்தத்தை சிந்துவதின் மூலம் நாம் நமது சுதந்திரத்துக்கு தக்க விலை கொடுத்தவர்களாவோம். அதுமட்டுமின்றி நமது தேசீய ஒற்றுமை, என்றும் நிலைத்திருப்பதற்கான ஒரே அஸ்திவாரத்தை நாட்டிய வர்களாவோம். எல்லாவற்றிற்கும் மேலாக, நமது முயற்சியாலும் தியாகத்தாலும் நாம் பெறும் சுதந் திரத்தை நாம் என்றென்றைக்கும் காப்பாற்றி வைத்துக் கொள்ள முடியும்படியான பலம் நமக்கு உண்டாகும்.

முடிவாக அவர், 'நண்பர்களே, நீங்கள் என்மீது வைத்துள்ள நம்பிக்கைக்காகவும், எனக்கு உங்கள் மாறாத உதவியை அளித்திருப்பதற்காகவும் முடிவில் மீண்டும் ஒருமுறை வந்தனம் தெரிவித்துக்கொள் கிறேன்.


கடைசியாக ஓர் எச்சரிக்கை. நமது வெற்றி நிச்சய மானதுதான் எனினும், எதிரியின் பலத்தை நாம் ஒருபோதும் குறைவாய் மதிப்பிடலாகாது. தற்காலிக அபஜெயங்களுக்குக்கூட நாம் தயாராக இருக்க வேண்டும். நமக்கு முன்னர் ஒரு கடுமையான போர் எதிர்ப்பட்டிருக்கிறது. ஏனெனில், எதிரி சக்தி வாய்ந்த வன்; ஈவிரக்கமில்லாதவன். சுதந்திரக் கோவில் செல்லும் இந்தக் கடைசிப் பிரயாணத்தில் நீங்கள் பசி, தாகம், தனிமை, கட்டாயநடை, மரணம் இவ்வளவிற்கும் தயாராக இருக்கவேண்டும். இந்தப் பரீட்சையில் நீங்கள் தேறினால்தான் சுதந்திரம் உங்களுக்குக் கிடைக்கும். நீங்கள் அவ்வாறே செய்வீர்களென்றும், அதன் மூலம் நமது அடிமைப்பட்ட வறுமையில் உழலும் —நாட்டிற்கு விடுதலையையும் செல்வப் பெருக்கையும் கொண்டு தருவீர்களென்றும் நம்புகிறேன்' என்று கூறி முடித்தார் நேதாஜி.

'கிழக்காசிய இந்திய சுதந்திர சங்கத் தலைமைப் பதவியை திரு. சுபாஷ் சந்திரபோஸ் உத்தியோக ரீதியில் ஏற்றுக்கொண்டுள்ளார். தலைவர் சுபாஷ் பாபு வுக்கு கிழக்காசிய இந்தியர்களின் பிரதிநிதிகள் தங்கள் விசுவாசத்தைத் தெரிவித்துக்கொண்டதோடு, பூரண மான ஒத்துழைப்பை அளிப்பதாகவும் வாக்குறுதி யளித்திருந்தனர்.

இவ்வாறு இந்திய சுதந்திர சங்கப் பேச்சாளர் (4–7–43) பத்திரிகை மகாநாட்டில் அறிவித்தார்.

கிழக்காசிய இந்திய சுதந்திர சங்கத்திற்கு திரு. சுபாஷ்சந்திரபோஸ் தலைமை வகித்ததிலிருந்து கிழக்காசிய இந்திய சுதந்திர இயக்கம் செயலில் இறங்கி விட்டது. தலைவர் போஸ் இது சம்பந்தமாகக் கூறியதாவது:—

'இறுதி வெற்றியையும் சுதந்திரத்தையும் நோக்கி நாம் முன் சென்றுகொண்டிருக்கிறோம்.'





நேதாஜி இ. சு. ச. தலைமைப் பொறுப்பை ரா. வி. போஸிடமிருந்து
பெறுகிறார். (இ. வ.) கர்னல் பான்ஸலே, நேதாஜி போஸ்,
ரா. வி. போஸ், ஜான் திவி.

இந்திய தேசீய
ராணுவ ஸ்தாபிதம்

ஒப்பு, உயர்வு இல்லாத தலைவர் திரு சுபாஷ்சந்திர போஸ் கிழக்காசியாவுக்குள் பிரவேசித்து, இந்திய சுதந்திர இயக்கத்தின் தலைமையையும், இ. தே. ரா-வின் சர்வ சேனாதிபத்தியத்தின் தலைமையையும் ஏற்றுக் கொண்டவுடனேயே இந்தியர்கள் ஒரு புதுப்பிறவி எடுத்தவர்கள் போலானார்கள். ஸிபஹ்ஸாலார் (பிரதம சேனாதிபதி) போஸ் நமது இணையற்ற மேதா விலாசத் தினால்—சக்தியினால்—அற்புதம் என்று வியக்கும் முறை யிலே காரியங்களை நடத்த ஆரம்பித்தார். இந்தியர்களை ஒன்று சேர்த்து அவர்களது சக்திகளையெல்லாம் ஒன்று திரட்டினார். சிங்கப்பூர்வந்து சேர்ந்த ஒருவாரத்திற்குள் இந்திய தேசீய ராணுவத்தைச் சீர்திருத்தி அமைத்தார்.

இ. தே. ராணுவம் ஓராண்டிற்கு முன்னதாகவே 1942ம் வருடம் ஜூன்மாதம், பாங்காக்கில் கூடிய கிழக்கு ஆசிய இந்தியப் பிரதிநிதிகள் மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கிணங்க ஜெனரல் மோஹன்சிங்கினுல் அமைக்கப்பட்டது. ஆனுல் அதைப் பற்றி வெளியுலகத்திற்கு அவ்வளவாக ஒன்றும் தெரியாது. ஜப்பானியர்களுக்கும், இ. தே. ரா. உத்தியோகஸ்தர்களுக்கும் இ. சு. இயக்கத் தலைவர்களுக்குமிடையே ஒற்றுமையான அபிப்பிராய மில்லாத காரணத்தினுல் அது குடத்திலிட்ட விளக்குப்போல் இருந்து வந்தது.

(குறிப்பு:—1941 டிசம்பர் 8ம் தேதி வட மலாயாவில் முதல் துப்பாக்கிகுண்டுவெடிப்பதற்குமுன்னதாகஇ.தே. சேனை ஸ்தாபிதமாகிவிட்டது. இந்தியத் துருப்புகள் வேறு வழியின்றி பிரிட்டிஷ் தரப்பில் போர் புரிந்தாலும் அவர்கள் மனம், சுதந்திரப் புயலால் கொந்தளித்துக் கொண்டிருந்தது என்பதை இது காட்டிவிட்டது. இந்திய தேசிய சேனையின் பிறப்பிடம் வட மலாயாவில், பெர்லிஸில், ஓர் இடம். நிப்பொன் படைகள் தாய்லாந்து எல்லையைக் கடந்து மலாயாவுக்குள் பிரவேசித்த பொழுதுதான் அது தோன்றியது. அதன் முதல் பிரிவில் ஒரு காப்டனும், 54 வீரர்களும் இருந்தனர்' என்று ஒரு நிருபர் குறிப்பிடுகிருர்.)

ஆனுல், நேதாஜி இ. தே. ராணுவத்தை ஸ்தாபித்தவுடனேயே, அதை உலக முழுமைக்கும் அறிவித்தார். அவர் அன்று வெளியிட்ட வார்த்தைகள் இ. சு. இயக்க சங்கநாதம் போல உலகம் எங்கும் ஒலித்தது.

1943ம் வருடம் ஜூலை மாதம் 7ம் தேதி இந்திய தேசிய ராணுவம் அமைக்கப்பட்டுவிட்டதாக அறிவிக்கப்பட்டது. இ. சு. ச. தலைமைக் காரியாலயம் பின்வரும் அறிக்கையை வெளியிட்டது.

ஆஸாத் ஹிந்த் பௌஜி அல்லது இந்திய தேசீய ராணுவம் எனப் பெயர் விளங்கும் ராணுவமொன்றை இந்திய சுதந்திர சங்கம் ஏற்படுத்தியிருப்பதாக இ. சு. ச. தலைமைக் காரியாலயத்தின் அதிகாரத்துவ அறிக்கை யொன்று கூறுகிறது. ஆஸாத் ஹிந்த் பௌஜி அல்லது இந்திய தேசீய ராணுவம் என்றழைக்கப்படும் இந்த ராணுவம் இந்தியாவின் பரிபூரண சுதந்திர லட்சியத் திற்காக விசுவாசப் பிரமாணம் செய்திருக்கிறதென்றும், இந்த ராணுவத்தின் உத்தியோகஸ்தர்களும் சிப்பாய் களும் இந்தியாவினின்று பிரிட்டிஷாரை விரட்டி, இந்தி யாவை இந்தியர்களுக்காக ஸ்தாபிக்கும் புனிதக் கடமைக்குத் தங்கள் உயிர்களை அர்ப்பணம் செய்திருக் கிறார்களென்றும் அவ்வறிக்கை தெரிவித்துள்ளது.

ஆஸாத் ஹித்ந் பௌஜி அல்லது இந்திய தேசீய ராணுவம்–முற்றிலும் இந்தியர்களால் ஏற்படுத்தப்பட்ட தென்பதை அறிக்கை தெளிவுபடுத்தியது. பிரிட்டிஷாரு டன் போரிட்டு இருநூறுவருட காலப் பிரிட்டிஷ் ஆட்சி யின் மாசுகளனைத்தையும் இந்தியாவினின்று துடைத் தெறிந்து, இந்தியாவின் பரிபூரண சுதந்திரத்தையடை யச் சத்தியப் பிரமாணம் எடுத்துக்கொண்ட இந்தியத் தொண்டர்களிலிருந்து பொறுக்கி எடுக்கப்பட்ட சோல்ஜர்கள் இந்த ராணுவத்தில் அடங்கியிருக்கின்ற னர். இவர்களது ரத்தத்தின் ஒவ்வொரு துளியும் பிரிட்டிஷ் எதிர்ப்புக் கனலினால் கொதித்துக் கொண் டிருக்கிறது. சுதந்திர உணர்ச்சியினால் இவர்கள் தூண்டப்பட்டு இருக்கின்றனர். இந்திய விடுதலை லட்சியத்திற்காக இவர்கள் தங்களுடைய உயிர்களை அர்ப்பணம் செய்திருக்கின்றனர். இவர்களது மனதில் சொந்த சுகம், சொந்த டாம்பீகம், சொந்த லாபம் முதலான எண்ண மெதுவுமில்லை. மகாத்மாகாந்தி

கூறியுள்ளபடி 'விடுதலை அல்லது மரணம்' என்பதே இவர்களது மூலமந்திரம். இந்தியாவின் பரிபூரண சுதந்திரத்திற்கான போரில் இவர்கள் தங்களுடைய உயிர்களைக் கொடுக்கத் தயாராயிருக்கின்றனர்கள்.

இந்தியாவின் சரித்திரத்திலே, பிரிட்டிஷார் தோன்றிய காலமுதல் இந்திய மயமும், உண்மையான தேசியமும், கமழும் ராணுவமொன்று திரட்டப்பட்டிருப்பது இதுவே முதல் தடவையாகும்.

"இந்தியாவில் பிரிட்டிஷ் ஆதிக்கத்தையும் செல்வாக்கையும் அழித்து, இந்தியாவை இந்தியர்களுக்காக ஏற்படுத்துவதுதான் ஆஸாத் ஹிந்த் பௌஜின் (இந்திய தேசீய ராணுத்தின்) ஏக நோக்கம்.

"இந்திய உணர்ச்சி, இந்திய விவேகம், இந்தியத் தன்மை முதலியவற்றுக்குத் தக்கபடியே ஆஸாத் ஹிந்த் பௌஜின் உத்தியோகஸ்தர்கள், சிப்பாய்கள் ஆகியோரின் உடைகளும் இருக்கின்றன; எல்லோரும் இந்தியர் என்ற உணர்ச்சி. பிரிட்டிஷார் தங்களுடைய பிரித்தாளும் கொள்கையைப் பிடிவாதமாகப் பின்பற்றி இந்தியாவின்மீது அரசு செலுத்தி வந்திருக்கின்றனர். இக்கொள்கையை அவர்கள் இந்திய ராணுவத்திலும் புகுத்தி, ஜாதி மத வித்தியாசங்கள் அதில் நிலைபெற்றிருக்குபடி செய்து, ராணுவத்தில் தேசீய உணர்ச்சியின் வளர்ச்சியைத் தடுத்தனர். ஆஸாத் ஹிந்த் பௌஜி அமைப்பாளர்கள் இந்த பிரிட்டிஷ் பிரித்தாளும் கொள்கையின் கொடுமையை நன்குணர்ந்து, இதைவேருடன் களைந்தெறிந்து விட்டனர். உண்மையான தேசீய முறைகளில் அமைக்கப்பட்டிருக்கும் ஆஸாத் ஹிந்த் பௌஜில், ஜாதி மத வகுப்பு வித்தியாசங்களனைத்தும் ஒழிக்கப்பட்டு விட்டன. ஆஸாத் ஹிந்த் பௌஜி

சேவையாளர்களிடையே குறுகிய மதாச்சாரக் கட்டுப் பாடுகள் கிடையாது. ஒவ்வொரு ஆஸாத் ஹிந்த் பௌஜி வீரரும் தான், ஆதிமுதல் அந்தம்வரை இந்தியர் என்ற உணர்ச்சியுடனேயே இருக்கின்றனர். பிரிட்டிஷ் ஆட்சியினின்று இந்தியாவை விடுவிப்பதே அவர்களது லட்சியம். ஒற்றுமை, நம்பிக்கை, தியாகம் இவையே அவர்களது தாரகமந்திரம்.

"ஆஸாத் ஹிந்த் பௌஜின் பொது ஒழுக்கத்தில் இந்தியப் பழக்க வழக்கங்களே பிரதான ஸ்தானம் பெற்றிருக்கின்றன. ஆங்கில பாஷையைக் கட்டாய உபயோகமாக வைத்து, தேசீயத்தை பிரிட்டிஷார் வதைபுரிந்து வந்த கொடுமையின் சின்னங்களனைத்தையும் அகற்றுவதற்காகவும் ராணுவ உத்தியோகஸ்தர்களுக்கும் சிப்பாய்களுக்கு மிடையே உறுதியான சம்பந்தத்தை ஸ்தாபிப்பதற்காகவும் இந்தி பாஷையையே அவர்களது வழக்க பாஷையாக ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. வகுப்பு விடுதியிலும் போர்க்களத்திலும் இந்தி பாஷையே அவர்களது பொதுப்பாஷையாகவிருக்கும்.

"ஆஸாத் ஹிந்த் பௌஜி, இந்தியர்களுக்காக சர்வம் இந்தியர்களைக் கொண்டே ஏற்படுத்தப்பட்டதென்பதை அறிக்கை மீண்டும் வற்புறுத்தியது. அது, இந்தியாவின் பரிபூரண சுதந்திரத்தை சம்பாதிக்கும் ஒரே கடமைக்காக, தன்னைச் சத்தியபூர்வமாக அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறது" என்பதே அவ்வறிக்கையின் சாரம்.

நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ், கிழக்காசிய இந்திய சுதந்திர சங்கத் தலைவர் என்ற ஹோதாவில் 1943 ஜுலை 5ந் தேதியன்று சிங்கப்பூர் முனிசிபல்

கட்டிடத்திற்கு எதிரிலுள்ள மைதானத்தில், ஆஸாத் ஹிந்த் பௌஜின் அணிவகுப்பின் ராணுவமரியாதையை ஏற்றுக்கொண்டார்.

பிரமாண்டமான அந்த மைதானத்திலே எங்கு பார்த்தாலும் காக்கி உடுப்பும் தொப்பியும் அணிந்து, துப்பாக்கி தாங்கிய வீரர்களே நிரம்பியிருந்தனர். சாதாரண காலத்தில் பசுமையுடன் காணப்படும் அந்தத் திடல் முழுமையும் பளபளப்பான துப்பாக்கி முனைகளே தென்பட்டன. அணி அணியாகப் போர் வீரர்கள் வகுத்து நின்ற காட்சி கண்ணையும். கருத்தையும் ஒருங்கே ஈர்க்கும் தன்மையுடையதாக இருந்தது. சரியாகப் பத்தரை மணிக்கு, நேதாஜி மெய்ப் பாதுகாப்புப் படையினர் சூழ மோட்டாரில் வந்திறங்கினர். உடனே முரசு ஒலிக்கப்பட்டது.

தலைவர் பிறகு மேடைக்குச் செல்லும் படிகளில் ஏறி, இந்திய சுதந்திரப் போருக்கு உயிர்களை அர்ப்பணஞ் செய்யவிருக்கும் வீரர்களை அங்கிருந்தபடியே பார்வையிட்டார். பிறகு, ராணுவத் தலைவர்கள் வழி காட்ட, பிரதம ஆலோசனையாளரான திரு. ராஷ்பிகாரி போஸ் கூடவர, சிப்பாஹ்சாலார் சுபாஷ் சந்திரர் ராணுவத்தைப் பார்வையிட்டார். பின்னர் மேடைக்குத் திரும்பி வந்து ராணுவ உத்தியோகஸ்தர்களுக்கும் சிப்பாய்களுக்கும் ஒரு உத்வேகமூட்டும் செய்தி விடுத்தார்.

அவரது பிரசங்கத்தின் இடையிடையே, 'இங்குலாப் ஜிந்தாபாத்', 'ஆஸாத் ஹிந்த் ஜிந்தாபாத்'. 'மகாத்மா காந்திக்கு ஜே' என்ற கோஷங்கள் வானதிர எழுந்தன. அவரது ஆரம்ப வார்த்தைகள், ஆஸாத் ஹிந்த் பௌஜ் வீரர்களுக்கு புத்துணர்ச்சியை ஊட்டின. 'இந்திய

விடுதலை ராணுவ வீரர்களே! என் தோழர்களே!!' என அழைத்து அவர் கூறியதாவது:-" இன்றையதினம் என் வாழ்விலேயே பெருமையளிக்கும் தினமாகும். பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் அரணாக ஒரு காலத்தில் இருந்த சிங்கப்பூர் தளத்தில், இந்திய விடுதலை ராணுவம் இப்பொழுது அமைக்கப்பட்டிருக்கிறது என்று கூறினர்.

மேலும் அவர் கூறினர்:- "இந்தியாவின் சுதந்திர சைன்யத்தின் வீரர்களே! இன்றைய தினம் என் வாழ்நாளில் மிகவும் பெருமை வாய்ந்தது. இந்தியாவைச் சுதந்திரமடையச் செய்யப்போகிற ஒரு சைன்யம் நிறுவப்பட்டு விட்டது' என்பதை உலகுக்கு அறிவிக்கும் பெருமை இன்று இறைவனல் எனக்கு அருளப்பட்டிருக்கிறது. இது இந்தியாவை விடுவிப்பதுடன் நின்று விடாது. சுதந்திர இந்தியாவின் நிரந்தர சைன்யத்தையும் இதுவே நிறுவப்போகிறது. இந்தியரின் தலைமையில் ஒரு இந்திய சைன்யம்—ஒவ்வொரு இந்தியனுக்கும் சொந்தமான சைன்யம்—நிறுவப்பட்டிருக்கிறதென்பதில் எல்லா இந்தியர்களும் பெருமைகொள்ள வேண்டும். சமயம் வாய்த்ததும், இந்த சைன்யம் இந்தியரின் தலைமையில் போருக்குச் செல்லும்......ஒவ்வொரு சாம்ராஜ்ஜியமும் வீழ்ச்சியடைந்து, நொறுங்கிப் போயிருக்கிறது என்பதைச் சரித்திரம் எனக்கு சந்தேகமறக் கற்பித்திருக்கிறது. தவிர, ஒரு காலத்தில் மேன்மையுடன் விளங்கிப் பலமான அரண் சூழ்ந்திருந்த நகரங்களும், கோட்டைகளும் இறந்தொழிந்துபோன சாம்ராஜ்யங்களின் புதைகாடுகளாக ஆகிவிட்டதை நான், என் கண்ணல் கண்டிருக்கிறேன். இன்று பிரிட்டிஷ் சாம்ராஜ்யமும் சவக்குழியினருகே நின்றுகொண்டிருக்கிறது. ஒரு காலத்தில் சக்தி வாய்ந்திருந்த பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம், இன்று வெறும் பழங்கதையாகி விட்டது என்பதை ஒரு குழந்தைகூட அறியும்.

1939ம் வருஷம் ஜெர்மனி, பிரான்சுமீது போர் தொடங்கியதும், ஒவ்வொருஜெர்மன் வீரனும்'பாரீசுக்கு பாரீசுக்கு' என்று கோஷமிட்டனர். அதைப்போல் 1941 டிசம்பரில் நிப்பொனின் வீர சைன்யங்களின் கோஷம் இதுதான் 'சிங்கப்பூர் செல்வோம், சிங்கப்பூர் செல்வோம்'. தோழர்களே நமது கோஷம் என்ன? 'டெல்ஹி செல்வோம், டெல்ஹி செல்வோம் என்பதே.

'நம்மில் எத்தனை பேர் இந்த யுத்தத்திற்கப்புறம் உயிர் பிழைத்திருப்பார்கள் என்பது எனக்குத் தெரியாது. ஆனுல், ஒன்றுமட்டும் எனக்குத் திண்ணமாகத் தெரியும். நாம் கடைசியாக வெற்றிக்கொடி நாட்டும் வரை, நமது வீரர்களில் எஞ்சியிருப்பவர்கள் பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியத்தின் சமாதியான டெல்ஹி லால்கிலா (செங்கோட்டை)வில் வெற்றி அணிவகுப்பு நடத்தாத வரையில் நமது போர்நிற்காது.

'இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு மற்றெல்லா விதத்திலும் தகுதி வாய்ந்திருக்கிறது. ஆனுல் அதற்கு ஒரு சுதந்திர சைன்யமில்லாததுதான் குறை என்பதை நான் என் பொதுவாழ்வு ஆரம்பமானது முதல் உணர்ந்து வந்திருக்கிறேன். அமெரிக்காவிலே ஜார்ஜ் வாஷிங்டன் போராடிச் சுதந்திரம் பெற்றது எதனுல்? அவரிடம் ஒரு சைன்யம் இருந்ததனுல்தான். கரிபால்டி இத்தாலியைச் சுதந்திரம் பெறச் செய்தது எப்படி? அவரிடம் ராணுவத்தொண்டர்படை இருந்ததால்தான். முதன்முதலாக இந்தியாவின் தேசீய சைன்யத்தை நிறுவிய கௌரவமும் பெருமையும் உங்களையே சாரும். நாம் சுதந்திரமடைவதற்கு இருந்த ஒரே தடையை நீங்கள் இதன்மூலம் நிவர்த்தித்து விட்டீர்கள். ஒரு புனிதப் போராட்டத்தின் முன்னணி வீரர்கள் நீங்கள். இதனுல் நீங்கள் மகிழ்வும் பெருமையும் கொள்ளலாம்.

நீங்கள் இரண்டு பெருங்காரியங்களைச் சாதிக்க வேண்டி இருக்கிற தென்பதை உங்களுக்கு ஞாபக மூட்டுகிறேன். ஆயுத பலத்தாலும் உங்களது ரத்தத் தைப் பெருக்குவதன் மூலம், நீங்கள் சுதந்திரம் பெற வேண்டும். அதன் பின்னர் இந்தியா சுதந்திரம் அடைந்தவுடன், நமது சுதந்திரத்தை என்றைக்கும் நிலைத்திருக்கச் செய்வதற்காக நீங்கள் ஒரு நிரந்தர மான சுதந்திர இந்திய சேனையை நிறுவவேண்டும், நாம் மறுபடி எந்தக்காலத்திலும் சுதந்திரத்தை இழந்து விடாமலிருப்பதற்காக நமது தேசீயத் தற்காப்பை அசைக்கமுடியாத அஸ்திவாரத்துடன் நிறுவவேண்டும்.

'நீங்கள் படைவீரர்கள். எனவே நம்பிக்கைக்குப் பாத்திரமாயிருத்தல், கடமை, தியாகம், இந்த ஆதர்சங்களை நீங்கள் கைக்கொண்டு அவற்றை நடப்பில் காண்பிக்கவேண்டும். என்றைக்கும் தங்கள் நாட்டின் நம்பிக்கைக்கு பாத்திரமாக நடந்துகொண்டு எப்படிப்பட்ட நிலைமையிலும் தங்கள் கடமையை விடாது செய்துகொண்டு, எப்பொழுது வேண்டுமானு லும் தங்கள் உயிரைத் தியாகம் செய்யத் தயாரா யிருக்கும் படை வீரர்களை வெல்லவே முடியாது. நீங்களும் வெல்லுதற்கரிய வீரர்களாக விளங்கவேண்டு மானல், உங்களது மனதில் இந்த மூன்று ஆதர்சங் களையும் ஆழமாகப் பதித்துக் கொள்ளுங்கள்.

'உண்மையான போர் வீரனுக்கு ராணுவப் பயிற்சி மட்டும் போதாது; ஆத்மீகப் பயிற்சியும் வேண்டும். உங்களில் ஒவ்வொரு வீரனும் அளவற்ற தன்னம்பிக்கை கொண்டிருக்கவேண்டும்.

எதிரியைவிடத் தனக்கு பலம் அதிகமென்று உணர வேண்டும், மரணத்திற்கு அஞ்சாமலிருக்க வேண்டும்.

ஏதாவது நெருக்கடியான நிலைமை ஏற்பட்டால், அப்பொழுது தன் சொந்தப் புத்தியை உபயோகித்துச் செயலாற்றும் திறமை கொண்டிருக்க வேண்டும். வீரமும், பயமின்மையும், மின்வேகச் செயல் திறமையும் விஞ்ஞானப் பயிற்சியுடன் சேருமானல் எத்தகைய அதிசயங்களேயும் நிகழ்த்திக் காண்பிக்கலாம், என்பதை இந்த யுத்தத்தில் நீங்கள் பார்த்து வருகிறீர்கள். இந்த உதாரணத்திலிருந்து என்னென்ன கற்றுக்கொள்ள முடியுமோ, கற்றுக்கொள்ளுங்கள். இந்தியத் தாய்க்காக முதல்தரமான நவீன சைன்யத்தை நிறுவுங்கள்.

"உங்களில் அதிகாரிகளாயிருப்பவர்களுக்குச் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். அதிகாரிகளின் பொறுப்புக்கள் மிகக் கடுமையானவை. உலகின் எல்லா ராணுவங்களிலுமே சாதாரணமாக அதிகாரிகளின் பொறுப்புக்கள் கடினம். பிரிட்டிஷார் இத்தனே போர் முனேகளில் தோல்வி யடைந்திருப்பதின் காரணம், கவைக்குதவாத அதிகாரிகள்தான்! உங்களில் யாரோ ஒருவர்தான் சுதந்திர இந்திய ராணுவத்தின் தலைமைத் தளகர்த்தராகத் தோன்றப் போகிருர் என்பதை மறந்து விடாதீர்கள்!

"இந்த யுத்தத்திலே நீங்கள் அனுபவத்தில் தேர்ச்சி பெற்று வெற்றியடைய வேண்டும். அப்பொழுதுதான் நமது வருங்கால ராணுவத்திற்கு நீங்கள் ஒரு முன்னுதாரணமாக விளங்க முடியும். தைரியம், அச்சமின்மை, வெல்ல முடியாமை முதலிய குணங்களில் பரம்பரைப் பெருமை இல்லாத ராணுவம் ஒரு சக்திவாய்ந்த எதிரியுடன் வெற்றிகரமாகப் போராட முடியாது.

தோழர்களே, நீங்கள் தாமாகவே நிறைவேற்ற முன்வந்திருக்கும் இந்த லட்சியம், மனிதனது கற்பனே

எவ்வளவு உயர்வை எட்டக்கூடுமோ. அவ்வளவு உயர்ந்தது. இத்தகைய லட்சியத்தை நிறைவேற்று வதில் எத்தகைய தியாகம் புரிந்தாலும் பெரிதல்ல. நீங்கள் இந்தியாவின் அபிலாசைகளும் மனோரதங்களும் உருவம் பெற்றது போன்றவர்கள். எனவே, நீங்கள் நடந்துகொள்ளும் விதம் இந்தியாவின் ஆசியைப்பெறத் தகுந்ததாயிருக்க வேண்டும்; வருங்காலம், உங்களைப் பற்றிப் பெருமை கொள்ளவேண்டும்.

'எனது வாழ்நாளிலே இன்றைய தினம் எல்லா வற்றிலும் பெருமை பொங்கும் தினம், ஏனென்றால், அடிமைப்பட்டுழலும் ஒரு நாட்டின் மகனுக்கு அதை விடுவிக்கப்போகும் படையின் முன்னணி வீரனாய் இருப் பதைக்காட்டிலும் பெரிய பெருமையோ, கௌரவமோ இருக்கமுடியாது. ஆனால் இந்த கௌரவத்துடன் ஒரு பெரிய பொறுப்பும் சேர்ந்திருக்கிறது. இதை நான் உணர்கிறேன். நான் துன்பத்திலும், இன்பத்திலும் இருளிலும் ஒளியிலும் உங்களுடன் ஒன்றாய் நிற்பேன் என்று உறுதி கூறுகிறேன்.

'தற்போதைக்கு நான் உங்களுக்கு அளிக்கக் கூடியவை பசி, தாகம், தனிமை, கட்டாயநடை, மரணம் இவைதான். ஆனால், நீங்கள் அப்படியே செய்வீர் களென்பது என் நம்பிக்கை. நான் உங்களைச் சுதந்திரத் திருக்கோவிலுக்கு அழைத்துச் செல்வேன்!

"நம்மில் எத்தனை பேர் இந்தியாவைச் சுதந்திர நாடாகக் காணும் வரை உயிர் வாழ்வோமோ தெரியாது. அதைப்பற்றிக் கவலையுமில்லை. இந்தியா சுதந்திரம் பெறும் என்பதே போதும். அதன் விடுதலைக்கு நாம் நம்மாலான எல்லாவற்றையும் செய்வோமென்பதே போதும். கடவுள் நமது சைன்யத்துக்கு அருள்புரிந்து

வரும் போரில் நாம் வெற்றியடையப் புரிவாஞக' என்று கூறி முடித்தார் சிப்பாஹ் சாலார்.

பிரசங்கம் முடிந்தபின் நடைபெற்ற படையணி வகுப்பில் நேதாஜி 'ஸல்யூட்' எடுத்தார். இந்திய விடுதலை வீரர்களின் முன்னிலையில் இந்திய தேசீய வீரர்களின் முன்னிலையில் இந்திய தேசீய மூவர்ணக் கொடி கம்பீரமாகப் பறக்க, கவசப் படைகள் சாரி சாரியாகச் சென்றன. அவைகளுக்குப் பின்னே காலாட் படையினர், கெம்பீரமாக நிமிர்ந்த நடைபோட்டுச் சென்றனர். தாய் நாட்டின் விடுதலைக்காகத் தங்கள் உயிர்களையே அர்ப்பணம் செய்வதெனத் திட உறுதி கொண்டுள்ள இந்த வீரர் குழாத்திலே ஜாதி மத பேதமோ வேறு வித்தியாச உணர்ச்சியோ திவலையும் கிடையாது.

ஆஸாத் ஹிந்த்பௌஜின் சரித்திரத்தில் சிறப்பாகக் குறிப்பிடத்தகும் தினங்களில் 1943 ஜுலை 6ந் தேதியும் ஒன்ருகும். நிப்பன் யுத்தத்தை ஆரம்பித்தவரும், அதை வெற்றிகரமாய் நடத்திச் சென்ற பிரபல நிப்பன் ராஜ தந்திரியும்-அப்பொழுது நிப்பொன் பிரதமராக இருந்தவருமான ஜெனரல் ஹிதேகி தோஜோவால் பார்வையிடப்பட்டதும், ஆஸாத்ஹிந்த் பௌஜிக்கு நிப்போவின் சார்பாக தனது ராணுவ மரியாதையைத் தெரிவித்துக் கொண்டதும் அன்றேயாகும்.

அன்று பிற்பகல், ஜெனரல் தோஜோ, சிங்கப்பூர் எஸ்பிளனேட்டில் நடைபெற்ற ஆஸாத் ஹிந்த் பௌஜி அணிவகுப்பை நேதாஜி முன்பு பார்வையிட்டார். நிப்பொன் அரசாங்கத்தின் சார்பாகவும் நிப்பொன் மக்களின் சார்பாகவும் தான், இந்தியாவுக்காக சகல உதவியும் செய்வதாக வாக்குறுதி அளித்தவர் ஜெனரல் தோஜோவே.

நிப்பொன் பிரதம மந்திரியும் ஆஸாத் ஹிந்த் பௌஜின் தளபதியும் பக்கம் பக்கமாக நின்று ராணுவ அணிவகுப்பிற்கு மரியாதை செய்தது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. பிறகு, நேதாஜி, ஜெனரல் தோஜோவுக்கு நன்றி தெரிவித்தார்.

"பிரதமர் அவர்களே, எங்களது சேனையைப் பார்வையிடுவதில் உங்களது அரிய நேரத்தில் ஒரு பகுதி காலத்தை செலவிட்டு, எங்களைக்கௌரவித்ததின் பொருட்டு, இந்திய தேசீய சைன்யத்தின் சார்பில் உங்களுக்கு மனமார்ந்த பாராட்டுதலை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். புதிதாக நிறுவப்பட்ட இந்த சுதந்திர இந்திய சைன்யத்தின் சரித்திரம், இன்றைய தினம் மகத்துவம் வாய்ந்ததாக விளங்குகிறது. இந்திய சுதந்திர சங்க மகாநாட்டிற்கு, உற்சாக மூட்டத்தக்க செய்தியொன்று அனுப்பிய பின், உடனே தாங்கள் எங்களது படை வீரரிடையே வந்திருப்பது எங்களது புரட்சிப் போருக்கே புது ஊக்கமளிக்கிறது.

"உங்கள் முன் நிற்கும் இந்தச் சைன்யம்தான் இந்தியாவின் சுதந்திரத்திற்காகப் போரிட வேண்டுமென்பதை அறியும். வெற்றிக்கும் சுதந்திரத்திற்கும் செல்லும் வழியில் பல இடர்களைக் கடக்க வேண்டும் என்பதையும் உணர்ந்திருக்கிறது."


சந்தோஷத்திலும் துக்கத்திலும், இன்பத்திலும் துன்பத்திலும் பூரணமான வெற்றி கிடைத்து இந்தியா தான் இழந்துபோன சுதந்திரத்தை மீண்டும் பெறும் வரை நாங்கள் உங்களுடனேயே தோளோடு தோள் சேர்ந்து ஒத்துழைப்போம்' என்பதை முடிவில் உங்களுக்கு மீண்டும் உறுதி கூறுகிறேன்" என்று கூறினர் நேதாஜி.

ஜெய்ஹிந்த்





ஷோனன் எஸ்பிளனேட்டில் இ. தே. ரா. வின் பிரமாண்டமான அணிவகுப்பு



இ.தே.ரா அணிவகுப்பை பிரதமர் தோஜோவுடன்
நேதாஜி பார்வையிடுகிருர்

நேதாஜியின்
சங்கநாதம்

நேதாஜி இந்திய சுதந்திர இயக்கத்தின் தலைமைப் பதவியை ஏற்றுக்கொண்டவுடனேயே, தலைமைக் காரியாலயத்தில் மகத்தான பல மாறுதல்கள் ஏற்பட்டன. அது யுத்த முஸ்தீபுக்கான முறையில் திருத்தி அமைக்கப்பட்டது. அதோடு அநேகம் புதிய இலாக்காக்கள் சிருஷ்டிக்கப்பட்டன. சர்வாம்சப் படை திரட்டுக் கொள்கையை அனுஷ்டானத்திற்கு கொண்டுவருவதற்கான திட்டவட்டமான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. தலைமைக் காரியாலம் புதிய ஜீவனுடன் உற்சாகமாக வேலை செய்ய ஆரம்பித்தது. இதே மாறுதல் கிழக்காசியா முழுவதிலுமுள்ள எல்லாக் கிளை ஸ்தாபனங்களிலும் கையாளப்பட்டு, சகல இடங்களிலும் சர்வாம்சப் படை திரட்டுதலுக்கு சாதகமான முறையில் கொண்டு வரப்பட்டது.

அடுத்தபடியாக நேதாஜி தமது கவனத்தை ஆஸாத் ஹிந்த் பௌஜில் திருப்பினார். முதன் முதல் அவர் எடுத்துக்கொண்ட துணிகரமானதும் உத்தமமானதுமான செயல், ராணுவத்தின் பிரதம சேனாதிபதி பதிவியை அவரே எடுத்துக்கொண்டதுதான். இதற்கு எவ்வளவு மனோதிடமும், துணிவும், திறமையும் ஊக்கமும் வேண்டும் என்பதை யாரும் குறைவாக மதிப்பிட்டு விட முடியாது.

நேதாஜி ஆ. ஹி. பௌஜில் சிபாஹ் சாலார் என்ற முறையிலே அதில் பலமாற்றங்களை உண்டுபண்ணினார். இம்மாற்றங்கள் இராணுவத்தினரிடையே உற்சாகம் அதிகரிக்கத்தக்கதாய் இருந்ததை முக்கியமாகக் குறிப்பிட்டாகவேண்டும்.

இதற்குமேல் நேதாஜி, சர்வாம்சப் படை திரட்டு முறை திட்டத்திற்கிணங்க ராணுவத்திற்கு அவசியமான 'சப்ளைகளை' சேகரிப்பதிலும், இயக்கத்திற்கு வேண்டிய பணம் திரட்டும் முயற்சியிலும் இறங்கினார். திக் விஜயம் செய்ய ஆரம்பித்தார்.

10—7—43 மாலை ஷோனன் தனது சரித்திரத்திலே என்றுமே கண்டிராத காட்சியைக் கண்டது. ஷோனன் நகரின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் ஆடவரும் பெண்டிரும் குழந்தைகளுமாய்த் திரள் திரளாக இந்தியர்கள் நகரசபைக் கட்டிடத்தின் முன்புறமுள்ள விஸ்தாரமான மைதானத்திலே நிறைந்தனர். மொத்தம் லட்சம் ஜனங்களுக்கு மேல் அந்தக் கூட்டத்தை மதிப்பிடலாம். தங்கள் அரும் பெருந் தலைவர் சுபாஷ் பாபுவைத் தரிசிக்கவும், அவருக்கு

ஷோனன் மக்களின் வரவேற்பு

வரவேற்பளிக்கவுமே அவர்கள் அங்கு வந்து கூடியிருந்தனர். மத்தியானம் முதலே இந்தியர்களின் கூட்டம் நகர மண்டபத்தை நோக்கி நதிகள் பாய்வது போலச் செல்லத் தொடங்கிவிட்டது. சிலர் தனித்தனியே சென்றனர். சிலர் கூட்டம் கூட்டமாகச் சென்றனர். சிலர் குடும்பத்தாருடன் சென்றனர். சிலர் கோஷ்டி சேர்ந்து தேசீய கீதம் பாடிக்கொண்டே சென்றனர். நேதாஜி வந்து சேருவதற்கு முன் மைதானம் இருக்க இடமின்றி நிறைந்துவிட்டது. சுபாஷ் பாபு மோட்டார் சைக்கிள் காவலாளர்கள் சூழ்ந்துவர மோட்டாரில் வந்து இறங்கினர். கூடியிருந்தவர்களின் 2 லட்சம் கரங்களும் ஏக காலத்தில் கொட்டின. 'ஜே' கோஷம் கடல் அலைபோல் இரைந்தது. இந்திய தேசீய சைன்யத்தினர் அணி வகுத்து மரியாதை செய்தனர். பின்பு தேசியக்கொடி ஏற்றப்பட்டது. வந்தே மாதர கீதத்தின் இன்னிசை பரவிற்று. அதன்பின் தலைவர் சுபாஷ் பேச எழுந்ததும் ஜனங்களின் ஆனந்தத்தைச் சொல்லி முடியாது. கருத்த வானிலிருந்து மழை சோவென்று கொட்டியது; ஜனங்கள் அதை உணரக்கூட இல்லை. சுபாஷ் பாபுவின் பிரசங்கத்தினிடையிடையே அவர்கள் சந்தோஷ ஆரவாரம் செய்து தங்கள் சம்மதத்தைத் தெரிவித்தனர். இந்தியர் அனைவரையும் பெண்கள் உள்பட ராணுவத்தில் ஒன்று திரட்ட வேண்டுமென்பது தமது விருப்பம் என்று தலைவர் போஸ் தெரிவித்தபொழுது, ஜனங்கள் தங்கள் உணர்ச்சி வெள்ளத்திற்குக் கரை போட முடியாமல் 'இந்தியத்தாய் வெல்க' 'புரட்சி நீடூழி வாழ்க' என்று கோஷமிட்டனர். தலைவர் தமது பிரசங்கத்தில் கூறியதாவது: 'நீங்கள் எனக்கு அளித்த இவ்வளவு சிறப்பான அன்பு கனிந்த வரவேற்புக்காக உங்களுக்கு முதலில் எனது வந்தனத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஷோனனிலும், மலாயாவிலும் உள்ள

எந்நாட்டினர் வரப்போகும் சுதந்திரப் போரில் தக்க பங்கெடுத்துக்கொள்வர் என்ற என் நம்பிக்கை, நான் இன்று காணும் காட்சியினுல் இன்னும் அதிகமாகி விட்டது. இந்த நகரம் ஒரு காலத்தில் பிரிட்டிஷாரின் கோட்டையாயிருந்து வந்தது. இன்று அது இந்திய தேசியக் கொட்டையாக மாறிவிட்டது.

அதன்பின் தலைவர் போஸ், இந்தியாவிலிருந்து தாம் தப்பித்த வரலாற்றைப் பற்றிக் குறிப்பிட்டார்:

'அவர்கள் என்னைப் பிடிப்பதற்கு முன்னர் நான் சுதந்திர புருஷனுகிவிட்டேன். அது முதல் நான் உலக முழுமையும் அதிகக் கஷ்டமில்லாமலேயே சுற்றினேன். பிரிட்டிஷ் அரசாங்கம் பலர் நினைப்பதுபோல் சர்வ வல்லமை உள்ளதாயிருக்கும் பக்ஷத்தில் என்னுல் இப்படி உலக முழுவதும் சுற்றித்திரிந்திருக்க முடியுமா? அதனுலேதான் நான் பிரிட்டிஷ் அதிகாரிகளுக்குச் சொன்னேன், நான் தாய்நாட்டிலிருந்து வெளியேறியதைத் தடுக்க முடியாத பிரிட்டிஷ் அரசாங்கம் நான் அதற்குள் மீண்டும் பிரவேசிப்பதையும் தடுக்க முடியாது என்று.

அயர்லாந்திலே 1921வது வருஷம் 5,000 ஆயுத சின் பீன் தொண்டர்கள் முன், பிரிட்டிஷ் அரசாங்கம் அடிபணிந்ததை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அப்படியானுல், இந்தியாவிலே ஒரு சக்தி வாய்ந்த இயக்கம் நடந்துகொண்டிருக்கும்பொழுது, நிப்பனின் பலம் நமக்கு உதவிக்கு வந்திருக்கும்போது, நாம் 30 லட்சம் இந்தியர்கள் பிரிட்டிஷாரை இந்தியாவிலிருந்து ஏன் துரத்தியடிக்க முடியாதென்று நான் உங்களைக் கேட்கிறேன்.

'கிழக்காசியாவிலுள்ள 30 லட்சம் இந்தியர்களும் தங்களிடமுள்ள எல்லாசக்திகளையும்,பொருளையும் இதன் பொருட்டு ஒன்று திரட்டவேண்டும். நான் வேண்டுவ தெல்லாம் ஒரே மொத்தமான படை திரட்டல்தான். அதற்குக் குறைந்தது எதுவுமில்லை. ஏனெனில் நமது எதிரிகளே அடிக்கடி கூறுவதுபோல இது ஒரு மொத்த மான யுத்தம் என்றார்.

நேதாஜியைப் பேட்டி கண்டுவிட்டு திரும்பிய ஒரு ஸ்டேட் சேர்மன் வெளியிட்ட அறிக்கையொன்றில்:

'நமது தலைவர் போஸ் பொது ஜனங்கள் முன்பு தோன்றியபோது, எங்கள் அனைவருக்கும் ஏற்பட்ட சிலிர்ப்பை நான் வெறும் வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது. நமது நேதாஜி எண்பதாயிரம் இந்தியர்கள் கூடியிருந்த ஒரு கூட்டத்தில் பேசினார்...இந்த நாட் டிலே, இந்தியர் கூட்டங்களிலே நான் இதற்கு முன் இவ்வளவு ஈடுபாட்டை கண்டதே இல்லை. சுபாஷ்பாபு ஜனங்களின் தலைவராக இருக்கவே பிறந்தவர். அதில் சந்தேகமே இல்லை.

'சுபாஷ்பாபுவின் தலைமையில் கிழக்காசியாவிலுள்ள ஒவ்வொரு சுதந்திரம் விரும்பும் இந்தியனும் அசையாத நம்பிக்கை கொண்டிருக்கிறான். நமக்கு விடுதலைக்கு வழிகாட்டக்கூடிய ஒரே தலைவர், அவர் ஒருவரேதான் என்று நான் திண்ணமாக நம்புகிறேன்.

நேரடியான ராணுவ சேவைக்காக விண்ணப் பங்கள் எல்லா வகுப்பினரிடமிருந்தும் முடிவில்லாமல் வந்துகொண்டிருப்பது எங்களுக்கு ஆச்சர்யம் நிறைந்த ஆனந்தத்தை உண்டாக்கி இருக்கிறது.

பினங்கு ஸ்டேட் சேர்மெனின் அறிக்கை:

நேதாஜி போஸ் வெகு சீக்கிரத்தில் மலாயா முழுவதிலும் ஒரு துரித சுற்றுப்பிரயாணம் செய்வார்.

நமது அன்பைக் கவர்ந்த தலைவர் சுபாஷைக் காண்பதற்கும், அவரது மொழிகளைக் கேட்பதற்கும் இந்திய மகாஜனங்கள் கட்டுக்கடங்காதஆவல்கொண்டு துடிக்கிறார்கள். தினந்தோறும் 'லீக்' ஆபீஸுக்கு ஏராளமான பேர்கள் வந்து விசாரித்த வண்ணமிருக்கிறார்கள்.

அவர் மேலும் குறிப்பிட்டார்:

'இந்தியப் பணக்காரர்கள், தகுந்த முறையில் ஆதரவு காட்டுகிறார்கள் என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்கொள்கிறேன். தேசிய லட்சியத்தின் உதவிக்காக, தேசபக்தி மிகுந்த இந்தியர்கள், தங்களது பெருந்தொகையான நன்கொடைகளைப் பொதுக்கூட்டத்தில் நேதாஜியின் கரங்களில் அளிக்கலாம்.

நேதாஜி ஷோனன் வந்து சேர்ந்துவிட்டாரென்பதை யறிந்த கிழக்காசியா வாழ் இந்தியர்கள் ஆனந்தப் பரவசமடைந்தனர் என்பதை முன்னரே குறிப்பிட்டுள்ளேன். ஷோனனில் பேசிய அவருடைய வார்த்தைகளைச் செவிமடுத்த ஒவ்வொரு இந்தியரும் புனர்ஜென்மமடைந்தவர்களாகவே காணப்பட்டனர். மேலும், அவர் தங்கள் ஊருக்கு எப்பொழுது வருவார் என்பதை ஒவ்வொரு கணமும் ஆவலுடன் எதிர்பார்த்த வண்ணமிருந்ததோடு, தங்கள் பேரில் சுமத்தப்பட்டிருக்கும் பொறுப்பையும், கடமையையும் உணர்ந்தனர். தாய்நாட்டின் விடுதலைக்காக நேதாஜி இடும் கட்டளையை இம்மியும் வழுவாமல் நிறைவேற்றவும் தயாராயிருந்தனர். ஆண் பெண் இருபாலரும் தங்கள்

உடல், பொருள், ஆவி ஆகிய அனைத்தையும் பெரு மதிப்பிற்குரிய மாபெரும் தலைவரின் கட்டளைப்படி தியாகம் செய்யத் தயாராயிருந்தனர்.

முதலில் நேதாஜி, பர்மாவிற்கும், தாய்லாந்துக்கும் விஜயம்செய்தார். இந்தியாவின் எல்லைப்புற நாடுகளான

பர்மா, தாய்லாந்து விஜயம்

பர்மா, தாய்லாந்தின் நிலைமைகளை ஆராய்ந்து, அங்குள்ள மிகப் பெருந் தொகையினரான இந்தியர்களை ஒன்று திரட்டி, அவர்களுடைய சக்தி சாதனங்களை சேகரிப்பது மட்டும் அவருடைய நோக்கமல்ல. கிழக்காசியாவிலே முக்கிய ஸ்தானம் வகிக்கும் அவ்விரு நாடுகளின் ஒத்துழைப்பையும், ஆதரவையும் பெறவே அவர் அவ்வளவு விரைந்து சென்றார்.

இதன் முக்கியத்துவத்தை நேதாஜி போஸ், ஜூலை 27ம் தேதி பாங்காக்குக்கு முதல்தடவை விஜயம் செய்த பொழுது குறிப்பிட்டார் :—

'ரணுவ திருஷ்டியில் பார்த்தால், தேசீய உதாரணத்திற்கு இரு விஷயங்கள் இந்தியாவிடமில்லாதிருந்தன. முதலாவது அதன் எல்லையருகே ஒரு நேசநாடு இருக்கவில்லை. சென்ற உலக யுத்தத்திற்குப் பின், பலர் இந்தியாவின் உண்மை லட்சியத்திற்காக உழைக்க வெளிநாடுகளுக்குச் சென்றனர். ஆனால் அயல் உதவி போதிய அளவு கிடைக்காததினால், அவர்கள் விசேஷ வெற்றிபெற முடியவில்லை. இந்த யுத்தம் ஆரம்பமானவுடன் தாய்லாந்து பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு எதிராகப் போர் தொடுத்தது. எனவே முன்னிருந்த பெருந்தடை நீங்கிவிட்டது.

அது முதல் தாய்லாந்து அரசாங்கமும் ஜனங்களும் நமக்குக் காட்டிவரும் பெருத்த அனுதாபம் நமக்கு மிகுந்த உற்சாகமளிக்கிறது.

ஜூலை 30ந் தேதி ரெங்கூன் மாநகரில் பிரமாண்டமான இந்தியர் கூட்டமொன்றின் முன் நேதாஜி உணர்ச்சிமிகும் சொற்பொழிவாற்றினுர். இந்தக் கூட்டத்தில் 1,00,000 இந்தியர்களுக்கு மேல் கலந்து கொண்டனர். இந்தியாவின் சுதந்திரத்திற்காக ஒவ்வொரு இந்தியரும் தங்கள் உடல், பொருள், ஆவி அனைத்தையும் தத்தம் செய்ய வேண்டுமென நேதாஜி கேட்டுக்கொண்டார்.

"சாவு நிச்சயம். சற்று முன்னுலோ, பின்னுலோ; எப்படியும் எல்லோரும் சாகப்போவது திண்ணம். தனது நாட்டின் சுதந்திரத்தின் பொருட்டு உயிர் விடுவதைக் காட்டிலும் பெருமை வாய்ந்த மரணம் ஒருவனுக்குக் கிடைக்கவே முடியாது.

"யுத்தம் ஆரம்பமானதும் தற்காலிக சுதந்திர இந்திய அரசாங்கம் நிறுவப்பட்டுவிட்டதாகப் பிரகடனம் விடுக்கப்போகின்றேன். இந்த அரசாங்கத்தின் வேலை போர்புரிதல், படை திரட்டுதல், மீண்டும் போர் புரிதல் என்பதாகவே இருக்கும்" என போஸ் நிச்சயத்துடன் தெரிவித்தார்.

பர்மா சுதந்திரப் பிரகடனம் விடுத்த 1943 ஆகஸ்ட் 1-ந் தேதியன்று நேதாஜி ரெங்கூனிலிருந்தார். பர்மாவில் நடைபெற்ற சுதந்திரக் கொண்டாட்டங்களில் அவர் குதூகலமாய்க் கலந்துகொண்டார். இந் நிகழ்ச்சிகள் அவரது உள்ளத்திலே எத்தனையோ உணர்ச்சிகளை உண்டுபண்ணினவென்பதை

அவருடைய வார்த்தைகளிலிருந்து தெளிவாக அறிந்து கொள்ளலாம்.

நேதாஜி கூறினர்: ."1925 முதல் 27 வரை மாந்த லேயிலிருந்த எனது ஜெயில் வராண்டாவிலிருந்து பர்மாவின் கடைசி சுதந்திர அரசனின் அரண்மனையைக் காணுந்தோறும், 'பர்மா மறுபடியும் எப்பொழுது சுதந்திர நாடாகுமோ?' என நான் எண்ணமிடுவது வழக்கம், இன்று பர்மா ஒரு சுதந்திர நாடாகிவிட்டது. அதன் சூழ்நிலையில் விடுதலையின் மணம் வீசுவதை நான் உணர்கிறேன். ஓர் உலக யுத்தத்தின் மத்தியில், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் வெந்துபோன சாம்பலிலிருந்து. தோற்றோடிய பிரிட்டிஷாரால் விட்டுச் செல்லப்பட்ட ஒரு நாசக்காட்டினிடையே ஒரு சுதந்திர நாடு உற்பவித்துவிட்டது. நிப்பனின் திறமைமிக்க பிரதமரால் அளிக்கப்பட்ட உறுதி நிறைவேறி விட்டது."

"பர்மா இந்தியாவுடன் பூகோள ரீதியாய்ச் சம்பந்தம் பெற்றிருப்பதால் அதன் சுதந்திரம் இந்தியாவில் மிகுந்தகிளர்ச்சியை உண்டுபண்ணியிருக்கும் என்று நேதாஜி அபிப்பிராயப்பட்டார். பர்மாவின் சுதந்திரம் மூன்று முக்கியமான காரணங்களுக்காகச் சிறப்பு வாய்ந்தது என நேதாஜி விவரித்தார். முதலாவது; மகா கிழக்காசியாவை நிப்பன் தன் சொந்த லாபத்துக்காகவே நிர்மாணிக்கிறது என்ற வாதம் இதனுல் சிதறிப்போய்விட்டது. இரண்டாவது: பர்மா, முன்னர் இந்தியாவின் ஒரு பாகமாக இருந்தபடியால் அதன் சுதந்திரம், இந்தியாவின் ஒரு பாகம் சுதந்திரம் அடைந்ததற்கு சமானமென்று பெரும்பாலான இந்தியர்களால் கருதப்படும். மூன்ருவது: பர்மா சுதந்திரம் பெற்று விட்டதால் இந்தியாவிற்கு நேரான உதவி

அனுப்புவதற்கு மார்க்கம் ஏற்பட்டுவிட்டது.'' இந்தியா சுதந்திரம் அடைந்து விட்டால் பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் உருப்படியில்லாமல் சிதறிப் போய்விடும் என்பதை நேதாஜி பின்பு விளக்கினர். இந்தியாவிலிருந்து பிரிட்டிஷார் விரட்டப்பட்டுவிட்டால், பின்பு ஆசியப் பிரதேசங்களைத் திரும்பக் கைப்பற்றுவதுபற்றி அவர்கள் கனவுகூடக் காணமுடியாது. தவிர மத்தியக்கிழக்குப் பிரதேசங்களிலும் அவர்களுடைய ராணுவ ஆதிக்கம் தளர்ந்து சிதறிவிடும்'' என சுபாஷ் பாபு விளக்கிக் கூறினர்.

பர்மிய மந்திரிசபையைப்பற்றி அபிப்பிராயம் கேட்டதற்கு திரு. போஸ் பின்வருமாறு பதில் அளித்தார்:

"பர்மாவிலே டாக்டர் பாமாவைவிட அரசாங்கத் தலைவர் பதவிக்கு ஏற்றவர் கிடைப்பது அரிது. அவரை அரசாங்கத் தலைவராகத் தேர்ந்தெடுத்திருப்பது மிகவும் பொருத்தமானதே. யுத்த நிலைமையில் அவருக்குப் பல கஷ்டங்கள் நேருமெனினும், அவர் தமது லட்சியத்தில் வெற்றிபெறுவார் என்றே நம்புகிறேன். எல்லா மந்திரிகளுக்கும் தன்னம்பிக்கை இருக்கிறது. அதுதான் வேண்டப்படுகிறது.

(1) பர்மாவில் நிப்பன் படைகளின் தலைமை தளகர்த்தருடன் நடத்திய சம்பாஷணைகள் மூலம், நேதாஜி, பல்வேறு நிலைமைகளை வாஸ்தவமான முறையில் தெரிந்து கொண்டிருக்கிறர்.

(2) இதன் விளைவாக எதிரே நேரவிருக்கும் போருக்கு உருவான திட்டங்களை வகுத்துவிட்டதோடு, உடனே நடைமுறைக்குக் கொண்டுவரவும் ஏது ஏற்பட்டது.

(3) பாமா, ஸோங்ராம் முதலிய தலைவர்களுடன் ஒரு பூர்ணமான ஒற்றுமை ஏற்பட்டுவிட்டது.

(4) பர்மா, தாய்லாந்து—இங்கு வசிக்கும் இந்திய ஜனங்களின் உற்சாகம் கரைபுரண்டோடிக் கொண்டிருக்கிறது. முன்னேறுங்கள் என்ற உத்தரவு கிடைத்தவுடனே அவர்கள் எல்லோரும் ஒன்ருய்த் திரண்டு இ. தே. ராணுவத்துடன் விரைந்து முன்செல்வார்கள்.

பர்மாவிற்கும் தாய்லாந்துக்கும் விஜயம் செய்துவிட்டு நேதாஜி 11–8–43 ல் ஷோனன் திரும்பினர். அவர் பர்மாவிலும், தாய்லாந்திலுமுள்ள தமது சக ஊழியர்களை உற்சாக மூட்டியதுடன், பர்மா அதிபதி பாமா, தாய்லாந்து பிரதமர் பீல்டு மார்ஷல் பிபுன் ஸோங்ராம் இருவருடனும் கலந்து பேசி இயக்கத்திற்கு அவர்களுடைய ஆதரவைப் பெற்ருர்.

"தாய்லாந்து பிரதமருடன் நான் நேச மனப்பான்மையில் நீண்ட நேரம் சம்பாஷித்தேன். தாய்லாந்துக்கும் இந்தியாவுக்கும் பொதுவான முக்கியம் வாய்ந்த பிரச்னைகளைப்பற்றி நாங்கள் விவாதித்தோம்.

"நாம் சுதந்திரம் அடைவதற்கு உதவியளிக்கும் வகையில் தாய்லாந்து தன்னாலியன்ற எல்லாவற்றையும் செய்யுமென்று பிரதமர் எனக்கு உறுதி கூறினர்" என்ருர் நேதாஜி.

நேதாஜி, பர்மா–தாய்லாந்து இருநாடுகளுக்கும் சென்று, அவ்வரசாங்கத் தலைவர்களுடனும் கலந்து பேசி, நிலைமைகளைத் தெளிவுபடுத்திக் கொண்ட பின்னர், இயக்கத்தின் பிறப்பிடமும் அதன் வளர்ச்சிக்கு

முழு ஆதரவாக இருந்ததுமான, மலாயாவிலே சுற்றுப் பிரயாணம் செய்தார். நேதாஜியின் விஜயத்தை, ஒவ் வொரு இடத்திலுமுள்ள இந்தியர்கள் ஒரு திருவிழா வாகவே கொண்டாடினர். ஒரே குதூகலம். இந்திய மக்களின் அகத்திலே தோன்றிய விடுதலைப்போர் உணர்ச்சியால் முகங்களிலே ஜெயலெட்சுமி ஆனந்தத் தாண்டவமாடினுள். இந்தியர்களின் வாசஸ்தலங் களிலும், வியாபார நிலையங்களிலும் தேசீயக்கொடிகள் கம்பீரமாகப் பறந்து 'விடுதலை நிச்சயம்' என்பதை உறுதிப்படுத்துவது போல இருந்தன

அவருடைய சங்கநாதத்தைக் கேட்க, மக்கள் பல் லாயிரக் கணக்கில் திரண்டெழுந்தனர். நேதாஜியின் பேச்சு, சுதந்திர சங்கநாதம் போலவே ஒலித்தது. ஒவ் வொரு கூட்டத்திலும் நேதாஜி 2 மணி நேரம், 3 மணி நேரம் பேசுவார், ஆனுல் அதில் அலுப்போ சலிப்போ துளியாவது தோன்றுமா? அதுதான் இராது. அவ ருடைய உத்வேகம் நிறைந்த பேச்சைக்கேட்ட மாத்திரத் திலே, இந்தியர்கள் சர்வதியாகத்துக்கும் தயாராய் விடுவார்கள். அவருடைய தீட்சண்யமான—ஆழ்ந்த கருத்தும் உணர்ச்சியும் நிறைந்த வார்த்தைகள் இந்தி யர்களை வீரர்களாக்கியதில் வியப்பொன்றுமில்லை. அவருடைய பல சொற்பொழிவுகளிலிருந்து சில திவலை களை இதன்கீழ் பெய்கின்றேன்:

'இன்று கடைசி வெற்றிக்கு வேண்டிய எல்லா அவசியமான சாதனங்களும் சேகரிக்கப்பட்டு வரு கின்றன. இதற்குமுன் நாம் நமது போராட்டத்தில் வெற்றி பெருததற்கு ஒரே காரணம் போர் புரிவதற்கு வேண்டிய ஒரே கட்டுப்பாடமைந்த, நன்கு பயிற்று விக்கப்பட்ட ராணுவம் நம்மிடம் இல்லாதிருந்ததே.

இதுபோன்ற இயக்கங்களில் வெற்றியடைந்துள்ள தேசங்களின் புரட்சிகளை சற்றே கவனிப்போமானால் ஒவ்வொரு புரட்சியிலும் நன்கு பயிற்றுவிக்கப்பட்ட, கட்டுப்பாடமைந்த ஒரு ராணுவம் இடம் பெற்றிருப்பதைக் காண்போம். மாஜினியாலும் கரிபால்டியாலும் நடத்தப்பட்ட இத்தாலியப் புரட்சி. இயக்கங்களைப் பாருங்கள். அல்லது ஏராளமான தலைவர்கள் தங்கள் உயிர்களைத் தத்தம் செய்து நடத்திய ஐரிஷ் புரட்சியைப் பாருங்கள். இந்தமாதிரியான தேசியப்போர்கள் யாவற்றிலும் ஒரு ராணுவம் இருப்பதைக் காண்பீர்கள். எனவே இந்தியர்கள் நிறுவவேண்டியது ஒரு ராணுவம்தான்!,

எதிர்காலம்பற்றி நேதாஜி கூறியதாவது: நாம் பரிபூரணமாகப் படை திரட்டவேண்டும். சண்டை போடச் சக்தி இல்லாதவர்களும், வயதானவர்களும், சரீர பலமில்லாதவர்களும் வேறுவிதங்களில் தங்களது சேவைகளை அளிக்கவேண்டும். கொஞ்சமாகக் கொடுக்கலாம் என்ற காலம், நான் ஏற்கனவே சொன்னது போல மலையேறிவிட்டது.

நமது எல்லா வளங்களையும், செல்வங்களையும் 'கொடு' என்று கேட்பதற்கு சுதந்திர இந்தியாவிற்கு உரிமை உண்டு. நாம் இன்று நம்மிடமுள்ள எல்லாவற்றையும் கொடுக்கிறோம் என்றாலும் சுதந்திர இந்தியா நம்மிடம் கோருவதற்கு இது ஒரு பெரிதல்ல. நாம் நம்மிடமுள்ள அனைத்தையும் அளித்து, இந்தியாவிலிருந்து பிரிட்டிஷ் ஆதிக்கத்தை ஒழிக்கும் சக்திவாய்ந்த பெரும்படை ஒன்றைத் திரட்டவேண்டும்.

"அன்று ஷோனனில் அணிவகுத்துச் சென்ற நமது 'ஸோல்ஜர்கள்' அனைவரும், தங்கள் காரியம் அப்பொழுது ஆரம்பந்தான் ஆகியிருக்கிறது என்பதை

அறிவார்கள். அம்மாதிரி ஓர் அணி நடை, டில்லி செங் கோட்டையின் முன்னுல் நடைபெற்ற பின்புதான் வெற்றி கிடைத்துவிட்டதாக அறிவிக்கப்பட முடியும்.

"நண்பர்களே, இந்திய தேசீய சைனியம் தள வாடங்கள் சகிதம் இந்தியாவின் எல்லேப் புறத்திலே தோன்றியதும் இந்தியாவில் ஒரு புரட்சி ஏற்படுத்தப் படும் என்பதை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டு மென்று விரும்புகின்றேன்.

"இந்திய தேசீய சைனியம் இந்தியாவின் எல்லேப் புறத்திலே தோன்றியவுடனே இந்தியாவில் ஒரு புரட்சி ஏற்படுத்தப்படும் என்பதில் சந்தேகமில்லே. பொது ஜனங்களிடையிலும் ஒரு புரட்சி ஏற்படும் என்பது என் நம்பிக்கை.

நமது சைனியத்திலிருந்து பலர் இந்தியாவிற்கு அனுப்பப்பட்டு எதிரிகளுக்கிடையே வேலே செய்து வருகிருர்கள் என்பது பெரிய ரகசிய மொன்றுமில்லே. அவர்களில் பலர் கைது செய்யப்பட்டுவிட்டார்கள். ஆயினும் பலர் கைதியாகாமல் தப்பிவிட்டார்கள் என் பதையும் அவர்கள் நமது லட்சியத்திற்காக இந்தியா வில் உழைத்து வருகிருர்கள் என்பதையும் நாம் அறிவோம்.

எப்பொழுது நமது சைனியம் இந்திய எல்லேயில் தோன்றும் என்று அவர்கள் ஆவலாய்க் காத்திருக் கிருர்கள்.

இந்தியாவின் எல்லாப் பாகங்களிலுமிருந்து வரும் இந்தியர்களின் இரத்தம், யுத்தக் களத்தில் கலந்து விடும்போது வருங்காலத்தில் என்றென்றும் நிலேத் திருக்கக் கூடிய ஒற்றுமை ஸ்தாபிக்கப்பட்டுவிடும் என்பது என் திடமான நம்பிக்கை.

"வருங்காலத்துக்கு ஒரு பரம்பரைப் பெருமை அவசியமானது. பரம்பரைப் பெருமையால் உற்சாகமடைந்து முன்னேறக்கூடிய ஒரு ராணுவத்தை சுதந்திர இந்தியாவில் ஏற்படுத்துவது நமது அபிலாஷை, அந்தப் பெருமையை நாம் உண்டாக்குவோம்.

இந்திய சுதந்திர சைனியம் வெற்றிகரமாக இந்திய எல்லையைக் கடந்து உட்புகுந்து, தற்காலிக சுதந்திர இந்திய அரசாங்கத்தையும் நிறுவுமானுல், மகாத்மா காந்தியும், அவரைப் பின்பற்றும் கணக்கற்ற தேசபக்தர்களும், சரீரஉதவி அளிக்காவிடிலும், மானசிகமான ஆதரவை முழுமனதுடன் அதற்கு அளிப்பார்கள்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் ஆணிவேர் இந்தியாவில்தான் இருக்கிறது என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். இந்த விஷயத்தில் ஆஸ்திரேலியாவுக்கும், கானடாவுக்கும் விசேஷ சம்பந்தம் கிடையாது. வேறு எந்த பிரிட்டிஷ் "டொமினியனி" (குடியேற்ற நாட்டி)லும் கிடைக்காதவற்றையெல்லாம் இந்தியாவிலிருந்து பிரிட்டிஷார் சுரண்ட முடியும்.

ஏகாதிபத்தியத்தின் ஆணிவேர்

சட்ட மறுப்புடன் சேர்ந்தாற்போல, பலாத்காரப் புரட்சி இயக்கங்கள் நடந்திருக்கின்றன. இப்பொழுது இந்தியப் புரட்சி இயக்கத்தினர், கையில் அகப்படும் எந்தவிதமான ஆயுதங்களையும் கொண்டு 'புரட்சி' நடத்தி வருகிருர்கள். அதிலும் ஆகஸ்டு 9-ம் தேதி மகாத்மாஜி கைது செய்யப்பட்டது முதல் இந்தப் புரட்சியின் உக்ரம் அதிகமாயிருக்கிறது.

இந்தியாவிலே பிரிட்டிஷ் ஏகாதிபத்யம் அழிந்து விடாமல் காப்பதற்காக இந்தியாவில் ஸ்திரமாக

வைக்கப்பட்டிருக்கும் இந்தியத் துருப்புகளின் எண்ணிக்கை 10 லட்சமாக அதிகரிக்கப் பட்டிருப்பதாக பிரிட்டிஷ் பிரசாரகர்கள் சொல்லுகிருர்கள். அதை நாம் அப்படியே நம்புகின்ருேம். அது நமக்கு மிகவும் மகிழ்ச்சியை அளிக்கக் கூடிய விஷயமே. ஏனென்ருல் இந்தத் துருப்புகள் தங்கள் தளவாட சாமக்கிரியைகள் சகிதம் நம்முடன் சேர்ந்துகொள்வார்கள்.

இந்த மூன்று லட்சம் துருப்புகளும் இந்திய எல்லையை வெற்றிகரமாக கடந்து விடுவார்களானல், அப்புறம் இந்திய எல்லையில் வைக்கப்பட்டிருக்கும் சுமார் ஏழு லட்சம் துருப்புகள் நம்முடன் சேர்ந்து கொள்வார்கள் என்பதில் சந்தேகமே கிடையாது.

நாம் எல்லாவற்றையும் தியாகம் செய்வோமானல், நமது சொந்த விமானங்கள், டாங்கிகள், மற்றும் தேவையான சாதனங்கள் முதலியவற்றை நாமே உற்பத்தி செய்துகொள்ளலாம்.

நாம் நிப்பொனின் உதவியை நாடுவோமானல், அது நமது தேசீய கௌரவத்திற்கு இழுக்காகும். நமது தேசத்தின் பெருமைக்கு எவ்வித களங்கமும் ஏற்படாத விதத்தில், நாம், நம்மாலான எல்லாவித முயற்சிகளேயும் செய்ய வேண்டும். கிழக்காசியா இந்தியர்கள் அனைவரிடையிலும் சர்வாம்சப் படை திரட்டல் ஏற்பட்டாலன்றி நமது லட்சியம் சித்தி பெருது.

பிறர்தயவில் சுதந்திரமா?

நண்பர்களே! உங்களுக்கு ஒரு விஷயம் சொல்ல விரும்புகின்றேன். இந்த யுத்தம் விரிவானது. ஆகவே முடிவான வெற்றி ஏற்படுவதற்கு முன் பல தடைகள் குறுக்கிடக் கூடும். எதிரிகள் நம்மீது சில சிறு வெற்றிகள் அடையவுங்கூடும்.

நாளையே அச்சு நாட்டினர் பிரிட்டிஷாரை ஜெயித்து விடுகிறார்களென்றும், 24 மணி நேரத்துக்குள் நிப்பொனியர் இந்தியாவிலிருந்து பிரிட்டிஷாரை வெளியே விரட்டி விடுகிறார்கள் என்றும் வைத்துக் கொள்ளுங்கள். அப்போது நமது நிலைமை என்ன?

நாம் யாருடைய தயவினாலும் சுதந்திரம் அடைய விரும்பவில்லை. யாருடைய தயவிலாவது நாம் சுதந்திரம் அடைவோமானால், அந்தச் சுதந்திரம் நமக்கு நிலைக்காது என்று சொல்வேன். நாம் சுதந்திரம் பெறுவதற்கு இரண்டு விஷயங்கள் தேவை. ஒன்று ஒற்றுமை, மற்றொன்று ராணுவம். யுத்தம் அதிக காலத்துக்கு நீடிக்குமானால் நமது சுதந்திரத்துக்காகப் போரிட நமக்கு போதிய ராணுவ பலம் கிடைக்கும்.

இந்த யுத்தம் எவ்வளவுக் கெவ்வளவு நீண்டு கொண்டே போகிறதோ, நமது வழியில் எத்தனைக் கெத்தனை இடையூறுகள் ஏற்படுகின்றனவோ, அவ் வளவுக்கவ்வளவு சுதந்திரம் பெறவும் அதை ஸ்திர மாகக் காப்பாற்றி வைத்துக்கொள்ளவும் நமக்கு அதிக மான மனவுறுதி ஏற்படும். சுதந்திரம் அடைந்த பின்னர், இந்தியா மறுபடி என்றென்றைக்கும் அடிமைப் படாதவாறு தகுந்த தற்காப்பு ஏற்படுத்துவோம். அடிமைத் தனம் என்றால் சிறுமைப்படுவது, அவமதிக் கப்படுவதுதான். நாம் ஏற்கனவே இந்திய தேசீய சைனியத்தை நிறுவி விட்டோம். இந்தியாவை வென்று நாம் தேசீய அரசாங்கம் ஸ்தாபிப்போம். பின்பு நமது சுதந்திரத்தை நிரந்தரமாக காப்பாற்றி வைத்துக் கொள்வதற்காக இந்தியாவின் எல்லைகளில் நாம் பலமான தற்காப்புகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

இந்தியாவிலே சிலர் இந்தியாவின் பல்வேறு கட்சிகளுக்கும் பிரிவுகளுக்கும் இடையே முதலில் ஒற்றுமை ஏற்படுத்தப்பட வேண்டுமென்றும் அதன் பின்பே நாம் சுதந்திரம் அடையமுடியுமென்றும் நினைக்கிறார்கள். ஆனால் இது மிகவும் தவறான எண்ணம் என்பது எனது அபிப்பிராயம். பிரிட்டிஷார் இந்தியாவிலிருக்கும்வரை இந்தியரிடையே இருக்கும் பலதரப்பட்ட பிளவுகளைச் சரிப்படுத்திக் கொள்ள அவர்கள் விடவே மாட்டார்கள்.

ஒற்றுமையை ஸ்தாபிப்போம்

“வரப்போகும் சுதந்திர யுத்தத்திலே வெவ்வேறு, மதம், பாஷை மாகாணம் ஆகியவற்றைச் சேர்ந்தவர்கள் யாவரும் நமது மணித்திரு நாட்டின் சுதந்திரப் போர்க்களத்தில் ஒரே நோக்குடன் ஒன்று சேருவார்கள்.

இந்தியாவின் ஒற்றுமைப் பிரச்னையை தேசீய ராணுவமே தீர்த்து வைக்கப் போகிறது. நமது தாய் நாட்டின் விடுதலைக்காக முன்னதாக நமது உயிரை வழங்கும் பாக்கியம் நமக்குக் கிடைத்திருப்பது நமது அதிர்ஷ்டமே. முன்னேறிச் செல்வோம். நமது நாட்டின் சுதந்திரத்திற்கான போரில் யாவற்றையும் அர்ப்பணம் செய்வோம்.

இளைஞர்களின் எழுச்சி

'சாதாரண சேவை செய்யலாமென்றிருந்த காலம் கடந்துவிட்டது. கொஞ்சமாக உதவியளிப்போம் என்பதற்கும் காலம் கடந்துவிட்டது. விலைமதிப்பற்றதான சுதந்திரத்தை அடைவதன் பொருட்டு நாம், நம்மிடம் உள்ள எல்லாவற்றையும் கொடுத்துவிட வேண்டும்.

எனவே சக்தியுள்ள மனிதர்கள் அவர்கள் வயது எவ்வளவானாலும் கவலையில்லை.-முன்வந்து போரில் கலந்துகொள்ளவேண்டும், புருஷர்கள் மாத்திரமல்ல, ஸ்திரீகளும் போரில் பங்கெடுத்துக்கொள்ளவேண்டும் நமது சகோதரிகள் போர் புரியும் படைகளிலும் செஞ்சிலுவைப் படைகளிலும் இருப்பது மனோதிடம் குறைந்தவர்களுக்குப் புத்துணர்ச்சியையும் ஊக்கத்தையும் உண்டுபண்ணக்கூடியதாக இருக்கும்.

நேதாஜியின் வீராவேசப் பிரசங்கம் மக்களிடையே பெரும் புரட்சியை உண்டு பண்ணின. திடகாத்திரமுள்ள இந்தியர்கள் குறிப்பாக இளைஞர்கள், ஆ. ஹி பௌஜில் சேர ஆர்வத்துடன் துடித்தெழுந்தனர். ஒவ்வொரு வாலிபனும், தான் இருக்கவேண்டிய இடம் பயிற்சிக் கழகமே யென்றும்' ஒவ்வொருவனும் பயில வேண்டியது போர்ப் பயிற்சியேயென்றும், ஒவ்வொருவரின் இன்றியமையாத கடமை சுதந்திரப் போராட்டத்தில்- ஆயுதப் போராட்டத்தில்-ஈடுபடுவதே யென்றும்

திடநம்பிக்கை கொண்டனர். சுருங்கக் கூறுமிடத்து கிழக்காசியாவாழ் இந்தியர்களின் கவனமனைத்தையும் நேதாஜி தன்வயப்படுத்திக் கொண்டுவிட்டார் என்றே கூறலாம்.

தினேதினே ஒவ்வொரு இந்திய சுதந்திர சங்கங்களிலும் இச்சா சேவகர்களின் மனுக்கள் வந்து குவிந்த வண்ணமாகவே இருந்தன. படை திரட்டு இலாக்காக்கள் மனுக்களை அங்கீகரித்து அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதற்கு முடியாமல் திணறின. புதிதாக பல உத்தியோகஸ்தர்கள் மேற்கொண்டு சேர்த்துக்கொண்டும் உடனுக்குடன். வரும் மனுக்களை அங்கீகரித்து வேண்டுவன செய்வதில் கால தாமதம் ஏற்பட்டது.

இ. தே. ராணுவத்திற் சேருவோர் தொகை, வெள்ளம்போல் பெருகிக்கொண்டே வந்தபடியால், பயிற்சிக்கூடங்கள் போதவில்லை. மலாயாவின் பற்பல பாகங்களிலும் புதிதாகப் பல பயிற்சிச் சாலைகள் ஸ்தாபிக்கப்பட்டன. பினங்கு, தைப்பிங் ஈப்போ, சிரம்பான் முதலிய பலவிடங்களில் அதிகப்படியான பயிற்சிச் சாலைகள் திறக்கப்பட்டன. ஒரு நாளில் (17—7—43வ) மட்டும் ஷோனன் இ. சு. சங்கக் கிளைக் காரியலயயத்தில் 2,500க்கு மேற்பட்டவர்கள் தங்களைப் பதிவு செய்துகொண்டார்கள்!

இந்த சந்தர்ப்பத்தில் மேற்படி சங்கத் தலைவர் திரு. எல்லப்பா சொன்னார்:

ஸ்தல இந்தியர்கள் நான் எதிர்பார்த்ததைவிட அதிகமாக முன்னேறி வருகிறார்கள். தினசரி நூற்றுக் கணக்கான மனுக்கள் இச்சா சேவகர்களாக சேர வந்துகொண்டிருக்கின்றன என்றார்.

கிரீக் என்ற இடத்திலிருந்து சுப்பிரமணியம் என்ற இளைஞர், ஈப்போ இ. சு. ச. தலைவருக்குத் தன்னைப் படையில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று எழுதிய மனுவை, தனது ரத்தத்தினாலேயே எழுதியனுப்பி இருந்தார்.

அப்பொழுது யுவர்களிடையே காணப்பட்ட தேசாபிமானத்தையும், தியாக புத்தியையும் பூரணமாக எடுத்துக்காட்டும் ஆற்றல் என்னிடம் இல்லையே என்ற ஏக்கம் என்னை வாட்டுகிறது.

'ரெக்ரூட்மெண்ட்' இலாகாவிலே போய்ச் சற்று நேரம் நிற்போமானுல், நாம் மூர்ச்சைபோட்டு விழுந்து விடாமல் இருக்க முடியாது. தாங்க முடியாத கூட்டம் ஒருபுறமிருக்க, அங்கே 'ரெக்ரூட்மெண்ட் ஆபீச'ருக்கும் இச்சா சேவகர்களாகச் சேர முன்வந்திருக்கும் வாலிபர் களுக்குமிடையே வாக்குவாதம் பலமாக நடைபெறு வதைக் காணலாம்.

என்ன வாக்குவாதம்?

'தம்பி, உனக்கு வயதென்ன'?

'பதினெட்டு'

'உண்மையாகவா? உன்னைப் பார்த்தால் 18 இருக்காதுபோலிருக்கிறதே'!

'இல்லை, 18 ஆகிவிட்டது.'

உண்மையாகவே, அந்த வாலிபனுக்கு 15, 16 வயது தான் ஆகியிருக்கும். ஆர்வ மேலீட்டால் குறைந்தபட்ச மிருக்கவேண்டிய அளவான வயது 18 என்பார்.

'ஐயா, உம்மை ஏற்றுக்கொள்ள முடியாது.

'ஏன்?' என்ற கேள்வியில் ஆத்திரமும் கடுமையும் இருக்கும்.

'மெடிகல் ஆபீசர் தகுதியில்லை என்று எழுதி யிருக்கிருர்.

'ஏன் தகுதியில்லை'? என்னுடைய உடம்பைப் பாருங்கள்!

'அதெல்லாம் எனக்குத் தெரியாது. டாக்டர் அபிப் பிராயம் அது,

'முடியாது. என்னை எடுத்துக்கொள்ளத்தான் வேண்டும்."

இத்தகைய சம்பவங்கள் ஒன்ரு இரண்டா! ஆயிரக் கணக்கில் உண்டு. இந்த வாக்குவாதங்களின் முடிவில் தோல்வி யடைபவர் படைதிரட்டு இலாகா அதிபராகத் தான் இருக்கும்.

இந்த இளைஞர்களை வீட்டிலுள்ள தாய்தந்தையரோ உறவினர்களோ தடை செய்ய முடியுமா? யாருடைய தடையையும் பொருட்படுத்தக் கூடிய நிலைமையில் அவர்கள் இருக்கவில்லை. அவர்களுடைய நாடி நரம்புகளெல்லாம் உணர்ச்சியினுல் முறுக்கேற்றப்பட்டிருக்கும் பொழுது யாரால் தடுத்து நிறுத்தவியலும்?

இவ்விதமாகச் சேருபவர்கள் வெறும் படை வீரர்கள் மட்டுமல்ல; டாக்டர்கள், டிரெஸ்ஸர்கள், நர்சுகள், இஞ்சினீயர்கள், மெக்கானிக்குகள், குமாஸ்தாக்கள், அக்கௌண்டண்டுகள், ஆடிட்டர்கள், லாயர்கள் முதலானோர்!

மணிலா ட்ரிபியூன் பத்திரிகையின் ஆசிரியர், பிரான்ஸிஸ்கோ இராசிஞேவுக்கு, அப்போது ஆ. ஹி. பௌஜில் சேருவதற்காகச் செல்லும் தொண்டர்படை ஒன்றைப்பார்வையிடும் சந்தர்ப்பம் வாய்த்தது. அதைப் பற்றி அவர் குறிப்பிடுகையில், ஒரு பெரிய சமுகத்தின் நன்மைக்காக, தங்கள் சுய நன்மையைத் தியாகம் செய்யும் இந்த வீரர்களிடம் ஏதோ அசாதாரணமான உணர்ச்சி ஒன்று குடிகொண்டிருக்கிறது, என்று குறிப்பிட்டார்.

கோலாலம்பூரிலிருந்த பாரத யுவர் பயிற்சிசாலையில் இரண்டாவது புதிய கோஷ்டிக்கு 12–7–43ல் பயிற்சிகள் தொடங்கப்பட்டன. இந்த சந்தர்ப்பத்தையொட்டி நேதாஜி ஒரு விசேஷச் செய்தி அனுப்பியிருந்தார். அதில் அவர்:-

நேதாஜியின் புத்திமதி

உங்களுடைய பயிற்சி ஆரம்பமாகும் இந்தச் சமயத்தில், நான் உங்களுக்குச் சொல்லக்கூடியது இரண்டே விஷயங்கள் தான்:

'உங்களிடமுள்ள எல்லா விதமான திறமைகளையும் அபிவிருத்தி செய்துகொள்ளுங்கள். அதன் மூலம் உங்கள் தாய்நாட்டின் விடுதலைக்காக உங்களால் முடிந்த அளவு உங்களிடமுள்ள சிறப்பான அம்சங்களை அர்ப்பணம் செய்யுங்கள்'.

'நாடு உயிர்வாழ வேண்டுமென்பதற்காகத் தனி மனிதர் உயிர் துறக்கவேண்டியது அத்தியாவசியமாகும். இப்பொழுது நமது தாய்நாடு விடுதலை பெறுவதன் பொருட்டு நடக்கும் போரில், நீங்கள் உங்களிடமுள்ள எல்லாவற்றையும் அர்ப்பணிக்கவேண்டும். நமது நாடு சுதந்திரமாக, சுகவாழ்வு பெற்றுத் திகழ்வதற்காக நீங்கள் இந்தத் தியாகத்தைச் செய்யவேண்டும்'.

பயிற்சி முகாம்கள்

பயிற்சி முகாம்களில் இருந்த எல்லா இளைஞர்களும் இந்தியாவின் பல பாகங்களைச் சேர்ந்தவர்கள். அவர்களுக்குள் ஜாதிமத பேதமோ, ஏழை பணக்காரன் என்ற வேற்றுமையோ, துளிகூடக் கிடையாது. 18 முதல் 30 வயதுப் பிராயம் வரையுள்ள அவர்களில் விவாகமானவர்களும் பிரமச்சாரிகளும் இருந்தனர். அவர்கள் பயிற்சிக்கழகத்தில் பிரவேசித்தவுடனேயே எல்லோரிடமும் தாராளமாகக் கலந்து உறவாடி ஏக சகோதரபாவ உணர்ச்சி பெற்றுப் புழங்கி வந்தனர்.

பயிற்சி முகாம்களில் இச்சா சேவகர்களுக்குக் காலை 8 மணிமுதல் இரவு 7 மணிவரை பயிற்சியளிக்கப்பட்டது. இடையில் சாப்பாட்டுக்குச் சிறு ஓய்வு உண்டு. வாரத்தில் ஒரு முறை இரவு 12 மணிவரை விசேஷப் பயிற்சி அளிக்கப்பெற்றது.

விரைவில் பயிற்சிகளில் சமர்த்தர்களாகி, போர்க்களத்தே புகுந்து, எதிரியை ஹதம் செய்வதையே முக்கிய நோக்கமாகக் கொண்ட இச்சா சேவகர்கள், இவ்வளவு கடுமையான பயிற்சியைப்பற்றி எவ்வித குறையும் கூறினார்களில்லை. அதனாலேயே ஆறுமாத காலத்திற்குள், பிரமாதமான பயிற்சிகள் முழுதும்

பெற்று ஆயுதங்கள் அனைத்தையும் வெகு திறமையுடன் கையாள முடிந்தது.


'தென்னாட்டவர்கள் இராணுவத்திற்குத் தகுந்தவர்களல்லர் எனப் பிரிட்டிஷார் சொல்லி வந்ததெல்லாம் வெறும் கற்பனை! மற்றவர்களைப் போலவே இவர்களும் இராணுவத் திறமையில் பிரகாசித்தனர். புதிதாகச் சேர்த்த ஆ. ஹி. பௌஜ் வீரர்களில் 95 சத விகிதம் தென்னாட்டினர்தான்.

இந்தப் பயிற்சிக் கூடங்களில் ராணுவப் பயிற்சியோடு ஆத்மார்த்தப் பயிற்சியும் முறையாக அளிக்கப் பட்டது. ராஜீய சம்பந்தமான ஊணர்ச்சியூட்டும் பிரசங்கங்களும் இந்துஸ்தானி வகுப்புகளும் நடைபெறும். உதாரணமாக பினாங்கு 'ஆஸாத் ஸ்கூலில்' ராஜீயப் பிரசங்கியாக இருந்தவர் என். கே. பானர்ஜி என்ற வங்கப் புரட்சி வீரர்.

ராணுவத்திலுள்ள வீரர்கள் சுயநலத்தையும் வருவாய் விருப்பையும், புலனின்பங்களையும் ஒழித்தவர்கள். சொல்லாலும் செயலாலும் அவர்கள் பேதமற்ற, ஏக சகோதர பாவத்துடன் இருந்து வந்தனர்.

'நேதாஜி சுபாஷ் பாபுவால் அளிக்கப்பட்ட உபதேசப்படி 'விடுதலை அல்லது மரணம்' என்ற ஒரே லட்சியத்துடன், தாய்த் திருநாட்டின் தொண்டிற்காக அழைக்கப்படும் எந்த வினாடியிலும் தங்கள் உயிர்களைத் திரணமாக மதித்துப் பாய்ந்து விழவும் தயாராக இருக்கின்றனர்' இவ்வாறு தோமெய் நிருபர் ராப் பெர்ரோ எழுதியிருந்தார்.

ஆ. ஹி. த. அரசாங்க அமைச்சரவை



முன்வரிசை: (இ.வ.) ஏ. சீ. சாட்டர்ஜி, ஜே. கே. பான்ஸலே, நேதாஜி. காப்டன் லெட்சுமி, ஏ. எம். சஹாய், எஸ். ஏ. அய்யர்.

பின்வரிசை: ஏ. டி. லோகநாதன், இஷான்காதிர், எம். எஸ். பகத், எம். இசற், கியானி, அஜிஸ், ஷாநவாஸ்கான், குல்ஸாராசிங்.

சுதந்திர இந்திய தற்காலிக அரசாங்கம்

இந்தியாவின் சரித்திரத்திலே 1943ம் வருடம் அக்டோபர் மாதம் 21-ந்தேதி மிகுந்த பிரகாசத்துடன் ஒளிரும் நாள். அன்றுதான் திறமை மிக்க தலைவர் திரு சுபாஷ்சந்திரபோஸ், இந்தியாவின் பல பாகங்களி லிருந்தும் வந்து, கிழக்காசியாவின் நாலு பகுதிகளிலும் குடியேறியுள்ள முப்பது லட்சம் இந்திய மக்களின் பரிபூரண பக்கபலத்துடன், தற்காலிக அரசாங்கம் ஸ்தாபித்தது. அதற்கு முன்னரே ஆத்மார்த்த ரீதியில் பிரிட்டிஷாரின் இரும்புப் பிடியினின்று விடுதலை பெற் றிருந்த கி. ஆ. வாழ் இந்தியர்கள், அன்று முதல் சுத்த சுதந்திரர்கள் ஆனார்கள். அவர்கள் தங்களை இனிஎவரும் அலட்சியம் செய்ய முடியாது என்பதை உணர்ந்தனர். தங்களுக்கு ஓர் அரசாங்கமும், அடிமைப் பட்டுழலும் தங்கள் தாய்நாட்டை விடுவிக்க ஒரு ராணுவமும்,

அவை இரண்டையும் வெற்றிகரமாக நடத்திச் செல்ல ஒரு உத்தமத் தலைவரையும் பெற்ற கிழக்காசியா வாழ் இந்தியர்கள் ஆனந்த பரவசமடைந்து நின்றனர்.

அன்று (21–10–43) காலையில், கிழக்காசியா இந்தியர்களின் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு மகாநாடு, சிங்கப்பூர் கத்தே மாளிகையில், நேதாஜி போஸ் தலைமையில் நடைபெற்றது. பிரசித்தி பெற்ற அந்த மண்டபம், மூவர்ண தேசியக் கொடிகளாலும், தோழ நாடுகளான ஜெர்மனி, இத்தாலி, சீனு, மஞ்சுகோ, நிப்பன், பர்மா, தாய்லந்து, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளின் கொடிகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

சரியாக 10–30 மணிக்கு நேதாஜி மண்டபத்திற்கு வந்து சேர்ந்தார். ஆ. ஹி. பௌஜி, அவருக்கொரு ராணுவ அணிவகுப்பு மரியாதை அளித்தது. பிறகு இ. சு. சுங்கப் பொதுக் காரியதரிசி கர்னல் ஏ. ஸி. சாட்டர்ஜி தனது அறிக்கையை சமர்ப்பித்தார். பின்னர் நேதாஜி, தமது தலைமை உரையை நிகழ்த்தினுர். அதில் அவர், 'நமது போராட்டத்திற்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டு விட்டன. இனிநாம் அரசியல் ராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது தான் பாக்கி என உரைத்தார். சுதந்திர இந்திய தற்காலிக அரசாங்க அமைப்புப் பற்றிய பிரகடனம், பிற்பகல் வெளியிடுவதாக நேதாஜி முடிவில் தெரிவித்தார். இத்துடன் காலை நிகழ்ச்சிகள் முடிவடைந்தன.

பிற்பகல் 4 மணிக்கு மகாநாடு மீண்டும் கூடியது. நேதாஜி, பர்மாவும் பிலிப்பைனும் சுதந்திரமடைந்து விட்டதைப்பற்றி மகிழ்ச்சியுடன் குறிப்பிட்டார். அவ்விரு நாடுகளுக்கும் வாழ்த்துக்கள் அனுப்பப்பட்டன.

நிப்பொன் மக்களும், ராணுவமும், கடற்படையும் காட்டிவரும் அனுதாபத்துக்கும் செய்து வரும் உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நன்றி பாராட்டுவதாக அதன் பிறகு நேதாஜி கூறினர். இதற்குப் பிரதியாக, நிப்பொன் ராணுவத்துக்கும் கடற்படைக்கும், தனித் தனியே, ஐந்து யுத்த விமானங்கள் (மொத்தம் 10 விமானங்கள்) கட்டி முடிப்பதற்காகும் தொகையை நேதாஜி வழங்கினர்.

பின்னர் மந்திரி சபை அமைப்புப் பற்றி அறிவிக்கப் பட்டது. இயல்பான அடக்கத்துடனும், தணிந்த குரலுடனும், நேதாஜி, தமது பெயரை மந்திரி சபை உச்சரித்து, தாம் பிரதம மந்திரியாகவும் யுத்த மந்திரியாகவும் அயல் நாட்டு விவகார மந்திரியாகவும் நியமிக்கப்பட்டிருப்பதாக கூறியபோது, மண்டபம் அதிரும்படியாக ஆரவாரம் செய்யப்பட்டது. 'நேதாஜி ஜிந்தாபாத் ஆஸாத்ஹிந்த் ஜிந்தாபாத்' என்ற கோஷங்கள் வானைத் தொட்டன. பிறகு நேதாஜி, உரத்த குரலில் இதர மந்திரிகள், ஆலோசகர்கள் ஆகியோரின் பெயர்களை வெளியிட்டார்.

அப்பொழுது அறிவிக்கப்பட்ட பெயர்களும் இலாக்காக்களும்:—

திரு சுபாஷ்சந்திர போஸ் பிரதமர், யுத்த, அன்னிய நாட்டு மந்திரி.

காப்டன் திருமதி லெக்ஷ்மி சுவாமிநாதன், மாதர் பகுதி மந்திரி.

திரு எஸ். ஏ. ஐயர், பிரசார இலாகா மந்திரி

திரு எ. எம். ஸஹாய், மந்திரி அந்தஸ்துடன்கூடிய காரியதரிசி.

லெப் கர்னல் ஏ. ஸி. சட்டர்ஜி, பொக்கிஷ மந்திரி,

அஸீஸ் அகமது, என் எஸ். பகத், குல்ஸாரா சிங், எம். இஸட்கியானி, ஏ. டி. லோகநாதன், எஸான் காதிர், ஷாநவாஸ், ஆயுதந் தாங்கிய படைகளின் பிரதிநிதிகள். திரு ராஷ்விகாரி போஸ் பிரதம ஆலோசனையாளர்.

ஆலோசனையாளர்கள்: திரு கரீம்கனி, திரு தேவநாத் தாஸ், திரு டி. எம். கான், திரு ஏ. எல்லப்பா, திரு ஜே. ஏ. திவி, திரு ஸர்தார் கிஷார் சிங்.

திரு. ஏ. என். சர்க்கார் சட்ட ஆலோசனையாளர்.

எனது கனவுகள் மூன்று— நேதாஜி

(குறிப்பு: மந்திரிசபை அமைப்பதென்பது சாதாரண விஷயமல்ல. அப்போதைய சூழ்நிலையில் மிகுந்த குறுகிய நேரத்தில், அறிவிக்கப்பட வேண்டியிருந்ததால் இலாக்காக்கள் சரிவர பிரித்துக்கொடுப்பதில் தாமதம் ஏற்பட்டது. பிறகு மந்திரி சபையில் பலவித மாற்றங்கள் செய்யப்பட்டன. புதிதாகப் பலர் சேர்த்துக் கொள்ளப் பட்டனர். உதாரணமாக பொக்கிஷ மந்திரி திரு. என். ராகவன் பெயர் இதில் இல்லை. அதேபோல் சப்ளை மந்திரி மேஜர் ஜெனரல் அழகப்பன் பெயரும் இதில் இல்லை. மேலே ஆலோசனையாளர்களாகக் குறிப்பிடப் பட்டுள்ள பலருக்கு பின்னர் மந்திரி சபையில் தனித் தனி இலாக்காக்கள் அளிக்கப்பட்டன.)

மந்திரிகளும் ஆலோசகர்களும் மேடைமீதேறி நேதாஜிக்கிப் பின்னுலிருந்த ஆசனங்களில்அமர்ந்தனர்.

மறக்க முடியாத சம்பவம்

அதன்பின் ஏற்பட்ட நிகழ்ச்சி என்றுமே நேர்திராதொன்ருகும். இக்காட்சி அங்கு விஜயஞ் செய்திருந்தவர்களை உருக்கி விட்டது. அதை அவர்கள் தங்கள் வாழ்விலே மறக்கவே மாட்டார்கள். நேதாஜி, தேசத்திற்கு விஸ்வாசப் பிரமாணம் எடுத்துக்கொள்ள ஆரம்பித்தார். விஸ்வாசப் பிரமாணம் என்ருல் மற்ற நாட்டுத் தலைவர்கள் எடுத்துக் கொள்வதைப்போன்ற சாதாரண சம்பிரதாய விஷயமா? 38 கோடி மக்களைக்கொண்ட ஒரு பெரும் சமூகத்தை—அன்னியர்க்கு அடிமைப்பட்டுக் கிடக்கும் பெரிய கண்டத்திற்கொப்பான ஒரு பெரிய தேசத்தை—விடுவிக்கும் மகத்தான பொறுப்பை, பிரம்மாண்டமான கடமையை ஏற்றுக்கொள்வதன்ரே! இவை நேதாஜியின் சிந்தனையில் தெறித்தன போலும்! அவருடைய முகபாவத்தில் ஒருமாற்றம் காணப்பட்டது; அவருடைய பரந்த வதன மண்டலத்திலே கம்பீரமும் திடமும் தோன்றின. அவர் உணர்ச்சிப் பரவசராஞர்.

நேதாஜி கூட்டத்தினரை நோக்கினர். கூடியிருந்தோரனைவரும், வைத்த கண் வாங்காமல் அவரையே நோக்கிக்கொண்டிருந்தனர். நேதாஜி மேசைமேலிருந்து ஒரு சிறு துண்டுக் கடிதத்தை எடுத்தார். இந்துஸ்தானியில் அந்தப் பிரதிக்ஞையை படிக்க ஆரம்பித்தார்.

"சுபாஷ் போஸாகிய நான். ஆண்டவன் சாட்சியாக இந்த தெய்வீகம் பொருந்திய பிரதிக்ஞையை எடுத்துக் கொண்டு" என்ற வார்த்தைகள் வந்தன. அதற்குமேல்

வார்த்தைகள் வெளிவர மறுத்தன; தடைப்பட்டன. இவை வெறும் வார்த்தைகளல்ல, அவரது உள்ளத் தோன்றி உயிரிற் கலந்து உதிர்ந்த வார்த்தைகளாகும். இந்த நெருக்கடியான தருணத்தில் அவர் மேற் கொள்ளும் கைங்கரியம்—பொறுப்பு மகத்தானது என்பதை அவருடைய அந்தராத்மா அறிவித்தது போலும்!

மிக்க பிரயாசையுடன் நேதாஜி, தமது மன வெழுச்சியினுலேற்பட்ட குழப்பத்தை அடக்கிக்கொண்டு பிரதிக்ஞையைத் தொடர்ந்தார். "இந்தியாவினதும். அதன் முப்பத்தெட்டுக் கோடியுள்ள என் தாய் நாட்டினதும், விடுதலைக்காக இப்புனித சுதந்திர யுத்தத்தை எனது உடலில் கடைசி மூச்சு இருக்கும் வரையும் தொடர்ந்து நடத்தி வருவேன் என்று பிரமாணமெடுத்துக்கொள்கிறேன்."

நேதாஜி, தம்மையும் தமது சூழ்நிலையையும் மறந்தார். தமக்கு முன்னுல் 'தைதோவா' மண்டபத்தில் உள்ள மக்களை மட்டும் அவர் காணவில்லை. இந்தியாவி லுள்ள 38 கோடி இந்திய மக்களை அவர் அகக்கண்கள் கண்டன. தம்மைக் கண்ணியமாக மதிக்கும் பாரத மக்களின் பரிதாபகரமான முகங்கள் தென்பட்டன. அடிமைப்பட்டுழலும் கோர முகங்கள் காட்சியளித்தன. அவர்களை விடுவித்து சுதந்திரர்களாக்கி, சுபிட்சவாழ்வில் நிலைபொருத்தவேண்டிய மகத்தான பொறுப்பை தாம் ஏற்றுக்கொண்டிருப்பதையெண்ண, அவர் உள்ளம் உணர்ச்சியினுல் பெருக்கமடைந்தது. உணர்ச்சி வெள்ளம் கரைபுரண்டோட ஆரம்பித்தது. அவருடைய கண்களில் நீர் நிறைந்தது. கண்கள் கண்ணீர்க் கடலில் மிதந்தன. அதையடக்க அவர் அதிகப் பிரயாசைப் பட்டார். ஆனுல், அது சாத்தியப்படவில்லை. கண்கள் நீரைச் சொரிந்தன.

1. புரட்சிகரமான தேசிய ராணுவம் ஸ்தாபித்தல்

கூடியிருந்த மக்கள் இதைக் கண்டு துடிதுடித்தனர்; கலங்கினர். நேதாஜியின் நிலைமையை எல்லோரும் உணர்ந்தனர். சிந்தனையில் ஆழ்ந்தனர், இப்படியே இருந்தால்...?

நிலைமை மாறியது, புயல் வீசியது, சபை முழுதும் ஆரவாரம் கிளம்பியது. கூட்டத்தினர் தத்தம் ஆசனங்களிலிருந்து எழும்பி, எத்தகைய இடையூறுமின்றி முன்னேறிச் செல்லலாமென்பதை கோஷங்களின் மூலம் காண்பித்தனர். நேதாஜி, தம்மை சமாளித்துக் கொண்டு பிரதிக்ஞையின் எஞ்சிய பாகத்தைப் படித்தார்

"நான் எப்பொழுதும் இந்தியாவின் தொண்டனாகவே இருந்து வருவேன். 38 கோடியுள்ள எனது இந்திய சகோதர சகோதரிகளின் நலன்களைக் கவனிப்பதே எனது முழு முதற் கடமையாக இருக்கும்.

மீண்டும் உள்ளக் குமுறல். சபையோர் இடியோசையைப்போல் ஆரவாரம் முழக்கினர். நேதாஜி நிலைமையைச் சமாளித்துக்கொண்டார். ஜனங்களும் ஒருவாறாய் கவலையினின்று மீண்டனர்.

நேதாஜி எடுத்துக்கொண்ட பிரமாணத்தின் முழு உருவம்: இந்தியாவினதும், 38 கோடியுள்ள என் தாய் நாட்டினதும், விடுதலைக்காக இப்புனித சுதந்திர யுத்தத்தை எனது உடலில் கடைசி மூச்சு இருக்கும் வரையும் தொடர்ந்து நடத்தி வருவேன் என. சுபாஷ் சந்திர போஸாகிய நான் ஆண்டவன் சாட்சியாகப் பிரமாணம் எடுத்துக்கொள்ளுகிறேன். நான் எப்பொழுதும் இந்தியாவின் தொண்டனாகவே இருந்து

வருவேன். 38 கோடியுள்ள எனது இந்திய சகோதர சகோதரிகளின் நலன்களைக் கவனிப்பதே எனது முழு முதற் கடமையாக இருக்கும். சுதந்திரம் அடைந்த பின்னரும் இந்தியாவின் சுதந்திரத்தைக் காப்பாற்றுவதற்காக, நான், எனது தேகத்திலுள்ள கடைசிச் சொட்டு ரத்தத்தையும் சிந்தத் தயாராயிருப்பேன்.

அதன் பிறகு, மந்திரி சபை அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும் விஸ்வாசப் பிரமாணம் எடுத்துக் கொண்டனர். அவர்கள் தங்கள் தலைவர் ஸ்ரீஜத் சுபாஷ் சந்திர போஸிடம் விசுவாசமாக இருப்பதுடன், தேசத்திற்காக தங்களுடையதனைத்தையும் அர்ப்பணம் செய்வதாக ஆண்டவனின் பெயரால் பிரமாண மேற்றனர். பின்னர், மந்திரிசபை அங்கத்தினர் அனைவரிடமும் நேதாஜி கைகுலுக்கினர்.

இறுதியாக சரித்திர மகத்துவம் வாய்ந்த சுதந்திர இந்திய தற்காலிக அரசாங்கப் பிரகடனம் செய்யப்பட்டது.

அரசாங்கப் பிரகடனம்

ஆங்கிலத்தில் தயாரிக்கப்பட்ட பிரகடனம் நேதாஜியால் வாசிக்கப்பட்டது. அதுவருமாறு: 1757ம் வருஷம் வங்காளத்தில் பிரிட்டிஷாரிடம் முதன் முதலாகத் தோல்வி அடைந்தது முதல், இந்தியஜனங்கள் 100வருஷங்கள் வரை இடைவிடாமல் கடுமையாகப் போராடினர்கள். இந்தக் காலத்திய இந்திய சரித்திரம் இணையற்ற வீரச் செயல்களும், தியாகமும் செறிந்து திகழ்கின்றது. வங்காளத்திலே ஸிராஜ்உத்தெளலா, மோகன்லால், தென் இந்தியாவில் ஹைதர் அலி, திப்பு சுல்தான், வேலுத்தம்பி, மகா ராஷ்டிரத்திலே அப்பா சாகிப், பான்ஸ்லே, பாஜிராவ் பீஷ்வா, அயோத்திபீகம் ஆகியோர் பெயர்களும் 1857ல் நடந்த முதல் சுதந்திரப்

போரின் தலைவர்களான ஜான்ஸி ராணி லட்சுமிபாய், தாந்தியாதோபி, நானாசாகிப் ஆகிய வீரர்களின் பெயர்களும் இந்திய சரித்திரத்திலே பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்டுள்ளன.

நமது துரதிருஷ்டம் பிரிட்டிஷார் இந்தியா முழுவதற்கும் தூமகேதுக்கள் என்பதை நமது முன்னோர்கள் முதலில் உணரவில்லை. அதனால் அவர்கள் பகைவனை எதிர்ப்பதில் ஒன்றுபடவில்லை.

முடிவாக இந்தியர் உண்மை நிலையை உணர்ந்தார்கள். உடனே ஒன்றுபட்ட போராட்டம் ஒன்று நடத்தினார்கள். 1857ம் வருஷம் பகதூர் ஷாவின் தலைமையில் அவர்கள் சுதந்திர புருஷர்களாகத் தங்களது கடைசிப் போராட்டத்தை நடத்தினார்கள். முதலில் பிரகாசமான வெற்றிகள் ஏற்பட்டன. ஆனால் துரதிருஷ்டமும் தவறான தலைமையும் சேர்ந்து அவர்களை முடிவில் தோற்கும்படி செய்துவிட்டன. அவர்கள் அடிமைகளாகிவிட்டனர். ஆயினும் ஜான்ஸிராணி, தாந்தியா தோபி போன்ற மகா வீரர்கள் இன்றைக்கும் தங்களது புனிதமான ஞாபகத்தினாலேயே, தேசம், தியாகமும் வீரமும் நிறைந்த செயல்கள் புரிவதற்கு உத்வேகம் பெறுமாறு செய்யும் இறவாத ஒளியுடைய நட்சத்திரங்களாக விளங்குகிறார்கள்.

1857-க்குப் பின் இந்தியர்களின் ஆயுதங்கள் பறிக்கப்பட்டு விட்டன. பயங்கரமான அசுரக் கொடுமைகளுக்கு அவர்கள் ஆளாயினர். இதனால் இந்தியா கொஞ்ச காலம் செயலின்றிச் சோர்ந்து கிடந்தது. ஆனால், 1885 ல் காங்கிரஸ் மகாசபை ஸ்தாபிக்கப்பட்டது முதல் ஒரு புதிய விழிப்பு ஏற்பட்டது. 1885 முதல் சென்ற உலக யுத்தம் வரை இந்தியர்கள் தங்கள்

இழந்த சுதந்திரத்தை மீண்டும் பெறுவதற்காக எல்லா வழிகளிலும் கிளர்ச்சி, பிரசாரம், பிரிட்டிஷ் சாமான் பகிஷ்காரம், பயங்கரப் புரட்சி, நாசவேலைகள் எல்லா வழிகளாலும்—முடிவில் ராணுவப் புரட்சியாலும்—முயன்று பார்த்து விட்டார்கள்.

ஆனால், இந்த முயற்சிகளெல்லாம் அப்போதைக்குப் பலிக்காமல் போய்விட்டன. முடிவில் 1920 ம் வருஷம் இந்திய ஜனங்கள் தங்கள் முயற்சிகள் பலிக்கவில்லை என்ற சோர்வுடன், புது வழிக்காகத் தேடிக் கொண்டிருக்கும்போது மஹாத்மா காந்தி ஒத்துழையாமை, சட்ட மறுப்பு என்ற தமது புது ஆயுதங்களுடன் அவர்களுக்கு வழிகாட்ட முன்வந்தார். அதன் பின் 20 வருடங்கள் தீவிரமான தேசிய நடவடிக்கைகளில் கழிந்தன. ஒவ்வொரு இந்தியனது குடிசைக்குள்ளும் சுதந்திர பேரிகை சென்று ஒலித்தன. ஜனங்கள் ஒரு தேசிய ஸ்தாபனத்தில் இணைக்கப்பட்டனர். இந்தியர் அரசியல் விழிப்பை மீண்டும் பெற்றதோடு, பழைய அரசியல் ஒருமைப் பாட்டையும் மீண்டும் பெற்றனர். இப்போது அவர்கள் ஒரே குரலுடன் முழக்கினர். ஒரே லட்சியத்திற்காக ஒன்றுபட்ட விருப்பத்துடன் பாடுபட்டனர்.

1937 முதல் 1939 வரை 8 மாகாணங்களில் காங்கிரஸ் மந்திரிசபைகள் மூலம் இந்தியர்களுக்குத் தங்கள் விவகாரங்களைத் தாங்களே கவனித்துக்கொள்ளும் திறமை இருக்கிறதென்பது நிரூபித்துக் காட்டப்பட்டது. இவ்வாறு இந்த உலக யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன்னர் இந்திய விடுதலைக்கான கடைசிப் போராட்டத்திற்கு வேண்டிய முன்னேற்பாடுகள் யாவும் நடந்தேறியிருந்தன. யுத்தம் நடந்தது. ஐரோப்பாவிலே ஜெர்மனி தனது தோழர்களின் துணையுடன் நமது எதிரியைத்

தாக்கித் தகர்த்தது. இங்கே கிழக்காசியாவில் நிப்பொன் தனது தோழர்களுடன் எதிரியை ஒரேயடியாய் வீழ்த்தி விட்டது.

இவ்வாறு நிலைமைகளின் மங்களகரமான சேர்க்கையால் இந்தியர்கள் தங்கள் தேசிய விடுதலையைப் பெறுவதற்காக இப்போது ஓர் ஒப்பற்ற தருணம் வாய்த்திருக்கிறது. சமீபகாலச் சரித்திரத்தில் முதல் தடவையாக வெளிநாட்டிலுள்ள இந்தியர்கள் அரசியல் கிளர்ச்சி செய்தெழுந்த ஒரே ஸ்தாபனத்தின் கீழ் ஒன்றுபட்டிருக்கிறார்கள். அவர்கள் உணர்ச்சியில் மட்டுமின்றி, சுதந்திரம் பெறுவதற்கான முயற்சிகளிலும் தங்கள் தாய்நாட்டாருடன் ஒன்றுபட்டுச் செயலிலிறங்கி யிருக்கிறார்கள். முக்கியமாகக் கிழக்காசியாவில் 20 லட்சம் இந்தியர்கள் ஒரே ஸ்தாபனத்தின் கீழ் சர்வாம்ச யுத்த முஸ்தீப்பு என்ற கோஷத்துடன் ஒன்றுபட்டுச் செயலாற்ற முன்வந்திருக்கிறார்கள். அவர்கள் முன்னே அணிவகுத்து நிற்கும் இந்திய தேசியப் படையினர் டில்லி 'செல்வோம்' என்ற முழக்கத்துடன் துடித்து நிற்கிறார்கள்.

பிரிட்டிஷ் அரசாங்கம், இந்தியர்களைக் கொள்ளையடித்துச் சுரண்டி அவர்கள் நிர்க்கதியான நிலைமைக்கு வரும்படி பசிக்கொடுமையால் மரிக்கும்படி செய்து விட்டது. எனவே இந்திய மக்களுக்கு அதன்மீது லவலேசங்கூட நல்ல எண்ணம் இல்லை. இப்போது பிரிட்டிஷ் சர்க்கார் மிகவும் ஆபத்தான நிலையில் இருக்கிறது.

அந்த அவல அரசாங்கத்தில் கொஞ்ச நஞ்சம் ஒட்டிக்கொண்டிருக்கும் ஆதாரத்தையும் அடியோடு தகனஞ் செய்வதற்கு ஒரு நெருப்பு ஜுவாலை மட்டுமே

தேவை. அந்த ஜுவாலையை மூட்டிவிடுவதே இந்திய சுதந்திர சைனியத்தின் வேலை.

இந்தியாவின் பொதுஜனங்களும், ராணுவத்தின் பெரும்பகுதியும் நம்முடன் ஒத்துழைப்பார்கள் என்று நமக்கு நிச்சயமான நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. வெல்லுதற்கரிய வீரர்களான வெளிநாட்டினரின் பக்கபலம் நமக்கிருக்கிறது. இவற்றுடனும், ஆனால் முதன்மையாகத் தன் சொந்த பலத்தையே நம்பிக்கொண்டும் இந்திய சுதந்திர சைனியம் தனது சரித்திரக் கீர்த்தி வாய்ந்த காரியத்தில் வெற்றி கிடைக்கும் என்று நிச்சயமாக நம்புகிறது.

இந்தியாவின் சுதந்திர சூரியன் இப்போது உதயமாகிவிட்டான். எனவே, இந்தியர் தங்களது சொந்தமான தற்காலிக அரசாங்கம் ஒன்றை ஸ்தாபித்து அதன் கீழ் தங்களது இறுதி சுதந்திரப் போரை நடத்த வேண்டும். ஆனால் இந்தியாவின் தலைவர்களெல்லாம் சிறையிலிருக்கிறார்கள். இந்தியாவில் நம்மவரிடம் ஆயுதமே கிடையாது. ஆகவே இந்தியாவிற்குள்ளே தற்காலிக அரசாங்கம் ஏற்படுத்துவதோ, அந்த அரசாங்கத்தின் கீழ் ராணுவப்போர் நடத்துவதோ முடியாத காரியம். எனவே கிழக்காசியாவிலுள்ள இ. சு. சங்கம் இந்தியாவிலும் வெளியிலும் உள்ள ஜனங்களின் ஆதரவுடன் தற்காலிக சுதந்திர இந்திய அரசாங்கம் ஸ்தாபித்து, சங்கத்தால் நிறுவப்பட்டிருக்கும் ஆஸாத் ஹிந்த் பௌஜின் துணையுடன் இந்திய விடுதலைக்கான கடைசிப் போராட்டத்தை நடத்தவேண்டியது கடமையாகிறது.

கிழக்காசியா இ. சு சங்கத்தால் சுதந்திர இந்திய தற்காலிக அரசாங்கம் ஸ்தாபிக்கப்பட்டுவிட்டது.

நாங்கள் இப்போது எங்கள் மீது சார்ந்து நிற்கும் பெரிய பொறுப்புக்களை முழுதும் உணர்ந்துகொண்டு எங்களது கடமைகளை மேற்கொள்ளுகிறோம். எங்களது நாட்டின் விமோசனத்துக்கான போராட்டத்திற்கும், எங்களது செயலுக்கும் அதிருஷ்ட தேவதை ஆசிகூற வேண்டுமென்று பிரார்த்திக்கிறோம். நாங்கள் எங்கள் உயிர்களையும் எங்களது போர்வீரத் தோழர்களின் உயிர்களையும் எங்கள் தாய் நாட்டின் விடுதலைக்காகவும் அதன் நன்மைக்காகவும் உலக தேசங்களிடையே அது உயர் மதிப்புப் பெறுவதற்காகவும் அர்ப்பணிப்பணிப்பதாக சபதமேற்கிறோம்.

இந்தியாவிலிருந்து பிரிட்டிஷாரையும் அவர்களுடைய தோழர்களையும் விரட்டியடிப்பதற்காகப் போர் தொடங்கி நடத்துவதே தற்காலிக அரசாங்கத்தின் வேலை. அதன்பின் இந்திய மக்களின் விருப்பப்படி அவர்களது நம்பிக்கைக்குப் பாத்திரமான நிரந்தர இந்திய சுதந்திர அரசாங்கத்தை ஸ்தாபிப்பது அதன் காரியம். பிரிட்டிஷார் முறியடிக்கப்பட்டு இந்தியாவிலிருந்து விரட்டியடிக்கப்பட்டபின், இந்தியாவிலே நிரந்தர சுதந்திர அரசாங்கம் நிறுவப்படும் வரையில் இந்தத் தற்காலிக அரசாங்கம் இந்திய மக்களின் பொறுப்பில் இந்தியாவின் விவகாரங்களை நிர்வகிக்கும்.

தற்காலிக அரசாங்கம் ஒவ்வொரு இந்தியனது கூட்டுறவுக்கும் உரிமையுள்ளது. இதன்மூலம் அந்தக் கூட்டுறவைக் கோருகிறது. மத சுதந்திரமும், ஒவ்வொரு பிரஜைக்கும் சம உரிமையும், சம சந்தர்ப்பமும் அளிப்பதாக அது உத்தரவாதம் கொடுக்கிறது தேசம் முழுவதும் அதன் எல்லாப் பகுதிகளும் சந்தோஷமாகவும் செல்வப் பெருக்குடனும் வாழ வகை செய்ய வேண்டுமென அது உறுதிகொண்டிருக்கிறது. இந்த

அரசாங்கம், இந்திய மக்கள் அனைவரும் சமம் என்ற நோக்குள்ளது. சென்ற நாட்களில் எதிரிகள் நம் நாட்டினரிடையே தந்திரமாகப் புகுத்தியுள்ள பிளவுகளை இது லட்சியம் செய்யாது.

இந்திய மக்கள் அனைவரும் எங்கள் கொடியின் கீழ் வந்து திரண்டு இந்தியாவின் விடுதலைக்காகப் போராட வேண்டுமென்று ஆண்டவன் பெயராலும், நமக்கு வீரத்தையும், தியாகத்தையும் பரம்பரைச் செல்வங்களாக்கி வைத்துச் சென்றிருக்கும் நமது முன்னோர்களின் பெயராலும் நாங்கள் அழைக்கிறோம். இந்தியாவில் உள்ள நமது எதிரியும், அவனது துணைவர்களும் நாட்டைவிட்டு அடியோடு விரட்டப்படும்வரை-இந்தியா மீண்டும் சுதந்திர நாடாகும்வரை — வீரத்துடனும் வெற்றியில் தளரா நம்பிக்கையுடனும் போராடுவதற்காக இந்தியர் அனைவரும் ஒருங்கு திரண்டு முன் வரவேண்டும் என்று நாங்கள் கூவியழைக்கிறோம்.

நேதாஜி சுபாஷ் பாபு, சுதந்திர இந்திய அரசாங்கத் தலைவர் என்ற ஹோதாவில் ஒரு அறிக்கை வெளியிட்டார்.

அரசாங்கத் தலைவரின் அறிக்கை

எனது 22 வருஷப் பொது வாழ்க்கையில் சரித்திரத்தை முக்கியமாக உலகில் பல பாகங்களிலும் நடந்திருக்கும் புரட்சிகளின் சரித்திரத்தை ஆழ்ந்து ஆராய்ந்து பார்த்த பின் சுதந்திரப்போராட்டத்தில் இந்தியா விடம் இல்லாதவை ஒரு தேசிய சைனியமும் அதை யுத்தத்தில் நடத்திச் செல்ல ஒரு தேசிய அரசாங்கமுமே என்பதை நான் எப்பொழுதும் உணர்ந்து வந்திருக்கிறேன்.

இந்த யுத்தத்தின்போது நிப்பொன் அடைந்த அற்புதமான வெற்றிகளின் பயனுக கிழக்காசியாவில் உள்ள இந்தியர்கள் ஒரு சுதந்திர சங்கமும், தேசிய சைனியமும் ஏற்படுத்திக்கொள்வது சாத்தியமாயிற்று. இ. சு. சங்கத்திலிருந்து இ. சு. தற்காலிக அரசாங்கம் தோன்றியது. இந்திய சுதந்திர இறுதிப் போரைத் தொடங்குவதும் நடத்திச் செல்வதும் இதன் வேலைகள்.

சமீபகாலத்தில் 1916ல் ஐரிஷ்காரர்கள் தங்கள் தற்காலிக அரசாங்கத்தை ஸ்தாபித்தார்கள். சென்ற உலக யுத்தத்தின்போது ஜெக்ஜனங்கள் அதேபோலச் செய்தார்கள். அதன் பிறகு துருக்கியர்கள் முஸ்தபா கமாலின் தலைமையில் தங்கள் தற்காலிக அரசாங்கத்தை அனதோலியாவில் நிறுவினுர்கள். நமது விஷயத்தில் சுதந்திர இந்திய தற்காலிக அரசாங்கம் சாதாரணமாக சமாதானகால அரசாங்கம்போல இராது. அது யுத்தகால ஸ்தாபனமாக விளங்கும்.

பிரிட்டன், அமெரிக்கா மீது யுத்தப் பிரகடனம்

1943-ம் வருஷம் அக்டோபர் மாதம் 21-ம் தேதி காலையில் சுதந்திர இந்திய தற்காலிக அரசாங்கம் பிரிட்டன் மீதும் அமெரிக்கா மீதும் யுத்தப் பிரகடனம் செய்யத் தீர்மானித் திருப்பதாக ஓர் அறிக்கை வெளியிட்டது. இதற்கு முதல்நாள், ஆ. ஹி. அரசாங்கத் தலைவர் சுபாஷ் பாபுவின் உத்தியோக வாசஸ் தலத்தில் கூடிய மந்திரி சபைக் கூட்டத்தில் இத்தீர்மானம் செய்யப் பட்டது; மேலும் இந்தியாவின் அரசியல் பொருளாதார ராணுவ நிலைமைகளும் விவாதிக்கப்பட்டன.

அன்று மாலை 4 மணிக்கு ஷோனுன் நகரசபையின் முன்னுள்ள திடலில் இந்தியர் கூட்டமொன்று நடை

பெற்றது. நேதாஜி 4 மணிக்குச் சற்று பிறகு வந்து சேர்ந்தார். ராணுவ மரியாதையை ஏற்றுக்கொண்ட பின்னர் இந்திய தேசியக் கொடியை ஏற்றுவித்தார். தாகூரின் அற்புதகீதம் 'ஜன கண மண' பாடப் பட்டது. பின்னர் நேதாஜி மேடை மீது சென்றமர்ந்தார்.

நிப்பொன் உயர்தர அதிகாரியொருவர் ஆ. ஹி. தற்காலிக அரசாங்கத்தை நிப்பொன் அரசாங்கம் அங்கீகரித்திருப்பதாகவும் அதற்கு மனப்பூர்வமான ஒத்துழைப்பும் உதவியும் நல்கத் தயாராக இருப்ப தாகவும் தெரிவிக்கப்பட்டிருந்த செய்தியைப் படித்தார். இந்தியாவை அடிமைப்படுத்தி வைத்திருக்கும் பிரிட்ட னுக்கும், அமெரிக்காவுக்கும் எதிராக ஆஸாத் ஹிந்த் தற்காலிக அரசாங்கம், இன்று காலை யுத்தப் பிரகடனம் செய்திருக்கிறது, என்று அறிவிக்கப்பட்டபோது கூட்டத்தினர் உற்சாக மிகுதியால் அலைகடல் போல ஆர்ப்பரித்தனர். 'ஆங்கிலோ-அமெரிக்க கொடுங் கோலர்கள் வீழ்க!' என்ற கோஷம் விண்ணை முட்டியது.

"நேரம் மிகவும் விலைமதிப்பற்றது. நமது இறுதிப் போரைத் தொடங்குவதில் எவ்வித காலதாமதமும் கூடாது. இந்த வருட இறுதிக்குள் நாம் இந்திய பூமியில் பிரவேசித்துவிட வேண்டும்" என நேதாஜி வலியுறுத் திக் கூறினர்.

நேதாஜி ஆஸாத் ஹிந்த் அரசாங்கம் அமைக்கப் பட்ட பின் முதன் முதலாக பத்திரிகை நிருபர்களுக்குப் பேட்டி அளித்தபொழுது பின்வருமாறு கூறினர்.

"எனது கனவுகள் மூன்று, அவை: ஒரு புரட்சிகர மான தேசிய ராணுவம் ஸ்தாபித்தல், தற்காலிக சுதந்திர அரசாங்கம் அமைத்தல், போராடி சுதந்திரம் பெறுதல்.

இவற்றில் முதலிரண்டு கனவுகளும் நனவாகி விட்டன. மூன்ருவது கனவும் வெகு விரைவில் நிறைவேறி விடுமென்று நான் திடமாக நம்புகிறேன்.

இறுதியாக யுத்தப் பிரகடனம் பற்றிக் கூறியதாவது: இந்த யுத்தப் பிரகடனம் வெறும் பிரசார தந்திரமல்ல. நாங்கள் சொல்வதை காரிய ரூபமாக விரைவில் நிரூபிப் போம்'' என்ருர்.

இவ்வார்த்தைகளை மெய்ப்பிப்பதுபோல இருந்தது ஆஸாத் ஹிந்த் பௌஜீ அணிவகுப்பில் நடந்த நிகழ்ச்சி.

ஆஸாத் ஹிந்த் அரசாங்கம் ஸ்தாபிக்கப்பட்டதை யொட்டி, ஆஸாத் ஹிந்த் பௌஜீ வீரர்கள் முன்னிலை யில் அதன் சிப்பாசாலார் என்ற முறையில், நேதாஜி ஒரு உன்னதமான சொற்பொழிவாற்றினுர்: அதில் அவர், நான் இங்கே சுற்றிப்பார்க்கும் பொழுது, ஜுலை 4-ந்தேதி இருந்தவர்களில் பலரை இங்கு காணேம். அதற்காக நான் வருந்தவில்லை. அவர்கள் நம்மைவிட இந்தியாவிற்கு அருகில் இருக்கிருர்கள் என்பதை நினைத்து மகிழ்ச்சியே கொள்ளுகிறேன். இந்தியாவை நோக்கி எப்போது முன்னேறிச் செல்வோம் என்று உங்கள் மனமும் ஆவலால் துடிப்பதை உணர்ந்து இன்னும் சந்தோஷ மடைகிறேன். நீங்கள் எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் உங்கள் பயிற்சியைப் பூர்த்தி செய்துகொண்டு உங்களது முறை வரும்போது தயாராயிருக்க வேண்டும்.

''ஆஸாத் ஹிந்த் பௌஜீ நிறுவப்பட்டு விட்டதாக ஜுலை மாதம் நான் முதன் முதலாக அறிவித்ததும், உலகம் உங்களைப் பற்றித் தெரிந்து கொண்டது.

இந்தியாவை விடுவிக்க வேண்டும் என்பதே உங்கள் ஒரே நோக்கம் என்றும், டில்லி செங்கோட்டையே உங்களது ஒரே லட்சியஸ்தானமென்றும் இப்போது அறியும். உலகத்தின் முன் உங்களுக்கு ஏற்பட்டுள்ள உயர் மதிப்புக்காக வாழ்த்துக் கூறுகிறேன். உங்கள் மீது சார்ந்துள்ள பெரும் பொறுப்பை நீங்கள் நிறை வேற்றி வைப்பீர்களென்று நம்புகிறேன்.

"போர் தொடங்குக!" என்ற உத்திரவு உத்தி யோக முறையில் அளிக்கப்பட்டு விட்டது. இந்த உத்திரவை ஆஸாத் ஹிந்த் பௌஜீ செயலில் நிறை வேற்றி வைக்கும். இந்தியாவின் சுதந்திரம் இந்தியர் களின் சொந்த முயற்சியாலும். தியாகத்தாலுமே பெறப்படும்' என்று கூறினர்.

நிப்பொன் அரசாங்கம், 1943 அக்டோபர் மாதம் 23-ம் தேதி ஒரு அறிக்கையின் மூலம் அங்கீகரித்தது.

ஆ. ஹி. அரசாங்கத்திற்கு தோழ நாடுகளின் அங்கீகாரம்

இதைத் தொடர்ந்து பிரதம மந்திரி ஜெனரல் தோஜோ ஒரு அறிக்கையும் வெளியிட்டார். பின்னர், 25-ந்தேதி கூடிய 83வது நிப்பொன் டயட்சபைக் கூட்டத்திலும் அங்கீகரிக்கப்பட்டது. பர்மா அரசாங்கம் தனது அங்கீகாரத்தை அக்டோபர் 24-ந் தேதி தெரிவித்தது. பர்மிய அந்நிய நாட்டு மந்திரி திரு. தாகின் நூ இதைத்தந்தி மூலம் அறிவித்தார்.

பிலிப்பைன் குடியரசு, அக்டோபர் 29-ந்தேதி அங்கீ காரம் செய்தது. தலைவர் ஜோஸ் பி வாரல், நேதாஜி போசுக்கு அங்கீகாரம் தெரிவித்து அனுப்பிய செய்தியில்

மானிட நாகரிகத்திற்கே பெருந் தொண்டாற்றியுள்ள இந்திய சமுதாயத்திற்கான தகுதியானதொரு சுதந்திர இந்தியாவைக் காணவும் விரும்புவதாகத் தெரிவித்தார்.

ஜெர்மனி, தனது அங்கீகாரத்தை அளித்துள்ள தென ஜெர்மன் அன்னிய நாட்டு மந்திரி ஹெர்வான் ரிப்பன் டிராப் உத்தியோக முறையில் அறிவித்தார்.

குரோஷியா, அக்டோபர் 27-ந் தேதி அங்கீகாரம் செய்தது.

சீன தேசிய அரசாங்கம், அங்கீகரித்துவிட்டதாக நவம்பர் 1-ந் தேதி உத்தியோக முறையில் அறிவித்தது.

மஞ்சுகோ சர்க்கார், சிங்கிங்கிலிருந்து நவம்பர் 1-ந் தேதி உத்தியோக முறையில் வெளியான அறிக்கையில், அங்கீகரித்திருப்பதாகக் கூறிற்று.

இத்தாலியக் குடியரசு, நவம்பர் 9ந்தேதி ஒழுங்கு முறைப்படி அங்கீகரித்தது. இவ்விஷயத்தை ஆ ஹி. அரசாங்கத்திற்குத் தெரிவிக்கும்படி, நிப்பொனில் இத்தாலியநலன்களைக் கவனித்துவரும் கர்னல்ஒமேரோ பிரினஸ் பினிக்குத் தகவல் கொடுக்கப்பட்டது. அவர் நேதாஜியிடம் நேரில் தெரிவித்துக்கொண்டார்.

தாய்லந்து அரசாங்கம், நவம்பர் 18ந்தேதி அதிகார பூர்வமாய் அங்கீகரித்துள்ளதாக பாங்காக் ரேடியோ மூலம் அறிவிக்கப்பட்டது.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]



ஜான்ஸிராணி படையினரின் விரவணக்கம்



ஜான்ஸிராணிகள் 'பானெட் சார்ஜ்' பயிலுகின்றனர்

ஜான்ஸிராணி ரெஜிமெண்ட்

"தங்கள் அரசாங்கத்தில் மாதர் இலாகா என்று ஏற்படுத்தி இருக்கிறீர்களே, அது வேறு எந்த அரசாங்கத்திலும் இருப்பதாக தெரியவில்லையே" என்று தோக்கியோவில் (2—11—43) ஒரு பத்திரிகை நிருபர் கேட்டார்.

"உலகிலே புதுமையும் முன்னேற்றமும் இன்னும் அஸ்தமித்துப் போய்விடவில்லை, ஆஸாத் ஹிந்த் அரசாங்கம் உலகிற்குப் புதிதாக அளித்திருக்கும் விஷயம் இந்த மாதர் பகுதியாக இருக்கலாம். எங்கள் ராணுவத்தில் மாதர்பிரிவு இருக்கிறது. அதன் தலைவிக்கு ஒரு மந்திரி ஸ்தானம் அளிக்கப்பட்டிருக்கிறது" என விடை பகர்ந்தார் நேதாஜி.

உண்மையாகவே ஜான்ஸி ராணி ரெஜிமெண்டின் அமைப்பும் அதன் சேவைகளும் உலகிற்கொரு புதுமை தான். நேதாஜியின் அதியற்புத-மேதா விலாசமான செயல் திறனுக்கு இது ஓர் எடுத்துக்காட்டு என்பதில் சந்தேகமே இல்லை.

இந்திய சுதந்திர சங்க மாதர் பிரிவின் மலாய்க் கிளையினர் 21—7—43ந் தேதி நேதாஜிக்கு வரவேற்பு அளிப்பதற்காக, ஷோனன் இ. சு. ச. பிரசங்க மண்டபத்திலே ஒரு கூட்டம் கூடினர். நேதாஜி, மண்டபத்திற்குள் பிரவேசித்த பொழுது, வரிசையாக நின்ற காவல் மகளிர், கத்தி சொருகிய துப்பாக்கிகளை உயரே தூக்கி ராணுவ முறையில் மரியாதை செய்தனர்.

1857-ம் ஆண்டு நிகழ்ந்த முதல் சுதந்திரப் போரில் வீராங்கனையாகிய ஜான்ஸி ராணி யுத்த முனையிற் புரிந்த அற்புதச் செயல்களை நேதாஜி விவரித்தார். "அந்த ராணி, தனது கோரிக்கையைப் பூர்த்தி செய்வதற்கு முன் வீர சொர்க்கமெய்தி விட்டாள். ஆகையால் அந்த அம்மை நிறைவேற்றாது விட்டுப்போன காரியத்தைப் பூர்த்திசெய்ய வேண்டிய பொறுப்பு நம்முடையதாக இருக்கிறது. நமக்கு இப்பொழுது ஆயிரக் கணக்கான ஜான்ஸி ராணிகள் தேவை". என்று கூறினார் நேதாஜி.

மேலும் அவர், "சுதந்திர இயக்கத்தில் சென்ற 20 வருடங்களாக இந்திய மாதர்கள் செய்து வரும் சேவையை நீங்கள் நன்கு அறிவீர்கள். இந்தியா புத்துணர்ச்சி பெற்றதிலிருந்து இந்திய மாதர்கள் பொதுவாழ்வில் தீவிரப் பங்கு பற்றி வருகின்றனர். மகாத்மா காந்தியின் தலைமையில் காங்கிரஸ் 1921-ம் வருஷம் புத்துயிர் பெற்றதிலிருந்து, இம் மாற்றத்தைத்

தெளிவாய்க் காணலாம். காங்கிரஸ் இயக்கத்திலும், சாத்வீக சட்ட மறுப்புக்களிலும், ரகசியப் புரட்சி நடவடிக்கைகளிலுங்கூட நமது சகோதரிகள் மகத்தான செயல்களைச் செய்திருக்கின்றனர்.

'நமது தேசியப் போராட்டங்களில், ஆண்களுடன் பெண்களும் சரிசமமாக கஷ்டப்பட்டிருக்கின்றனர். உண்ண உணவின்றியும், குடிக்கத் தண்ணீரின்றியும், கிராமம் கிராமமாகச் செல்வதிலும், கூட்டம் கூட்டமாகப் பேசுவதிலும், வீடு வீடாகச் சுதந்திரச் செய்தியை பரப்புவதிலும், தேர்தல் நடவடிக்கை நடத்துவதிலும், அரசாங்க உத்திரவுகளை மீறி, ஈவிரக்கமற்ற பிரிட்டிஷ் போலீசாரின் குண்டாந்தடியடிப் பிரயோகத்திற்கும் அஞ்சாது ஊர்வலங்கள் நடத்திச் செல்வதிலும் சிறைத் தண்டனை, சித்திரவதை, அவமானம் - இவைகளைச் சகித்து வருவதிலும் இந்திய மாதர்கள் ஒருவருக்கும் குறைந்தவர்களல்லர்''

இவ்வாறு இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தில் இந்திய மாதர்கள் காட்டிவரும் அரிய பெரிய செயல்களைக் குறிப்பிட்டு விட்டு, அங்கு குழுமியிருந்த மாதர்களை நோக்கி உங்கள் தாய்நாட்டிற்காகப் போரிடவும், கஷ்டநஷ்டங்களை அனுபவிக்கவும் நீங்கள் இன்று தயாராக இருக்கிறீர்களென்ற நம்பிக்கையை நான் தெரிவிப்பது, உங்களை உற்சாகப்படுத்துவதற்காகக் கூறும் வெறும் வார்த்தைகளல்ல'' என்று கூறினர்.

பின்னர் நேதாஜி முதலாவது மகளிர் படைக்கு 'ஜான்ஸி ராணி ரெஜிமெண்ட்' எனப் பெயரிடவேண்டுமெனவும் கூறினர். அங்கு விஜயம் செய்திருந்த ஒவ்வொரு மாது சிரோமணியும் எழுந்து நின்று அந்தப்

படையிற் சேர, தமது பூரண சம்மதத்தை உரக்கக் கூறி ஆர்ப்பரித்தனர். 'ரெக்ருட்மெண்ட்' இலாகா மாது, திரும்பிப் பார்த்த பக்கமெல்லாம் வீரஞ் செறிந்த முகங்களையே கண்டு திகைப்பும் ஆச்சரியமும் அடைந்தார். அப்போதே, அந்த இடத்திலேயே, நூற்றுக்கணக்கான மாதர்கள் தங்கள் பெயர்களைப் பதிந்துகொண்டனர்.

நேதாஜி விஜயம் செய்த ஒவ்வொரு இடங்களிலும் மேலே கண்ட தமது திட்டத்தை வெளியிட்டு வந்தார். இந்திய இளைஞர்கள் எவ்வாறு நேதாஜியின் அழைப்பிற்கு உத்தரமளித்தார்களோ அதே மாதிரி—இன்னும் ஒரு படி மேலாக—இந்திய ஸ்திரீரெத்தினங்கள் பதிலளித்தார்க்ள்.

பினங்கில் நடைபெற்ற மாதர்கள் கூட்டத்தில் (3–9—43-ல்) நேதாஜி பேசினர். "எவ்விதமான சேவை செய்யலாமென்ருல், நமது ஆஸாத் ஹிந்த் பௌஜீ முன்னேறிச் செல்லும்பொழுது ஆயிரக் கணக்கான வீரர்கள் காயமடைவார்கள். அவர்களுக்கு வைத்திய உதவிகள் நிறைய வேண்டும். அவைகளை நம் மாதர்கள்–செஞ்சிலுவைப் படைகளில் சேர்ந்து—தாராளமாகவும் திறமையாகவும் செய்ய முடியும். இந்திய டாக்டர்களும் நர்ஸ்களுமிருந்துகொண்டு, வைத்திய உதவிகளுக்கு நாம் நமது தோழ நாடுகளை எதிர்பார்க்கலாமா? அப்படி எதிர்பார்ப்பது நமக்குக் கௌரவந்தான் ஆகுமா? உங்கள் சகோதரர்களுக்குச் சிகிச்சை செய்து, ஆறுதல் கூறி, அவர்களைப் போரில் மிகவும் ஊக்குவிக்க வேண்டியது உங்கள் முதற் கடமை.

"நான் இந்தியாவிலிருந்து வெளிக் கிளம்பியவுடன் வெளிநாடுகள் பலவற்றில் சுற்றுப் பிரயாணம் செய்திருக்கிறேன். சுதந்திர நாடுகளில் பெண்கள். யுத்தத்தில்

ஆண்களோடு சரிநிகர் சமானமாகநின்று செய்யும் திறமைமிக்க செயல்கள் ஒவ்வொன்றையும் கண்ணாரக் கண்டிருக்கிறேன். தங்கள்நாட்டின் சுதந்திரத்திற்காக அவர்கள் மிகப்பெரிய தியாகங்களை எல்லாம் மகிழ்வுடன் செய்கின்றனர்.

"இந்திய சுதந்திரத்திற்காக கடந்த 20 வருடங்களாக இந்தியாவில் நமது சகோதரிகள் எத்தனையோ முறைகளில் உதவி செய்து வருகின்றனர். நீங்களும் அவர்களைப் பின்பற்றுங்கள். விரைவில் விடுதலையடைவோம்" என்றார் நேதாஜி.

இதற்கு அங்கு விஜயம் செய்திருந்த மாதர்களின் சார்பிலே-திருமதி குருசரண் சிங் அளித்த பதிலைக் கேளுங்கள்:

"தாய் நாட்டு விடுதலைக்காக எங்களுக்குள்ள சகலவற்றையும் தியாகம் செய்வதாக நிச்சயமாக உறுதி கூறுகிறோம். குழப்பமான நேரத்தில், தாய்நாடு கூவியழைக்கும் பொழுது நாங்கள் கையைக்கட்டிக்கொண்டு வீட்டிலிருக்கப் போகிறோமா? இல்லை. தாய் நாட்டு அழைப்பிற்கு, பதில் அளித்தே தீருவோம். அதற்குறிய நேர்பாதை ஜான்ஸி ராணி ரெஜிமெண்ட் எனக்காட்டி இருக்கிறீர்கள்.

"இந்திய மாதர்களாகிய நாங்கள் டில்லியில் மூவர்ணக்கொடி நாட்டப்படும் வரை எங்கள் கடமையினின்று பின் வாங்கப் போவதில்லை என்பதாக இந்த மாபெரும் கூட்டத்திற்கு முன் உறுதி எடுத்துக் கொள்ளுகிறோம்.

இவை வெறும் வாக்குறுதியல்ல—அலங்காரமான ஆடம்பர வார்த்தைகளுமல்ல. இந்திய நாரிமணிகள் காட்டிய தீரம் சரித்திரத்தில் பொன்னெழுத்துக்களால்

பொறிக்கப்பட வேண்டியதொன்ருகும். கிழக்காசியாவிலுள்ள இதர சமூகத்தினர் வியக்கும்படியான முறையிலே அவர்கள் தங்கள் தேச பக்தியைக் காட்டிக் கொண்டனர்.

உண்மையாகப் பார்க்கப்போனுல், ஜான்ஸி ராணி ரெஜிமெண்டிலே சேர்ந்து சர்வத்தியாகிகளாய் விளங்கிய வீராங்கனேகளில் 100க்கு 90 பேர் பாரதமாதாவின் ஸ்பரிசமே அறியாதவர்கள். வெளி நாட்டிலே பிறந்து, வெளி நாட்டிலேயே வளர்ந்தவர்கள். பெரும்பாலோர் மணமாகாத புத்திளங் கன்னிகள்.

நேதாஜியின் சங்கநாதம், அவர்களின் உள்ளத்தைக் கவர்ந்து உத்தம புத்திரிகளாக்கி விட்டது. அவர்களுடைய ஆர்வத்தை 'அற்புதம்' என்று மட்டும் கூறினுல் போதுமா? போதாது. ஆனுல் வார்த்தையைக் காணேம்!

ஓரிரண்டு முக்கிய சம்பவங்களே மட்டும் இதன் கீழே தருகிறேன்.

பகாங் டிரான்ஸ்போர்ட் இலாகாவைச் சேர்ந்த திரு சந்தானமும் அவர் மனேவியும் போலீஸ் இலாகாவைச்சேர்ந்த திரு கருப்பையாவும் அவர் மனேவி பாக்கியம் ஆகியோரும் 25—11—43வ மணம் செய்து கொண்ட அன்றே ஆ. ஹி. பௌஜிலும் ஜான்ஸிராணி ரெஜிமெண்டிலும் சேர்ந்தனர்.

பகாங்கைச் சேர்ந்த பாதம் பீ பீ என்னும் முஸ்லிம் மாது தனது கோஷாவை அகற்றிவிட்டு தன்னிரு குழந்தைகளேயும் கணவனிடம் விடுத்து விட்டு ஜான்ஸிராணி ரெஜிமெண்டில் சேர்ந்தார்.

ஓர் இளைஞன் கோந்தான் இ. சு. ச. காரியாலயத்துக்கு வந்த தன்னை இ. தே. ரா. வில் சேர்த்துக் கொள்ளும்படி வேண்டிக் கொண்டார்.

ஸ்திரீ ரெத்தினத்தின் உயரிய உதாரணம்

அதற்கு வேண்டிய நமுனுவைப் பூர்த்தி செய்துகொண்டு வரும்படி கேட்டுக் கொண்டபோதுஅவர் நமுனுவைப்பூர்த்தி செய்து கொடுத்தார். அதிலிருந்து அவர் விவாகமானவர் என்பது தெரியவே தற்போதைக்கு விவாகமானவர்களைச் சேர்த்துக் கொள்வதில்லை என அவரிடம் கூறப்பட்டது.

இரண்டு நாட்கள் சென்று அந்த வாலிபர் மீண்டும் வந்தார். இப்போது அவருக்காகப் பரிந்து பேச அவருடன் அவரது இளம் மனைவியும் வந்திருந்தாள். தன் கணவர் ராணுவத்தில் சேருவதனுல் தனக்குக் கஷ்டம் நேரிடக் கூடுமென்ருலும் அவர் தன் தாய் நாட்டிற்குத் தொண்டு செய்வதில் குறுக்கே நிற்க விரும்பவில்லை என்று அந்த வீராங்கனை கூறினுர்.

உனது கணவனில்லாத காலத்தில் உனது பராமரிப்பிற்காக எவ்வித உதவித் தொகையும் கொடுக்கப்பட மாட்டாது என அவருக்கு அறிவிக்கப்பட்டது.

'ஓ, அதனுல் பரவாயில்லை. நான் எப்படியாவது கஷ்டப்பட்டு உழைத்து என் காலட்சேபத்தை நடத்திக் கொள்வேன்' என்ருள் அந்த யுவதி.

ஜோகூர்பாருவைச் சேர்ந்த திரு தங்கசாமியின் செய்கை இந்தியர்களிடையே ஏற்பட்டிருந்த உணர்ச்சிக்கு ஓர் எடுத்துக்காட்டாக மிளிர்ந்தது.

திரு. தங்கசாமியின் குமாரிகளான 15 வயதுடைய தெரிஸாவும், 13 வயதுடைய பார்பராவும் தங்களை ஜான்ஸிராணி ரெஜிமெண்டில் சேர்த்துக் கொள்ளும்படி முன்வந்தனர்.

தெரிஸாவின் பெயர் அங்கீகரிக்கப்பட்டது. பார்பராவுக்குப் போதிய வயது ஏற்படவில்லை என்று கூறி அங்கீகரிக்க மறுத்தனர். பிறகு திரு. தங்கசாமியின் வேண்டுகோளின்படி பார்பராவும் அங்கீகரிக்கப்பட்டாள். அவர் சொன்னார்,—தனக்கு 3 குழந்தைகள் என்றும் இளையதான 2 வயதுக் குழந்தையின் பொருட்டே தான் சேனையில் சேர முடியாமலிருக்கிறதென்றும் புகன்றார்.

இந்திய தேசிய ராணுவத்தில் ஒவ்வொரு குடும்பத்தில் உள்ளவர்கள் அனைவரும் இச்சா சேவக சேவகிகளாகச் சேர்ந்துகொண்டு, அவர்களுக்குரிய யாவற்றையும் இந்திய சுதந்திர சங்க நிதியில் சேர்த்திருக்கும் அனேக சம்பவங்கள் நிகழ்ந்திருக்கின்றன.

ஆனால், சிரம்பான் தந்தி ஆபீஸ் மேலதிகாரி எம். ஏ. என். தத்தரின் புதல்வி குமாரி ஷோனலி தத்தர், அவைகளை யெல்லாம் தாண்டிவிட்டார்.

ஒருநாள் குமாரி ஷோனலி, தேசியப் படை திரட்டும் உத்தியோகஸ்தரிடம்சென்று, தான் ஜான்ஸி ராணி ரெஜிமெண்டில் சேர விரும்புவதாய் கூறினார். அந்த உத்தியோகஸ்தர் அக்குமாரியின் இளமையைக் கண்டு வயது என்னவெனக் கேட்டார். 13 என்று ஷோனலி பதிலளித்தார். 'ஜான்ஸிராணி ரெஜிமெண்டில் சேருவதற்குக் குறைந்தது, 15 வயது ஆகி இருக்க வேண்டும் என்று திட்டமிட்டிருக்கிறது' என்றார்.

"13 வயதுடைய ஒரு பெண் அவருடைய தாய் நாட்டின் சுதந்திரத்திற்காக ஏன் போரிடலாகாது?" எனச் சீறினள் குமாரி. ஷோனலியின் குமுறலைக்கேட்ட உத்தியோகஸ்தர் குமாரியை நிமிர்ந்து நோக்கக் கூசியவராய், "நல்லதம்மா, நான் உன்னை விதிவிலக்காகப் பதிந்துகொள்ளுகிறேன்" என்ருர்.

இம்மாதிரியான சம்பவங்கள் நூற்றுக் கணக்கில் நடைபெற்றன. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் பார்த்தால் போதாதா?

நேதாஜி, தலைமைப் பதவியை ஏற்றுக்கொண்ட உடனேயே மாதர் படை ஒன்றை அமைக்கவேண்டியது அவசியம் என்று எண்ணினுர். தேச விடுதலைக்காக நடக்கவிருக்கும் போராட்டத்திலே, பெண்களுக்கும் சந்தர்ப்பமளிக்க வேண்டும் என அவர் விரும்பினுர். முக்கியமான சிலரது ஆலோசனையையும் கேட்டார். இந்தியாவில் அது சாத்தியமாக இருக்கலாம். ஆனல் கிழக்காசியாவில் அம்முயற்சி முற்றுப்பெறுவது சிரமம் என்ருர்கள். மற்றவர்களுக்கு அசாத்தியமாகத் தோன்றுவதை சாத்தியமாக நிறைவேற்றுவதுதானே சிறந்தது, அதுதானே அற்புதம். மற்றவர்கள் வியப்புறும் வண்ணம் நேதாஜி நிறைவேற்றினுர். ஆயிரக்கணக்கான ஜான்ஸிராணிகள் தோன்றினுர்கள்

இந்திய மாதர்குலத்தின் மணிவிளக்காகத் திகழும், ஜான்ஸிராணிதேவி லெட்சுமிபாயின் பிறந்த தினமான 21–10–43ம் தேதி அன்றுதான் ஆ. ஹி. அரசாங்கம் நிறுவப்பட்டது. அதன் மறுநாள், ஜான்ஸிராணி பயிற்சி முகாம் திறக்கப்பட்டது.

22–10–43ந் தேதியன்று ஷோனுவில் ஜான்ஸிராணி ரெஜிமெண்டை நேதாஜி திறந்து வைத்தார். அப்போது அவர் பேசியதாவது: “சகோதரிகளே, சகோதரர்களே” ஜான்ஸிராணி ரெஜிமெண்ட் பயிற்சி முகாமின் ஆரம்பம் மிகவும் அவசியமானதாயும், விசேஷம் நிரம்பியதாயும் இருக்கிறது. கிழக்காசியாவில் நமதுஇயக்கத்தின் முன்னேற்றத்திற்கு இது ஒரு விசேஷமான அறிகுறியாயுள்ளது.

ஜான்ஸிராணி பயிற்சி முகாம் திறப்புவிழா

இதன் விசேஷத்தை நன்கறிவதற்கு, நமது இயக்கம் ஓர் அரசியலியக்கம் மட்டுமல்ல என்பதை நீங்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். இந்திய மக்களுக்கே ஒரு புத்துயிரளிக்கும் மகத்தான தொண்டில் நாம் ஈடுபட்டிருக்கிறோம். உண்மையில் நாம் இப்புத்துயிரளிக்கும் தருவாயில்தான் இருக்கிறோம். ஆதலால் நாம் பலத்த முன்னேற்பாடுகளோடுதான் இருக்கவேண்டும்.

நமது வேலை பிரசார மதிப்புப் பெறுவதற்காக ஏற்படுத்தப்பட்ட சூழ்ச்சியல்ல என்பதை நீங்கள் மனதில் திடமாக வைத்துக்கொள்ளவேண்டும். இந்தியாவின் புது எழுச்சியை நாம் கண்ணெதிரே பார்த்து வருகிறோம். இப் புத்துயிரின் உணர்ச்சி நமது பெண்களுக்கும் உண்டாகவேண்டும்.

‘நமது பண்டைக்காலப்பெருமை, மகா உன்னதமானது. நமக்கு ஒரு விசேஷ பரம்பரை இல்லாவிட்டால் ஜான்ஸிராணி போன்ற பெண்மணிகளுக்கு இந்தியா பிறப்பிடமாயிருந்திருக்க முடியாது. இந்தியாவில் சமஸ்கிருதக் கலைகள் ஓங்கியிருந்தபொழுது இந்தியப் பெண்மணிகளின் பெருமை வேரூன்ற ஆரம்பித்துவிட்டது.

இந்தியாவின் சரித்திரத்தில் ஒரு நெருக்கடியான காலமேற்பட்டபொழுது, எவ்வளவோ பெருமை தங்கிய பெண்மணிகளை அளித்த அதே இந்தியாதான், 'ஜான்ஸிராணியையுமளித்தது. இப்பொழுது நமது தேசம் ஒரு நெருக்கடியான நிலைமையை அடைந்திருக்கிறது. 'ஜான்ஸியின் சுதந்திரப் போருக்காக இந்தியா ஒரு லெட்சுமிபாயை அளிக்குமானால், இந்தியாவின் விடுதலைக்காக—38 கோடி மக்களின் விடுதலைப் போருக்காக — ஆயிரக்கணக்கான ஜான்ஸிராணிகளை இந்தியா அளிக்குமென்பதில் சிறிதும்ஐயமில்லை, என்று தமது நம்பிக்கையை வெளியிட்டார்.

பின்னர் அன்னிய ஆட்சியின் அலங்கோலத்தையும் அதை ஒழிக்க ஆரம்பிக்கப்பட்ட சட்ட மறுப்பியக்கத்தையும் பற்றிக் குறிப்பிட்டு, அக்காலத்தில் சட்ட மறுப்பியக்கத்தில் சேருவதென்றால் தடியடியையும், துப்பாக்கிப் பிரயோகத்தையும் வாங்கிக்கொள்ளத் தயாராக இருக்கவேண்டும். சத்தியாக்கிரக இயக்க சரித்திரத்திலும் புரட்சிக் கோஷ்டி சரித்திரத்திலும் நமது தைரியம் வாய்ந்த சகோதரிகள் வழிகாட்டிகளாக நின்று அருஞ் செயல்களைச் செய்திருக்கிறார்கள் என்றார்.

இந்தியப் புரட்சி இயக்கத்தில் சம்பந்தப்பட்ட பெண் மணிகளின் அதியற்புத சாகஸங்களை விவரித்து விட்டு நேதாஜி மேலும் கூறினார்:-

'இ. சு. சங்க நடவடிக்கைகளை நடத்துவதற்குப் பொறுப்பேற்றுக் கொண்டபொழுது இந்த நெருக்கடியான காலத்தில் நம்நாட்டுப் பெண்களுக்கும் தேச சேவை செய்யச் சந்தர்ப்பமளிக்க வேண்டுமென்று உணர்ந்தேன். இதுசம்பந்தமாய்ச் சிலரின் ஆலோசனையைக்கேட்டேன். இந்தியாவில்ஒருமாதர்படையைத்

திரட்டுவதென்ருல் சாத்தியப்படுமென்றும் அவ்வாறு கிழக்காசியாவில் முயற்சிப்பது அசாத்தியமென்றும் சிலர் கூறினுர்கள். அவர்கள் கூறியது என்தீர்மானத்தைச் சிறிதுமசைக்கவில்லை.

'இன்று நீங்களே, நமது சகோதரிகள் செய்து முடித்திருப்பதைப் பார்த்தீர்கள். அவர்களின் வேலை ஜுலை மாதத்தில்தான் ஆரம்பமாயிற்று. இப்பொழுது தான் அவர்களது பயிற்சி முகாம் திறக்கப்பெற்றிருக்கிறது. இதுகாறுமேற்பட்ட காலதாமதம் அவர்களால் ஏற்பட்டதல்ல. தகுந்த வாசஸ்தலத்தைக் கண்டுபிடிப்பதற்கும் மற்ற ஏற்பாடுகள் செய்வதற்கும் காலதாமமேற்பட்டது. இதற்கிடையில் நமது சகோதரிகள் பொறுமையிழந்து கவலையுற்றிருந்ததும் எனக்குத் தெரியும். அவர்களெல்லாம் ஒன்றுகூடி, "நீங்கள் எங்களை மறந்துவிட்டீர்களா?" என்றுகேட்பதற்கு ஒரு பிரதிநிதி கோஷ்டியை அனுப்ப ஏற்பாடு செய்ததாகவும் கேள்விப்பட்டேன்.

இன்று பயிற்சி முகாம் தயாராகிவிட்டது. ஜான்ஸி ராணியின் பிறந்ததினமான இன்று இதன் திறப்பு விழாவை நடத்திவைக்கவும் எனக்குப் பேரானந்தத்தை விளைவிக்கிறது.

பிறகு ஜான்ஸிராணியின் கீர்த்திப் பிரதாபத்தைப் பற்றிக் குறிப்பிட்டார். இறுதியாக அவர், 'இன்று திறக்கப்படும் பயிற்சி முகாமில் 156 சகோதரிகள் பயிற்சியை ஆரம்பிக்கப்போகிருர்கள். ஷோனனில் இந்த எண் ஆயிரத்தை அடைந்துவிடுமென நம்புகிறேன். தாய்லாந்து, பர்மாவிலும் இத்தகைய பயிற்சி முகாம்கள் திறக்கப்பட்டிருக்கின்றன.

ஷோனுன் ஜான்ஸிராணிப் படையின் தளகர்த்தருடைய வீரம் செறிந்த சொற்களை இப்பொழுதுதான் கேட்டீர்கள். டில்லியை நோக்கி அணிவகுத்துச் செல்வதற்கு இரவும் பகலும் களைப்பின்றி வேலை செய்ய வேண்டிய தீர்மானத்தை அவர் தெரிவித்துக் கொண்டார்.

நம் சகோதரர்களிடமிருந்து 'டில்லிக்குச் செல் வோம்' என்னும் சுலோகத்தைக் கேட்டு ஆனந்தித்தது போல, நம் சகோதரிகளிடமிருந்தும் கேட்டு நான் ஆனந்தமடைகிறேன்' என்று கூறினுர் நேதாஜி.

ரெங்கூனில் ஜான்ஸிராணி ரெஜிமெண்ட் ஒன்று 21-10-43ந் தேதி திறந்துவைக்கப்பட்டது. இதற்கென ஷோனுனிலிருந்து ரெங்கூனுக்கு விஷயம் செய்த கர்னல் அழகப்பன் அவர்கள், ஜான்ஸிராணியின் வீரப் பிரதாபங்களை விளக்கிக் கூறினுர். அந்த வீர ரமணி 60ஆயிரம்எதிரிகளுடன் எப்படிப்போராடினுர் என்பதை விவரித்தார்.

நேதாஜி நிதி

'கிழக்காசியாவிலுள்ள சகல சக்தி சாதனங்களையும் ஒன்றுதிரட்டி என்னிடம் கொடுங்கள், உங்களை நான் சுதந்திரக் கோயிலுக்கு அழைத்துச் செல்லுகிறேன்'.

நேதாஜியின் மேற்கண்ட கோரிக்கையை இந்திய தனவந்தர்கள் சிறந்த முறையிலே நிறைவேற்றினார்கள். அவர் விஜயம் செய்யுமிடங்களிலெல்லாம் லட்சக்கணக்கான வெள்ளிகள் நன்கொடையாக அளிக்கப்பட்டன.

பினாங்குக்கு (5—9—43) விஜயம் செய்தபொழுது தனவந்தர்கள் மகாநாடு ஒன்று நடைபெற்றது. அப்பொழுது நேதாஜியிடம் 13 லட்ச வெள்ளிகள் அளிக்கப்பட்டன. 3 செட்டியார்கள் தலா 1லட்சத்திற்கதிகமான தொகை நன்கொடை அளித்தார்கள்.

இதைப்பற்றி அன்று மாலை நடந்த பிரமாண்டமான பொதுக்கூட்டத்திலே நேதாஜி கூறினார்.

‘இன்று காலையில் (பினங்கு) ‘ஸ்வராஜ் பவனில் நடந்த பொதுக்கூட்டத்தில் மொத்தம் 13 லட்ச வெள்ளி நன்கொடையாக அளிக்கப்பட்டிருக்கிறது. இது சந்தோஷமளிக்கக்கூடியதே என்றாலும், இத்துடன் தங்களுடைய முழுப் பொறுப்பும் தீர்ந்துவிட்டதாக யாரும் எண்ணிவிடக்கூடாது. இது முதல் தவணை. இன்னும் நீங்கள் பெரு நிதி வழங்கிக்கொண்டே இருக்கவேண்டும்.’

‘நீங்கள் உங்கள் தாய்நாட்டின் விடுதலைக்காக பத்து சதவிகிதம் அளிப்பதுடன் என்னை திருப்தி செய்துவிட முடியாது. 90 சதவிகிதம், ஏன் 100 சதவிகிதம் தியாகம் நான் உங்களிடம் எதிர்பார்க்கிறேன்’ என்றார்.

உடனே கூட்டத்தினரால் ஏராளமான நன்கொடைகள் வலுவில் அளிக்கப்பட்டன. மொத்தம் அந்த விஜயத்தின்போது 20 லட்ச வெள்ளி பினங்கில் அளிக்கப்பட்டது.

தேச விடுதலையில் சிரத்தைகொண்ட ஒரு சீக்கிய யுவதி தனது கைவளையல்களை நேதாஜியிடம் வழங்கினார். அதுவும் மற்றொரு வெள்ளிக் கிண்ணமும் அவ்விடத்திலேயே ஏலத்தில் விடப்பட்டன. கைவளையல்கள் 25 ஆயிரம் வெள்ளிக்கும் கிண்ணம் 50 ஆயிரம் வெள்ளிக்கும் வாங்கப்பட்டது.

நேதாஜி 6—9—43ல் ஈப்போவுக்கு விஜயம் செய்தபொழுது பேரா மாகாண இந்தியர்களால் 10 லட்ச வெள்ளிக்கு ஒரு செக் அளிக்கப்பட்டது.

இதைத் தவிர நேதாஜிக்குப் போடப்பட்ட மாலைகள் ஏலத்தில் விடப்பட்டதில் 28 ஆயிரம் வசூலாயிற்று.

8-9-43ல் கோலாலம்பூரில் சிலாங்கூர் இந்தியர்கள் முதல் தவணையாக 10,44,000 வெள்ளி நன்கொடை வழங்கினர்.

ஷோனன் இ. சு. ச. தலைமைக் காரியாலயத்திலே தினசரி மலாயாவின் பல பாகங்களிலிருந்தும் ஆதரவு வாக்களிப்புத் தந்திகளும் பொது மக்கள் தாமே விரும்பி யளிக்கும் நன்கொடைகளும் அளவில்லாது வந்து குவிந்துகொண்டிருந்தன.

ஷோனனில் 9-7-43ல் நடைபெற்ற பிரசித்திபெற்ற பொதுக்கூட்டத்திலே நேதாஜியிடம் நன்கொடைகள் ஏராளமாக அளிக்கப்பட்டன. அவைகளில் சிந்தி வர்த்தகர்கள் சங்கம் 1,00,001 வெள்ளி, கியான் சிங் கம்பெனி 1,00,000 வெள்ளி செக்குகளும் இருந்தன. ஒரு தேசபக்தர் எவ்வித வற்புறுத்தலுமின்றித் தாமாகவே (23 - 8—43ல்) 5 லட்ச வெள்ளி நன்கொடை வழங்கினார்.

பிரெஞ்சு-இந்தோசீனாவில் உள்ள இந்திய முஸ்லிம்கள் இ. சு. இயக்க நிதிக்காக மூன்றரைகோடி வெள்ளி நன்கொடையளிக்கத் தீர்மானித்திருப்பதாக ஜனாப் அஜீஸ் (28 - 11—43ல்) கூறினார்.

பிறர் உதவியை நாடலாமா?

'மற்ற தோழ வல்லரசுகள், முக்கியமாக நிப்பொன் நமக்கு வேண்டிய உதவிகளை அளிக்கச் சித்தமாக இருக்கின்றது. ஆனால், அவர்களது உதவியை நாம் எப்பொழுது நாடலாம்? பலிஷ்டர்களாகிய யுவர்கள் நம்மிடையே இருக்கும்போது, யுத்த சாதனங்கள் பல நம்மவர்வசம் இருக்கும்போது நாம் பிறர் உதவியை யாசிப்பது அழகாகுமா? அது நமது பெருமைக்கும் நாட்டின் பெருமைக்கும் இழுக்கல்லவா?

'நமது தோழ நாட்டினருக்கு கிழக்காசியாவில் இருக்கும் இந்தியர்களின் நிலைமை பூரணமாகத்தெரியும் நாம் ஐஸ்வரியவந்தர்களாயிருக்கும்போதே அவர்களுடையஉதவியை யாசித்தோமானால் அவர்கள் நம்மைப் பற்றிக் கேவலமாக நினைக்கமாட்டார்களா? நாம் அவர்களது மத்தியில் தாழ்ந்து போய்விடமாட்டோமா?

இந்த மாதிரியாக நேதாஜி தகுந்த காரணத்தைக் காட்டி உரிமையுடன் அவர்களுடைய கடமையைச் சுட்டிக் காட்டும்பொழுது எப்படி வாளா இருக்கமுடியும்? ஆனால் சுதந்திரத்தின் அருமையை உணர முடியாத 'பணத் தொண்டரடிப்பொடி ஆழ்வார்கள்' ஒருசிலர் இருப்பது விந்தையல்லவே! அவர்களுக்கு நேதாஜியின் புத்திமதி:

'ஒரு சுதந்திர நாடானது யுத்த நெருக்கடிக் குள்ளாகி இருக்கும்பொழுது அங்குள்ள நிலைமை எவ்வாறிருக்கும் என்பதைச் சற்று யோசித்துப் பாருங்கள். இதுகாறும் நம்மிடையே நடைபெற்றவைகளைப் போல கூட்டங்களும் வேண்டுகோளுமிருக்குமா? இல்லை. ஒரு சுதந்திர அரசாங்கம் தன் கீழுள்ள வயது வந்த திடகாத்திரமுள்ளவர்களுக்கு ஒரு அறிக்கைதான் விடுக்கும், அவ்வறிக்கையின் பிரகாரம் திடகாத்திரம் உள்ளவர்கள் குறிப்பிடப்பட்டிருக்கும் ஸ்தலத்திற்கு ஒரு கிழமையன்று குறிப்பிட்டதோர் நேரத்தில் கூடியிருப்பர். தானாகவும் முணுமுணுக்காமலும் மக்கள் தங்கள் அரசாங்கத்தின் சங்கநாதத்திற்கு உடனடியாகப் பதில் அளிப்பர். ஏன்? தங்களுடைய உரிமையைக் காப்பாற்றிக்கொள்ளத் தாங்கள் தியாகம் செய்யத்தான் வேண்டுமென்பதை சுதந்திர நாட்டு மக்கள் நன்கறிந்து கொண்டிருப்பதால்தான் அவர்கள் அவ்விதம் செய்கின்றனர்.

'ஒரு சுதந்திர அரசாங்கம் தனது சுதந்திரத்தைக் காப்பாற்றுவதற்காகப் பணம் தேவைப்பட்டால் கூட்டங்கள்கூடி, கெஞ்சிக் கூத்தாடும் நடவடிக்கை எதுவும் எடுத்துக் கொள்ளாது. அதற்கெதிராகச் சுதந்திர அரசாங்கங்கள் தங்களின் யுத்த தேவைகளுக்கான வரவு செலவு திட்டத்தைத் தயாரிக்கும். மக்களின் பொருளாதார நிலைமையை மனத்தில்கொண்டு பணத்தை எவ்விதம் சேகரிக்கலாமென்ற வழிவகைகளைச் செய்யும். அத்தியாவசியமான வரிகளை உடனடியாக விதிக்கும். ஒரு சுதந்திர நாட்டில், சோல்ஜராகச் சேருவதற்கோ அல்லது யுத்த வரி செலுத்துவதற்கோ எவராவது மறுக்கமுடியுமா என்பதை நான் உங்களிடம் கேட்கிறேன்? இந்தியா இன்னும் சுதந்திரமடையவில்லை. ஆனால் நாம் உள்ளும் புறமும் விடுதலையடைந்துவிட்டோம். அத்துடன் தற்காலிக அரசாங்கம் ஸ்தாபிக்கப்பட்டு விட்டதைக்கொண்டு நாம் சுதந்திர மக்களாய் மாறிவிட்டோம். இந்தியாவை விடுவித்து அங்கு சுதந்திர இந்திய அரசாங்கத்தை ஸ்தாபிப்பதே இப்பொழுது நமது பொறுப்பாகும்,

இவ்விதம் தனிகர்களுடைய கடமையை ஹிதமாக எடுத்துக்காட்டிவிட்டு மேலும் ஒருஎச்சரிக்கை விடுப்பார்:

'நான் கைகளிரண்டையும் விரித்துக் காட்டிக் கொண்டு உங்களிடம் பிச்சை கேட்க வேண்டுமென்ற மனதுடன் இங்கு வரவில்லை. உங்களின் உயிர்களையும் உங்களுக்குச் சொந்தமான சகலவற்றையும் எடுத்துக் கொள்ளக்கூடிய உரிமையுடைய ஆ.ஹி.அரசாங்கத்தின் பிரதிநிதியாக நான் இன்று இங்கு நிற்கிறேன்' என்பார். ஆம், நேதாஜியல்லவா அவர்?

தனவந்தர் மகாநாடு

25—12—43ல் ஷோனனில் நடைபெற்ற மலாயா தனவந்தர் மகாநாட்டின் இறுதியில் நேதாஜி ஒரு கோரிக்கை விடுத்தார்: 'சர்வாம்சப் படை திரட்டு என்ற உத்வேகத்துடன் தானுக நீங்கள் முன்வந்தாலும் சரி, அல்லது யுத்தம் முடியும்வரை படிப்படியாக நாங்கள் விடுக்கும் கோரிக்கைகளை நீங்கள் பூர்த்தி செய்தாலும் சரி, அவை யாவும் உங்களையே பொறுத்ததாகும். மலாயாவிலிருந்து 10 கோடி ரூபாய் நான் முதலில் எதிர்பார்க்கிறேன். இத் தொகையானது மலாயாவிலுள்ள இந்தியர் சொத்துக்களின் மதிப்பில் சுமார் 10 சதவிகிதமேயாகும். மலாயா நாட்டிலுள்ள பணக்காரர்களில் பலர் இப்பொழுது இங்கு வந்திருப்பதால் அவர்களிடமிருந்து நான் உடனடியாகக் குறைந்த பட்சம் ஒரு கோடி ரூபாய் எதிர்பார்க்கிறேன்.


இக்கோரிக்கைக்கு மிகத்திருப்திகரமான முறையில் பதில் கிடைத்தது. இக்கோரிக்கை விடுக்கப்பட்ட 24 மணி நேரத்திற்குள் 1 கோடியே 32 லட்சம் வெள்ளி மலாய்வாழ் இந்திய தனிகர்களால் நன்கொடை வழங்கப்பட்டது.

கிழக்காசியா முழுமைக்கும் ஒரேவிதமான திட்டம் அமைக்கப்பட்டு ஒரே மாதிரியாக வரி விதித்து வசூலிக்கப்பட்டது. ஒவ்வொரு பகுதியிலும் இதற்கெனத் தனி இலாக்காக்கள் அமைக்கப்பட்டு ஒழுங்கும் கண்டிப்பும் கொண்ட நிர்வாகிகளால் நிர்வகிக்கப்பட்டுவந்தது.

தேசிய லட்சியத்தின் சித்திக்காக இந்தியத் தனிகர்களிடமிருந்து பெருந்தொகையான அளவில் நன்கொடைகள் வசூலிக்கப்பட்ட போதிலும் நேதாஜி நிதிக்காக (இ. சு. இயக்கத்திற்கு வசூலிக்கப்பட்ட நிதி



நேதாஜியின் சொற்பொழிவை மொழி பெயர்க்கிருர்
மேஜர் ஜெனரல் அழகப்பன்,



நேதாஜி கொடி யேற்றுகிறார்

இவ்வாறுதான் அழைக்கப்பட்டது) தொழிலாளிகளிட மிருந்து நன்கொடை வசூலிக்கப்படவில்லை. இது அறிக்கைகள் மூலம் தெளிவாக பட்டவர்த்தனமாக அறிவிக்கப்பட்டுவந்தன.

உதாரணமாக பினங்கு ஸ்டேட் சேர்மன் விடுத்த அறிக்கை ஒன்றில் இதை ஸ்பஷ்டமாக வலியுறுத்தினர். 'எந்தச் சந்தர்ப்பத்திலும் நேதாஜி நிதிக்கு தொழிலாளர் களிடமிருந்தோ, நாட்சம்பளம் பெறுபவர்களிடம் இருந்தோ நன்கொடைகள் வசூலிக்கவோ, தாமாக அளிக்கப்பட்டால் ஏற்றுக்கொள்ளவோ கூடாதென்று நமது சங்க உத்தியோகஸ்தர்களுக்குப் பட்டவர்த்தன மாகத் தெரிவிக்க விரும்புகிறேன். உதவி செல்வந்தர் களிடம் இருந்துமட்டுமே கிடைக்கவேண்டும்.'

மலாய் நாட்டிலும் பர்மாவிலும் தாரளமான முறை யில்பெருந்தொகைகளைச் செட்டியார்சமூகம்நன்கொடை வழங்கிற்று. கிழக்காசியா இ. சு. இயக்கத்தில் அவர்கள் பல வழிகளிலும் பிரதான பங்குபற்றினர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் தமது ஆஸ்தி முழுவதையும் சுமார் ஒருகோடிக்கதிகமான மதிப்புள்ள தனத்தையும், இயக்கத்துக்குத் தத்தம் செய்துவிட்டு ஷஹித்-ஏ ஹிந்த் பட்டம்பெற்றுப் புகழடைந்த ஜனப் ஹபீப் சாயபுவையும் அவர்போன்ற சர்வத் தியாகிகளையும் மறக்கமுடியாது.

எப்படியிருப்பினும் இந்திய சமூகத்திலே, அடித் தளத்திலே நிற்கும் ஏழை மக்கள் காட்டிய தியாக

ஏழைமக்களின் இணையற்ற தியாகம்

புத்தியும் தேசபக்தியுமே எல்லா வற்றிலும் சிறந்ததாயிருந்தது. சகல விதமானபுகழுக்கும் பாராட்டுதலுக்கும் அனுதாபத்திற்கும்பாத்திரமானவர்கள் அவர்களே. நடுத்தர வகுப்பினரும், உயரிய தியாக புத்தி படைத்தவர்களாகக் காணப்பட்

டனர். தெலுக்கான்சன் திரு பொன்னையாபோன்ருேரின் தேசாபிமானம் சாமானியப்பட்டதா, என்ன? தெலுக்கான்சன் திரு ஜி. எம். பொன்னையா (24-8-43) ஈப்போ இ. சு. ச. தலைவருக்கு எழுதியகடிதம்.

தெலுக்கான்சனில் ஒரு வைத்தியசாலை வைத்திருக்கிறேன். ஏற்கனவே எனது ஒரே மகன் சாமுவேல் எம். பொன்னையாவை தாய்நாட்டின் சேவைக்காக ஷோனன் இ. தே. ராணுவ உத்தியோகப்பயிற்சிக்கு அனுப்பியிருக்கிறேன். நான் இப்போது என்னிடம் இருப்புள்ள எல்லா மருந்துகளையும் இ. தே. ரா. ச. செஞ்சிலுவைச் சங்கத்திற்கு அளித்துவிடத் தீர்மானித்திருக்கிறேன். அவ்வாறு செய்துவிட்டு, வைத்திய சிகிச்சையில் தேர்ச்சிபெற்றுள்ள எனது மனைவியும் நானும் எங்கள் தொழிலுக்கேற்றபடி தேசத்திற்கு உழைக்க முற்றும் விருப்பமுள்ளவர்களாக இருக்கிருேம்.

ஆகையால் தாங்கள் என்னுடைய மருந்துகளைச் செஞ்சிலுவைச் சங்கத்திற்கு ஒப்படைக்க வேண்டிய ஏற்பாட்டைச் செய்வதோடு நானும் என் மனைவியும் தேசப் பணியைச் செய்ய, போகவேண்டிய இடம் எது என்பதையும் அறிவிப்பீர்களாயின் தங்களுக்கு மிக்க நன்றியுள்ளவனாக இருப்பேன்.

எனக்கொரு சிறு பெண்ணுமிருக்கிருள். அப்பெண்ணுக்கு இங்கிலீஷ், மலாய், தமிழ், நிப்பொங்கோ ஆகிய பாஷைகள் தெரியும். அப்பெண்ணும் எங்களைப் பின்தொடர்ந்துதான் வருவாள். அவள் ஒரு துவிபாஷியாகத் தொண்டாற்றக்கூடும்.

கிழக்காசிய இ. சு. இயக்கத்திலே மேலே கண்டது போன்ற உன்னத நிகழ்ச்சிகள் அனந்தம்.

திக்விஜயம்

இலட்சியமே உருவெடுத்தாற் போன்று நேதாஜி, காற்றிலும் கடிதான வேகத்திலே காரியங்களை நடத்திச் சென்ருர். ஆஸாத் ஹிந்த் அரசாங்கம் ஸ்தாபிக்கப்பட்டு யுத்தப் பிரகடனம் விடுவிக்கப்பட்டபின் மிகத் துடிப்பான அலுவல்களில் ஈடுபட்டார். கிழக்காசியா வாழ் இந்தியர்களை மட்டுமின்றி, எல்லாமக்களுடைய ஆதரவையும் ஒத்துழைப்பையும் பெறுவதற்கான செயலிலே இறங்கினர். முதலாவதாக அவர் நிப்பனுக்கு விஜயஞ் செய்தார்.

31—10—43 ல் நேதாஜி தோக்கியோவுக்கு வந்து சேர்ந்தார். அவருடன் இலாக்கா இல்லாத மந்திரி ஏ.எம். சகாய் உள்பட எழுவர் வந்தனர். அவரையும் அவருடைய கோஷ்டியினரையும் ஹனதா விமான நிலையத்தில் நிப்பன் வெளிநாட்டு மந்திரி மா மோரு ஷி-ஹெ மித்ஸூ, மகா கிழக்காசியா மந்திரி கசூ ஓ,

நிப்பனில் நேதாஜி

அ. ஒ. கி. செய்தி இலாகாத் தலைவர் எஸ். ஜி. அமாவு முதலிய அரசாங்க அதிகாரிகள் வரவேற்றனர்.

இதைப் பற்றி நிப்பொன் செய்தி இலாகா ஓர் அறிக்கை வெளியிட்டது. நிப்பொன் அரசாங்கம், தனது அரசாங்கத்துக்கு அங்கீகாரமும் ஒத்துழைப்பும் அளித்திருப்பதற்கு நன்றி தெரிவித்துக் கொள்வதற்காக பாபு சுபாஷ் சந்திரபோஸ் தோக்கியோ வந்து சேர்ந்தார்.

தாம் தோக்கியோவில் தங்கியிருக்கும் நாட்களில் பிரதமர் சுபாஷ், பிரதமர் தோஜோவுடனும் இதர நிப்பொன் அரசாங்கத் தலைவர்களுடனும் பல்வேறு விஷயங்களைப் பற்றி கலந்தாலோசிப்பாரென்றும், நிப்பொன் அரசாங்கமும் ஆஸாத் ஹிந்த் அரசாங்கமும் எதிர்காலத்தில் ஒத்துழைக்க வேண்டிய விதம் பற்றியும் அவர் முக்கியமாய் கலந்தாலோசிப்பாரென்று விஷயமறிந்த வட்டாரங்களில் பேசிக் கொள்ளப்பட்டது.

நிப்பொன் அரசாங்கமும் பொது மக்களும் ஆஸாத் ஹிந்த் அரசாங்கத் தலைவருக்கும் அவருடைய கோஷ்டியினருக்கும் மகத்தான வரவேற்பளித்தனர். ‘இந்தியர் கோஷ்டிக்கு நிப்பொன் மிகவும் சிறந்த முறையில் வரவேற்பளித்து உபசரித்தது என்று நேதாஜியே குறிப்பிட்டார்.

மகா கிழக்காசிய நாடுகளின் மகாநாட்டிலே பார்வையாளராக அவர் கலந்து கொண்டார். பர்மிய அதிபதி பாமாவின் விருப்பத்திற்கிணங்க அங்கு நேதாஜி பேசினார்.

அதன் பிறகு பிரதமர் தோஜோ, அந்தமான். நிக்கோபார் தீவுகளை ஆஸாத் ஹிந்த் அரசாங்கத்துக்கு மாற்றித் தருவதாக அறிவித்தார்.

இத் தீர்மானத்தை நேதாஜி மிகவும் பாராட்டினார். 'இந்தத் தீர்மானம் இந்தியர்களுக்கு மகத்துவம் வாய்ந்த தாகும். இப்போது நமக்கென்று சொந்தமாக பிரதேசமும் கிடைத்து விட்டது எனக் குறிப்பிட்டார்.

தென்னே ஹெய்க்கா என்றழைக்கப்படும் நிப் பொன் சக்கரவர்த்தி ஹிரோ ஹித்தோ 10—11—43 உ காலை நேதாஜிக்கு தமது அரண்மனையிலுள்ள 'போனிக்ஸ் ஹா'லில் பேட்டியளித்தார். அவர், சுபாஷ் பாபுவின் சுதந்திர முயற்சிகளுக்கு பாராட்டுதல் தெரி வித்தார். சாதாரணமாக நிப்பொன் சக்கரவர்த்தி யாரையும் பார்க்க மாட்டார். 'சக்கரவர்த்தி மனிதப் பிறவியல்ல; தெய்வாம்சம்' என்பது நிப்பொன் மக்க ளுடைய ஸ்திரமான நம்பிக்கை, அவரைப் பார்ப்பது சாக்ஷாத் கடவுளைப் பார்ப்பதற்குச் சமானம். அவரைப் பற்றி அவர்கள் எழுதும் தோரணை இதர தேசத் தினருக்கு வியப்பை அளிக்கக் கூடியதாக இருக்கும். எனவே சக்கரவர்த்தி, நேதாஜிக்கு பேட்டியளித்து அவருடைய முயற்சிகளுக்கு பாராட்டுதல் தெரிவித்தது மிகவும் பெருமை வாய்ந்த சம்பவமாகும்.

தென்னே ஹய்காவைப் பேட்டி கண்டு திரும்பிய வுடன் நேதாஜி கூறினர், "ஆஸாத் ஹிந்த் அரசாங்கத் தலைவர் என்ற ஹோதாவில் எனக்கு தென்னே ஹெய்க்கா இன்று காலை மனமுவந்து பேட்டியளித்தார். இந்தியாவும், சொந்த ஹோதாவில் நானும் அடையக் கூடிய மிகப்பெரிய கௌரவம் இதுவே. நமது பொது. வான வெற்றிகிட்டும் வரை நிப்பொன் அரசாங்கம், இராணுவம், கடற்படை ஆகியவற்றுடன் தோளோடு தோள் சேர்த்துப்போர் புரிவதென்ற தீர்மானத்தை நான் மீண்டும் உறுதி செய்து கொண்டேன். தென்னே

ஹெய்க்கா எனக்குப் பேட்டியளித்த இந் நிகழ்ச்சியின் நினைவு என்றென்றும் என் மனதில் பதிந் திருக்கும்.''

'ஆஹாத் ஹிந்த் அரசாங்கத் தலைவர் பாபு சுபாஷ் சந்திரபோஸ் 17—11—43 உ பிற்பகல் 6 மணிக்கு தமது கோஷ்டியுடன் நான்கிங் வந்து சேர்ந் தார்' என்று நான்கிங் வெளிநாட்டு மந்திரி, விளம்பர மந்திரி காரியாலயங் கள் கூட்டாக அறிவித்தன. 'திரு போஸ் வந்ததும் சீனக் குடியரசுத் தலைவர் வாங் வரவேற்றார்' என அறிக்கை மேலும் கூறிற்று.

நான்கிங் விஜயம்

நேதாஜியின் நான்கிங் விஜயம் அங்குள்ள விஷய மறிந்த வட்டாரங்களில் வரவேற்கப்பட்டது. திரு சுபாஷ் பாபு. வாங் சிங் வே யின் விசேஷ அழைப்பிற் கிணங்கவும் நவசீனாவின் நிலைமைகளைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்ற தமது சொந்த விருப்பத்தின் காரணமாகவுமே ஏற்பாடு செய்யப்பட்டது. நேதாஜி சீனாவின் தலைநகரான நான்கிங்கில் நவ சீனாவின் தந்தையான சன் யாட் சென்னின் கல்லறைக்குச் சென்று வணக்கம் செலுத்தினார்.

அதன் பின் நேதாஜி, தலைவர் வாங்சிங் வே யைச் சந்தித்தார். அன்று மத்தியானம் தலைவர் வாங், நேதாஜிக்கு ஒரு விருந்தளித்தார். சீன தேசீய அரசாங்கத்தின் பிரபல அதிகாரிகள் இதில் கலந்து கொண்டனர். பிற்பகலில் சுபாஷ் பாபு சீனாவில் நிப்பொன் படைத் தளகர்த்தரான ஜெனரல் ஷின் ரோகு ஹத்தாவைக் கண்டு பேசினார். அதன் பின் அவர், நான்கிங்கில் நிப்பொன் ஸ்தானிகரான மஸாயூகி தானியைப் பார்த்தார்.

பிற்பகலில் நேதாஜி ஜெர்மன், மஞ்சுகோ ஸ்தானிகர்களைக் கண்டு பேசினர். பிறகு ஜெனரல் ஹாத்தாவும், தானியும் திரு போஸின் இருப்பிடத்துக்கு வந்து பதில் மரியாதை செய்தார்கள்.

தலைவர் சுபாஷ் சந்திரபோஸ் 19—11—43உ காலை மணி 10 க்கு நான்கிங்கில் ஜெர்மன் ஸ்தானிகர் எர்னட்ஸ் ஓயர்மனைத் தமது இருப்பிடத்தில் வரவேற்ருர். அதன் பிறகு மஞ்சுகோ ஸ்தானிகர் நேதாஜியைக் கண்டு பேசினர்.

அன்று நேதாஜி சுபாஷ் பாபுவை வரவேற்பதற்காக நான்கிங் பொதுஜனங்களின் கூட்டம் ஒன்று நேஷனல் பப்ளிக் ஹாலில் நடைபெற்றது. அப்போது சீனக் குடியரசுத் தலைவர் வாங் சிங் வே, சுபாஷ் பாபுவை வரவேற்றுப் பேசினர். 'இந்தியாவும் ஆசியாவும் வருங் காலத்தில் உன்னத நிலையடையப் போவது நிச்சயம்' என்ருர்.

மேலும் அவர், 'பிரிட்டனின் ஏகாதிபத்திய ஆதிக் கத்தைக் கண்டித்துவிட்டு பிரிட்டிஷ் கொடுங்கோன்மை வேரறுக்கப்பட வேண்டுமானல் சீனவும் இந்தியாவும் விடுதலையும் சுய ஆட்சியும் பெற வேண்டும். எனவே இந்தியாவின் சுதந்திரம், அந்த ஒரு நாட்டின் சுதந்திரம் மட்டுமல்ல. ஆசியா முழுவதின் சுதந்திரமாகும். அது அகில உலகின் சுதந்திரமாகும்' என்ருர்.

நேதாஜி, இதற்கு பதிலளிக்கையில் குறிப்பிட்டார். 'இந்தியா அடிமைப் படுத்தப்பட்ட பின் அதையடுத்தாற் போலுள்ள சீனப் பிரதேசமான யூனனுக்கு எதிராகப் பிரிட்டிஷ் அதைக் கேந்திரமாகப் பயன்படுத்திக் கொண்டது. எனவே இந்தியா பிரிட்டிஷ் தளையிலிருந்து

விடுபடாத வரையில் சீனுவின் பாதுகாப்புக்கு ஆபத்து இருந்து கொண்டேயிருக்கும்' என்ருர் நேதாஜி.

நேதாஜியின் பிலிப்பைன் விஜயம்பற்றி பிலிப்பைன் வெளிநாட்டுக் காரியாலயம் 22–11–43 ல் ஓர் அறிக்கை வெளியிட்டது. 'ஆஸாத் ஹிந்த் அரசாங்கத் தலைவர் சுபாஷ் பாபுவை பிலிப்பைன் அரசாங்கமும் ஜனங்களும் மகிழ்வுடன் வரவேற்றனர். ஆசியா நிச்சயமாக விமோசனம் அடைவதற்கும், நியாயம், சுதந்திரம், சமூக சமத்துவம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட புது உலக ஒழுங்கு ஏற்படுவதற்கும் இந்தியா சுதந்திரமடைவது அத்தியாவசியமென்ற நம்பிக்கையுடன் பிலிப்பைன் அரசாங்கம், ஆஸாத் ஹிந்த் அரசாங்கத்துக்கு அங்கீகாரம் அளித்தது.

பிலிப்பைன் விஜயம்

சுபாஷ் பாபு மால்கானன் அரண்மனையில் தங்கியிருக்கிருர். மணிலாவில் அவர் தங்கியிருக்கும் போது அவரது காரியாலயம் இவ்வரண்மனையிலேயே இருக்கும்.

பிலிப்பைன் அரசாங்கத் தலைவர் அளித்த விருந்து ஒன்றில் (23—11—43வ) நேதாஜி கூறினுர், 'தங்கள் நாட்டின் உத்தாரணத்திற்காக இந்தியர்கள் தங்கள் உயிரையும் தத்தம் செய்ய தயாராயிருக்கிருர்கள். நாம் இறக்க வேண்டும். ஏனெனில் உண்மையாக எவன் இந்தியாவின் பொருட்டு உயிர் துறக்கிருனே அவனே இந்தியாவின் பொருட்டு வாழ்பவனுவான்.''

மணிலாவில் நேதாஜி டாக்டர் ஜோஸ்ரிசால் ஞாபகார்த்த சின்னத்திற்கு வணக்கம் செலுத்தினுர்.

நேதாஜி மணிலாவிலிருந்து ஷோனன் செல்லும் வழியில் 24—11—43 செய்கோன் வந்து சேர்ந்தார். சிறிது நேரம் இளைப்பாறிய பின், ஸ்ரீ போஸ் அங்குள்ள நிப்பொன் தரைப்படை, கடற்படை தலைமைத் தளகர்த்தர்களைக் கண்டு பேசினர்.

மாலையில் நிப்பொன் மந்திரி ஷி–ஹெ–னரி தஷிரோ அளித்த விருந்துக்கு விஜயம் செய்தார்.

25—11—43உ நேதாஜி ஷோனன் திரும்பினர்.

10—12—43 ல் நேதாஜி விமான மூலம் ஜாகர்த்தாவுக்கு விஜயம் செய்தார். அவர் ஜாவாவிலுள்ள நிப்பொன் படைகளின் தலைமைத் தளகர்த்தர் லெப். ஜெனரல் குரோகிச்சி ஹாத்தாவைச் சந்தித்தார்.

ஜாவா விஜயம்

மகா கிழக்காசிய நாடுகளின் மகாநாடு

தூரகிழக்குப் பிரதேசங்களின் யுத்த நிலைமை 1944ம் வருட ஆரம்பத்தில் மாற ஆரம்பித்ததல்லவா? ஆங்கிலோ அமெரிக்கர்கள் தாங்களடைந்த மகத்தான தோல்விக்குப் பரிகாரந்தேட இழந்த கௌரவத்தை மீண்டும் நிலைநாட்ட மறுதாக்குதலைத் தொடங்கினார்களல்லவா? இதன் சூசனையை 1943ம் வருட இறுதியிலேயே நிப்பொன் ராஜதந்திரிகள் உணரத்தொடங்கி விட்டார்கள். உடனேயே அவர்கள், அதற்கு அணை கோல ஆரம்பித்தார்கள்.

ஆஸாத் ஹிந்த் அரசாங்கம் ஸ்தாபிக்கப்பட்ட உடனேயே நேதாஜி தோக்கியோவுக்கு விஜயம் செய்தார். இந்திய சுதந்திர இயக்க நடவடிக்கையிலே

நிப்பொன் அளித்துவரும் உதவிகளுக்கும் ஆ. ஹி. அரசாங்கத்தை அங்கீகரித்ததற்கும் நன்றிதெரிவிக்கவே அவர் தோக்கியோ வந்திருப்பதாக அறிவிக்கப்பட்டது. உண்மையில் நிப்பொன் அரசாங்கம், யுத்தநிலைமையின் கடுமையைப்பற்றி விவாதித்து, பரந்த உலக ஞானமும் விரிந்த ராஜதந்திரமும் கொண்ட நேதாஜியின் யோசனையைப் பெறவே அழைத்தது என்பதை விரைவிலே உணர முடிந்தது.

நேதாஜி தோக்கியோ சேர்ந்த சில நாட்களுக்குள் மகா கிழக்காசிய நாடுகளின் மகாநாட்டைப் பற்றி அறிவிக்கப்பட்டது. இதன் முக்கிய நோக்கம்: கிழக்காசியாவிலுள்ள எல்லா நாடுகளுக்குமிடையே நேச உறவு, பரஸ்பர உதவி, ஒத்துழைப்பு ஆகியவற்றை ஸ்திரப்படுத்திக்கொண்டு, தங்கள் பொது லட்சியமான மகா கிழக்காசியப் போரை வெற்றிகரமாக நிறைவேற்றி, சுதந்திர ஆசிய மண்டலத்தை நிறுவுதல் என்று கூறப்பட்டது. இந்த யோசனை, அடிப்படையான திட்டம்—ஏன், இந்த மகாநாடே நேதாஜியின் யோசனையின் மேல் பிறந்ததுதான்.

இந்த மகாநாடு, 1943 நவம்பர் 5-ந்தேதி தோக்கியோவிலே, அசெம்பிளி ஹாலிலே ஆரம்பமாயிற்று. இம் மகாநாட்டில் நிப்பொன், சீனக்குடியரசு, மஞ்சுகோ, தாய்லாந்து, பர்மா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். ஆஸாத் ஹிந்த் அரசாங்கப் பிரதிநிதிகள் கவனிப்பாளர்கள் என்ற முறையிலேயே கலந்து கொண்டனர். நேதாஜி போசும், ராணுவ தலைமைக் காரியாலயத் தலைவர் கர்னல் பான்ஸலேயும், இலாகா இல்லா மந்திரி ஸஹாயும், தலைமைக் காரியாலயத்தைச் சேர்ந்த லெப். கர்னல் ராசுவும், நேதாஜியின்

அந்தரங்கக் காரியதரிசி மேஜர் ஹஸனும், ஆஸாத் ஹிந்த் அரசாங்கப் பிரதிநிதிகள்.

நிப்பொன் மக்கள் இந்த மகாநாட்டை மிகப்பிரமாத மான முறையில் வரவேற்றனர். நிப்பொன் பத்திரிகை களெல்லாம் கொண்டாடி மகிழ்ந்தன. "உலக சரித் திரத்திலேயே இந்த மகாநாட்டுக்கு இணை கிடையாது. என ஒருமுகமாகப் புகழ்ந்து எழுதின. எல்லாப் பத்திரிகைகளிலும் மகாநாட்டைப் பற்றிய செய்திகளை முதற் பக்கங்களில் கொட்டை எழுத்துத் தலைப்புக் களுடன் பிரசுரித்தன. பிரதிநிதிகளின் படங்களை அழகாக வெளியிட்டன.

"கிழக்காசிய நாடுகளின் மகோன்னதமான சக்தி களையெல்லாம் ஒன்றுபடுத்தி வெற்றியை நாடிக் கொண்டு செல்லக்கூடியதாகையால் இந்த மகாநாடு கிழக்காசியாவின் சரித்திரத்தில் ஒளி பொருந்திய இடம் பெறும்" என்று சகல பத்திரிகைகளும் தங்கள் தலையங்கங்களிலே குறிப்பிட்டன.

மகாநாட்டை ஆரம்பித்து வைத்துப் பிரதமர் தோஜோ பேசினார். யுத்தம் ஆரம்பமானதற்குக் காரணமாயிருந்த நிகழ்ச்சிகளை அவர் விவரித்தார். உலகத்தையே கட்டி ஆளவேண்டுமென்ற பேராசை பிடித்தலையும் ஆங்கிலோ—அமெரிக்கருக் கெதிராக நிப்பொன் போரிலிறங்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்ட தென்பதை அவர் தெளிவுபடுத்தினார்.

மேலும் அவர், "ஆசிய நாடுகள் விடுதலை பெற வேண்டும். பரஸ்பர சுபிட்சத்திற்கு உதவ வேண்டு மென்பது நிப்பொனின் லட்சியம்" என்றும், இதை அடிப்படையாகக் கொண்டு மகா கிழக்காசிய பரஸ்பர

சுபிட்ச மண்டலத்தை ஸ்தாபிக்கவே நிப்பொன் முயன்று வருவதாகவும் பிரதமர் தோஜோ தெரிவித்தார். "இந்த லட்சியத்தை நிறைவேற்றியேதீர்ப்பதென்று நிப்பொன் சாம்ராஜ்யம் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறது. இதற்கு மகா கிழக்காசிய நாடுகள் பூரணமாக ஒத்துழைக்க வேண்டும்" என்று முடிவாக அவர் கேட்டுக்கொண்டார்.

பின்னர், இதர நாடுகளின் பிரதிநிதிகள், அவர்களுடைய உறுதியைத் தெரிவித்துப் பேசினர்.

பர்மா அரசாங்கத் தலைவர் அதிபதி பாமா பேசும் பொழுது, "இந்தியா விடுதலை பெருவிடில், ஆசியா சுதந்திரமாக வாழ முடியாது" என்பதை அழுத்தமாகத் தெரிவித்தார். அவர் கூறினர் "கிழக்காசியா விஷயங்கள் பற்றிப் பேசி முடிந்துவிட்டது. இப்போது அவற்றுடன் தொடர்புகொண்ட இந்தியப் பிரச்னையை உங்கள் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஆஸாத் ஹிந்த் அரசாங்கத் தலைவர், விருந்தினர் என்ற முறையில் இங்கே பிரசன்னமாக இருக்கிறார்.

'சுபாஷ் பாபுவின் வரலாறு நம் அனைவருக்கும் தெரிந்ததே. இந்தியாவின் புரட்சிகரமான புத்துணர்ச்சி உருவம் பெற்றது போன்றவர் அவர். அந்த சுபாஷ் பாபு அதே போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துவதற்காக, இன்று நம்மிடையே இருப்பது நமக்கு மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும்.

'இன்று சுபாஷ் பாபு தனியாக இல்லை. நூறு கோடி ஆசிய மக்கள் அவருக்குப் பக்கபலமாகத் திரண்டு நிற்கிறார்கள்' என்று உறுதியாகத் தெரிவித்த பாமா மேலும் கூறினர்:

'இந்தியா சுதந்திரம் பெருவிடில் ஆசியா சுதந்திர மாக் வாழ முடியாது என்பதை அழுத்திக் கூறுகிறேன். ஆ. ஹி. அரசாங்கத் தலைவரான சுபாஷ் பாபுவுக்கு 'நாம் நமது எல்லாவிதமான உதவிகளையும் அளிப்பதாக உறுதியுடன் பிரகடனம் செய்யவேண்டும்' என்று நான் இந்த மகாநாட்டின் முன்பு பிரேரேபிக்கிறேன் என்று கூறினர்.

பிறகு டாக்டர் பாமாவின் கோரிக்கைக்கிணங்க, நேதாஜி போஸ் மகாநாட்டில் பேசினர். அவருடைய அற்புதமான பிரசங்கத்திலே அவர் இந்திய சுதந்திர இயக்கத்துக்கு ஆதரவுகாட்டி, மனப்பூர்வமான உதவி யளிப்பதாக மகா கிழக்காசிய நாடுகள் பிரதிக்ஞை பூண்டிருப்பதற்குத் தமது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார். பிரதமர் போஸ், ஐரோப்பாவிலும் இதர இடங்களிலும் நடைபெறும் மகாநாடுகளுக்கும் இந்த மகாநாட்டுக்கும் உள்ள வித்தியாசங்களை எடுத்துக் காட்டிவிட்டு, இந்தியாவின் பரிதாபகரமான நிலைமை களை அவர் விவரித்தார். மேலும் அவர், 'பிரிட்டன் தோற்ருல் இந்தியா விடுதலை பெறும். இந்தியா தோல்வியுற்ருல், என்றென்றைக்கும் பிரிட்டனுக்கு அடிமையாக இருக்கும்' என்று கூறினர். இறுதியாக் சுபாஷ் பாபு, இந்தியாவிலிருந்து பிரிட்டிஷாரை அடியோடு விரட்டுவதற்குத் தம்மாலியன்ற எல்லா வற்றையும் செய்வதாகத் தெரிவித்தார்.

மகா கிழக்காசிய நாடுக்ளின் மகாநாட்டில் நிறை வேற்றப்பட்ட தீர்மானங்கள்:

1. சமூகப் பாகுபாடுகள், விருப்பு—வெறுப்புகளை அறவே ஒழித்தல், ஒரு சமூகம் உயர்வு, மற்ருென்று தாழ்வு என்ற எண்ணத்துக்கு கிழக்காசியாவில் இடமே இருக்கலாகாது.

2. சமத்துவமும் பரஸ்பரம் விட்டுக்கொடுக்கும் மனோபாவமும், சுபிட்ச மண்டலத்தைச் சேர்ந்த ஒவ்வொரு நாடும் மற்ற நாடுகளின் பூரண சுயேச்சை யையும் சுய ஆட்சியையும் அங்கீகரிப்பதுடன், உதார குணத்துடன், ஒருவருக்கொருவர் நடந்துகொள்ள வேண்டும்.

3. ஆசியக் கலாச்சாரத்தை அபிவிருத்தி செய்தல், ஒவ்வொரு நாட்டின் கலாச்சாரமும் தனித்தனியே அபிவிருத்தி செய்யப்படுவதுடன் பரஸ்பரம் பரிவர்த்தனை செய்துகொள்ளப்படவேண்டும்.

4. பரஸ்பரச் சார்புள்ள பொருளாதாரக் கூட்டுறவு, ஒவ்வொரு நாடும் தன் நாடே பெரிதென்றிராமல் மற்ற நாடுகளுடன் கூட்டுறவு கொண்டு வாழவேண்டும்.

5. மகா கிழக்காசியாவின் குறையா வளங்களை வெளிக் கொண்டு வருதல், எல்லா ஆசியரும் அவற்றை சமமாக அனுபவிக்க வசதி செய்தல்.

6. மகா கிழக்காசிய பொதுத் தற்காப்பும் பாதுகாப்பும், 'ஆசியா ஆசியருக்கே' என்ற மனோ பாவமும் உண்டாக வேண்டும் என்பன.

இந்தப் பிரசித்திபெற்ற மகா நாட்டிலேதான், அந்தமான்–நிக்கோபார் தீவுகளை ஆ. ஹி. அரசாங் கத்துக்கு மாற்றிக் கொடுப்பதாக நிப்பொன் பிரதமர் பிரகடனம் விடுத்தது.

மகா கிழக்காசிய நாடுகளின் மகா நாட்டைப்பற்றி நேதாஜி சுபாஷ்போஸ் 'அஸாஹி ஷிம்புன்' என்ற பிரசித்தமான நிப்பொன் பத்திரிகையிலே விசேஷக் கட்டுரை ஒன்றெழுதினர். அதில் 'மகா கிழக்காசிய

நாடுகளின் மகாநாடு ஒரு பூரணமான வெற்றி, இதைப் பற்றி எவ்வித சந்தேகமும் இருக்கமுடியாது. கிழக்காசிய நாடுகளை உறுதியாகப் பலப்படுத்திக்கொள்வதற்கு அது உதவிற்று. யுத்தத்தில் வெற்றி பெறுவதற்கு மட்டுமல்ல, நைந்துபோன பழைய சம்பிரதாயங்களைக் களைந்தெறிந்துவிட்டு, ஒரு புதுமை வாய்ந்த உலக அமைப்பை ஏற்படுத்துதற்கும் அது அடிகோலி இருக்கிறது.

'டாக்டர் பாமா கூறியதுபோல, மேற்படி மகாநாட்டில் பிரதிநிதிகள் ஒவ்வொருவரும் வெவ்வேறு பாஷைகளில் வெவ்வேறு தோரணையில் பேசினாலும் அவர்களுடைய மனதில் நிலவிய உணர்ச்சி ஒன்றே. அதாவது: ஆசியா ஒன்றுபட்டது என்பதே'.

நேதாஜி முடிவாக எழுதியிருப்பதாவது: 'ஒரு பலம் வாய்ந்த வல்லரசு, மற்றவற்றின் மீது ஆதிக்கம் செலுத்துவது 'நகாஸ்' பேச்சுகள், வீண் ஜம்பங்கள் முதலிய ஆபாசம் எதுவும் இங்கே காணப்படவில்லை. இந்த மகாநாட்டின் வெற்றிக்காக அரும்பாடுபட்ட பெருந்தலைவர் தோஜோவுக்கு என் மரியாதையைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.



அந்தமான் கடற்கரையிலிருந்து பாரதநாட்டை
ஆர்வத்துடன் பார்க்கிருர் நேதாஜி



உத்தமத் தியாகிகள் உறைந்த அந்தமான்
சிறைக்கோட்டத்தை உற்றுநோக்குகிருர் நேதாஜி

ஷஹீத், ஸ்வராஜ் தீவுகள்

அந்தமான்—நிக்கோபார் தீவுகளை ஆ. ஹி. அரசாங்கத்திற்கு மாற்றிக் கொடுத்துவிட நிப்போன் அரசாங்கம் முடிவுகட்டிவிட்டது என்று தோக்கியோவில் நடைபெற்ற மகா கிழக்காசிய நாடுகளின் மகா நாட்டில் (6—11—43வ) பிரதமர் ஜெனரல் ஹிதேகி தோஜோ அறிவித்தார்.

இந் நடவடிக்கை நேதாஜி கூறியவாறு இந்தியா விற்காக நடைபெற்ற போரிலே பெரிய தொரு 'அரசியல் அதிர்வெடியாக இருந்தது. இதன் மூலம் ஆ. ஹி. அரசாங்கம் தனக்குத் தேவையான அனைத்தையும் பெற்றதாய்விட்டது. அதற்கு இதுவரை இருந்து வந்த ஒரு குறை—தனக்கென ஒரு சொந்தப் பிரதேசம் இல்லாத குறையும்—தீர்ந்சதாய் விட்டது.

மேலும், இ. சு. நடவடிக்கையிலே அந்தமான்—நிக்கோபார் தீவுகள் ஆ. ஹி. அரசாங்கத்திற்கு மாற்றப் பட்டது ஒரு மகத்தான அபிவிருத்தியாகும். இந்திய அரசாங்கத்தின் நிர்வாகத்திற்குட்பட்டிருந்ததும், இந்தியாவின் ஒரு அங்கமாகத்-திகழ்ந்ததுமான அந்தமான்—நிக்கோபார் தீவுகள் தங்கள் வசமானது, உண்மையிலேயே இந்தியாவின் ஒரு பாகம் தங்கள் வசமானதாகவே கிழக்காசிய இந்தியர்கள் மதித்தனர். அவர்களிடையே இந் நிகழ்ச்சி, புத்துணர்ச்சியையும் புதிய ஊக்கத்தையும் உண்டுபண்ணியது. மேலும் இந்திய தேச பக்தர்கள் உறைந்து-தவம் புரிந்த-அத்தீவுகள் முதன் முதல் விடுவிக்கப்பட்டது, அன்னியர்களின் கொடுங்கோன்மையிலிருந்து இந்தியா விடுபடத் துவங்கிய நற்சூசனையாகவே கருதப்பட்டது.

இதுபற்றி நேதாஜி விடுத்த அறிக்கையொன்றில், 'அந்தமான் விடுதலை ஒரு விசேஷ மகத்துவம் வாய்ந்தது. ஏனெனில் பிரிட்டிஷார், அந்தமானை இந்திய தேசியக் கைதிகளின் சிறைச்சாலையாக உபயோகித்து வந்தார்கள். பிரஞ்சுப் புரட்சியிலே முதலாவது விடுதலையடைந்தது பாஸ்டில்லி என்னும் பெருஞ் சிறைதான். அதனுள்ளிருந்த ஏராளமான அரசியல் கைதிகள் முதலாவது விடுவிக்கப்பட்டனர். அந்தமானில் தான் இந்திய தேச பக்தர்கள் பெருந் துன்பம் அடைந்திருக்கிறார்கள். எனவே, நமது சுதந்திரப் போராட்டத்தில் அதுவே முதலாவது விடுவிக்கப்படவேண்டிய இடமாகும்.

இதன் பயனாக, அந்தமான் வாசிகளிடையே ஒரு புதிய விழிப்பும் நாட்டன்பும் காணத் தொடங்கிற்று.

நேதாஜி சுபாஷ் சந்திர போஸ், ஆ. ஹி. அரசாங் கத்திற்குச் சொந்தமாக்கப்பட்ட-முதன்முதல் விடுதலை

யடைந்த பிரதேசமான அந்தமான்—நிக்கோபார் தீவுகளுக்கு 1943 ம் வருடம் டிசம்பர் மாதம் 29 ந் தேதி விஜயம் செய்தார். இதற்கு முன்னதாக நிப்பொன் பிரதமர் ஜெனரல் தோஜோ, ஆ. ஹி. அரசாங்கம், அந்தமான்—நிக்கோபார் தீவுகளில் எப்பொழுது வேண்டுமானுலும் தனது தேசியக் கொடியை ஏற்று விக்கலாமென்று நிப்போன் அறிவித்துவிட்டது' என்று கூறினுர். அதற்கிணங்க மேற்படி பிரதேசங்களைத் தம் ஆதிக்கத்திற்குள் கொண்டுவர வேண்டிய விஷயம் பற்றி அங்குள்ள நிப்போன் அதிகாரிகளுடன் கலந்து பேசுவதற்காகவே இவ்விஜயம் நடைபெற்றது.

நேதாஜி, தமது அரசாங்க முக்கிய அதிகாரிகளுடன் 'போர்ட்பிளேய'ரில் போயிறங்கினுர். அவ்வூர் ராணுவத் தலைமைக் காரியாலயம் சென்று இத்தீவுகளின் நிர்வாகக் காரியங்கள் பற்றி விபரமான அறிக்கை கேட்டார். முன்னர் பிரிட்டிஷ் தலைமைக்கமிஷனர் இருந்த மாளிகையிலே நேதாஜி இரவு தங்கி இருந்தார்.

அந்தமான் தீவுகளில் நுழைந்தவுடனே நேதாஜி விவரிக்க முடியாத உணர்ச்சி வசப்பட்டுவிட்டார். அந்தமான் கடற்கரையிலே நின்றுகொண்டு புனிதபாரத பூமி இருக்கும் திசையை ஆர்வமுடன் நோக்கினுர். 'இந்தக் கடலைக் கடந்தால் நமது தாயகம் சேர்ந்து விடலாமல்லவா?' என்று பக்கத்திலே நின்றவரிடம் வினவினுர். அந்தமான் விஜயம் நேதாஜிக்கு எவ்வளவு குதூகலத்தை அளித்தது என்பதை அவர் வாயாலேயே கேட்போம்: 'நான் அந்தமான்–நிக்கோபார் தீவுகளைப் பார்வையிட்டு வந்தேன்......

'சுதந்திர இந்தியப் பிரதேசத்திலே காலடி எடுத்து வைக்கிறேமென்ற உணர்ச்சி, அந்தமான் சென்ற

எங்கள் அனைவரையும் புளகாங்கித மடையச் செய்தது. ராஸ் தீவிலே முன்பு பிரிட்டிஷ் தலைமைக் கமிஷனர் இருந்த மாளிகையிலேயே, நமது மூவர்ணக் கொடி பறந்த காட்சி அற்புதமாக இருந்தது. சரித்திர சகடத்தின் சக்கரங்கள் எப்படி இந்தியாவுக்குச் சாதகமாகச் சுழல்கின்றன என்பதை எண்ணி நாங்கள் வியந்தோம். இப்போது இங்கு தலைமை கமிஷனர் மாளிகையிலே மூவர்ணக் கொடி பறப்பது போலவே, புதுடில்லியில் வைஸ்ராய் மாளிகையிலும் பறந்து வீசும் நாள் விரைவில் வரும் என்ற நம்பிக்கை எங்களுக்கு ஏற்பட்டது.

'அந்தமான்—போர்ட் பிளேயரிலிருக்குப் சிறைச்சாலையை நாங்கள் பார்வையிட்டோம். இங்கே பிரிட்டிஷ் கொடுங்கோலரின் எண்ணற்ற கொடுமைகளுக்கும் மரணத்துக்கும்கூட ஆளான நமது நாட்டின் தேசபக்த வீரர்களுக்கு நாங்கள் மௌனமாக வணக்கம் செலுத்தினேம்' என்ருர்.

அந்தமான் நிக்கோபார் தீவுகள் ஆ. ஹி. அரசாங்கத்துக்குச் சொந்தமாக்கப் பட்டவுடன் அதன் பெயர்களும் மாற்றி அமைக்கப்பட்டன. அந்தமான் தீவுகள், 'ஷஹித்' (தியாக வீரர்களின்) தீவுகள் என்றும் நிக்கோபர் தீவுகள் ஸ்வராஜ் தீவுகள் என்றும் அழைக்கப்பட்டன. அந்தமான் தீவு சுமார் 2,508 சதுர மைல் விஸ்தீரணமுடையது. நிக்கோபர் தீவுகளும் சற்றுக்குறைய இதேஅளவுடையதுதான். அவைகளுக்கு ஆ ஹி. அரசாங்க தலைமை கமிஷனராக கர்னல் (பின்னர் மேஜர் ஜெனரல்) ஏ. டி. லோகனுதன் நியமிக்கப்பட்டு அவர் நிருவாகத்தை ஏற்றுக்கொண்டார்.

ஷஹீத், ஸ்வராஜ் தீவுகள் ஆ. ஹி. அரசாங்கத்தின் நிருவாகத்திற்குட்பட்டிருந்த போதிலும் அவைகளின் பாதுகாப்பு நிப்பொன் கடற்படை வசமே இருந்தது.

குறிப்பு:- அந்தமானில் வைக்கப்பட்டிருந்த அரசியல் கைதிகளும், 200 கோர்ட்மார்ஷல் செய்யப் பட்டிருந்த ராணுவக் கைதிகளும் நிப்பொன் அதைக் கைப்பற்று முன்னரே இந்தியாவுக்குக் கொண்டுபோகப் பட்டுவிட்டனர்.

நிப்பொனின்
இந்தியக் கொள்கை

இந்தியா விஷயத்திலே நிப்பொன் அரசாங்கத்தின் அந்தரங்க நோக்கம் என்ன? அது இந்தியாவையும் ஆக்கிரமித்துக்கொள்ள விரும்பியதா?

கிழக்காசியா யுத்தம் ஆரம்பமாகுமுன் அதனுடைய நோக்கம் எவ்வாருயினும் பர்மா வீழ்ச்சியடைந்த பிறகு நிப்பொன் இந்தியாவுக்குள் பிரவேசிக்கத்துணியவில்லை. ஆனுல் இந்தியாவிலே பிரிட்டிஷ் ஆதிக்கத்தை விட்டு வைக்கவும் அது விரும்பவில்லை. இந்தியாவிலே பிரிட்டிஷ் ஆதிக்கம் இருந்துவரும் வரை, தூரக்கிழக்குப் பிரதேசங்கள் இன்னெருவர் ஆதிக்கத்தில் இருந்துவர முடியாதென்பதை அவர்கள் உணர்ந்தார்கள். எனவே தான், இந்திய சுதந்திர இயக்கத்துக்கு அவர்கள் வலுவில் ஆதரவளிக்க முன் வந்தார்கள்.

இந்தியாவுடன் நிப்பொனியர் தோழமையுடன் இருக்கவே விரும்பினுர்கள். இதைப் பிரதமர் டோஜோ விலிருந்து முதன்முதல் மலாயாவிற்கு வந்த முன்னணிப் படையிலிருந்த காட்டுமிராண்டிச் சிப்பாய்கள்வரை எல்லாரிடமும் வெளிப்படையாகக் காணமுடிந்தது. மிருகப் பிராயத்தில் தயாரிக்கப்பட்டிருந்த அவர்களும் கூட இந்தியர்களுடன் நேசபாவத்துடனும் மரியாதை யுடனும் நடந்துகொண்டனர். இந்தியர்களின் வாசஸ் தலங்களில் அவர்கள் பிரவேசிப்பதில்லை. முன்னணிப் படைகளின் தொந்தரவுகளில் இருந்து விடுபடுவதற் காகச் சில இந்தியர்கள் தங்கள் வீட்டுக் கதவுகளில் இந்தியர் வீடு (இந்தியன் ஹவுஸ்) என்று எழுதிக் கொண்டனர்.

காந்திஜி படத்தைக் கண்டவுடன் மிகுந்த மரியாதை காட்டுவார்கள். இந்திய ஆலயங்களுக்குச் சென்று பக்தி சிரத்தையுடன் வணங்குவார்கள்: இவை 1941 இறுதியிலும் 1942 ஆரம்பத்திலும் நிகழ்ந்த விஷயங்கள்.

திரு ராஷ்விகாரி போஸ் தலைமையில் இந்திய சுதந்திர இயக்கம் ஆரம்பிக்கப்பட்டு நடந்துவரும் நாளில் இந்தியத் தலைவர்களுக்கு நிப்பானியர்களிடம் அவநம்பிக்கை தோன்ற ஆரம்பித்தது. சில விஷயங் களைத் தெளிவுபடுத்தும்படி அவர்கள் கேட்டார்கள். இதில் அபிப்பிராய பேதம் தோன்றவே இந்தியத் தலைவர்களில் முக்கியஸ்தர்கள் இயக்கத்தினின்று ஒதுங்கிக்கொண்டார்கள். இத்தகராறுகளுக்கெல்லாம் காரணம்திரு ராஷ்விகாரி போஸ்தான் என்று கூறப் பட்டது. இயக்கத்தின் ஸ்தாபகர் என்ற முறையில் அவர் போற்றப்படவேண்டியவர். மேலும் அவருடைய தேசபக்தி மாசற்றது. ஆயினும் இவ்வளவு பெரிய

இயக்கத்தை கொண்டு செலுத்த அவரால்கூடவில்லை. சந்தர்ப்ப சூழ்நிலை அதற்கு அனுகூலமாக இல்லை நிற்க நேதாஜி கிழக்காசியாவிற்கு வந்தபிறகு, நிப்பொனின் கொள்கைசந்தேகத்துக்கிடமின்றிதெளிவாக்கப்பட்டது. நேதாஜி பலமுறை பட்டவர்த்தனமாகக் கூறியதைப் போல அவரை ஏமாற்ற இவ்வுலகில் எவராலும் இயலாதென்பதோடு அவருடைய உலக அனுபவமும், ராஜதந்திரமும் மேதாவிலாசமும் நிப்பொனிய இராஜதந்திரிகளைப் பிரமிக்கவைத்துவிட்டன. இந்தியா விஷயமாக மட்டுமின்றி இதர உலக விவகாரங்களிலும் அவருடைய ஆலோசனையைக் கேட்கவும் பின்பற்றவும் ஆரம்பித்தார்கள்.

நிப்பொன்—சீன விஷயமாகக் கையாளும் முறையையே அவர் கண்டித்து அவர்களுடைய ராஜதந்திரக் குறையை எடுத்துக்காட்டினார். அடுத்தாற்போலுள்ள மிகப் பெரியதொரு நாட்டை அடக்கியாள நினைத்தது, சரியல்ல என்பதை எடுத்துக் கூறியிருக்கிறார்.

அம்மட்டுமா? சைனவுடன் சமாதானம் ஏற்படுத்தவும் அவர் முயன்றிருக்கிறார். இதற்கு நேதாஜி 2—11—43ல் நான்கிங்கிலிருந்து சீன மக்களுக்கு விடுத்த வானொலிச் செய்தியே அத்தாட்சி.

நேதாஜியின் வானுரை வருமாறு:—

இப்போது நிப்பொன் கிழக்காசியாவில் முற்றிலும் புதிய கொள்கையை கடைப்பிடித்து வருகிறது. பர்மாவும் பிலிப்பைனும் சுதந்திரப் பிரகடனம் விடுத்திருப்பதும் ஆஸாத் ஹிந்த் அரசாங்கம் ஸ்தாபிக்கப்பட்டிருப்பதும் இதற்கு உதாரணமாகும். புதிதாக சைனவிற்கு யோசனை

நிப்பொன் அரசாங்கம், நாங்கின் அரசாங்கத்துடன்

செய்துகொண்டிருக்கும் ஒப்பந்தத்தில் அமைதி நிறுவப் பட்டதும் சைனுவிலிருந்து நிப்பொன் துருப்புக்கள் வாபஸ் பெற்றுக்கொள்வதாக உறுதிகூறியிருக்கிறது.

"நான் ஓர் இந்தியன்; தேசபக்தன்,—ஒரு புரட்சிக் காரன். ஒவ்வோர் இந்தியனும் இந்தியாவின் லட்சியத் திற்காகப் பாடுபடவேண்டும். அதே போல ஒவ்வோர் சீனனும் சைனுவின் சுதந்திரத்துக்காகப் பாடுபட வேண்டும். சைனுவின் கௌரவத்துக்கு ஊறு விளையும் படியாக எவரும், ஏதாவது செய்ய வேண்டுமென்று நான் ஒருபோதும் கூற மாட்டேன்.

"சைனு ஒரு தலைவரின் கீழ் ஒன்றுபடும் நாள் வெகு தூரத்திலில்லை. நீங்கள் விரும்பினுல் நாளையே அப்படிச் செய்யமுடியும். நீங்கள் சைனுவிற்கும் நிப்பொனுக்கும் இடையே கௌரவமான சமாதானம் ஏற்படுத்திக் கொள்ள முடியும். நிப்பொன், தன் துருப்புக்களைச் சீனுவிலிருந்து திருப்பியழைத்துக் கொள்ளும். நீங்கள் யுத்தம் முடியும்வரை காத்திருக்க வேண்டிய தேவை யில்லை. இந்த யுத்தம் நடந்துகொண்டிருக்கும்பொழுதே நீங்கள் அவ்விதம் சமாதானத்தை ஏற்படுத்திக்கொண்டு உங்கள் நாட்டைப் பொருளாதாரத் துறையில் புனர் நிர்மாணம் செய்யக்கூடும்" என்று கூறினுர்.

நிப்பொன் அரசாங்கம் பல்வேறு சமயங்களில் விடுவித்த பிரகடனங்களையும் அறிக்கைகளையும் வரிசை யாகப் பார்ப்போம். நேதாஜி பெர்லினி லிருந்து தோக்கியோ வந்து சேர்ந்த வுடன், நிப்பொன் டயட் சபை [பார்லி மெண்ட்] யின் 82-வது விசேஷக்கூட்டம் ஒன்று 16—6—43ல் நடைபெற்றது. அக் கூட்டத்திற்கு நேதாஜியும் கௌரவப் பார்வையாளராகச் சென்றிருந்

பிரகட னங்கள்

தார். அக் கூட்டத்தில் பிரதமர் தோஜோ விடுத்த அறிக்கை:—

இந்தியா தன் பூர்ண சுயராஜ்யத்தைப் பெறுவதற்காகப் பிரிட்டிஷாரின் அடக்குமுறைகளின்கீழ் சிக்குண்டு பல இடுக்கண்களுக் கிடையே போர் புரிகிறது. இந்தியாவின் இந்த நிலையைக் கண்டு நான் ஏக காலத்தில் அனுதாபமும், ஆத்திரமும் கொள்ளுகிறேன்.

"இந்தியாவின் ஜன்ம விரோதியான ஆங்கிலோ—ஸாக்ஸானியரை இந்தியாவிலிருந்து அடியோடு விரட்டியடித்து, உண்மையான முறையில் இந்தியா சுதந்திரம் பெறுமாறு செய்வதற்காக நிப்பொன் தன்னாலான எல்லா வகையாலும் முழு உதவியையும் அளிக்கத் திடமாக உறுதி கொண்டுவிட்டது. இந்திய மக்கள், தங்கள் இழந்துபோன சுதந்திரத்தையும் செல்வப் பெருக்குள்ள சுகவாழ்வையும் திரும்பப் பெறும் நாளை நான் மிகுந்த நம்பிக்கையுடன் எதிர்நோக்கிக்கொண்டிருக்கிறேன். அந்த நாள் விரைவில் வருமென்பது என் நம்பிக்கை.

"கிழக்காசிய இந்திய சுதந்திர இயக்கத்தின் தலைமைப் பதவியை நேதாஜி ஏற்றுக்கொள்வதற்காக 4—7—43ல் நடந்த பிரசித்தி பெற்ற மகாநாட்டுக்குப் பிரதமர் தோஜோ அனுப்பிய வாழ்த்துச் செய்தியில் சில பாகம்:—

இந்தியா தனது நெடுநாளைய லட்சியமான பூர்ண சுயராஜ்யத்தை அடைவேண்டுமென்பதே நிப்பொனின் விருப்பம். நிப்பொன் அரசாங்கத்தின் பல்வேறு பிரகடனங்களில் இவ்விருப்பம் வெளியிடப்பட்டிருக்கிறது. இந்தியா தன் பூர்ண சுதந்திரத்தை அடைவதற்

காக நிப்பொன் தனது எல்லாவித உதவிகளேயும் அளிக்கத் தயாராக இருக்கிறது.

'இந்தியா தன்னே விடுவித்துக்கொள்வதற்கு ஏற்ற தருணம் இதுவே. இம்மாதிரி தங்கமான தருணம் மறுபடி என்றும் கிடைக்காது.

'சுதந்திரம் பெரும் மேன்மை வாய்ந்த தினத்தை இந்தியர் விரைவில் காண்பதற்கு இது ஒன்றே வழி என்பது என் திடமான நம்பிக்கை. அவர்களது வீரப் போரில் அவர்கள் முழு வெற்றியையும் அடையவேண்டு மென்று நான் இருதயப் பூர்வமாக விரும்புகிறேன்.

'பரஸ்பரம் நம்பிக்கையுள்ள நண்பர்களின் நம்பிக் கைக்கு ஏற்ப நடப்பது நிப்பொனின் பரம்பரைக் கோட்பாடு. இந்தியா அப்படிப்பட்டதே.

'இந்தியா பூர்ண சுதந்திரம் பெறுவதற்குக் கிடைத் திருக்கும் இந்த அரிய தருணத்தை இந்தியர் கைநழுவ விட்டுவிடமாட்டார்களென்று நான் மனப்பூர்வமாக நம்புகிறேன்.'

நிப்பொன் அரசாங்கம் சுதந்திர இந்திய தற்காலிக அரசாங்கத்தை அங்கீகரித்திருக்கிறதென 23-10-43வ காலே 11 மணிக்கு நிப்பொன் செய்தி இலாகா அறிவித்தது. இது சம்பந்தமாக நிப்பொன் சர்க்கார் வெளியிட்ட அறிக்கை:

'திரு சுபாஷ் சந்திரபோஸின் தலேமையில் சுதந்திர இந்திய தற்காலிக அரசாங்கம் ஸ்தாபிக்கப்பட்டிருப்பது, இந்தியர்களின் நீண்டகால மனோரதமான சுதந்திரப் பாதையில் பெருத்த முன்னேற்றமென்று நிப்பொன் அரசாங்கம் நம்புகிறது. எனவே, அதை சுதந்திர

இந்திய தற்காலிக அரசாங்கமென அங்கீகாரம் செய்கிறது. அது தனது லட்சியத்தை அடைவதற்காகச் செய்யும் முயற்சிகளில் நிப்பொன் எல்லா வகையிலும் கூடுமானவரை உதவியும் ஒத்துழைப்பும் நல்கத் தயாராயிருக்கிறதென இதன்மூலம் தெரிவிக்கிறது.'

ஆஸாத் ஹிந்த் அரசாங்கம் ஸ்தாபிக்கப்பட்டதை யொட்டி தென் பிரதேச நிப்பொன் படைத் தலைமைத் தளகர்த்தர், ஆஸாத் ஹிந்த் அரசாங்கத் தலைவர் திரு சுபாஷ் பாபுவிற்கும் அவரது மந்திரிகளுக்கும் தமது உத்தியோக வாசஸ்தலத்தில் ஒரு விருந்தளித்தார். இதற்குப் பிரதியாக நேதாஜி அந்நிய நாட்டினருக்கு ஒரு விருந்து நடத்தினர். விருந்தின் முடிவில் தென் பிரதேச நிப்பொன் விமானப்படைத் தலைமைத் தளகர்த்தர் கூறினர்.

"இந்திய சுதந்திர சைன்யம் இந்தியாவிற்குள் பிரவேசிக்கும்பொழுது என் தலைமையின் கீழுள்ள விமானப் படைகள் உங்களுக்குப் பாதுகாப்பளித்து உங்களுடன் ஒத்துழைக்கும். படைத் தலைவர் இவ்வாறு தெரிவித்தார். மேலும் அவர் இந்திய சுதந்திர சைன்யமும் நிப்பொன் விமானப் படையுமாக, நாம் ஒரு ஐக்கிய முன்னணியை ஏற்படுத்துவோம், விமானப்படைகளில் உங்களால் நன்கொடை அளிக்கப்பட்ட விமானங்களே முன்னணியிற் செல்லும். வெற்றியடைந்த பின்னர் நீங்கள் டில்லிக்கோட்டை முன்பு ஜெய அணிவகுப்பு நடத்தும்போது எங்கள் விமானங்கள் மேலே பறந்து அந்தக் காட்சியைக் கண்டுகளிக்கும் என்ருர்.

1943 அக்டோபர் 26ல் கூடிய நிப்பொன் டயட் சபையின் 83வது விசேஷக் கூட்டத்தில் பிரதமர் தோஜோ பின்வருமாறு அறிவித்தார்:

தேசபக்தி கொண்ட இந்தியர்களனைவரும் திரு சுபாஷ் சந்திரபோஸின் தலைமையில் ஒன்று திரண்டு எழுந்துள்ளனர். இம்மாதம் 21ந் தேதி சுதந்திர இந்திய தற்காலீக அரசாங்கம் நிறுவப்பட்டுவிட்டது, நிப்பொன் ஷி அரசாங்கத்துக்கு உடனே அங்கீகாரமளித்தது.

'இந்த அரசாங்கத்தை நிப்பொன் இனி எப்பொழுதும் ஆதரித்து வர தீர்மானத்திருக்கிறது. அத்துடன் இந்தியா சுதந்திரம் பெற்று, விமோசன மடைவதற்காக தன்னுலியன்ற எல்லா விதத்தாலும் முயற்சி செய்யத் தயாராயிருக்கிறதென இந்த சபையின் மூலமாக உங்களுக்கு மகிழ்வுடன் அறிவிக்கிறோம்.

இந்தியர் சுதந்திர எழுச்சியும் கிழக்காசிய ஜனங்களின் ஒத்துழைப்பும் சேர்ந்து இந்தியா வெகு விரைவில் சுதந்திரமும் சுகவாழ்வும் பெறும்படி செய்யும் என்பது என் நிச்சயமான நம்பிக்கை.

நேதாஜி நிப்பொனுக்குச் சென்றிருந்த சமயம் தோக்கியோவில் ஒரு விருந்து நடைபெற்றது. அதில் நிப்பொனின் வெளிநாட்டுமந்திரி மாமோரு ஷிகெமித்சு நேதாஜியை நோக்கிக் கூறினர்,—

நாம் இருவரும் இப்பொழுது ஆசியாவை விமோசனம் செய்து முன்னேற்றமடையச் செய்வதென்ற ஒரே நோக்கத்துடன் ஈடுபட்டிருக்கும் போர்த் தோழர்கள்! எனவே நமது பொதுவான முயற்சிகளில் முடிவான வெற்றி ஏற்படும் வரையில் இருவரது படைகளேயும் ஒன்று சேர்த்து, சேர்ந்து போர் புரிவதென்று பிரதிக்ஞை பூணுவோம் என்ருர்:

மேலும் அவர் "கிழக்கே ஒளி தோன்றிவிட்டது, நட்சத்திரங்கள் ஒளி குன்ற ஆரம்பித்து விட்டன. இந்தியாவின் சுதந்திர சூரியன் வெகு விரைவிலே உதயமாகி ஒளி வீசப் போகிருன்" என்று நம்பிக்கை தெரிவித்தார்.

அந்தமான், நிக்கோபார் தீவுகள் சம்பந்தமாக (23—1—44ல்) கேட்கப்பட்ட ஒரு கேள்விக்குப் பிரதமர் தோஜோ, ஆஸாத் ஹிந்த் அரசாங்கம் அந்தமான் நிக்கோபார் தீவுகளில் எப்பொழுது அவசியமென்று கருதிஞலும் தனது தேசீயக் கொடியைத் தாராளமாக ஏற்றுவிக்கலாம்' என நிப்பொன் ஏற்கெனவே அறிவித்துவிட்டதென்று கூறினர்.

மேலும் அவர், திரு சுபாஷ் சந்திர போஸின் அரசாங்கத்திற்குச் சொந்தப் பிரதேசமில்லாமலில்லை. ஏனெனில் அவர் இந்தியாவின் ஒருபகுதியில் ஏற்கனவே அடிஎடுத்து வைத்துவிட்டார். இந்தியா கூடிய விரைவில் சுதந்திரம் பெறுவதற்காக, இந்தியாவிற்கு முழு உதவியும் அளிப்பதென நிப்பொன் அரசாங்கம் திடமாக உறுதிபூண்டிருக்கிறது என்று கூறினர்பிரதமர்.

'நிப்பொன் இந்தியாவிடமிருந்து ஏதாவது எதிர் பார்க்கிறதா?' என்று நிப்பொன் பார்லிமெண்டில் ஒரு பிரதிநிதி கேட்டார்.

அதற்குப் பிரதமர் தோஜோ அளித்த ஸ்பஷ்டமான பதில்: நிப்பொன் இந்தியாவிடம் வேண்டுவது—இந்தியாவிடமிருந்து கோருவது—ஒரேயொரு விஷயந் தான். இந்தியா—ஆங்கிலோ—அமெரிக்கர் ஆதிக்கத்தி லிருந்து பரிபூர்ணமாக விடுதலை பெறவேண்டும். இந்தியா இந்தியர்க்கே சொந்தமாகவேண்டும். இதுவே நிப்பொனின் கோரிக்கை.

ஜெனரல் தோஜோ அழுத்தந் திருத்தமாக நிப்போனின் ஆசையை வெளிப்படுத்தி மேலும் மொழிந்தார். இந்தியா சந்தேகத்திற்கிடமின்றி பரிபூரணமாக சுதந்திரம் பெற்ற நாடாக ஆகும் நன்னாளையே நிப்பொன் எதிர்பார்த்து நிற்கிறது. இந்தியா அவ்வாறே சுதந்திரமடையுமென்பதுதான் நிப்போனின் நம்பிக்கை. அதுவே இந்தியாவிடம் நிப்போனின் கோரிக்கை.

நிப்பொன் பிரதமர் ஆரம்பமுதலே இந்தியா விஷயத்திலே தமது அரசாங்கத்தின் நோக்கங்களைத் தெளிவுபடுத்தி வந்திருக்கிறார். இறுதியாக மேலே கண்டபடி துலக்கமாக அறிவித்தார்.

ஜெய்ஹிந்த்

சுதந்திர தேவியின் கோபுர தரிசனம்

1944-ம் வருடம் இந்தியாவின் சரித்திரத்திலே மிகவும் முக்கியமான வருடமாக விளங்கப் போகிறது. இந்த வருடத்திலேதான் யுத்தம் நமது பொது வெற்றியை நோக்கித் திரும்பப் போகிறதென்று நேதாஜி தாம் விடுத்த புது வருடச் செய்தியிலே குறிப்பிட்டார். இவ்விதம் கூறி ஒரு வாரம் ஆகும் முன்னரே ஆஸாத் ஹிந்த் அரசாங்கத் தலைமைக் காரியாலயம் ஷோனானிலிருந்து ரெங்கூனுக்கு மாற்றப் பட்டுவிட்டது.

தலைமைக் காரியாலயம் மலாயாவிலிருந்து பர்மாவிற்கு முன்னேறிச் சென்றது இந்திய சுதந்திர நடவடிக்கையிலே இரண்டாவது முக்கிய கட்டத்தை

யடைந்ததாகும். இந்தியாவிலுள்ள அந்நியர்களை அடியோடு விரட்டியடித்து, 38 கோடி மக்களையும் விடுவிப்பதற்காகத் தொடுத்திருக்கும் சுதந்திரப் போராட்டத்திலே தலைமைக் காரியாலய மாற்றம் மற்றொரு கடைசி முன்னேற்பாடாகக் கருதப்பட்டது. கிழக்காசியா வாழ் இந்தியர்களின் உள்ளங்களிலே இந் நிகழ்ச்சி மட்டற்ற மகிழ்ச்சியையும் கரைகடந்த நம்பிக்கையையும் உண்டுபண்ணிற்று. அவர்கள் சுதந்திர தேவியின் திருக்கோவிலை நெருங்கிக்கொண்டிருப்பதாகவும், தேவி கோவிலின் கோபுர தெரிசனம் கிடைத்துவிட்டதாகவும் மதித்தனர்.

ஒரு கடுமையான யுத்தத்தின் மத்தியிலே, எதிரி அபாரமான ஆயுத முஸ்தீபோடு தங்கள் நாட்டின் தலை வாயிலிலே நுழைந்துகொண்டிருக்கின்ற நெருக்கடியான சமயத்திலே, பர்மா அரசாங்கம், மலாயாவில் இருந்து ஆஸாத் ஹிந்த் அரசாங்கத் தலைமைக் காரியாலயம் பர்மாவிற்கு மாற்றியமைப்பதற்காக எடுத்துக்கொண்ட பிரயாசையான நடவடிக்கைகள் போற்றிப் புகழத்தக்கவையாகும்.

ஆஸாத் ஹிந்த் அரசாங்கத் தலைவர் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ், மாதர் பகுதித் தலைவி மேஜர் லக்ஷ்மி, காயதரிசி சஹாய் ஆகியோருடன் 1944ம் வருடம் ஜனவரி மாதம் 7ந் தேதி பர்மாவிலுள்ள 'ஓர் இடத்தில்' விமானத்தில் வந்திறங்கினர்.

விமானத் திடலில் சுதந்திர பர்மாவின் அதிபதி பாமா, பர்மாவில் நிப்பொன் ஸ்தானீகர் ரென்சோ சவதா உள்பட உயரிய நிப்பொன், பர்மிய உத்தியோகஸ்தர்களும் இந்திய சுதந்திர சங்க அதிகாரி

களும் கூடியிருந்து வரவேற்றனர். பின்னர் பாமாவின் காரியாலய இல்லம் சேர்ந்தனர். அங்கு நிப்பொன் படைகளின் பிரதம சேனாதிபதிக்கு நேதாஜி முகமன் தெரிவித்துக்கொண்டார்.

பிரதம சேனாதிபதி லெப். ஜெனரல் கலாபெ, இந்திய சுதந்திர இயக்கத்துக்கு தமது முழு உதவியையும் அளிப்பதாக உறுதி கூறினார். தலைமைக் காரியாலயம் பர்மாவிற்கு மாற்றப்படுவதற்குப் பர்மிய அரசாங்கம் செய்த உதவிகளைப் புகழ்ந்து பாராட்டினார்.

நேதாஜி போஸ், ஆஸாத் ஹிந்த் தற்காலிக அரசாங்கம் பர்மாவிற்கு மாற்றப்பட்டுவிட்டதென்று அறிவித்தார். இதையொட்டி அவரைப் பேட்டிகண்ட பத்திரிகை நிருபர்களிடம் பின்வருமாறு கூறினார்:—

இந்திய சுதந்திர இயக்கத்தை நடத்திச் செல்லவே ஆஸாத் ஹிந்த் தற்காலிக அரசாங்கம் ஸ்தாபிக்கப் பட்டிருக்கிறது. ஆஸாத் ஹிந்த் பௌஜ், இந்தியா பர்மா எல்லையை நோக்கி முன்னேறிச் செல்ல ஆரம்பித்துவிட்டது.

"எனவே ஆஸாத் ஹிந்த் அரசாங்கமும் இந்தியாவை நோக்கி முன்னேற வேண்டியது சகஜந் தானே! 'டில்லி மார்ச்'சைத் தொடங்கி நடத்துவதற்கு எல்லா இந்தியர்களும் தயாராயிருக்கிறார்கள்'' என்றார்.

மேலும் அவர், 'பர்மிய சர்க்காரும் நிப்பொன் அதிகாரிகளும் எங்களுக்கு அளித்த வரவேற்பும் உதவியும் என்னைப் பரசவப்படுத்தி விட்டன. அதன் பொருட்டு என்மனம் ஆழ்ந்த நன்றிப் பெருக்கால் நிறைந்திருக்கிறது. இவர்களின் உதவியின்றி நமது

அரசாங்கத் தலைமைக் காரியாலயத்தைப் பர்மாவிற்கு மாற்றுதல் சாத்தியமாகாது.

"சுதந்திர பர்மாவின் தலைவர் அதிபதி பாமா வெளிநாட்டிலுள்ள நமது தலைசிறந்த நண்பர்களில் ஒருவர். அவரும் அவரது சகாக்களும் நம்மிடம் காட்டும் பிரீதியும், அளிக்கும் உதவியும் நமது சுதந்திரப் போருக்கு விலைமதிப்பற்றவைகளாகும்.

"நிப்பொன் ஆரம்பமுதலே நமக்கு மட்டற்ற உதவிகளை அளித்து வருகிறது. அதன் பொருட்டு நாம் செய்யக்கூடிய கைமாறு, பகைவர்கள் இந்தியாவிலிருந்து அடியோடு ஒழியும்வரை விடாது போராடிச் செல்வதுதான்" என்று கூறினர்.


நேதாஜி போஸ், தலைமைக் காரியாலயம் மாற்றப்பட்டு விட்டதென்ற மகிழ்ச்சியான செய்தியைத் தாய்நாட்டிலுள்ளவர்களுக்கு அன்றிரவே வானொலியில் அறிவித்தார்.

"நான் இப்பொழுது உங்களுக்கு வெகு அருகிலிருந்து கொண்டிருக்கிறேன். ஆஸாத் ஹிந்த் அரசாங்கத் தலைமைக் காரியாலயம் ஷோனனிலிருந்து பர்மாவிற்கு மாற்றப்பட்டுவிட்டது. எனவேதான் பர்மாவிலிருந்து உங்களுடன் பேசமுடிகிறது.

"நான் பர்மாவிற்கு வந்துவிட்டபடியால் அடிக்கடி உங்களுக்கு வானொலியின் மூலம் செய்தி விடுப்பேன். பர்மியர்கள் உங்களுக்குத் தங்களுடைய வாழ்த்துக்களை தெரிவிக்கிருர்கள்.

“இன்று இந்தியாவிற்குப் பர்மா தேவை. பர்மாவிற்கு இந்தியா தேவை. நாம் இன்று ஐக்கியமாக நிற்கிறோம்” என்று மொழிந்தார்.

தலைமைக் காரியாலயம் பர்மாவிற்கு மாற்றப்பட்டிருப்பதை வரவேற்று ‘கிரேடர் ஏஷியா’ என்ற பத்திரிகை தனது தலையங்கத்தில் “சுபாஷ் பாபுவின் திறமையை இது காட்டுகிறது. தவிர அவரும் அவரது லக்ஷக்கணக்கான தொண்டர்களும் இந்தியாவை விடுவிப்பதென்று எவ்வளவு திடமாக சங்கற்பம்செய்து கொண்டிருக்கிறார்களென்பதையும் இது காட்டுகிறது.” என்று எழுதியது.



பர்மாவின்
பேருதவி

இந்தியாவின் விடுதலைக்காக நடைபெற்ற சுதந்திரப் போராட்டத்தில் கிழக்காசியாவிலுள்ள சகல நாடுகளும் தங்களுடைய பூரண அனுதாபத்தையும் உதவியையும் அளித்தன. அதில் நிப்பொன் அரசாங்கத்திற்கும் பொது ஜனங்களுக்கும் விசேஷ ஸ்தானமுண்டு. அதற்கடுத்தபடியாக நாம் பெருமையாக குறிப்பிட வேண்டியது பர்மாவே யாகும். இந்தியப் பிரச்னையில் பர்மாவின் நிலை ஒரு விசித்திரமாய் அமைந்திருந்தது. 'சுதந்திர பர்மாவின் அதிபதி பாமா, வெளிநாட்டிலுள்ள இந்தியாவின் தலைசிறந்த நண்பர்களில் முக்கியமான ஒருவர்' என்று நேதாஜி குறிப்பிட்டாரல்லவா? இது துளிக்கூட மிகையான வார்த்தையல்ல வென்பதை பாமாவின் செயல்கள் நிரூபித்து விட்டன.

பல சந்தர்ப்பங்களில் பாமாவும் அவரது சகாக்களும் பர்மியர் என்ற பேதமற்று இந்திய விவகாரங்களிலே கலந்து கொண்டனர். அவர்களுடைய பேச்சு மிகுந்த பலனுடையதாகவும் இருந்தது.

பர்மா சுதந்திர மடைந்ததைப் பாராட்டுவதற்கு பர்மா, இந்திய சுதந்திர சங்கம் ஒரு தேநீர் விருந்தளித்தது. விருந்தின் இறுதியில் டாக்டர் பாமா, 'ஆஸாத் ஹிந்த் பௌஜ் டில்லியை நோக்கிச் செல்ல ஆரம்பித்தவுடன், பர்மிய இராணுவம், தனது பூரண ஒத்துழைப்பையும் அதற்கு நல்கும் என்று தெரிவித்தார்.

"இந்தியர்களுக்கு இப்போது நேதாஜி சுபாஷ்பாபு போன்ற ஒரு திறமைவாய்ந்த தலைவர் கிடைத்திருக்கிறார். தங்கள் சுதந்திரத்தைத் திரும்பப் பெறுவதற்குத் தேவையான சகல சாதனங்களும் அவர்களுக்குக் கிடைத்திருக்கின்றன.

"இந்தியாவின் தோழநாடான பர்மா, ஆஸாத் பௌஜுடன் தனது சைன்யத்தையும் டில்லி நோக்கிச் செல்லும்படி அனுப்பத் தயாராயிருக்கிறது. பர்மா, இந்தியர்களுடன் அளவு கடந்த நேசம் கொண்டிருக்கிறது என்றார்.

பிரசித்திபெற்ற மகா கிழக்காசிய நாடுகளின் மகாநாட்டிலே இந்தியா விஷயமாக டாக்டர் பாமா ஒரு பிரரேபணை கொண்டுவந்தா ரல்லவா? அப்பொழுது அவர்செய்த உன்னதமான சொற்பொழிவிலே, இந்தியப் பிரச்னையைப் பொறுத்தவரை பர்மா ஒரு விசித்திரமான நிலைமையிலிருக்கிறது. ஒரு தலைமுறையாக, பர்மாவும் இந்தியாவும் ஒரே துர்ப்பாக்கியத்திற்

கிழக்காசியா மகாநாட்டில்

குள்ளாகி இருந்தன. எல்லா வகையிலும் எங்களுக்குள் ஒற்றுமை யிருந்தது. நாங்கள் ஒரே எதிரியுடன் ஒரே போரில் ஈடுபட்டிருந்தோம்- நோக்கம், செயல், லட்சியம் மூன்றிலும் எங்களிடையே ஒற்றுமை நிலவி வந்தது.

“பர்மா தனது அரசியல் தத்துவம், அரசியல் முறைகள், அரசியல் நுணுக்கங்கள் ஆகியவற்றை இந்தியாவிட மிருந்தே பெரும்பாலும் கற்றுக்கொண்டதென்பதை பெருமையுடன் ஒப்புக்கொள்கிறேன். சென்ற நாட்களில் இந்தியாவிடமிருந்தே பர்மா மத தத்துவங்களைக் கிரகித்துக் கொண்டது. இப்போது எங்களுடைய அரசியல் தத்துவங்களில் பெரும்பகுதி இந்தியாவிலிருந்து வந்ததுதான் என்பதை மகிழ்வுடன் ஒப்புக்கொள்கிறேன்.

‘நாங்கள் புரிந்த சுதந்திரப் போராட்டங்களிலே, சில மகா புருஷர்கள், தன்னலங்கருதாதவர்கள், மகா மேதாவிகள், தங்கள் வாழ்க்கையையே நாட்டின் பொருட்டு அர்ப்பணம் செய்துவிட்ட மகா தியாகிகள் தோன்றினுர்கள், அந்த மாபெருந் தேசபக்தர்களிலே உலகெங்கும் பிரக்கியாதி பெற்றவர்களில் ஒருவர் இதோ நம் விருந்தாளியாக வந்திருக்கிருர். அவர்தான் திரு சுபாஷ் சந்திரபோஸ். சுபாஷ் பாபுவின் வரலாறும் நம் அனைவருக்குந் தெரிந்ததே. இந்தியாவின் புரட்சிகரமான புத்துணர்ச்சி உருவம் பெற்றது போன்றவர் அவர்.

இறுதியாக அதிபதி பாமா வலியுறுத்தியதாவது. இந்தியா சுதந்திரம் பெருவிடில் ஆசியா சுதந்திரமாக வாழ முடியாதென்பதை அழுத்திக் கூற விரும்புகிறேன். கடந்த ஒரு நூற்ருண்டாக பிரிட்டிஷார் ஆசியாவில் தங்கள் காலனிக்கொள்கையை இந்தியாவின் பலத்

தையும் வளங்களையும் கொண்டே அனுசரித்து வருகின்றனர்.

'எனது நாடு சிறியது. பிரிட்டிஷ் படைகளின் முன்பு அல்ல; பிரிட்டிஷார் கொண்டுவந்த இந்தியப் படைகளின் முன்புதான். பிறரைப் போரில் தள்ளித் தான் லாபம் அடித்துக்கொண்டு போகும் பழக்கம் பிரிட்டிஷாரிடம் இன்று நேற்றல்ல, நீண்ட காலமாகவே இருந்து வருகிறது' என்ருர் பாமா.

ஆஸாத் ஹிந்த் அரசாங்கம் பர்மாவுக்கு மாற்றப் பட்டிருப்பதற்கு வரவேற்பு அளிப்பதற்காக பர்மிய சர்க்கார், பொது மக்கள் சார்பிலே (23—1—44) ஒரு கூட்டம் நடத்தப் பட்டது. அதில் பர்மா வெளிநாட்டு மந்திரி திரு தாகின் நூ பேசியதாவது:

தாகின் நூவின் பிரசங்கம்

இந்தியாவும் பர்மாவும் நிப்பொனின் தலைமையில் மகா கிழக்காசிய பரஸ்பர சுபிட்ச மண்டலத்தில் தங்களுக்குரிய ஸ்தானத்தை என்று பெறப்போகின்றனவென்று பர்மா ஆவலுடன் எதிர் பார்த்துக்கொண்டிருக்கிறது. ஆஸாத் ஹிந்த் அரசாங்கத்துடன் ஒத்துழைப்பதாகவும் அதற்கு ஒத்தாசை செய்வதாகவும் பர்மா பிரதிக்ஞை செய்திருப்பது தனது அருகிலுள்ள நேச நாடான இந்தியாவின் விடுதலைக்காக மட்டுமல்ல, ஆசியா விலே புது ஒழுங்கு ஏற்படவேண்டு மென்பதற் காகவேதான். அப்பொழுதுதான் இந்தியாவின் சுதந் தரம் நிலைத்திருக்க முடியும். அதே போல் பழம்பெரும் நாடான இந்தியா விடுதலைபெருவிடில் கிழக்காசியாவில் பரஸ்பர சுபிட்ச மண்டலம் ஏற்பட முடியாதென்னும் சரித்திர உண்மையையும் நாங்கள் மனதில் கொண்டுள்ளோம்.

'நமது தோழநாடான நிப்பொனின் ஒத்துழைப்பின் காரணமாக இன்று சுபாஷ் போஸ் வெறுமே கனவு கண்டு கொண்டிருக்கும் தேசத் தலைவராக இல்லை. இப்போது அவரிடம் போதிய யுத்த சாதனங்கள் இருக்கின்றன. அவர் ஆஸாத் ஹிந்த் அரசாங்கத் தலைவர் மட்டுமல்ல. ஆஸாத் ஹிந்த் பௌஜுக்கு நூறு கோடி ஆசியரின் மானசீக உதவி இருக்கிறது.

சுதந்திர தினம்

1944-ம் ஆண்டு ஜனவரி மாதம் 26ந் தேதி மாலை ரெங்கூனில் நடைபெற்ற இந்திய சுதந்திர தின விழாவில் கலந்து கொள்வதற்காக இந்தியர்கள் அலைகடல்போல திரண்டு வந்து நிறைந்தார்கள். நேதாஜியும், அதிபதியும் சேர்ந்தாற்போல வந்திறங்கினார்கள். ஆஸாத் ஹிந்த் மந்திரிகளும் ஆலோசகர்களும் அவர்களை வரவேற்றார்கள். பின்னர் நேதாஜியும் அதிபதியும் இந்திய தேசிய இராணுவ மரியாதை அணி வகுப்பைப் பார்வையிட்டனர்.

சுதந்திரதினக் கூட்டத்திற்கு அதிபதி பாமா தலைமை வகித்தார். சுதந்திர தினத்தின் முக்கியத்துவத்தை விளக்கி நேதாஜி பேசினார்.

அதன் பிறகு பாமா ஆ. ஹி. வீரர்களை நோக்கிக் கூறினார்.

இன்று இந்தியர்களுக்கு ஒரு மகத்தான தினம். ஏனெனில் இந்தியாவின் சுதந்திரம் என்ற மகத்தான இலட்சியத்திற்காக கங்கணம் கட்டிக்கொள்ளும் தினம் இது.

இன்றைய தினம் உங்களது தினம் மட்டுமல்ல. பர்மாவின் தினம், இது ஆசியாவின் தினம். நாங்கள் இன்று வெறும் பார்வையாளர்களாக மட்டும் இதில் கலந்துகொள்ளவில்லை. உங்களுடன் சேர்ந்தவர்கள்—ஒன்றுபட்டவர்கள் என்ற உணச்சியுடனேயே கூறியிருக்கிறோம்.

"டில்லி செல்லும் பாதை உங்களுக்கு முன்னே நேராகயிருக்கிறது. நீங்கள் அங்கு முன்னேறிச் செல்லும்போது ஆசியா முழுவதும் ஒரே மனிதன்போல உங்களுக்குப் பின்பலமாக நிற்கும். அவசியம் நேர்ந்தால் உங்களது போரைத் தாங்களும் சேர்ந்து புரிவதற்கு ஆசியர் தயாராக இருப்பார்கள். நமது லட்சியம் ஸ்பஷ்டமானது' என்றார் பாமா.

பர்மிய மாதர்களின் பேரார்வம்

ஆஸாத் ஹிந்த் அரசாங்கத்தின் மாதர் பகுதி மந்திரியான காப்டன் லெக்ஷ்மிக்கு பர்மிய அதிபதி பாமாவின் மனைவியாரும் பர்மிய மாதர்கள் தேசீய சேவா சங்கத்தின் தலைவியுமான திருமதி டாகின் பாமா [12—1—44ல்] ஒரு வரவேற்பளித்தார். அப்பொழுது அவர் கூறியதாவது: 'ஆஸாத் ஹிந்த் அரசாங்கத்தின் மந்திரிகளில் ஒருவர் ஒரு பெண்மணி என்னும் விஷயம் பர்மிய மாதர்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்திருக்கிறது. இந்திய சுதந்திரப் போரில் மாதர்கள் செய்யக்கூடிய பெருந் தொண்டை சுதந்திரப் போரை நடத்தும் தலைவர்கள் உணர்ந்து ஒப்புக்கொண்டிருப்பது மிகவும் உற்சாகம் அளிக்கும் விஷயமாகும்.''

மேலும் திருமதி பாமா கூறினர்: 'இந்தியா விடுதலை பெருவிடில் பர்மா சுதந்திரமாக வாழமுடியாதென்றும்

பர்மா சுதந்திரமாயிருந்தால்தான் இந்தியாவின் சுதந்திர லட்சியம் ஈடேறுமென்றும் என் கணவர்—அதிபதி பாமா அடிக்கடி சொல்வதுண்டு.

“இந்திய மாதரும் பர்மிய மாதரும் ஆதிகாலந் தொட்டே அபாய சமயங்களில் ஆண்களுடன் சரி சமானமாக நின்று அரும்பெருஞ் செயல் புரிந்திருக்கிருர்கள். அமரத்துவம் பெற்றுள்ள ஜான்ஸிராணியின் வீர உணர்ச்சியை ஆதர்ஸமாகக் கொண்டு இந்திய மாதர், தாயின் துயர் துடைக்க முன்வந்திருப்பதைக் கண்டு, பர்மிய மாதர் பெருமையும் பூரிப்பும் கொண்டுள்ளார்கள்” என்ருர்.

காப்டன் லெக்ஷ்மி இதற்கு பதிலளிக்கும் முறையில் பேசியதாவது:— பர்மாவும் இந்தியாவும் என்றுமே நெருங்கிய உறவு கொண்டிருந்து வந்திருக்கின்றன. தற்போதைய யுத்தம் ஆரம்பித்த பிறகு அவ்வுறவு இன்னும் பலப்பட்டிருக்கிறது. அதிலும் இதுவரை தனித்திருந்து இப்போது முன்வந்திருக்கும் மாதர்கள் இடையே இவ்வொற்றுமை மிகவும் பலப்பட்டிருக்கிறது.

“நான், அதிபதி பாமாவின் மனைவியாரை முதல் தடவை சந்தித்தபோது, அவர் கூறிய ஒரு விஷயம் என் மனதை மிகவும் உருக்கிவிட்டது. ‘அஸ்ஸாமிலும் வங்காளத்திலும் பட்டினி கிடந்து தவிக்கும் லக்ஷக் கணக்கான மக்களுக்கு உணவளிப்பதற்காக பர்மிய நங்கையர், தங்கள் மென் கரங்களால் நெற்பயிர் அறுவடை செய்கின்றனர்” என்று அவர் சொன்ஞர். இந்திய சுதந்திர சைனியம் இந்தியாவிற்குள் செல்லும் பொழுது இத்தானியங்களை எடுத்துச் செல்லலா மென்றும் அவர் கூறிஞர்.

"வாஸ்தவமாகவே இது நிறைவேறுமானால் இந்தியாவின் சரித்திரத்திலேயே மிகக் கொடியதான தற்போதைய பஞ்சத்தில் வாடிக்கொண்டிருக்கும் இந்திய மக்கள் என்றென்றும் நன்றி பாராட்டுவார்கள் என்பது நிச்சயம்" என்றார்.

இறுதியாக டாக்டர் லக்ஷ்மி தங்கள் சுதந்திரப் போரைப் பற்றி குறிப்பிட்டார்: எப்பொழுது சமிக்ஞை கிடைக்கும், எதிரிகள்மீது பாய்ந்து நொறுக்குவோம் என்று இந்தியர்களாகிய நாங்கள் தயாராகக் காத்துக் கொண்டிருக்கிறோம். நாங்கள் இந்தியாவிற்குள் யுத்த முழக்கத்தோடு பர்மியப் பிரதேசத்தின் வழியாகச் செல்ல அனுமதி தந்தது, பர்மிய சர்க்கார் எங்களுக்கு அளித்த மகத்தான உதவியாகும். இதன்பொருட்டு எங்களது ஆழ்ந்த வந்தனம் அவர்களுக்குரியது.



எதிர்காலம்பற்றிய திட்டங்கள்

ஆ. ஹி. அரசாங்கம் தனக்கு வேண்டிய சகல சக்தி, சாதனங்களைத் தேடிக்கொண்டவுடன் எதிர் காலம் பற்றித் திட்டமிட ஆரம்பித்தது. ஆ. ஹி. அரசாங்கத்தின் முன்பு இருந்த லட்சியம் போராட்டம். போராட்டதில் ஈடுபடுமுன் அதில் சம்பந்தப்படும் ஆ.ஹி பௌஜ் வீரர்களின் எதிர்காலம்பற்றி ஒரு திட்டமான முடிவுக்கு வரவேண்டியது அவசியமல்லவா? இதைப் பற்றி 4-1-44ல ஷோனனில் நேதாஜியின் உத்தியோக இல்லத்தில்கூடிய ஆ. ஹி. த. மந்திரிசபை, வீரர்களுக்கு அளிக்கப்படவேண்டிய பரிசுகள், பதக்கங்கள் சம்பந்தமாக ஆலோசனை செய்து ஒரு முடிவுக்கு வந்தது—அது பற்றிய அறிவிப்பு வருமாறு:— அடுத்து நடைபெறப்போகும் இந்த நடவடிக்கையில் உயிர்

துறந்தோ அல்லது காயமடைந்தோ போகும் வீரர்களின் குடும்பங்களுக்கு அல்லது அவர்களை அண்டியிருப்பவர்களுக்கு தாராளமாக உதவ மந்திரி சபை விசேஷ கவனம் செலுத்தியிருக்கிறது.

இப்போராட்டம் வெற்றிகரமாக முடிவடைந்ததும் இந்நடவடிக்கையில் கலந்துகொண்ட ஒவ்வொரு ஆ. ஹி. பௌஜ் ஆபீஸர்களுக்கும், சோல்ஜர்களுக்கும் போனஸ் அளிப்பதென மந்திரி சபை தீர்மானித்திருக்கிறது. ஆனால், போரின் இடையே உயிர் துறக்கும் வீரர்களின் போனஸ் அவர்களுடைய சமீப பந்துக்களிடம் அளிக்கப்படும். அவர்கள் குடும்பத்தினருக்கு தாராளமாகப் பென்ஷன் வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. போரில் சேவை செய்யும்பொழுது நோய் காரணமாக மரிப்பவர்களும் இப்பிரிவில் சேர்ந்தவர்களாவர்.

போரில் சேவை செய்யும்பொழுது அங்கஹீனமடையும் ஆ. ஹி. பௌஜ் வீரர்களுக்கு அதற்கான முறையில் பென்ஷன் வழங்கப்படும்.

இந்தியா பரிபூரண சுதந்திரமடைந்து, அமைதியான சர்வசமாதான நிலை ஏற்பட்ட பின்னர், ஒரு சிப்பாய் ராணுவத்தினின்று விலகிக்கொள்வதாக வைத்துக்கொண்டோமானால் அவருக்கு ரூபாய் 1000 போனஸ் வெகுமதி அளிக்கப்படும். இத்தொகைக்குப் பாதி நிலமாகவும் வழங்கலாம். இத்துடன் இந்திய ராணுவத்திலும் ஆ. ஹி. பௌஜிலும் சேவை செய்த ஒவ்வொரு வருடத்திற்கும் ரூபாய் 50 வீதம் கொடுக்கப்படும். இவ்வடிப்படையான வெகுமதி மொத்தமாகவோ அல்லது பென்ஷனும் சேர்த்தோ அளிக்கப்படலாம்.

சுதந்திரப் போராட்டத்தின் பின்னர் ஜீவித்திருக்கும் ஒவ்வொரு ஆ. ஹி. பௌஜ் ஆபீசர்களுக்கும், சோல்ஜர்களுக்கும்; தம்கா–ஜங்–யே ஆஸாதி (சுதந்திர யுத்தப் பதக்கம்) பரிசளிக்கப்படும். விடுதலைப் போரில் இவர்கள் கலந்துகொண்டதைப் பாராட்டி நினைவு படுத்தும் முறையில் இப்பதக்கங்கள் அமைந்திருக்கும். கடமையில் அதிகப் பற்றுதலுடன், வீரதீரச் செயல்புரிந்தவர்களுக்கு ஷேர்–யே ஹிந்த் (இந்தியாவின் சிங்கம்) என்ற விருது வழங்கப்படும். இதைவிடக் குறைவான தீரச் செயல் புரிந்தவர்களுக்கு 'வீர் பஹதூர்' (பெரு வீரன்) என்ற விருது வழங்கப்படும்.

பிரபலமான பராக்கிரமச் செயல்கள் புரிந்தவர்களுக்கு சர்தார்—யே—ஜங் (போர்த் தலைவன்) என்ற பட்டம் வழங்கப்பெறும். தேசத்திற்காக உயிர் விடும் வீரர்களுக்காக அளிக்கப்படும் ஷஹீந்–யே–பாரத் என்ற விருதை அன்னவர்களின் நெருங்கிய உறவினர்களிடம் வழங்கப்படும். ஷேர்-ஏ-ஹீந்த், வீர் பஹதூர் ஆகிய பட்டங்களுக்கு முறையே ரூபாய் 500–200 பென்ஷன் தொகை கொடுக்கப்படும்.

தேசிய ஒருமைப்பாடு

ஆ. ஹி. தற்காலிக அரசாங்கம் இந்தியாவின் அடிமைத் தளையை அகற்றுவதற்கு மட்டுமின்றி அதன் எதிர்கால நல்வாழ்வைப் பற்றியும் சிந்தனைசெய்தது. இந்தியாவில் நிரந்தரமான தேசிய ஒருமைப்பாடு ஏற்பட வேண்டியது மிக மிக முக்கியம் என்பதை உணருகிறது. இதன்பொருட்டு ஆ. ஹி. மந்திரி சபை ஓர் உபகமிட்டியை ஏற்படுத்தி, ஒரு திட்டம் தயாரித்தது. அத்திட்டத்தை மந்திரி சபை சில மாற்றங்களுடன் [2—2—44ல] அங்கீகரித்தது. அத்திட்டம் வருமாறு—

இந்துஸ்தானியே இந்தியாவின் பொதுப்பாஷை யாக இருக்கவேண்டும்.

இந்தியர்கள் ஒருவரை ஒருவர் வரவேற்கும் போதும், விடைபெறும் போதும், வணங்கும் போதும் ஜெய்ஹிந்த் என்றே கூறவேண்டும்.

தற்போதுள்ள மூவர்ணக் கொடியே இந்தியாவின் தேசிக் கொடியாக இருந்துவரும்.

சுத சுக சைன் என ஆரம்பமாகும் பாடல்தான் இந்தியாவின் தேசிய கீதமாக விளங்கும்.

புலி, இந்தியாவின் தேசிய சின்னமாக இலங்கும். நமது புரட்சி வெற்றிகரமாக முடியும்வரை சலோ டில்லி (டில்லி செல்வோம்) என்பதே தேசிய யுத்த முழக்கமாக இருக்கும். அதுவரை ஆஸாத் ஹிந்த் ஜிந்தாபாத்! இங்குலாப் ஜிந்தாபாத்! நேதாஜிக்கு ஜே! என்பவைகளே நமது பொதுவான தேசிய கோஷங்களாக இருக்கவேண்டும்,

உணவு, உடை முதலிய விஷயங்களில் தேசிய ஐக்கியம்பற்றி ஆ. ஹி. த. அரசாங்கம் ஆலோசனை யில் இருந்து வருகிறது. அவை தீர்மானிக்கப்பட்டு உரிய காலத்தில் வெளியிடப்படும்.

இதுவரை ஆ. ஹி. அரசாங்கத்தால் தீர்மானிக்கப் பட்டு வெளியிடப்பட்டுள்ள திட்டங்களை முதலாவ தரக கிழக்காசியா வாழ் இந்தியர்கள் தங்கள் அன்ருட வாழ்க்கையில் அனுஷ்டித்து வரவேண்டு மென்று கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஒரு நாட்டின் பிரதான தேசிய சின்னங்களில் கொடிக்கு அடுத்தபடியாக முக்கியத்துவம் பெறுவது தேசிய கீதம். ஆ. ஹி. அரசாங்கம் வகுப்பு வித்தியாசம் அறவே தோன்ருமல் இருக்கவேண்டு மென்பதில் மிகுந்த அக்கறைகொண்டு இருக்கிறது எனவே சுத சுக சைன் எனத் தொடங்கும் புதிய தேசியகீதத்தை அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக் கிறது. இக்கீதம் கவியரசர் ரவீந்திரநாத தாகூரின்பிரபல மான“ஜன கண மன அதிநாயக ஜெயஹோ”என்பதின் இந்துஸ்தானி அமைப்பாகும். [இதை அமைத்தவர் ஒரு முஸ்லீம் விற்பன்னர்.] ஒரு தனிக் கமிட்டி அமைத்து அதன் மூலம் பரிசீலனை செய்து இறுதியாக ஆ. ஹி. அரசாங்கம் ஏற்றுக்கொண்டது. கீதம் வருமாறு:—

சுத சுக சைனகி பரகா பரசே பாரத பாக்க ஹை ஜாக
பஞ்சாப சிந்த குஜராத் மராட்டா திராவிட உத்தகல வங்கா
சஞ்சல சாகர விந்த ஹிமால நீலா ஜமுனு கங்கா
தேரே நித்த குணகாயே
துஜசே ஜீவன பாயே சப்தனபாயே ஆஷா

சூரஜ பனகரு ஜகபரு சமகே பாரத நாம சுபாகா
ஜெயஹோ ஜெயஹோ ஜெயஹோ
ஜெய ஜெய ஜெய ஜெயஹோ
பாரத நாமா சுபாகா


சப்கே தில்மே பிரித் பஸாயே தேரி மிட்டி பாணி
ஹர் சுபகே ராணே வாலே ஹர் மஸாப் கே ப்ராணி
சப் பேத் ஆர் பாக் மித்தா கே
சப் கோதமே தேரி ஆகே
கூந்தே பிரேமகி மாலா

சூரஜ பனகரு......

சுப் ச வேரே பங்கபகேரு தேரேஹி குணகாயே
சாஸ பரி பரபூர ஹவாயே ஜீவன மேருத லாயே
ஸப் மில கர் ஹிந்தி புகாரே
ஜேய் அஸாத் ஹிந்த் கே நாரே
பியாரே தேஷ் ஹமாரா


சூரஜ பனகரு......

தேசிய மூவர்ணக்கொடி





இ. தே. ராணுவம் இந்திய—பர்மா எல்லையை
நோக்கி விரைகின்றது



கிழக்கு அஸ்ஸாமில் வெற்றிகரமாக
முன்னேறிச் செல்லும் இ. தே. ரா.
முன்னணிப் படையினர்

போர்
தொடங்கியது

இந்தியாவின் சரித்திரத்திலே 1944ம் வருடம் பிப்ரவரி மாதம் 4ந் தேதிக்கு ஒரு சிறப்பான நிரந்தர ஸ்தானமுண்டு. அன்றுதான் ஆ. ஹி. பௌஜ் இந்திய தேசிய ராணுவம் ஈடு இணையற்ற தலைவர் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் அதியுன்னத தளபத்தியத்தின் கீழ் போரிலிறங்கியது.

இதை, 'இரண்டாவது இந்திய விடுதலைப்போர் என அழைப்பாருமுண்டு. புராதனப் பெருமை பொருந்திய பரதகண்டம் அன்னியராட்சிக்குள் அடங்கிய பின், கட்டறுத்துக்கொண்டு விடுதலை பெற வீறிட்டெழுந்து ஆயுதம் ஏந்திப் போரிட்டது அது இரண்டாவது முறைதான். என்றாலும் 1857 மே 10ந் தேதி மீரட்டில் ஆரம்பமான முதல் சுதந்திரப் போர் ஓர் எரிமலை வெடித்ததற்கொப்பாகும். அது கட்டுத்

திட்டம் இல்லாதது. கால நிர்ணயமின்றி திடீரென்று கிளம்பியது. இவைகளோடு சரியான தலைமைத் துவமும் இல்லாத காரணத்தினுல் அது ஒடுங்கிவிட்டது. ஆனுல் 1944 பிப்ரவரியில் தொடங்கப்பட்ட போராட்டம் மகத்துவமும் புனிதமும் வாய்ந்ததாகும். கிழக்காசியா வாழ் முப்பது லட்சம் இந்திய மக்களின் கட்டுக் கோப்பான ஆதரவும், பரிபூரண ஒத்துழைப்பையும் பெற்ற சுதந்திர இந்திய தற்காலிக அரசாங்கத்தினுல் அது நடத்தப்பட்டது. சகல சக்தி, சாதனங்களும் நிறைந்த ஆ. ஹி. பௌஜ் தனது ஒப்பற்ற தலைவர் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் ஆக்ஞையின் பேரில் தொடங்கப்பட்டது.

எதிரிகள் பர்மா மீது படை எடுக்கப் போவதாய் பயமுறுத்தி வாய்வீச்சு வீசிக்கொண்டிருந்த சமயத்திலே ஆ. ஹி. பௌஜ், நிப்பொன் படைகளுடன் இணைந்து ஜாம் ஜாம் என ஜெயபேரிகை முழங்க தனது 'டில்லி மார்ச்சை, ஆரம்பித்தது.

இதைப்பற்றி ஆ. ஹி. அரசாங்கப் பேச்சாளர் திரு எம். சிவராம் கூறினுர்: அரக்கான் முனையில் போர் ஆரம்பமாகி இருக்கும் செய்தியானது, இந்நூற்ருண் டிலேயே மிகவும் பிரதானமான முக்கிய செய்தி.

1857ம் வருடத்திற்குப் பிறகு இப்பொழுதுதான் பிரிட்டிஷாருக் கெதிராக அமைக்கப்பட்டுள்ள இந்தியப் படைகள் யுத்தகளம் செல்கின்றன. இச்செய்தி இந் தியாவிற்குள்ளும்புறமும் உள்ள இந்தியர்களிடையே மின்சார சக்தி போன்று பரவும். இந்தியாவினுள் புரட்சி யலைகளை நிறைத்துவிடும். கிழக்காசியாவிலுள்ளவர் களைத் தங்களின் முயற்சிகளில் இன்னும் தீவிரப் பங் கெடுத்துக்கொள்ளத் தூண்டும்'' என்ருர்.

யுத்தம் தொடங்கிய அன்றே "தாங் பஜார்" என்ற இடம் கைப்பற்றப்பட்டது. இதை மௌண்ட் பாட்டனின் தலைமைக் காரியாலயமும் ஒப்புக்கொண்டது. கிழக்காசியாவில் வதியும் இந்திய மக்களனைவருக்கும் இச்செய்தி மகத்தான மகிழ்ச்சியை உண்டுபண்ணிற்று. தாங்கள் நீண்ட நாட்களாக எதிர்பார்த்து வந்த இறுதி சுதந்திரப்போர் ஆரம்பமாய் விட்டதாக அவர்கள் கருதினர். ஒருவரையொருவர் சந்திக்குங்கால் இச்செய்தியை ஆனந்தத்தோடு கூறி மங்களம் கொண்டாடினர். இந்தியப் பத்திரிகைகள் இதனைத் தங்கள் முகப்புகளிலே கொட்டை எழுத்துக் களிலே பிரகாசமாகப் பொறித்தன.

'வெற்றி வெற்றி'

இதைத் தொடர்ந்து பர்மாப் போர் முனையிலிருந்து மகிழ்ச்சியும் நம்பிக்கையும் கொள்ளும் முன்னேற்றச் செய்திகளே வந்துகொண்டிருந்தன. படிப்படியாக ஆ. ஹி. பௌஜும், நிப்பொன், பர்மா ராணுவங்களும் எதிரிகளை ஹதம் செய்துகொண்டு கீர்த்தியுடன் முன் னேறிக்கொண்டிருந்தன. இ. சு. படை, தோழப்படை களுடன் சேர்ந்து, நடவடிக்கையிலே ஒளிமிக்க வெற்றிகள் அடைந்திருப்பதற்காக ஸிப்பா ஸாலார் சுபாஷ் சந்திரபோஸ் அரக்கான் பகுதியிலுள்ள ஆ. ஹி பௌஜ் தளபதிக்கு ஒரு பாராட்டுச் செய்தியை அனுப்பினர்.

தமது ராணுவத்தின் வெற்றிகளால் தாம் ஆழ்ந்த மகிழ்ச்சியும் மிகுந்த பெருமையும் கொண்டிருப்பதாய் நேதாஜி தமது செய்தியில் குறிப்பிட்டிருந்ததோடு இந்தப் பாராட்டுதலை போர் முனையிலுள்ள ஒவ்வொரு வருக்கும் தெரிவிக்கும்படியும் கேட்டுக்கொண்டிருந்தார். ஆ. ஹி பௌஜின் சிறந்தசெயல்கள், உலகெங்குமுள்ள

இந்தியர்களுக்கு — தம்மைப்போலவே — மட்டற்ற பெருமையையும், பெருமகிழ்வையும் ஊட்டியிருக்கு மென்று சிபாஹ் சாலார் அதில் தெரிவித்திருந்தார்.

போராட்டம் தொடங்கியதிலிந்து நேதாஜியின் பொறுப்பு அளவுகடந்துவிட்டது. இதுவரை அவர் கிழக்காசியாவில் வதியும் இந்தியர்களை ஒன்றுபடுத்து வதிலும் அவர்களது உணர்ச்சியைப் பெருக்குவதிலும் யுத்த சாதனங்களைத் திரட்டுவதிலும், போர் வீரர்களைப் பழக்குவதிலும்—ஆகிய முன்னேற்பாடுகளிலேயே ஈடு பட்டிருந்தார். போர் தொடங்கிய பின்னரோ, ஆ. ஹி. பௌஜின் பிரதம சேனுதிபதி என்ற முறையில் போர் முனைச்செய்திகளை ஆராய்வதிலும், போரின் அபிவிருத்தி யைக் கவனித்து புதிய திட்டங்கள் வகுப்பதிலும், உத்தரவுகள் பிறப்பிப்பதிலும் அவர் தீவிரமாக ஈடுபட்டு விட்டார்.

ஒருநாள் (11—2—44ந் தேதி) ஒரு நிருபர் நேதாஜி யைப் பேட்டி கண்டார். மிகவும் கெடுபிடியான வேலை களில் இடைவிடாது ஈடுபட்டிருந்தும்கூட, நேதாஜி, சிறிதும் அயர்ச்சியின்றி உற்சாகத்துடன் காணப் பட்டார். 'தோமெல்' யுத்த நிருபர் அவரைப் பேட்டி காணும்போது, அவர் காக்கி உடை (ராணுவ உடை) தரித்திருந்தார்: அவருடைய அறையின் சுவர்களில் எல்லாம் விரிவான பூகோளப் படங்கள் மாட்டப்பட் டிருந்தன. நிருபர் ஆ. ஹி. பௌஜின் ஸிபாஹ் சாலாரை அவரது தலைமைக் காரியாலயத்திலேயே பேட்டி கண்டார்.

அது போழ்து நேதாஜி கூறினர்—பர்மா வந்து சேர்ந்தது முதல், என் கண்கள் அரக்கான் மலைத் தொடரையே நோக்கிக்கொண்டிருந்தன. எனது

எண்ணமெல்லாம் இந்தியாவின் வருங்காலம் பற்றியே சிந்தனை செய்துகொண்டிருந்தது. எனது நோக்க மெல்லாம் ஆ. ஹி. பௌஜை கிழக்கு வாயிலில் கொண்டு சேர்ப்பதிலேயே செலவிடப்பட்டு வந்தது. இப்போது நான் இந்தியாவின் கிழக்கு வாயிலில் நின்றுகொண்டிருக்கிறேன்! என் உணர்ச்சி எப்படி இருக்குமென்பதை நீங்களே ஊகித்து உணரக்கூடும்" என்று விம்மிதத்துடன் கூறினர்.

ஆ. ஹி. பௌஜ் நேர்முகமான போரிலீடுபட்டதை கொண்டாடுவதற்காக பர்மாவில் ஓரிடத்தில் நடந்த பொதுக்கூட்டத்தில் நேதாஜி பேசினர். அதிலவர், இது இந்தியாவின் இறுதியான சுதந்திரப் போராட்ட மாகும். இதிலே ஆரம்ப வெற்றி ஏற்கெனவே நமக்கு கிடைத்துவிட்டது. நமது விடுதலைப் போராட்ட சரித்திரத்தில் ஒரு புது அத்தியாயம் இப்போது அரக்கான் பிரதேசத்திலே வரையப்பட்டு வருகிறது. இந்தப் போரை வெற்றிகாணும்வரை நடத்திச்செல்வ தென தாம் திடசங்கற்பம் செய்துகொள்ளவேண்டும்.

'இந்தியர்களுக்கு இப்போது ஒரே லட்சியந்தான் உண்டு. இந்தியாவுக்குள் முன்னேறிச் சென்று டில்லி மாநகரில் — செங்கோட்டையில் — நமது தேசியக் கொடியை மாண்பு பெறப் பறந்திலகச் செய்வதே அந்தப் பரம லட்சியம். இந்த லட்சியம் கைகூடவேண்டு மென்ருல், நமது ஸ்தூல சக்திகளையும், சூட்சமசக்தி களையும் ஒரே மொத்தமாக இப்பெரும் போரில் ஈடுபடுத்தியாகவேண்டும்.

'தங்களது சொந்த பலம் ஒன்றின் துணைகொண்டே தங்களது மகத்தான லட்சியத்தை நோக்கி முன்னேறிச் செல்வதற்கு இந்தியர் உறுதிகொள்ள வேண்டும்.

நிப்பொன், பர்மா மற்றும் கிழக்காசிய நாடுகள் ஆகிய வற்றின் துணையைக்கொண்டு சுதந்திரம் பெறலாம் என்று இந்தியர்கள் எதிர்பார்க்கலாகாது. நிப்பொனும் இதர ஆசிய நாடுகளும் இந்தியர்களுக்கு எல்லாவித உதவிகளும் அளிக்குமென்பதில் சந்தேகமில்லை. எனினும், இந்தியர்கள் தங்கள் சொந்த பலம் கொண்டே சுதந்திரம் பெறுவதென்று சங்கற்பித்துக் கொள்ள வேண்டும்'' என்ருர் நேதாஜி.

அரக்கான் போர்முனையில் ஆ. ஹி. பௌஜ் அடைந்துவரும் பிரகாசமான வெற்றிகளுக்கு மகிழ்ச்சி தெரிவித்துக்கொள்வதற்காக ஆ. ஹி. பௌஜ் பயிற்சி படையினர் ஒரு அணிவகுப்பு நடத்தினர். இவ் வைபத்திற்கு ஆ. ஹி. அரசாங்க மந்திரிகள், ஆலோசகர்கள், ஆ. ஹி. பௌஜின் உயர்தர உத்தியோகஸ்தர்கள், நிப்பொன் ராணுவ அதிகாரிகள் ஆகியோர் விஜயஞ் செய்திருந்தனர். மரியாதை அணிவகுப்பில் 'சல்யூட்' எடுத்துக்கொண்ட பின், நேதாஜி வீரர்களை நோக்கிக் கூறினர்:— அரக்கான் முனையிலிருந்து கிடைத்துள்ள சந்தோஷச் செய்திகளால் ஏற்பட்ட மகிழ்ச்சியைத் தெரிவிப்பதற்காகவே நீங்கள் அணி வகுத்து நிற்கிறீர்கள். இது உங்கள் மகிழ்ச்சியைத் தெரிவிப்பதற்காகவே தவிர வெற்றியைக் கொண்டாடு வதற்கல்ல; நமது தோழர்கள் நிப்பொன் படைகளுடன் தோளோடு தோள் சேர்த்துப் போரிட்டு அரக்கான் பகுதியில் முன்னேறிக்கொண்டிருக்கிருர்கள்.

'போர்முனையில் யுத்தம் செய்துகொண்டிருக்கும் வீரர்களுடன் நீங்களும் மனத்திலும், உணர்ச்சியிலும் ஆத்மாவிலும் ஒன்றுபட்டு' நிற்க வேண்டும். வாழ்விலும், மரணத்திலும் நீங்கள் அவர்களுடன்

ஒன்றுனவர்கள். எனவே, அவர்கள் உங்களது சொந்த சகோதரர்களைக் காட்டிலும் உங்களுக்கு இனியவர்கள். எனவே நீங்கள் ஒவ்வாருவரும் உங்களது பாசறைக்கு திரும்பிச் சென்றபின், தனியாக இருக்கும்பொழுது அரக்கான் போர்முனையில் போர்புரிந்துகொண்டிருக்கும் உங்கள் தோழர்களைப் பற்றியே சிந்திக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

'சுப ஆரம்பமே பாதிப் பூர்த்தி என்பார்கள். நாம் மங்களகரமாக ஆரம்பித்திருக்கிறோம். எனவே நாம் இந்தியாவுக்குள் முன்னேறிச் சென்றாகவேண்டும்' என்றார் நேதாஜி.

முதல் குண்டைச் சுட்டவர்

பிரிட்டிஷார் மீது முதன் முதல் போர் தொடுத்த ஆ. ஹி. பௌஜ் முதல் பிரிவைச் சேர்ந்த ஒரு லெப்டினண்ட், தலைமைக் காரியாலயத்துக்கு தமது குறிப்பைச் சமர்ப்பித்தார். அதில் அவரும் அவரது சகாக்களும் கொண்டிருந்த ஆர்வமும், தாய்நாட்டின் விடுதலைக்காக தங்கள் உயிரையே பலிதானம் செய்யத் சித்தமாக இருந்த துணிச்சலும் தெற்றென விளங்குவதால் அதை அப்படியே இதன் கீழ் தருகிறோம்:

"பிரிட்டிஷார் மீது தீவிர வெறுப்புணர்ச்சியுடன், எங்கள் தாய்நாட்டின் விடுதலைக்கான இச் சரித்திர பூர்வமான போராட்டத்தில் எங்களுடைய உயிர்களைக் கொடுப்பதற்கு சித்தமாக நானும் எனது தோழர்களும் பிப்ரவரி மாதம் 3-ம் தேதி இரவு புதிடாங்கிற்குத் தெற்கேயுள்ள ஓரிடத்திலிருந்து எங்களுடைய நிப்பொன் தோழர்களுடன் கைகோர்த்துக்கொண்டு புறப்பட்டோம். எங்களுக்கெதிராக பகைவரின் ஏழாவது

டிவிஷன் இருந்தது. லார்டு லூயி மௌண்ட்பாட்டன் பர்மாவைத் திரும்பப் பிடிப்பதற்கான ஒரு எதிர்த் தாக்குதலுக்காக தனது முன்னணிப் படையை இந்த ஏழாவது டிவிஷனைக்கொண்டு பலப்படுத்த எண்ணி இருந்தார்.

"பகைவர் 40 பீரங்கிகளையும் மற்ற ஆயுதங்களையும் கொண்டு எங்கெளுக்கெதிராகத் தாக்கிக் கொண்டிருந் தனர். நிலா வெளிச்சத்தைப் பயன்படுத்திக்கொண்டு நாங்கள் ஒரே மனோதிடத்துடன் எதிரிப் பிரதேசத் தினுள் முன்னேறினோம். சிட்டகாங்கே எங்களது லட்சியம்.

என் மனம் பதைபதைத்தது. என் இரத்தம் மூளைக் கேறியது. நாங்கள், எங்களுடைய பாரத புண்ணிய பூமியில் கால் வைக்கும் நேரம் வந்துவிட்டது. என் னுடையவும் என் தோழர்களினுடையவும் உணச்சியை யும் உற்சாகத்தையும் வாய்விட்டு வர்ணிக்க முடியாது. சிறிது தூரத்துக்கப்பால் பிரிட்டிஷ் இந்தியத் துருப்புகள் எங்களுடைய நடமாட்டமெதையும் உணராமல், நிம்மதி யாகத் தூங்கிக்கொண்டிருந்தனர். திடீரென்று பின்புற மாக ஓரிடத்திலிருந்து துப்பாக்கி வெடிகள் எங்களை நோக்கிக் கிளம்பின. இந்திய சுதந்திர யுத்தம் ஆரம் பித்துவிட்டது.

"இருளில் நாங்கள் எங்களுடைய அக்கினிப் பிரயோகத்தைப் பிரிட்டிஷார்பக்கம் செலுத்தினோம். இந்திய சுதந்திர யுத்த முன்னணியில் ஆஸாத் ஹிந்த் பௌஜ் ஸோல்ஜர்களாகிய நாங்கள் எங்களுடையஜன்ம விரோதிகளான பிரிட்டிஷார் மீது குண்டு மாரி பொழிய ஆரம்பித்தோம். பகைவரின் மீது எங்களுடைய குண்டு மாரி வலுத்தது.போர் தீவிரமடைந்தது. முன்னேறுவது

அல்லது அம்முயற்சியில் மடிவது என்ற ஒரே எண்ணமே எங்கள் மனத்திலிருந்தது.

“நாங்கள் பகைவரை வெகுவாக நெருக்கி முறியடித்தோம். இதைப்போன்ற பரபரப்பான அனுபவம் எங்களுக்கு முன்னெப்போதும் ஏற்பட்டதில்லை. நாங்கள் சகல கஷ்டங்களையும் சமாளித்துப் பகை வரிசையைப் பிளந்துவிட்டோம். இவ்வளவு கஷ்டமானதொரு கடமையில் எங்களை வெற்றிபெறச் செய்ததெது? இதற்குப் பதில் கூறுவது சுலபமாகும். எங்கள் தாய்நாட்டின் சுதந்திரத்தை அடைவதென்ற புனித லட்சியத்தோடு ஆஸாத் ஹிந்த் பௌஜின் பெருமைவாய்ந்த சிப்பாய்களென்ற முறையில் நாங்கள் போரிட்டதே இவ்வெற்றிக்குக் காரணமாகும்.

எங்களுடைய அரிய அனுபவத்தோடு நாங்கள் ஆரம்பித்துள்ள போராட்டத்தில் ‘வாளை வாளால் எதிர்க்க நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் மகத்தான தலைமையின்கீழ் நாங்கள் ஒன்று திரண்டுள்ளோம். எங்களுடைய ‘டில்லி யாத்திரை’ மங்களகரமாக ஆரம்பித்துள்ளது. அது ஜெயத்தோடுதான் முடிவுறும்.”

ஆஸாத் ஹிந்த் பௌஜ் சகல கஷ்டங்களையும் தகர்த்தெறிந்துவிட்டு, 1944-ம் வருடம் மார்ச் மாதம் 18ந் தேதி பர்மா எல்லையைக் கடந்து புனித பாரத பூமியிலே பிரவேசித்து தனது வெற்றிக்கொடியை இந்திய தேசீய மூவர்ணக் கொடியை நாட்டிற்று.

“பூமழை பொழிந்தார் விண்ணோர்
பொன்மழை பொழிந்த மேகம்.”



நேதாஜி போர்ப் பிரகடனம் விடுக்கிறார்



போர்முனையில் நேதாஜி

கொடி உயர்ந்ததையக் குவலயம் புகழ்ந்தது

ஆஸாத் ஹிந்த் பௌஜ் பர்மா எல்லையைக் கடந்து பாரத புண்ணிய பூமியிலே பிரவேசித்துவிட்டது என்ற செய்தியைக் கேள்விப்பட்ட மாத்திரத்திலே, கிழக்காசியாவிலுள்ள முப்பது லட்சம் இந்தியர்கள் மட்டுமேயன்றி, உலகெங்கிலுமுள்ள நீதி, நியாயம் விரும்பும் மக்கள் அத்தனை பேரும் ஆனந்த வாரிதியில் மூழ்கினர். ஆஸாத் ஹிந்த் பௌஜ் இந்தியாவின் ஒரு பகுதியை எதிரிகளிடமிருந்து விடுவித்து, தனது சுதந்திரக் கொடியைப் பிரகாசமாகப் பறக்கவிட்டது. எதிர்காலத்திலே இந்தியா முழுமையும் விடுவித்து, அன்னிய ஆட்சியின் வாடையே இல்லாமல், சுத்த சுதந்திர நாடாக்கும் என்ற நம்பிக்கையை உண்டு பண்ணிற்று.

உலகின் பல பாகங்களிலுமிருந்து நேதாஜிக்கு வாழ்த்துச் செய்திகள். பாராட்டுத் தந்திகள் மகிழ்ச்சிக் கடிதங்கள் வந்து குவிந்தன. அவைகளில் முக்கியமான ஒரு சிலவற்றை மட்டும் இங்கே தருவோம்:

இந்தியாவின் விடுதலைக்காகவும் சுதந்திரத்திற்காகவும் நடைபெறும் வீரப்போரில் இந்திய தேசிய
ராணுவம் அடைந்துள்ள மகத்தான
முஸோலினி வெற்றிகளைக் குறித்து இத்தாலிய
யின் வாழ்துச் அபேதவாதக் குடியரசின் தலைவராகிய
செய்தி சீஞேர் பெலிட்டோ முஸோலினி
ஆஸாத் ஹிந்த் அரசாங்கத் தலைவர்
நேதாஜி சுபாஷ் சந்திரபோசுக்கு ஒரு பிரத்தியேக வாழ்த்துச் செய்தி அனுப்பினார்.

ஆஸாத் ஹிந்த் பௌஜ் அதன் தாய்நாட்டை பிரிட்டிஷ் ஏகாதிபத்திய அடிமை விலங்கிலிருந்து விடுவிக்கும் வகையில், தற்போதைய போரை வெற்றிகரமாக முடிவுறச் செய்யுமென்ற நம்பிக்கையை சீஞேர் முஸோலினி நமது செய்தியில் தெரிவித்திருந்தார். மேலும் அவர் கூறியதாவது:

இத்தாலிய அபேதவாதக் குடியரசு அரசாங்கமும், பொது மக்களும் இந்தியாமீது கொண்டிருக்கும் அடிப்படையான கொள்கை இந்தியா இந்தியர்க்கே' என்பதேயாகும். ஆஸாத் ஹிந்த் பௌஜ் மேற்கொண்டும் மகத்தான வெற்றிகளை அடையவேண்டுமென்று நான் எனது வாழ்த்துதலைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். ரோமில் சிலவருடங்களுக்கு முன்னர் உங்களைச் சந்தித்தபொழுது நான் அடைந்த சந்தோஷமும் குதூகலமும் எனக்கு எப்பொழுதும் ஞாபகத்திற்கு வருகிறது.

நிப்பொன் படையினரின் கூட்டு ஒத்துழைப்புடன் ஆ. ஹி. பௌஜ் இந்தியாவினுள் பிரவேசித்திருப்பதைக் குறித்து ஜெர்மன் அன்னியநாட்டு மந்திரி ஜோக்கிம் வான் ரிப்பன் டிராப் நேதாஜி சுபாஷ்சந்திரபோசுக்குத்தனது வாழ்த்துதலைத் தந்தி மூலம் தெரிவித்திருந்தார். 'கூடிய சீக்கிரத்தில் இந்தியா, பிரிட்டிஷ் தளையினின்றும் பூரணமாக விடுவிக்கப்பட்டே தீரு'மென ரிப்பன் டிராப் அச்செய்தியில் வலியுறுத்தி இருந்தார்.

ரிப்பன் டிராப் வாழ்த்து

நிப்பொனின் வெளிநாட்டு மந்திரி மாமோரு ஷிகெமித்சுவிடமிருந்து சிபாஹ் சாலார் சுபாஷ் பாவுக்கு ஒரு வாழ்த்துச் செய்தி வந்தது. "நிப்பொன் படைகளுடன் தோளோடு தோள் சேர்த்துப் போரிடும் உங்களது வீரம் பொருந்திய துருப்புகள் அடைந்துள்ள சிறப்பான வெற்றிகளுக்காக எனது வாழ்த்துதலை உங்களுக்குச் சமர்ப்பித்துக் கொள்ளுகிறேன். உங்கள் போர் வீரர்கள் தங்களது போர்த் திறமையை நன்கு நிரூபித்துக் காட்டிவிட்டார்கள். தற்போதைய நடவடிக்கை வெற்றிகரமாக முன்னேறி வருவதையும் அதிலேற்பட்டுள்ள புதிய அபிவிருத்திகளையுங் கண்டு நான் மிகுந்த மகிழ்ச்சி யடைகிறேன். உங்களது உயர்ந்த தலைமையில் உணர்ச்சி யூட்டப்பட்டிருக்கும் இந்திய மக்களின் உள்ளங்களிலே, இந்த வெற்றிகரமான போக்கு, புதிய தைரியத்தையும் தன்னம்பிக்கையையும் ஏற்படுத்துமென்பதே என் மகிழ்ச்சிக்குக் காரணம்." என்று குறிப்பிட்டிருந்தார்.

ஷிகெ-மித்சுவின் மகிழ்ச்சி

பாமாவின் நம்பிக்கை

பர்மாவின் அதிபதி பாமா அகில உலகத்திற்கும் வழங்கிய வானுரையில் குறிப்பிட்டார்: இ. தே. ராணுவம் பாரத பூமியில் பிரவேசித்து, எதிரிகளுடன் போரிட்டுக் கொண்டிருப்பதை அறிய அகில இந்தியாவும் எழுச்சியுற வேண்டும். இந்த ராணுவம் இந்தியர்களுக்காகவே போரிடுகிறது. இந்தியாவை இந்தியர்கள் வசம் திருப்பிக் கொடுப்பதற்காக ஆ. ஹி. பௌஜ் இப்பொழுது இந்தியாவுக்குள் பிரவேசித்து பிரிட்டிஷாருடன் போரிட்டுக்கொண்டிருக்கிறதென்பதை எல்லா இந்தியர்களும் நன்கு அறிய வேண்டும். பாரதநாட்டை விடுதலை செய்வதற்காக நடைபெறும் இப் புனிதப் போராட்டத்திலிருந்து, இந்திய மகா ஜனங்களையும் ஆ. ஹி. பௌஜையும் பிரிப்பதற்கு இவ்வுலகிலுள்ள எந்த வல்லரசாலும் ஆகாது'' என்றுரைத்தார் அதிபதி பாமா.

ஸோங்ராம் செய்தி

தாய்லாந்துப் பிரதமர் பீல்டு மார்ஷல் பிபுன் ஸோங்ராம், மேன்மை தங்கிய சுபாஷ் சந்திர போஸின் சிறந்த தலைமையின் கீழ் ஆ. ஹி. பௌஜ், இந்திய பூமியில் பிரவேசித்திருப்பதானது மங்களகரமானதோர் சகுனமாக இருப்பதுடன், அகில ஆசிய மக்களுக்கும் மிகுந்த மகிழ்ச்சியையும், குதூகலத்தையும் கொடுக்கக் கூடிய ஒரு செய்தியாகவும் இருக்கிறது. தாய்லாந்து மக்களின் சார்பாக, இந்த சந்தோஷகரமான சந்தர்ப்பத்தில், நான் எங்களுடைய மனப்பூர்வமான வாழ்த்துதலைத் தெரிவித்துக்கொள்வதுடன், ஆ. ஹி. பௌஜ் மேற்கொண்டும் இந்தியாவினுள் வெற்றிகரமாக முன்னேறி ஒரு வெற்றிகரமான முடிவைக் காணும் வரை, போரை நடத்தப் பிரார்த்திக்கிறேன்.'' எனக் குறிப்பிட்டிருந்தார்.

ஆ. ஹி. பௌஜ் ஏற்கனவே நமது பகைவர்களுக்கு' எதிராக முன்னேறிச் சென்றுகொண்டிருக்கிறது'' என்று நேதாஜி தம்மைப் பேட்டி கண்ட பத்திரிகை நிருபர்களிடம் தெரிவித்தார். மேலும் அவர் ''இந்தியாவை நெருங்க நெருங்க வீரர்களின் உற்சாகமும், மனோதிடமும் பன்மடங்கு அதிகரிக்கின்றன'' என்று நம்பிக்கை தெரிவித்தார்.

''நமது வீரர்களுக்குப் பின் வாங்குதல் என்ற விஷயமே தெரியாது. அவர்கள் ஒன்று முன்னேறுவார்கள். அல்லது தாய்நாட்டின் விடுதலைக்காக மரணத்தைப் புன்னகையுடன் ஏற்பார்கள்'' என்று கூறிய நேதாஜி, 'பின்வாங்குதலைப் பிரிட்டிஷாருக்கே விட்டு விடுவோம்' என ஏளனமாகக் கூறினார்.

அன்னியர் ஆதிக்கத்தினின்று விடுவிக்கப்பட்ட இந்தியப் பிரதேசங்களின் நிர்வாக—பரிபாலனம் பற்றி ஆ. ஹி. அரசாங்க மந்திரி சபை, விடுதலை பெற்ற பல்வேறு திட்டங்களைத் துரிதமாக பிரதேசங்களில் வகுக்க ஆரம்பித்தது. இதன்பொருட்டு ஆட்சிமுறை [புனருத்தாரணம் செய்வதற்காக] 'ஆஸாத் ஹிந்த் தளம்' [Azad Hind Dhal] என்று பிரிவு வகுக்கப்பட்டு, விசேஷமாகத் திறக்கப்பட்ட 'காம்பு'களில் ஏராளமான யுவர்களுக்கு இது சம்பந்தமான பயிற்சிகள் அளிக்கப்பட்டன. பிரிட்டிஷ்அதிகாரத்தினின்று விடுவிக்கப்படும் பிரதேசங்களில், நிர்வாகம்—புனருத்தாரணம் ஆகிய வேலைகளைப் பார்ப்பதற்காக அவர்கள் விரைவில் தயாரானார்கள்.

விடுதலை பெற்ற பிரதேசங்களுக்கு முதல் கவர்னராக, ஆ. ஹி. அரசாங்கம், கர்னல் (பின்னர் மேஜர் ஜெனரல்) ஏ ஸி சட்டர்ஜியை நியமித்தது. அதோடு

மந்திரி சபையும் விஸ்தரிக்கப்பட்டது. மந்திரி சபையில் மேலும் பலர் சேர்த்துக்கொள்ளப்பட்டனர்.

விடுவிக்கப்பட்ட பிரதேசங்களிலுள்ள இந்திய மக்களுக்கு ஆ. ஹி. அரசாங்கம் 4—4—44-ந் தேதி ஒரு பிரகடனம் விடுத்த்து. அது வருமாறு:—

சகோதா, சகோதரிகளே! கிழக்காசியாவிலுள்ள முப்பதுலட்சம் இந்தியர்களின் ஏகோபித்த விருப்பப்படி முன்பு 'சிங்கப்பூர்' என்றிருந்த ஷோனனில், 1943 அக்டோபர் 21-ந் தேதி யன்று ஸ்தாபிக்கப்பட்ட ஆ. ஹி. த. அரசாங்கத்தின் தலைமையின் கீழ், இ. தே. ராணுவமானது எல்லையைக்கடந்து இந்தியப் பிரதேசத்தினுள் வெகுதூரம் முன்னேறியிருக்கின்றது. உங்களுடைய சொந்த அரசாங்கமாகிய ஆ.ஹி.த. அரசாங்கம் ஒரேயொரு கடமையையே நிறைவேற்றும் நோக்கத்திலிருக்கிறது. அதாவது பாரத புண்ணிய பூமியிலிருந்து பிரிட்டிஷ் - அமெரிக்கர்களை ஆயுத பலத்தால் விரட்டியொழித்துவிட்டு, அதன்பேரில் பாரதமக்களின் விரும்பப்படி நிரந்தரமான ஆஸாத் ஹிந்த் அரசாங்கத்தை ஸ்தாபிப்பதே அக்கடமையாகும்.

பிரிட்டிஷ் — அமெரிக்கப் படைகள், இந்தியாவிலிருந்து ஒழிக்கப்படும் வரை அல்லது நிர்மூலம் செய்யப்படும் வரை ஆ. ஹி. த. அரசாங்கம் ஆயுதப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தும்.

இந்தியாவைப் பூரணமாய் விடுவிப்பதற்கான போராட்டத்தை நடத்திக்கொண்டிருக்கும் பொழுதே, ஆ, ஹி. த. அரசாங்கமானது, விடுவிக்கட்ட பிரதேசங்களின் புனருத்தாரண வேலைகளையும் ஜரூராக நடத்தும். ஆ. ஹி. த. அரசாங்கமே பாரத மக்களின் ஒரே சட்ட

பூர்வமான அரசாங்கமாகும். இ. தே. ராணுவத்துக்கும் ஆ. ஹி. த. அரசாங்கத்தினுல் நியமனம் பெற்ற சிவில் உத்தியோகஸ்தர்களுக்கும் சகல உதவியும், ஒத்துழைப் பும் அளிக்குமாறு விடுவிக்கப்பட்ட பிரதேசங்களிலுள்ள இந்திய மக்களே, ஆ. ஹி. த. அரசாங்கம் அழைக்கிறது

விடுவிக்கப்பட்ட பிரதேசங்களிலுள்ள இந்திய மக்க ளின் உயிரையும், சொத்தையும் பாதுகாக்க ஆ. ஹி. த. அரசாங்கம் உத்தரவாதமளிக்கிறது. ஆனுல், நம் விரோதிகளான பிரிட்டிஷ் — அமெரிக்கர்களுக்கோ அல்லது அவர்களுடைய நேசர்களுக்கோ உதவி யளிக்கக் கூடியதும், அல்லது ஆ. ஹி. த. அரசாங்கத் தினுல் ஆரம்பிக்கப்பட்ட புனருத்தாரண வேலேகளுக்கு பங்கம் விளேவிக்கக் கூடியதுமான எந்தவொரு நடவடிக்கையையும் செய்பவர்களுக்கு ஆ. ஹி. த. அரசாங்கம் கடுந்தண்டனே விதிக்கும். நம் விரோதி களேத் தோற்கடிப்பதில் நிபந்தனே யற்ற பரிபூரண உதவியளித்துக்கொண்டிருக்கும் நம் தோழர்களாகிய நிப்பொன் ராணுவத்தினருடன் மனப்பூர்வமாய் ஒத் துழைக்கும்படி இந்திய மக்களே ஆ. ஹி. த. அரசாங்கம் அழைக்கிறது.

கடந்த இரண்டு வருட காலமாக பிரிட்டிஷார் தங்களுடைய படை பலத்தை அமெரிக்கா, ஆஸ்திரே லியா, சுங்கிங்சீனு, கிழக்காப்பிரிக்கா, மேற்காப்பிரிக்கா ஆகிய விடங்களிலிந்து வந்த துருப்புகளேக் கொண்டு பெருக்கி வந்திருக்கின்றனர். ஆகவே ஆ. ஹி. த. அரசாங்கமும் நிப்பன் தாராளமாய் அளிக்க முன்வந்த பரிபூரண உதவியை ஏற்று பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று உணர்ந்தது. நிப்பனுடைய ஆயுதப் படைகள் கிழக்காசியா யுத்தம் ஆரம்பித்தது முதல், பிரிட்டிஷ்—அமெரிக்கர்களின் மீது நிகரற்ற வெற்றிகளே

அடைந்திருக்கின்றன. நம் நேச நாடாகிய நிப்பனின் நிகரற்ற படையுதவியோடு இ. தே. ராணுவம், பிரிட்டிஷ்—அமெரிக்கர்களை ஒழித்து, இந்தியாவின் பரிபூர்ண விடுதலையை நிறைவேற்றுமென ஆ.ஹி.த. அரசாங்கம் திடநம்பிக்கை கொண்டிருக்கிறது.

இந்தியாவில் நிப்பனுக்கு மண்ணாசையோ, அரசியலாசையோ, பொருளாதார ஆசையோ அல்லது ராணுவ ஆசையோ கிடையாதென ஆ. ஹி. த. அரசாங்கம் பூரண திருப்தியடைகின்றது. இந்தியாவுக்கு மட்டுமின்றி, ஆசியாவுக்கே விரோதிகளாக இந்தியாவிலிருக்கும் பிரிட்டிஷ்-அமெரிக்கப் படைகளை ஒழிப்பதில் மட்டும்தான் நிப்பனுக்கு சிரத்தை இருக்கிறதென ஆ. ஹி. த. அரசாங்கம் திருப்தியடைகின்றது. பிரிட்டிஷ், அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் அழிவுமட்டுமே இந்த யுத்தத்திற்கு ஒருமுடிவுகட்டி, உலகிற்கு சமாதானத்தை ஏற்படுத்த முடியும்.

ஒரு சுதந்திர அரசாங்கமென்ற அந்தஸ்திற்கு இணக்கமான முறையில், ஆ. ஹி. த. அரசாங்கமானது பல்வேறு தொகை மதிப்புக்கொண்ட ரூபாய் நோட்டுகளைக் கொண்டு, தனது சொந்த நாணயத்தை வெளியிட ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறது. ஆனல் யுத்த நிலைமை துரிதமாக விருத்தியடைந்து, இந்தியாவினுள் நமது முன்னேற்றம் துரிதமாக ஏற்பட்டிருப்பதனுல் ஆ. ஹி. த. அரசாங்க நாணயத்தை உரியகாலத்தில் இந்தியாவுக்குக் கொண்டுவர இயலாமற்போய்விட்டது. இக் காரணத்தினுல், ஆ. ஹி. த. அரசாங்கமானது, நிப்பன் அரசாங்கத்தினிடம் ஏற்கனவே உள்ள நாணயத்தை [ராணுவ ருபாய் நோட்டுகளை] அதனிடமிருந்து கடனுக வாங்கி, அந்த நாணயத்தை ஒரு தற்காலிக நடவடிக்கையாக உபயோகிக்க வேண்டிய அவசியம்

ஏற்பட்டு விட்டது. ஆ. ஹி. த. அரசாங்கத்தின் சொந்த நாணயம் தயாரானவுடன் நிப்பன் அரசாங்கத்தினிட மிருந்து கடனுக வாங்கப்பட்ட நாணயமானது புழக்கத் திலிருந்து படிப்படியாக வாபஸ் வாங்கப்படும்.

சகோதர, சகோதரிகளே! நம் விரோதிகள் இப் போது பாரத பூமியிலிருந்து விரட்டப்படுகிறபடியால் நீங்கள் முன்னிருந்த நிலேயை—அதாவது சுதந்திர ஸ்திரீ, புருஷர்களென்ற நிலேமையைத் திரும்பவும் அடைந்துகொண்டிருக்கிறீர்கள். உங்களுடைய சொந்த ஆ. ஹி. த. அரசாங்கத்தின் கீழ் ஒன்று திரளுங்கள். அவ்வாறு ஒன்றுதிரளுவதின் மூலம் நீங்கள் புதிதாகப் பெற்ற விடுதலேயைப் பாதுகாக்க உதவி ப்ரியுங்கள்.

[ஒப்பம்] சுபாஷ்சந்திரபோஸ், ஆ. ஹி. த. அரசாங்கத் தலேவர். ஆ. ஹி. பௌஜின் பிரதம சேனுதிபதி.

ஆ. ஹி. த. அரசாங்கம் (மேற்கண்ட) பிரகடனம் விடுத்ததை யொட்டி நேதாஜி நிப்பன், பர்மியப் பத்திரிக்கைக்காரர்களுக்கு பேட்டியளித்தார். அப் பொழுது அவர் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆதிக்கத்தி னின்று விடுவிக்கப்பட்ட இந்திய மகாஜனங்கள் ஒரு புதிய அரசியல் ஒழுங்கை மட்டுமின்றி, ஒரு புதிய பொருளாதார ஒழுங்கையும் அனுபவிப்பரென்று கூறினுர். மேலும் அவர் சொன்னுர்:- திட்டமிடப்பட்ட தொரு பொருளாதார முறையே புதிய பொருளாதார வாழ்க்கையின் அஸ்திவாரமாகும். இந்திய மக்களின் நலன் அத்திட்டத்தைஅடிப்படையாகக்கொண்டிருக்கும். ஒரு திட்டமில்லாவிடின் குழப்பமேற்பட்டு, தனிப்பட்ட வர்கள் கொள்ளே லாபம் தட்ட முயல்வர். ஆகவே, மக்களின் நலனேப் பாதுகாப்பதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன.

நேதாஜி மேலும் கூறினர்: தனிப்பட்ட ஒவ்வொருவருக்கும் அவர்களது அத்தியாவசியத் தேவைகளான உணவு, உடை, கல்வி ஆகியவைகளுக்கு உத்தரவாதமளிப்பதே மூலாதாரக் கொள்கையாகும். மக்கள் சாதாரண வாழ்கையை நடத்தும்படி இவ்வுரிமைகளுக்கு ஏற்பாடு செய்து தருவதே அரசாங்கத்தின் கடமையாகும்.

நேதாஜி முடிவாக, 'ஆ. ஹி. த. அரசாங்கம் விடுத்த முதலாவது பிரகடனமானது, 'இ. தே. ராணுவம். பாரத நாட்டினுள் வருகிற'தென்பதைப் பாரத மக்களுக்குப் பிரகடனப்படுத்தியது. அதன் இரண்டாவது பிரகடனமானது, 'பாரத் மக்கள் எதிர்பார்க்கவேண்டிய தென்ன' என்பதையும், அவர்கள் பிரிட்டிஷ் பிரசாரத்திற்குப் பலியாகாதிருக்கவேண்டு'மென்பதையும் அவர்களுக்கு எசசரிக்கிறது' என்ருர்.

தேசிய விடுதலை
வாரம்

இவ்விதமாகப் போர் முனையிலிருந்து அன்றுடம் மகிழ்ச்சி யூட்டும் வெற்றிகரமான செய்திகள் வந்து கொண்டிருக்கும்பொழுது, தேசிய வாரமும் வந்துசேர்ந்தது. ஏப்ரல்மாதம் 6 வ முதல்ஆரம்பமாகும்இந்தத்தேசீய வாரத்தை இந்தியதேசிய காங்கிரஸ் தனது நிர்மாணத் திட்டங்களை நிறைவேற்றுதற்குரிய ஒரு சந்தர்ப்பமாக உபயோகித்துக்கொண்டு வருவது உலகமறிந்தவிஷயம். ஆனல் ஆ. ஹி. த. அரசாங்கம் தனது கொள்கைகளுக்கேற்ப வேலை முறைகளுக்கிணங்க அப்போது ஏற்பட்டு இருந்த வெற்றிகரமான முன்னேற்றத்திற்கொவ்வ 'தேசிய விடுதலை வார'மாகக் கொண்டாடும்படி கட்டளையிட்டது. அந்த வாரத்தில் கிழக்காசியாவாழ் இந்தியர்கள், விடுதலைபெற்ற பிரதேசங்களில்

நடைபெறவேண்டிய புனர் நிர்மாணத்திற்கு வேண்டிய சக்தி, சாதனங்களைத் திரட்டுவதில் செலவிடவேண்டு மெனக் கேட்டுக்கொண்டது.

தேசிய விடுதலை வாரத்தை ஒட்டி ஆ. ஹி. அரசாங்கம் விடுத்த வேண்டுகோள்

இந்தியாவின் விடுதலை லட்சியத்திற்காக தங்களுடைய பங்கைச் செலுத்த ஆவல்கொள்ளும் திடகாத்திரமான சகல இந்தியர்களிடமிருந்தும் மனுக்கள் வரவேற்கப்படுகின்றன. இந்தியாவின் புனருத்தாரண வேலைகளுக்கு கைத்தொழிலாளர்களும் டெக்னிகல் வேலையில் திறமை வாய்ந்தவர்களும் டாக்டர்கள், இஞ்சினியர்கள், மின்சார வேலையாட்கள், டிரைவர்கள், பிட்டர்கள் வெல்டர்கள், ஜாய்னர்கள், நர்சுகள், டிரஸ்ஸர்கள், போலீஸ்காரர்கள், விவசாய நிபுணர்கள், பால்பண்ணையாளர்கள், தொழிலாளர்கள் மற்றும் பல வேலையாட்களும் உடனே தேவை. வேலைக்கு மனுச்செய்துகொள்ளுகிறவர்கள் தங்களுக்கு அருகிலுள்ள இ. சு. சங்கத்தில் பதிவு செய்துகொள்ள வேண்டியது.

ஒவ்வொரு இந்தியரும், அவரவர் கடமையைச் செய்யவேண்டுமென்றி நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் எதிர்பார்க்கிறுர்.

ஆ. ஹி. பௌஜிற்கு சப்ளைகள் வாங்குவதற்கு ஏழைகளும் பணக்காரர்களும் உடனே தயக்கமின்றி, தாராளமாக நன்கொடைகள் வழங்கவேண்டும். ஆ. ஹி பௌஜ் வீரர்கள், இந்திய விடுதலைப் போராட்டத்தில் தங்கள் உயிர்களை அர்ப்பணம் செய்துகொண்டிருக் கிறுர்கள். இம்மகத்தான லட்சியத்திற்கு உங்களுடைய

சகலத்தையும் தியாகம் செய்யுங்கள். எவ்வளவுக் கெவ்வளவு அதிகமாகவும், சீக்கிரமாகவும் நீங்கள் உதவிபுரிகின்றீர்களோ, அவ்வளவுக்கவ்வளவு சீக்கிரம் வெற்றியைக் காணுவீர்கள்.

'தாராளமாக நன்கொடைகள் வழங்கி, உங்களைப் பாரதமாதாவின் தகுதிவாய்ந்த புத்திர—புத்திரிகளாக நிரூபித்துக் காட்டுங்கள்.

கிழக்காசியா முழுமையும் மேலே கண்ட கோரிக்கைகளுக்கிணங்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப் பட்டன. ஒவ்வோரிடத்திலும் பொதுக்கூட்டங்கள்! பொதுக்கூட்டங்களுக்கு மக்கள் திருவிழாவுக்குக் கூடுவதைப்போல, கோலாகலமான குதூகலத்துடன் கூடினர். தேசிய விடுதலை வாரத்தையொட்டி ஆ. ஹி. அரசாங்கம் விடுத்த கட்டளை விளக்கிக் கூறப்பட்டது.

'ஆட்கள், பணம், பொருட்கள் அதிகமாகவேண்டும் என்ற நேதாஜியின் வேண்டுகோள், பத்திரிகைகள், சுவரொட்டிகள், சினிமா ஸ்லைடுகள் எங்கு பார்த்தாலும் காட்சியளித்தது. சுருங்கக்கூறுமிடத்து கிழக்காசியாவிலே இந்தியர்கள் வாழுமிடங்களிலெல்லாம் இதே பேச்சு—சிந்தனை!

தேசிய விடுதலை வாரத்தை ஒட்டி நடைபெற்றதொரு கூட்டத்திலே இ. தே. ராணுவ தலைமைக் காரியாலயத் தலைவர் கர்னல் பான்ஸலே பேசும்போது கூறினார்:

பயபக்தியுடன் கூடியதொரு சங்கற்பம் செய்து கொள்ளுவதற்கு ஓர் அரியதருணம் கிடைத்திருக்கிறது. இந்திய விடுதலைப் போரின் துரித வெற்றிக்காக எல்லாவித முயற்சிகளையும் செய்வதென்ற பிரதிக்ஞை

யைப் புதுப்பித்துக் கொள்வது இன்று இந்தியர்களின் முக்கிய கடமை,

பாஞ்சாலப் படுகொலையைப் பற்றி விவரித்துவிட்டு மேலும் அவர் கூறினார். 'நமது முன்னோர்கள் சிந்திய ஒவ்வொரு சொட்டு ரத்தமும், இப்பொழுது புனர் ஜென்மம் எடுத்து பிரிட்டிஷாரின் எதிரிகளாக நின்று பழிவாங்கக் காத்துக்கொண்டிருக்கிறது.

'பாரதமாதாவின் விடுதலை ராணுவம், இந்தியப் பூமியில் போரிட்டுக் கொண்டிருக்கிறதென்பதை எல்லா இடங்களிலுமுள்ள சகல இந்தியர்களும் உணர வேண்டும். போரிட்டுக்கொண்டிருக்கும் சகல நாட்டினரின் நடவடிக்கைகள் யாவும், போரின் முன்னணியிலுள்ள ராணுவத்திற்குரிய தேவையைக் குறித்தே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஒவ்வோர் இந்தியரும் தான் ஒரு சுதந்திர நாட்டுப் பிரஜை என்ற ஹோதாவில், தனது பொறுப்பை நன்கு உணர்ந்து அதன்படி நடக்கவேண்டும்.

'நமது ராணுவம் இந்திய விடுதலைக் கொடியைப் பாரதபூமியில் பறக்கவிட்டிருக்கிறது. அது மேலும் முன்னேறிக்கொண்டுமிருக்கிறது. ஆகவே வெற்றியை உறுதிப்படுத்துவதற்குச் சகல வழிகளிலும் பாடுபட வேண்டும்'' என்று கேட்டுக்கொண்டார்.

வெற்றிமேல் வெற்றி

மேலும் மேலும் போர்முனையிலிருந்து வரும் செய்திகள் மகிழ்ச்சியும் நம்பிக்கையும் கொள்ளத்தக்கனவாகவே இருந்தன. ஒவ்வொரு நாளும் புதிய புதிய வெற்றிகரமான தகவல்களே வந்துகொண்டு இருந்தன ஆ. ஹி. பௌஜ் திட்டவட்டமாக இந்தியாவினுள் முன்னேறிக்கொண்டிருந்தது. பத்திரிகைகளெல்லாம்

தங்கள் பிரதான பக்கங்களிலே ஆ. ஹி. பௌஜின் பிரதாபமான செய்திகளையே முக்கியமாகப் பிரசுரித்தன. அவை மக்களின் உள்ளங்களிலே எழுப்பிய உணர்ச்சிப் பெருக்கையும், ஊக்கத்தையும் வார்த்தைகளால் வருணிப்பது இயலாத காரியம், பத்திரிகைகளை எடுத்தவுடன் பின்வருவன போன்ற செய்திகள் கண்களை வசீகரிக்கும்.

''காபா பள்ளத்தாக்கிலுள்ள எதிரிகளின் முக்கியக் கோட்டையான டாமு நம் கைவசமாகிவிட்டது.'

'இந்திய பர்மா எல்லையிலுள்ள தற்காப்பு ஸ்தானங்கள் அனைத்திலும் மிகப் பலம் வாய்ந்த சிக்கா கோட்டை கைப்பற்றப்பட்டது.'

'முக்கோண மலைக்கோட்டையான தெக்னு பூரை நமது படைகள் கைப்பற்றின.'

இவ்வாறாக ஆ. ஹி. பௌஜ் நிப்பொன் கூட்டுப் படைகள் ஒவ்வொரு முக்கிய ஸ்தானங்களாகக் கைப்

கோஹிமா வீழ்ச்சி

பற்றிக் கொண்டே சென்று 8–4–44ல அன்று இம்பால்—தீமாப்பூர் நெடும் பாதையிலுள்ள பிரதான தளமாகிய கோஹிமாவைக் கைப்பற்றின.

இது சாமானியப்பட்ட வெற்றியன்று. கோஹிமா விடுவிக்கப்பட்டது, உண்மையிலேயே மகத்தான சம்பவமாகும். ஆ. ஹி. பௌஜ் வீரர்களிடையே இது பிரமாதமான உற்சாகத்தையும் கரைகடந்த நம்பிக்கையையும் உண்டுபண்ணிற்று.'

“கடந்த மூன்று வாரங்களுக்கு முன்னர் இந்திய விடுதலை ராணுவம் அஸ்ஸாம் எல்லைப்புறத்தைக் கடந்ததில் இருந்து ஆ. ஹி. பௌஜ் நிப்பொன் கூட்டுப் படைகள். பிரிட்டிஷாருக்குக் கொடுத்த முதல்தரமான அடி கோஹிமா வீழ்ச்சியாகும் என்று கூறினார் பிரசார மந்திரி எஸ். ஏ. ஐயர்.

கோஹிமா வீழ்ச்சியானது பிரிட்டிஷாருக்கு சாமானியப்பட்ட நஷ்டமன்று. ஹூக்காங் பகுதியில் வைக்கப்பட்டிருந்த ஜெனரல் ஸ்டில்வெல் படைகளுக்கும், இந்தியாவின் உள்ளிருந்த பிரிட்டிஷ் படைகளுக்குமிடையே இருந்து வந்த தொடர்பை அறுத்து விட்டது. மேலும் இம்பால் வீழ்ச்சி நிச்சயமென நம்பிக்கை ஊட்டியது.

இதைப்பற்றி ஆ. ஹி. பௌஜின் முன்னேற்றத் தலைமைக் காரியாலயப் பேச்சாளர் மேஜர் பி. கே. சைகால் கூறினார்:—

‘மேற்காப்பிரிக்காவிலிருந்தும், சுங்கிங்கிலிருந்தும் கொண்டுவரப்பட்டுள்ள துருப்புகளைக் கொண்ட பிரிட்டிஷ்—அமெரிக்கர்களுக்கெதிராக இந்திய—நிப்பொன்—பர்மிய கூட்டுப்படைகள் அடைந்துள்ள வெற்றிகளில் கோஹிமாவின் வீழ்ச்சி நமக்கு முதல் தரமான வெற்றியாகும்.

கோஹிமா நம்மால் கைப்பற்றப்பட்டதானது மௌண்ட்பாட்டனுக்கு பேரதிர்ச்சியைக் கொடுத்திருக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. அவர் அந்த அதிர்ச்சியிலிருந்து தெளிவடைவதற்கு சில தினங்களாவது வேண்டும்.

கோஹிமா வீழ்ச்சியால் ஒரு முக்கிய சப்ளைத் தளம் நஷ்டமாகிவிட்டதை அவர் நன்றாக உணர்வார். இந்திய நிப்பொன்— பர்மிய நேச ராணுவத்தினர்களாகிய நமக்கு இவ்வெற்றியானது பொது விரோதிக்கெதிராக நடைபெறும். இப்போது யுத்தத்தில் இந்தியா நிப்பொன் பர்மா ஆகிய நாடுகள் எவ்விதம் ஒற்றுமையாக இருக்கின்றனவென்பதற்கு ஒரு அத்தாட்சியாக விளங்குகிறது.

இம்மூன்று ராணுவத்தின் கூட்டு நடவடிக்கையின் பயனாகக் கிடைத்துள்ள முதல் முக்கிய வெற்றியே கோஹிமாவின் வீழ்ச்சியாகும். தற்போதைய சம்பவங்களின் போக்கானது டில்லியிலுள்ள மௌண்ட்பாட்டனின் தலைமைக் காரியாலயத்தினர்களை மிகுந்த குழப்பத்திற்குள்ளாக்கி இருக்கிறதென்றே நான் நம்புகிறேன்.

'பிரிட்டிஷ் ஏகாதிபத்தியக் கொடுமையிலிருந்து இந்தியாவை விடுவிக்க உறுதிகொண்டு டில்லி செங்கோட்டையை நோக்கி முன்னேறிக்கொண்டிருக்கும் ஆ. ஹி. பௌஜின் 'டில்லி மார்ச்' ஆரம்பமாகியுள்ளது. இனிமேல்தான் அதன் முன்னேற்றம் படிப்படியாக அபிவிருத்தி அடையவேண்டும்.

மௌண்ட்-பேட்டனின் வெளியேற்றம்

மேஜர் சைகாலின் நம்பிக்கை தவறானதல்லவென்று மட்டும் கூறினால் போதாது. அது 'மிகுந்த தீர்க்கதரிசனம் கொண்டதென்று கூற வேண்டும். கோஹிமா வீழ்ச்சியடைந்த பத்து நாட்களுக்குள் நேதாஜி கூறுவது போல 'நெடும் பெயர் வாலா' அட்மிரல் லார்டு லூயிஸ் மௌண்ட்பாட்டன், பின்வாங்கினார் என்றசெய்தி வெளியாயிற்று. அதாவது

டில்லியை விட்டு மௌண்ட்பாட்டன் கண்டிக்குக் கிளம்பினர். கிழக்காசியாவில் நடைபெற்றஇ. சு. போராட்டத்திலே மௌண்ட்பாட்டன் டில்லியைவிட்டு வெளியேறியதைப்போல குதூகலமளித்த செய்தி வேறெதுவும் கிடையாது. இந்திய—நிப்பொன்— பர்மியக் கூட்டுப் படைகளின் பிரகாசமான வெற்றியாக அது கொண்டாடப்பட்டது.

லார்டு மௌண்ட் பாட்டன் புது டில்லியிலுள்ள அவரது தலைமைக் காரியாலயத்தை இலங்கையின் மத்திய பாகத்திலுள்ள கண்டிக்கு மாற்றிக்கொண்டு விட்டார் என்று புதுடில்லி அறிக்கை கூறிற்து.

இது பர்மாவைத் திரும்பக் கைப்பற்றுவது என்ற முயற்சியிலே மௌண்ட் பாட்டன் தோல்வியடைந்து விட்டாரென்றே எண்ணப்பட்டது. இது கிழக்காசியா வாழ் மக்களிடையே—முக்கியமாக அரக்கான் போர் முனையிலும்—மிகுந்த குதூகலத்தையும், நம்பிக்கையையும் அளிப்பதாக இருந்தது.

இதைப்பற்றி ஆ ஹி அரசாங்கப் பேச்சாளர் ‘தோமெய்’ நிருபரிடம் கூறியதாவது :—

மௌண்ட் பாட்டன் அநேகமாய் அவமானத்திற்குள்ளாகி, அவருடைய பதவியை விட்டே விலக்கப்பட்டு விட்டாரென்றே கூறலாம். அல்லது அவர் கட்டாயத்தின் பேரில் விடுமுறை பெற்றுக் ககாண்டு இந்தியாவுக்கு வெளியில் அனுப்பப்பட்டு விட்டாரெனக்கூறலாம். அது எங்ஙனமிருப்பினும் பிரிட்டிஷ்—அமெரிக்கரின் தென் கிழக்காசிய ராணுவ தலைமைப் பீடத்திலிருந்து அவரது பெயர் திட்டவட்டமாக மங்கிவிட்டது.

மேலும் அவர் ஹாஸ்யமாகக் கூறினர் :—

மௌண்ட் பாட்டன் திடீரென டில்லியிலிருந்து கண்டிக்குப் போயிருப்பதானது, 1942 ஆரம்பத்தில் வேவல் சிங்கப்பூரிலிருந்து சுரபாயாவுக்கு ஓடியதையே ஞாபகமூட்டுகிறது. அடுத்தபடியாக நாம் மௌண்ட் பாட்டனைப் பற்றிக் கேள்வியுறக்கூடிய செய்தியானது: 'அவர் ஆடம்பரத்தோடு மன்னரால் வரவேற்கப்பட்டு பின்வாங்குதலைப் பாராட்டும் உயர்தரப் பதக்கம் வழங்கப்பட்டா' ரென்பதாக இருக்கலாம் என்ருர்.

மேற்கண்ட உத்வேகமூட்டும் செய்தி வந்தது. இச் செய்தி இந்திய மக்களிடையே உண்டு பண்ணிய

ஆ. ஹி. அரசாங்கம் பாரத பூமிக்கு மாற்றப்படும்

எழுச்சியை எவ்வாறு எழுதிக்காட்ட முடியும்? இ. தே. ராணுவத்தின் பிரதம சேனுதிபதியான நேதாஜி, ஒரு பத்திரிகை மகாநாட்டிலே இதை வெளியிட்டார். இந்தியப் போர்முனையின் பல்வேறு பகுதிகளிலும் இந்திய நிப்பொன் ராணுவங்கள் அடைந்துள்ள வெற்றிகரமான முன்னேற்றம் பற்றி அவர் தமது திருப்தியையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொண்டார்.

நேதாஜி மேலும் கூறினர் :—

"போரின் ஆரம்பக் கட்டத்தில் வெற்றியடைவதின் முக்கியத்துவத்தை நான் எப்போதும் உணர்த்தி வந்திருக்கிறேன். ஆனல் அவர்கள் அதே சமயம் எதிர்காலத்தில் எவ்விதக் கஷ்டங்களையும் கடும் போர்களையும் சமாளிக்கக்கூடிய திட உறுதியோடு தொடர்ந்து வெற்றி பெற்றுக்கொண்டே போகவேண்டுமென்பதையும் நான் சுட்டிக்காட்டியுள்ளேன்" என்ருர்.

“யுத்தம் அபிவிருத்தி அடைந்துகொண்டிருக்கும் பொழுதே ஆ. ஹி. த. அரசாங்கம் பாரத பூமிக்கு மாற்றப்படுமா?” என்று கேட்டதற்கு, “ஆம்” என்று நேதாஜி பதிலளித்தார். “கூடிய சீக்கிரம் இந்திய மக்களுக்கு இந்தியாவினுள்ளேயே சொந்த சுதந்திர அரசாங்கம் ஏற்படுமென்று நேதாஜி கூறினுர்.

மேலும் அவர், “வழக்கம்போலப் பிரிட்டன் தனது சுட்டெரிக்கும் கொள்கையைப் பின்பற்றக் கூடுமென்று கருதப்படுவதால், நாட்டை அழிவினின்று சீர்படுத்து வதற்காக, அதற்குரிய ஆட்களை ஆ. ஹி. அரசாங்கம் ஏற்கனவே பயிலுவித்திருக்கிறது. பற்பல சேவைத் துறைகளிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்கள் ஆஸாத் ஹிந்த் தளத்தைச் சேர்ந்தவர்கள் என்ற முறையில் முற்றிலும் ராணுவ தோரணையிலான பயிற்சியைப் பெற்றிருக்கின்றனர். ஜான்ஸி ராணி ரெஜிமெண்டும் இந்த ஸ்தாபனத்தின் கீழ் வைக்கப்பட்டிருக்கிறது” என்ருர் நேதாஜி.

விடுவிக்கப்பட்ட சுதந்திர இந்தியாவில் கையாளப்படும் நிர்வாகக் கொள்கையை விவரித்து நேதாஜி கூறியதாவது:—

“ஒவ்வொரு ஜில்லாவிலும் ஆங்காங்குள்ள நிலைமைகளுக் கேற்ப விசேஷ கவனம் செலுத்தப்படும். பழைய நிர்வாக முறையிலிருந்து தீவிர மாற்றங்கள் எதுவும் செய்யப்படுவதைக் கூடியவரை தவிர்க்க முயற்சிக்கப்படும். மதம் சம்பந்தப்பட்ட வரையில் ஒவ்வொருவரும் தனது சொந்த மதத்தைக் கடைப்பிடிக்க உரிமையுண்டாதலால், இது சம்பந்தமான விஷயத்தில் அரசாங்கம் தலையிடாது. அடுத்தபடி ஜாதி சம்பந்தப்பட்ட வரையில், ஜாதிப் பாகுபாடு முறை யென்பதாக ஒன்று

இந்தியாவில் இருப்பதால் உலகம் கருதும்படி நேரிட்ட தெனில், பிரிட்டன் தனது பிரித்தாளும் முறையை அமுல் நடத்துவதற்கேதுவாக ஜாதிப் பாகுபாட்டு முறையைப் பற்றி வெகுவாகப் பிரசாரம்செய்து வந்ததி ஞலேயாகும்.

'ஆனல் ஜாதிப் பாகுபாட்டு முறையை ஆட்சேபிக்கும் அந்தரங்கபூர்வமான மனப்போக்கு இந்தியாவில் ஏற்பட்டிருக்கிறது. எனினும், இந்தியாவிலுள்ள இந்தியர்களிடையே ஜாதி-மதப் பிணக்கு இருப்பதும், இந்தியாவுக்கு வெளியே உள்ள இந்தியர்களிடையே அந்தப் பிணக்கு இல்லாதிருப்பதுமே பிரிட்டிஷ் சூழ்ச்சியை விளக்குகிறது.

"இந்திய மகாஜனங்களின் நலனைப் பலிகொடுத்து பிரிட்டனுனது விசேஷ உரிமைகளைக் கொண்ட ஒரு சில இந்தியர்களையே ஆளுகிறது. பொதுவாக இந்திய மக்களை விடுவிப்பதே ஆ. ஹி. த. அரசாங்கத்தின் நோக்கமாகும். இதற்கு அரசியல் புரட்சியோடு, சமூகப் புரட்சியும் இன்றியமையாததாகும்."

இ. தே. ரா-வின்
இணையற்ற வீரம்

ஆ. ஹி. பௌஜ் நடத்திய வீரப்போராட்டத்தைப் பற்றி விரித்துரைக்க என்னல் இயலாது. அதில் சம்பந்தப் பட்டவர்கள் தான்—முக்கியமாகப் போர் வீரர்களே தான்—அதை விவரிக்க இயலும். இதற்கு முன்னே உள்ள இரண்டு அத்தியாயங்களிலும் - போர் என்ற தலைப்பு கொடுக்கப்பட்டிருந்தும் - போரைப் பற்றிக் கூருமல், போரினல் ஏற்பட்ட - போரின் முன்னேற்றத்தை எடுத்துக் காட்டக்கூடிய - நிகழ்ச்சிகளே தொகுத்து உரைக்கப்பட்டிருக்கின்றன. எனவே அரக்கான் போர் முனையிலிருந்து யுத்தச் செய்திகளையனுப்பும் வேலையை மேற்கொண்டிருந்த திரு. ஒய். ஹயாஷி என்பார் கூறியவற்றிலிருந்து முக்கியமான பகுதியை இங்கு

எடுத்துக்காட்ட வேண்டியது அவசியமென நினைக்கிறேன்.

முதலில் அரக்கான் பிரதேசத்தைப் பார்ப்போம். ஏனெனில் யுத்தப் பிராந்தியத்தின் அமைப்பைத் தெரிந்து கொண்டால்தான் யுத்தத்தின் கடுமையை அறிந்துகொள்ள முடியும். ஹயாஷி கூறுகிறார் :-

அரக்கான் கடற்கரையோரப் பிரதேசங்களின் இயற்கை நிலைமைகளை சற்று விவரிக்கிறேன். இதை ஒரே வாக்கியத்தில் கூறுவதெனின், சிறு சிறு தீவுகளை ஒரே கூட்டாகக் கொண்டதே அரக்கான் என்பதாகும், 'பரந்த பூமி' அல்லது 'நீண்ட நிலவெளி' போன்ற பதங்களை அரக்கான் சம்பந்தப்பட்ட வரையில் உபயோகிக்க முடியாது. அத்தீவுகளானவை சிறிய நீரோடைகள் அல்லது ஆறுகளால் பிரிக்கப்படுகின்றன. மலையோரங்களிலுள்ள மிகச்சிறிய ஓடையில் கூடச் சமுத்திர அலையின் ஏற்றத் தாழ்வுகளினுடைய பலனைக் காணலாம். குறிப்பிட்ட சிலமணி நேரங்களில் ஓடைகளானவை சாதாரணமாக ஆட்கள் நடந்துசென்று கடக்கக்கூடிய அளவிற்குத் தண்ணீர் கொண்டிருக்கும். இந்துமகா சமுத்திரத்தின் அலைகள் பொங்கியெழுந்து நீரோடைகளில் எதிர்த்துப் பாயும்போது, அவற்றைக் கடக்க ஒரு சிறிய கூண்டுபோன்ற ஓடத்திற்காக மணிக் கணக்கில் அங்குமிங்கும் அலைந்து கொண்டிருக்க வேண்டும். அவ்வோடைகள் அல்லது ஆறுகள் சாதாரணமானவைகளல்ல. சேறு இடுப்புவரையெழும். தவிர ஆற்றின் இரு மருங்கிலும் மைல் கணக்கான நீளத்திற்கு ஆட்கள் பெரும்பாலும் செல்லமுடியாத, அடர்ந்த புதர்கள் மண்டிக்கிடக்கின்றன.

அரக்கான் கரையோரப் பிரதேசத்தில் இவ்வித நீரோடைகள் தொடர்ச்சியாயிருப்பதால் மோட்டார்

செல்லக்கூடிய பாதை எதையும் காணமுடியாது. மழை காலத்திலோவெனில், அரக்கான் முழுவதும் சேறு நிறைந்த ஒரு பெரிய ஜலமண்டலமாகிவிடும்.

இவையெல்லாவற்றிற்கும் மேலாக அரக்கான் காடுகள் உலகத்தில் பெயர் போனவையாகும். கரையோரப் பிரதேசம் நெடுகவுள்ள மலைகள் – மாயு மலைத் தொடரும் சரி, அல்லது மௌடாங்கிலும் சரி அவ்வளவு உயரமானவையல்ல. ஒரு சில மலைகள் மட்டுமே சில ஆயிரம் அடி உயரத்திற்கு மேல் வளர்ந்திருக்கின்றன. ஆனால், காடுகளின் அடர்த்தியோ மானிடனின் பாதையை மறுக்கின்றது. இக்காடுகளில் நெடுகிலும் பாதைவெட்டிக் கொண்டே செல்லுவதென்றால் களைப்பு மனிதசக்தியை மீறிவிடும். எனினும்,இந்திய, நிப்பொன் படைகள் இத்தடையைக் கடந்தால் மட்டுமே தாக்குதலை மிகவலுவோடும், திறமையோடும் நடத்தமுடியும். படுக்க இடமின்றி கூட்டங் கூட்டமாக வனாந்திரக் கொசுக்கள் வந்து கடிக்கவும், இரவு முழுதும் புலி முதலிய காட்டு மிருகங்களினால் தொந்தரவேற்படக் கூடியதாயிருக்கு மொரு வனாந்திரத்தில் உறங்குவதை நீங்கள் எங்ஙனம் விரும்புவீர்கள்? உங்களது உடலில் பாதியை மறைக்கக் கூடியதான சேற்றுப் பிரதேசத்தில் போராடிக்கொண்டு முன்னேறுவதை நீங்கள் எங்ஙனம் விரும்புவீர்கள்? இவ்வளவு ஆபத்தான ஓடைகளில் ஒரு காலடி தவறி வைத்துவிட்டால் உடல் பூராவும், தலையுங்கூடச் சேற்றிற்கடியில் பாதாளம் சேர்ந்துவிடும்.

அரக்கான் எல்லைப் பிரதேசத்தில் ஆ. ஹி. பௌஜ் உத்தியோகஸ்தர்களும், சிப்பாய்களும் பிரிட்டிஷார்மீது அடைந்த முதலாவது மகத்தான வெற்றி சுலபமாக அடையப்பெற்றதல்ல. இவ்விதமான இயற்கைத்

தடங்கல்களையெல்லாம் தாண்டிச்செல்ல, அவர்களுக்கு, மகத்தான உடல்பலமும், மனோபலமும் வேண்டியிருந்தது.

மேலும் திரு. ஹயாஷி, ஆஸாத் ஹிந்த் பௌஜ் ஆபீசர்கள், சிப்பாய்களின் போருணர்ச்சியையும், விடுதலை வேட்கையையும், உயிரைத் திரணமாக மதித்து பாயும் வீர பராக்கிரமத்தையும் விவரிப்பதைக் கேளுங்கள் :

'அரக்கான் போர்முனையிலிருந்து யுத்தச்செய்திகளை அனுப்பும் வேலையை நான் செய்து வந்தேன். புதிடாங்கிற்கு வடக்கே ஸின்ஸ்வேயா பள்ளத்தாக்கில் பிரிட்டிஷ் 7-வது டிவிஷன், இம்பீரியல் நிப்பொன் படைகளாலும், இந்திய தேசிய ராணுவத் துருப்புக்களாலும் நிர்மூலஞ் செய்யப்பட்டதை நான் பார்த்தேன். அக்யாபைத் திரும்பப் பிடித்து, அரக்கான் கரைவழியாக பர்மாமீது தாக்குதலை நடத்தும் முயற்சியில் பிரிட்டிஷார் இரண்டாவது முறையாக அடைந்த தோல்வியாகும் அது. அதேசமயம் பிரிட்டனுக்கெதிரான ஆயுதப் போராட்டத்தில் ஆ. ஹி. பௌஜ் அடைந்த முதலாவது வெற்றியுமாகும் அது.

அவ்வெற்றியானது, இ. சு. யுத்தத்தை அரக்கான் எல்லை வழியாக இந்தியாவினுள் நடத்திச்சென்ற வீர பாரதப் புலவர்களுக்கு மகுடமிட்டது. ஆ. ஹி. பௌஜ் உத்தியோகஸ்தர்களும், சிப்பாய்களும் பிரிட்டிஷாருக்கெதிரான போரில் உயிரைத் திரணமாக மதித்து வீரத்தோடு பாய்ந்ததை நான் கண்ணாரக் கண்டேன். இவ்வருடம் (44-ம் வருடம்) பிப்ரவரி, மார்ச்சில் அரக்கான் போரில் ஆ. ஹி. பௌஜ் அடைத்த மகத்தான வெற்றிகளுக்குப் பிரிட்டிஷ் படைகளோ, பிரிட்டிஷ்

ராணுவத்திலுள்ள இந்தியத் துருப்புக்களோ அறியாத ஒரு ஆச்சரியமான காரணமிருக்கிறது. ஆ. ஹி. பௌஜைச் சேர்ந்த எல்லோரிடையேயுமுள்ள மகோன்னதப் போருணர்ச்சியேயாகும்.

நான் போர்முனையில் அந்தந்த ஸ்தலங்களிலிருந்தபடியே எனது குறிப்புக்களை என்னால் கூடிய வரை எழுதிக்கொண்டு வந்திருக்கிறேன். முன்னணியில் போர்புரியும் ஆ. ஹி. பௌஜைப் பற்றி எனது அனுபவங்களை அப்படியே இங்கு தருகிறேன். நான் ஆ.ஹி. பௌஜ் வீரர்களுடனேயே உண்டும் உறங்கியும் இருந்து வந்திருக்கிறேன். அநேகமாய் அவர்கள் ஒவ்வொருவருடனும் நான் சம்பாஷித்திருக்கிறேன். போர்முனையில் அவர்கள் முன்னேறியபொழுது அவர்களுடனேயே நானும் சென்றேன்.

ஆறுமாத காலமாக நான்கூடவிருந்து பழகிய அந்த ஆ. ஹி. பௌஜ் உத்தியோகஸ்தர்கள், சிப்பாய்கள் ஆகியோரிடமிருந்து ஒரு சுதந்திர யுத்தம் எவ்வளவு அழகும், புனிதத் தன்மையும் வாய்ந்ததென்பதைக் கண்டேன். முப்பத்தெட்டுக் கோடி பாரத மக்களுக்கும் பெருமையையும், கௌரவத்தையும் திரும்ப அளிக்கும் விடுதலையைப் பெருவதற்காக அந்த வீர பாரதப் புதல்வர்கள் தங்களுடைய சர்வபலத்தையும் உபயோகிப்பதையும், தங்களுடைய தாய்நாட்டின் புனித லட்சியத்தில் அவர்கள் பரிபூரணமாக பக்தி செலுத்தியதையும் நான் எனது கண்களாலேயே—நேரிலிருந்து—கண்ட பிறகு ஆ. ஹி. பௌஜ் இன்று நடத்தும் வீரப் போர் புனிதமானதென்று கூருமலிருக்க முடியவில்லை.

அவர்களுடைய ஒவ்வொரு நடவடிக்கையிலும் பக்தியையும், நம்பிக்கையையும் சுறுசுறுப்பையும்

கண்டேன். அவர்களுடைய மனதில் ஒருவிதமான கவலையோ அல்லது அச்சமோ துளிக்கூடக் கிடையாது.

ஷோனனிற் போலவே தாய்லந்திலும், பர்மாவிலும் ஜான்ஸிராணி பயிற்சி முகாம்கள் திறக்கப்பட்டு ஆயிரக் கணக்கான மாது சிரோமணிகளுக்குப் பயிற்சிகள் அளிக்கப்பட்டன. ஆ.ஹி.வீரர்களுக்கு அளிக்கப்பட்டதே போன்ற சகல போர்ப் பயிற்சிகளும் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டன. எல்லாவழிகளிலும் அவர்கள் சிறந்த போர் வீரர்களாகவே திகழ்ந்தனர்.

ஜான்ஸி ராணிகளின் தீரம்

ஜான்ஸி செஞ்சிலுவைப் படையில் — வைத்தியப் படையில் சேர்ந்தவர்களும் சிறந்து விளங்கினர். ஆ. ஹி. பௌஜ் போரில் இறங்கியவுடனே ஜான்ஸி ராணி ரெஜிமெண்டுகளும் போர் முனையை நோக்கிப் புறப்பட்டன.

ஷோனன் ஜான்ஸிராணி ரெஜிமெண்ட் பயிற்சி முகாமிலிருந்துதேறி (8–4–42௨) பர்மாவுக்குப் புறப்பட்ட ஒரு கோஷ்டியினரைப் பத்திரிகை நிருபர் ஒருவர் பேட்டி கண்டார். அப்பொழுது ஜான்ஸி ராணிகள் கூறினர் :-

‘பாரத நாட்டை விடுவிக்கப் போர்புரியும் ஆ. ஹி. பௌஜுடன் தோளோடு தோள் சேர்த்துப் போர்புரிய –போர்முனை செல்கிறோமென்ற உணர்ச்சியினால் எங்கள் உள்ளம் அடையும் பூரிப்பை வாய்விட்டுக் கூற முடியவில்லை’ என்றனர்.

இது இம்மியும் மிகையன்று. அக்கோஷ்டியினர் பர்மாவுக்குச் செல்லும் வழியிலே, அவர்களைப் பினாங்கில் சத்திக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. அவர்களை

உபசரித்து அனுப்பச் சென்ற கோஷ்டியிலே யானு மொருவன். அவர்களுடைய உற்சாகம் எங்களைப் பிரமிக்கவைத்தது. தாய், தந்தையர் சுற்றத்தார் முதலியோரைப் பிரிந்து, தாங்கள் பிறந்து வளர்ந்த இடத்தைத் துறந்து,புதிய அபாயகரமான இடத்திற்குச் செல்கிறோமென்ற கவலையோ, அச்சமோ திவலைகூடக் காணப்படவில்லை. குதூகலத்தோடு ஆனந்தமாக அவர்கள் போர்க் கீதங்களைப் பாடிக்கொண்டே சென்றதை எவ்வாறு வருணிப்பது ?

தாய்நாட்டு விடுதலைக்கான போரில், எதிரியுடன் சமர்புரிவதற்கான தருணம் சமீபித்துவிட்டதைக் குறித்து ஜான்ஸிராணி ரெஜிமெண்டு வாலண்டியர்கள் மட்டற்ற மகிழ்ச்சியும், பேரார்வமும் கொண்டிருந்தனர்.

நல்ல திடகாத்திரமும், உறுதியான நெஞ்சமும் கொண்டிருந்த அந்தப் பெண் வாலண்டியர்கள் யுத்தக் களத்தில் எல்லாக் கஷ்டங்களையும் சமாளித்துக் கொள்ளக் கூடிய தீரமுடையவர்களாகவே திகழ்ந்தார்கள்.

அவர்களுக்களிக்கப்பட்ட போர்ப் பயிற்சிகளைப் பற்றி அவர்களது பயிற்சி ஆபீஸர்களில் ஒருவரான ஹவில்தார் கூறினர் :- பயிற்சிகள் எவ்வளவு கடின மாகவும், அலுப்பை உண்டுபண்ணுவதாகவும் இருந்த போதிலும், ஒரு பெண் வாலண்டியர்கூட, அதைப்பற்றி வருத்தப்பட்டதோ, அல்லது பயிற்சிக்குச் செல்லத் தவறியதோ கிடையாது. ஆ. ஹி. பௌஜ் வீரர்களுக்கு இவர்கள் எவ்விதத்திலும் குறைந்தவர்களல்ல'.



மஹாத்மாவும் நேதாஜியும்



ஓங்கி உயர்ந்த மரக்கிளையின் உச்சியிலேறி
வேவு பார்க்கிறார் இ. தே. ரா. முன்னணி வீரர்

மகாத்மாவும் நேதாஜியும்

1940ம் வருடம் ஜூன் மாதம் சுபாஷ் பாபு நாகபுரிக்கு விஜயம் செய்திருந்தவர் திடீரென வார்தாவுக்குப் புறப்பட்டார். வார்தாவுக்கென்றால் மகாத்மா காந்தியிடம் என்றுதானே அர்த்தம். 'எதற்காகச் செல்லுகிறீர்கள்?' என்று வினவினர் ஒரு பத்திரிகை நிருபர். 'ஒன்றும் விசேஷமில்லை. இவ்வளவு தூரம் வந்தவன் சமீபத்திலுள்ள மகாத்மாவைத் தரிசிக்காமல் செல்ல முடியுமா? என்றார் சுபாஷ் பாபு.

இது சாதாரணமாகப் பலருக்கு ஆச்சரியத்தையும், வியப்பையும் அளித்தது, ஏனென்றால் சுபாஷ் போசுக்கும் காந்தி கோஷ்டியினருக்கும் கடுமையான அபிப்பிராய பேதம் ஏற்பட்டதும் அதன் பயனாக அவர்

தமது காங்கிரஸ் தலைமைப் பதவியை ராஜினாமா செய்ததும் அதற்குச் சில மாதங்களுக்கு முன்புதான் நிகழ்ந்தது. வலதுசாரியினருக்கும் இடதுசாரியினருக்கும் இடையில் நடைபெற்ற உக்கிரமான வாக்குவாதங்களின் ஓசை மக்களின் காதுகளில் அப்போதும் ஒலித்துக்கொண்டிருந்தது. இந்த நிலையிலே மகாத்மாவைப் பார்ககச் செல்லுவதாவது? இதுவே வியப்புக்குக் காரணம்.

இலட்சிய ஒற்றுமை

ஆனால் விஷயம் தெரிந்தவர்கள் காந்தியத்தின் உண்மைத்தத்துவத்தையும் நேதாஜியின் முன்னேற்றக் கொள்கையின் தன்மையையும் உணர்ந்தவர்கள் ஆச்சரியப்படவில்லை. சுபாஷ் பாபுவும் காந்தியடிகளும் வெவ்வேறு மாற்றமான கொள்கை படைத்தவர்களாக இருந்தாலும் இருவருடைய லட்சியத்திலும் திவலைகூட வித்தியாசம் கிடையாது. இந்தியாவை அன்னியர் ஆட்சியிலிருந்து விடுவித்து, மீண்டும் பழைய பெருமையுடன் கூடிய பிரகாசமான அந்தஸ்தில் வைக்கவேண்டுமென்பதே அவர்களுடைய பொதுவான லட்சியம். சுபாஷ் சந்திரர் ஆயுத பலத்தில் நம்பிக்கை கொண்டவர். காந்திஜி அஹிம்சையில் அதீதமான பற்றுள்ளவர். இருவராலும் பாரத நாடு பெற்ற பேறுகள் சாமானியமா?

நேதாஜி கிழக்காசியாவிலே தோன்றி, முற்றிலும் தமது சொந்த பலத்திலேயே ஒரு மகத்தான பிரம்மாண்டமான இயக்கத்திற்குத் தலைமை வகித்து நடத்தினார். கிழக்காசியா வாழ் முப்பது லட்சம் பாரத மக்களும் அவரையே தங்கள் தனிப்பெருந் தலைவராகக் கொண்டு, அவர் வழியையே தங்களுக்குக் கடவுள் காட்டிய வழியாகக் கொண்டு, விடுதலைப் போரில்

கலந்துகொண்டனர். அப்பொழுது நேதாஜியின் பேச்சை எதிர்த்துப் பேசுவதற்கு யாரும் இருந்ததில்லை. இருக்கவும் முடியாது. அந்த நிலைமையில் நேதாஜி, மகாத்மாவைப் பற்றியும் அவருடைய இயக்கங்களைப் பற்றியும் அவரால் நாடு அடைந்த முன்னேற்றம் பற்றியும் மிகப்பாராட்டிப் புகழ்ந்தே கூறி வந்திருக்கிறார்.

ஒரு சமயம் நிருபர் கேட்ட கேள்விக்கு நேதாஜி பின்வருமாறு பதிலளித்தார்:

அஹிம்சா உபாசகரான மகாத்மாஜி ஆயுதப் போராட்டத்திற்கு ஒருவேளை ஆதரவளிக்காவிட்டாலும் அவர் நம்மை எதிர்க்கமாட்டாரென்பது மட்டும் திண்ணம். எப்படியும் தற்காலிக சுதந்திர அரசாங்கம் இந்தியாவிற்குள் புகுந்துவிடுமானால், மஹாத்மா தமது பூரண ஆதரவையும் அளிப்பாரென்று எல்லாவிதத்திலும் நம்ப இடமிருக்கிறது என்று அழுத்தமாகக் கூறினார்.

மேலும் நேதாஜி, 1940 ஜூன் மாதத்தில் வார்தாவில் தாம் காந்திஜியைச் சந்தித்ததை ஞாபகப் படுத்தினார். அவரது அஹிம்சைக் கொள்கையை விட்டுவிடும்படி காந்திஜியை எவ்வளவோ கேட்டுக் கொண்டேன். அவர் முடியாதென்று கூறிவிட்டார். பலாத்காரத்தின் மூலம் நீங்கள் வெற்றிபெற்றால் நானே உங்களை முதலில் வாழ்த்துவேன்' என்று சிரித்துக் கொண்டே சொன்னார்'' என்று தமது வார்தா சந்திப்பை வருணித்தார்.

பாங்காக்கில் பொதுக்கூட்டம் ஒன்றில் பேசும் பொழுது நேதாஜி, 1885ல் இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபை தோன்றியது. இந்தியர்களிடையே புதிய

அரசியல் விழிப்பு இதன் காரணமாக உண்டாயிற்று. நமது அரசியல் முன்னேற்றத்திலேயே மகாத்மா காந்தி நமக்கு ஒரு புதிய ஆயுதம் அளித்தார்.

சென்ற உலக யுத்தத்திற்குப் பின் மகாத்மா அளித்த ஆயுதம் மிகவும் அவசியமானதாக இருந்தது. ஏனெனில் நாம் [பலாத்கார] ஆயுதங்களில்லாமல் போர் புரிய வேண்டியதிருந்தது. நாம் இருட்டில் தட்டுத் தடுமாறிக்கொண்டிருந்தோம். அந்த சந்தர்ப்பத்திலே சட்ட மறுப்பும் சாத்வீக எதிர்ப்பும நமது தேசீய விழிப்பிற்குப் பெரிதும் துணைபுரிந்தன. இத்துடன் எதிரியுடன் போராடுவதில் இந்தியா முழுதையும் ஒன்று படுத்தின" என்று மொழிந்தார்.

1943ம் வருடம் காந்தி ஜெயந்தியன்று ஒரு நிருபர் நேதாஜியைப் பேட்டி கண்டார். அப்பொழுது அவர் மகாத்மாவின் மாண்புறு கொள்கையைப் புகழ்ந்துரைத்தார். மகாத்மாவின் அஹிம்சை மின்சக்தி போன்றதென்றும் அக்கிரமம் செய்பவன் முன் கோழைத்தனமாக பணிந்துபோவது அதன் நோக்கம் அல்லவே அல்லவென்றும் கூறினர்.

காந்திஜி இதைக் கேட்டால்

1944ம் வருடம் மே மாதத்தில் மகாத்மா சிறையிலிருந்து விடுதலையடைந்த சமயம் அதை 'யோமியூரி' பத்திரிகையின் யுத்த நிருபர் நேதாஜியிடம் பிரஸ்தாபித்தார். அதற்கு நேதாஜி இந்தியாவில் பிரிட்டிஷார் மற்றொரு தோல்வியடைந்துவிட்டார்கள், என்பதையே இது காட்டுகிறது. எனது வேலை முறையைக் கேள்விப்பட்டு மகாத்மா புன்முறுவல் கொள்வாரென்பது நிச்சயம். ஆஸாத் ஹிந்த் பௌஜும் நானும் கல்கத்தாவில்

பிரவேசித்தவுடன் காந்திஜி, நான் இந்தியாவிலிருந்து வெளியேறு முன்பு என்னிடம் வாக்களித்துள்ளபடி, எனக்கு வாழ்த்தனுப்புவார். அன்றுதான் பாரத மக்கள் ஆஸாத் ஹிந்த் தற்காலிக அரசாங்கத்துக்கு ஆதரவாக ஒன்றுகூடும் தினமாக இருக்கும்' என்ருர். இது ஆஸாத் ஹிந்த் பௌஜ் மணிப்பூர் பிராந்தியத்திலே வெற்றி கரமாக முன்னேறிக்கொண்டிருந்த சமயம் கூறப்பட்ட தாகும்!

பாந்தவ்யம்

மகாத்மாவிற்கும் நேதாஜிக்கும் உள்ள பாந்தவ்யம் ஒரு தந்தைக்கும் தனயனுக்கும் உள்ளதைப் போன்ற தாகும். இதை விளக்க ஏராளமான சான்றுகளுண்டு. 1942ம் வருடம் ஆகஸ்டு மாதம் 9ந் தேதி மகாத்மா சிறைப்படுத்தப்பட்டாரல்லவா? அது முதல், சந்தர்ப்பம் நேரும்பொழுதெல்லாம் நேதாஜி இதைப்பற்றி மிகவும் உருக்கமாகக் குறிப்பிடுவார். பின்னர் மகாத்மா விடுதலேயடைந்துவிட்டது அவரது உள்ளத்திலே ஆறுதலேயும் மகிழ்ச்சியையும் உண்டுபண்ணி இருக்க வேண்டும். இதை அவர் தம்மனத்தோடு வைத்துக் கொள்ளவில்லே.

"மகாத்மாஜி! உங்களுடைய தேக நிலே தற்போது ஒருவாறு அபிவிருத்தியடைந்து, பொது வேலேகளேயும் ஓரளவு கவனிக்கக்கூடிய நிலேமையில் நீங்கள் இருப்ப தால், இந்தியாவிற்கு வெளியேயுள்ள தேச பக்தியுள்ள இந்தியர்களின் திட்டங்களேயும் நடவடிக்கைகளேயும் பற்றி உங்களுக்குச் சில வார்த்தைகள் கூற நான் முன் வந்திருக்கிறேன்."

"தேக அசௌக்கியம் காரணமாக நீங்கள் திடீ ரெனக் காவலிலிருந்து விடுவிக்கப்பட்டது முதல் பல

தினங்கள் வரை உலகெங்குமுள்ள இந்தியர்கள் மிகுந்த கவலை கொண்டிருந்ததைப்பற்றி முதலில் உங்களுக்குக் கூற விரும்புகிறேன். பிரிட்டிஷாரின் காவலில், அன்னை கஸ்தூரி பாய்ஜியின் வருந்தக்தக்க மரணத்திற்குப் பிறகு, உங்களுடைய தேச மக்கள் கவலை கொள்வது இயல்பேயாகும். எனினும்' ஆண்டவன் கிருபையால் நீங்கள் சுகமடைந்து, உங்கள் நாட்டு மக்களாகிய முப்பத்தெட்டுக் கோடியே எண்பது லட்சம் பேர்களும் உங்களுடைய வழிகாட்டுதலையும் ஆலோசனையையும் இன்னமும் பெற்றுக் கொண்டிருக்கக்கூடிய பாக்கியத்தை அடைந்திருக்கின்றனர்."

இவ்வாறு நேதாஜிமகாத்மாவுக்கு வழங்கிய வானுரையிலே கூறினார். பிறகு அவர், தாம் இந்தியாவை விட்டு வெளியேறிய பின்னர், நடைபெற்ற நிகழ்ச்சிகளை எல்லாம் விஸ்தாரமாக எடுத்தியம்பினார். உண்மையிலேயே அவை ஒரு தளபதி, தனது தலைமைத் தளகர்த்தரிடம் சமர்ப்பிக்கும் அறிக்கையைப் போன்றிருந்தது. என்னதான் இருந்தாலும் இந்தியா சம்பந்தப்பட்ட காரியங்களுக்கு மகாத்மாவின் அங்கீகாரம் அவசிய மென்பதையே அது காட்டுவதாக இருந்தது. மூவாயிரத்து ஐந்நூறு வார்த்தைகளுக்கு அதிகம் கொண்ட அந்த வானுரையின் இறுதியிலே நேதாஜி கூறினார்.

"இந்தியாவின் கடைசி சுதந்திர யுத்தம் தொடங்கியிருக்கிறது. ஆஸாத் ஹிந்த் பௌஜ் வீரர்கள், தற்போது இந்திய மண்ணில் வீரமாகப் போரிட்டுக் கொண்டும், சகல கஷ்ட நஷ்டங்களுக்கு மிடையே மெதுவாகவும் படிப்படியாகவும் முன்னேறிக் கொண்டிருக்கின்றனர். கடைசி பிரிட்டிஷ் நபர் இந்தியா

வினின்று ஒழிக்கப்படும் வரை நமது மூவர்ண தேசியக் கொடி புதுடில்லியில் உள்ள வைஸ்ராய் மாளிகையின் மீது கம்பீரமாகப் பறக்கும்வரை இந்த ஆயுதப் போராட்டம் தொடர்ந்து நடைபெறும்.

"எங்கள் தேசத்தின் தந்தையே! இந்தியாவின் விடுதலைக்கான, இப்புனிதப் போரில் உங்களுடைய ஆசீர்வாதத்தையும் நல்வாக்கையும் நாங்கள் கோருகிறோம். ஜெய்ஹிந்த்.



இம்பால் முற்றுகையும் இயற்கையின் சீற்றமும்

ஆ. ஹி. பௌஜ் தனது கீர்த்திமிக்க 'டில்லி மார்ச்சை' உலகம் பிரமிக்கும் வண்ணம் துரிதமாக நடத்திக்கொண்டிருந்தது. கோஹிமாவோடு மொய் ராங், பலேட்வா போன்ற முக்கியமான இந்தியப் பிரதேசங்களும் விடுவிக்கப்பட்டு, அங்கு தேசிய மூவர்ணக் கொடி கம்பீரமாகப் பறந்துகொண்டிருந்தது.

கிழக்காசியாவிலுள்ள இந்தியர்கள் போர் முனையி லிருந்து வரும் வெற்றிப் பிரதாபங்களினுல் களி வெறி கொண்டனர்; ஆனந்த நர்த்தனம் புரிந்தனர்,

அடுத்தபடியாக இம்பாலின் நாமம் தூரக்கிழக்குப் பிரதேச முழுமையும் எதிரொலிக்கத் தொடங்கியது.

இம்பால் முற்றுகை

அதுவரை கண்டுங் கேட்டுமிராத இம்பால் என்ற பெயர், இந்தியர்களின் பிரதான வாசகமாகத் திகழ்ந்தது. இம்பால் முற்றுகை ஆரம்பமாயிற்று. தினசரிப் பத்திரிகைகளின் முகப்புக்களிலே—கொட்டை எழுத்துக்களிலான தலைப்புக்களிலே—தினசரி பின் கண்ட சொற்றொடர்கள் காட்சியளித்தன:

'இம்பாலுக்கு 10 மைல் தூரத்தில் நம் படைகள்.'

'இம்பாலுக்கு வெகு சமீபத்தில் நமது படைகள்.'

'இம்பாலுக்கு இரண்டரை மைல் தூரத்தில் நம் படைகள்.'

இம்பாலில் பாய நேரம் நெருங்குகிறது.'

'இம்பால் முற்றுகையின் இறுதிக் கட்டம்.'

இறுதியாக,

'இம்பாலிலிருந்து எதிரிகள் ஓட ஆயத்தம்'

இவ்வாறு இ. தே. ராணுவம் இம்பாலை முற்றிலும் சூழ்ந்துகொண்டுவிட்டது. இம்பாலிலிருந்த எதிரி நான்காம் சேனைத் தலைமைக் காரியாலயம் ஏற்கனவே வேறிடத்துக்கு மாற்றப்பட்டுவிட்டது. இம்பால் எந்த நிமிஷத்திலும் வீழ்ச்சியுறலாமென்று வெகு நம்பிக்கை யுடன் எதிர்பார்க்கப்பட்டது.

கிழக்காசியாவெங்கணும் உணர்ச்சிப் பிரவாகம் கரைபுரண்டோடியது. ஒவ்வோர் இந்தியனும் இம்பால் சமவெளியிலே மானசீகமாக உலவத் தொடங்கினன். ஒவ்வொருவரும் இயக்கத்திலே பங்குபெறத் துடித்தனர்.

இம்பால் விடுதலை விழாவைக் கொண்டாடுவதற்கு கிழக்காசியாவிலுள்ள சகல இடங்களிலும் — சிறிய கிராமங்கள் பெரிய பட்டணங்கள் ஆகிய ஒவ்வோரிடங்களிலும் பிரமாதமான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அந்த வெற்றி விழாவைக் கொண்டாடுவதற்காக மக்கள் பொறுமையை இழந்து காத்துக்கொண்டிருந்தனர். ஊர்வலங்கள்‘ கொண்டாட்டங்கள், பொதுக் கூட்டங்கள் போன்றவைகளுக்காக விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. சுருங்கக் கூறுமிடத்து இ. தே. ராணுவ வெற்றி அகில ஆசியாவின் வெற்றியாகக் கருதப்பட்டது.

துரதிருஷ்டம்

இம்பாலை இ. தே. ராணுவம் கைப்பற்றியிருக்குமாயின் சரித்திரத்தின் போக்கே வேறு விதமாக முடிந்திருக்கும். மயிரிழையில் தொங்கிக் கொண்டிருந்த இம்பால் வீழ்ச்சி, துரதிர்ஷ்டவசமாக மாறத் தொடங்கிவிட்டது. இம்பால் விடுதலை பெறவில்லை. காரணம், பெருமழை பெய்யத் தொடங்கிவிட்டது. மேலும் ,சப்ளை’கள் அனுப்பத் தடைகள் ஏற்பட்டன. ஆ. ஹி. பௌஜுக்கு ஆதரவாக நிப்பானியர்களால் போதிய அளவு விமான உதவி செய்ய முடியவில்லை. எதிரிகளிடமோ அபரிமிதமான அளவில் விமான பலம் இருந்தது. தளவாடங்களுக்கும் குறைவில்லை. ஆள் பலமும் அபாரம். ஆ. ஹி. பௌஜ் தனது உன்னத லட்சியத்தை மனதில்கொண்டு பலவித கஷ்ட நிஷ்டூரங்களுக்கிடையே தனது கீர்த்தி மிக்க தலைவரின் கட்டளையை நிறைவேற்றி வந்தது. இந்நிலைமையில் ஆ. ஹி. பௌஜுக்கு நிப்பானியர் சரியானபடி ‘சப்ளை’ அனுப்பவும் தவறி விட்டனர். எனவே, மிகவும் பலம்

வாய்ந்த எதிரியுடன் கூடிய இம்பால் முற்றுகையை தளர்த்திக்கொள்வதே சிலாக்கியமான காரியம் என மதித்து ஆ. ஹி. பௌஜை முற்றுகையைக் கைவிடும்படி அதன் அதிகாரிகள் உத்தரவிட்டனர்.

எதிர்பாராத இவ்வித முடிவின் காரணமாக ஆ. ஹி. பௌஜ் வீரர்கள் பலவித அவதிகளுக்கு ஆளாக வேண்டியதேற்பட்டது. அரக்கான் பிரதேசத்தில் பூகோள அமைப்பைப் பற்றி முந்தின அத்தியாயத்தில் கூறப்பட்டிருக்கிறது. பல பல சிறு தீவுகளைப் போன்ற அப்பிராந்தியம், பெருமழை காரணமாக ஒரே ஜலமய மாகிவிட்டது. மேலும், நேதாஜியால் அளிக்கப்பட்ட தாரக மந்திரமான 'சலோ டில்லி' என்ற ஒரே நோக்கத்துடன் அவர்கள் முன்னேறிக்கொண்டிருந்தவர்கள். பின்வாங்குவதெனில்...பல இடங்களில் வீரர்கள் பின் வாங்க மறுத்து விட்டனர். 'நேதாஜியின் கட்டளை முன்னேறும்படியே. நாங்கள் பின்வாங்க மாட்டோம். ஒன்று முன்னேறுவோம். அல்லது அம்முயற்சியிலேயே மடிவோம்' என்று உறுதியாக கூறிவிட்டனர். அவர்களுக்காக நேதாஜி, சிப்பாஸாலார் என்ற முறையிலே விசேஷ உத்தரவு பிறப்பிக்க வேண்டியதிருந்தது.

ஆ. ஹி பௌஜ், மணிப்பூர் பிராந்தியத்திலே காட்டிய தீரம் இந்தியா உள்ளளவும் சரித்திரத்தில் பிரகாசிக்கும் என்பது நிச்சயம். பல இடங்களில் அவ்வீரர்கள் புல்லையும் தழைகளையும் புசித்துக்கொண்டே போராடினர். தங்கள் கடைசி மூச்சு உள்ளவரையும் தங்கள் கௌரவத்தை இழக்காமல் போராடினர்.

38 கோடி மக்களின் கௌரவம்

இந்த சந்தர்ப்பத்தில் போர்முனையின் முன்னணியில் நின்றுகொண்டிருந்த ஆ. ஹி. பௌஜ் வீரர்களுக்கும் ஆபீசர்களுக்கும்நேதாஜி ஓர் உணர்ச்சியூட்டும் செய்தியை அனுப்பினர். ''போர் முனையிலுள்ள ஆஸாத் ஹிந்த் பௌஜ் உத்தியோகஸ்தர்களுக்கும்,சோல்ஜர்களுக்கும்,தோழர்களே! 1944ம்வருஷம் பிப்ரவரி 4ந்தேதியன்று அரக்கான் பிரதேசத்தில் துவங்கப்பட்ட இந்திய விடுதலை யுத்தமானது இப்பொழுது பாரத பூமியில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பாரத புண்ணிய பூமியில் காலடி எடுத்து வைத்துள்ள நமது வீரர்கள் இந்தியத் தாயின் விடுதலைக்கான இந்த யுத்தத்தை இணையற்ற வீரத்துடனும் உற்சாகத்துடனும் வெற்றிகரமாக நடத்தி வருகின்றனர்.

நாம் எல்லையைக் கடந்தபின்னர்தான் உண்மையானபோர் ஆரம்பமாகுமென்றும் அப்போரானது மிகவும் கடினமாகவும் நீண்டகாலம்வரை நடைபெறக் கூடியதாகவும் இருக்குமென்றும் நான் இதற்கு முன் அடிக்கடி தெரிவித்திருப்பது உங்களுக்கு ஞாபகமிருக்கலாம். நாம் இந்தியாவினுள் வெற்றிகரமாகப் பிரவேசித்தபின், இப்போர் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு, வாழ்வதா வீழ்வதா என்றதோர் பிரச்னையாக இருப்பதை எதிரிகள் உணர ஆரம்பித்திருக்கின்றனர். அதனுல்தான் பகைவர் இந்தியாவிலுள்ள தங்களுடைய தளங்களை நிர்வகித்துக்கொள்ளும் முயற்சியாக, தங்களுக்குக் கிடைக்கும் சகல சக்தி சாதனங்களையும் போரின் முன்னணியில் இப்பொழுது செலுத்திக் கொண்டிருக்கின்றனர். ஆனுல் நாம் ஒரு நீண்ட காலப்போரை வெகு தீவிரமாக நடத்திக்கொண்டிருந்த

போதிலும் நமது இறுதி வெற்றியில் நாம் பரிபூரண நம்பிக்கை கொண்டிருக்கிறோம்.

'போரின் முன்னணியில் நாம் எதிர்நோக்கியுள்ளதும், வருங்காலத்தில் ஏற்படவிருப்பதுமான பல கஷ்ட நஷ்டங்களை நான் நன்கு உணர்கிறேன், ஆனால் நீங்களெல்லோரும் இவ்வரிய தருணத்தில் ஆர்த்தெழுந்து இந்தியாவுக்கும் உங்களுடைய தாய்நாட்டவர்களாகிய 38 கோடி மக்களுக்கும் எதையும் பொருட்படுத்தாது உங்களுடைய கடமையைச் செய்தே தீருவீர்களென்று எனக்குத் தெரியும், இச் சமயம் என்னுடையதும் எனது தலைமைக் காரியாலயத்தினதும் கவனமெல்லாம் போர்முனை மீதும் இங்குள்ள முன்னணி வீரர்களுக்குரிய தேவைகளின் மீதுமே செலுத்தப்பட்டு வருகின்றது. பல்வேறு கஷ்டங்களுக்கிடையே, போர் முனையிலுள்ள நமது துருப்புக்கள் இதுவரை எவ்விதமான வெற்றிகளை அடைந்திருக்கின்றனவோ அவை நமது இறுதி வெற்றிக்கு உத்தரவாதமளிக்குமென்பது சர்வ நிச்சயம்.

'போர் முனையிலுள்ள எனது உத்தியோகஸ்தர்கள், சோல்ஜர்களனைவருக்கும் நான் இச் செய்தியை மிகுந்த அன்புடனும் தோழமை நிறைந்த வாழ்த்துடனும் அனுப்புகிறேன். நமது நாட்டினர்களாகிய 38 கோடி மக்களின் கௌரவமானது உங்கள் கையிலிருக்கிறது. ஆண்டவனின் அருளால் நீங்கள் அக் கௌரவத்தை உங்களுடைய உயிரைக் கொடுத்தாவது பாதுகாப்பீர்களென்றும், நமது தாய் நாட்டிற்கும் நமது தாய்நாட்டு மக்களுக்கும் என்றும் அழியாப் புகழைக் கொண்டு வருவீர்களென்றும் நான் திடமாக நம்புகிறேன், ஜெய்ஹிந்த்,

1945ம் வருஷ ஆரம்பத்தில் போரின் நிலைமை மாறத் தொடங்கியது. தாக்குப் போர் நடத்தி வந்த ஆ. ஹி. பௌஜ், எதிரிகளின் முன்னேற்றத்தினைத் தடுக்கும் தற்காப்புப் போரில் ஈடுபட்டது. இது அவசியமில்லை யென்றும், ஆ.ஹி.பௌஜை தற்காப்புப்போரில் ஈடு படுத்தாமலே 'வாபஸ்' செய்துகொண்டிருக்கலாமென்றும் பலர் கருதினர். ஆனால் நேதாஜி அவ்விதம் கருதவில்லை. கருதியிருந்தால் பிற்கால சரித்திரக்காரர்கள் அதை ஞாபகமற்ற செயல் என மதிப்பிடுவர். ஏன்?

தற்காப்புப் போர்

அப்பொழுது நிப்பொனின் நிலைமை பரம சங்கடமானதாக இருந்தது. பஸிபிக் பிராந்தியத்திலே அமெரிக்கர்கள் அபரிமிதமான படைபலத்தோடு மறு தாக்குதலை ஆரம்பித்து சில சிறு வெற்றிகளையும் அடைந்திருந்தனர். எதிர் காலத்திலே பஸிபிக் போர் பிரமாண்டமான அளவில் நடைபெறுமெனத் தோன்றிய படியால், நிப்பொனிலே பல மாற்றங்கள் ஏற்பட்டன. தோஜோ மந்திரிசபைகலைந்து கொய்ஸோமந்திரி சபை ஏற்பட்டது, நிப்பொன் அரசாங்கம் தனது சக்தி சாதனங்கள் அனைத்தையும் திரட்டி. தங்கள் ஜன்ம பூமியை நெருங்கிக் கொண்டிருக்கும் எதிரிகள் மீது சாட ஆயத்தம் செய்துகொண்டிருந்தது. இந்நிலையிலே அவர்கள் பர்மா போர்முனையைப் பாதுகாப்பதில் தீவிரமாக முனையவில்லை. முனைந்திருக்கவும் முடியாது. 1944ம் வருட இறுதியில்—புதிய மந்திரிசபை ஏற்பட்டவுடன் நேதாஜி தோக்கியோ சென்று புதிய மந்திரிகளுடன் ஆலோசனை நடத்திவிட்டு திரும்பினார். இதன்பயனாக பர்மாவின் தற்காப்பில் ஆ. ஹி. பௌஜும் ஈடுபட வேண்டியதாயிற்று.

இந்தச் சமயத்திலே தான் ஆ. ஹி. பௌஜுக்குள் சில துரோக நடவடிக்கைகள் ஏற்பட்டன. பிரிட்டிஷாரின் முன்னேற்றத்தைக் கண்டு மனங்கலங்கிய சில கோழைகள், உறுதியை இழந்து எதிரிகளுடன் சேர்ந்து கொண்டனர். இவ்வித இழிவான செய்கையில் ஈடுபட்டவர்கள் ஆ. ஹி. பௌஜ் 2-வது பிரிவைச் சேர்ந்த நான்கு மேஜர்களாவர் (அத் துரோகிகளின் பெயர்களை நாம் குறிப்பிட விரும்பவில்லை.) அதிர்ஷ்ட வசமாக இவ்வித துரோகம் செய்தவர்கள் ஒரு சிலர்தான். ஆனால் ஆ. ஹி. பௌஜ் வீரர்கள் இறுதிவரை தங்கள் லட்சியத்தில் நம்பிக்கை வைத்து உறுதியாகப் போராட்டத்தை நடத்திக்கொண்டுதான் இருந்தனர்,

கர்னல் ஷாநவாஸ், கர்னல் ஸைகால், லெப். கர்னல் தில்லன், லெப். கர்னல் மேகர்தாஸ், கர்னல் அர்ஷாத் போன்ற வீர திலகங்களை நாம் மிகுந்த மரியாதையுடன் குறிப்பிட வேண்டியவர்களாயிருக்கிறோம். இந்த வீராதி வீரர்கள் தாங்கள் மேற்கொண்ட சபதங்களை தங்கள் தலைவருக்குச் செய்துகொடுத்த பிரமாணத்தைக் கடைசிவரை காப்பாற்றினர். இன்னமும் காப்பாற்றிக்கொண்டிருக்கின்றனர். அபாரமான ஆர்வத்தோடு போராடிய சிறு ஆபீஸர்களையும் குறிப்பிடவேண்டியதும் அவசியம். இவர்கள் கடைசி வரை தோல்வி மனப்பான்மையின்றி உக்கிரமாகப் போராடினர். ஐராவதி நதியைக் கடப்பதற்கு எதிரிகள் பிரம்மப் பிரயத்தனங்கள் செய்தனர். சகல சக்தி சாதனங்களுடன் ஏராளமான படை பலத்தோடு கூடிய பிரிட்டிஷார், இருதடவை தங்கள் முயற்சியில் படுதோல்வியையே கண்டனர். ஐராவதி நதிதீரத்தில் இ. தே. ராணுவத்தின் தற்காப்பை எதிரிகளால் அசைக்கவே முடியவில்லை. நிப்பொன் படைகள் தங்கள்

தற்காப்பைவிட்டுப் பின்வாங்கியதன் பயனாக எதிரிகள் அந்தவழியிலே நதியைக் கடந்தனர், முன்னேறினர்.

மத்திய பர்மாவிலுள்ள மெக்டிலா என்ற பிரதான இடத்தைக் கைப்பற்றிய பிரிட்டிஷார், மேலும் கீழுமாக இருபுறமும் - துரிதமாக முன்னேறினர். அவர்களது முன்னேற்றத்தைத் தடுப்பது அசாத்தியமாயிற்று.

இந்நிலையில் ரெங்கூனிலிருந்த ஆ. ஹி. த. அரசாங்கத் தலைமைக் காரியாலயத்தை மாற்றவேண்டியது அவசியமெனப்பட்டது. நிப்பொன் தலைமை சேனாதிபத்தியமும், பர்மா அரசாங்கமும் கூட 1945 ஏப்ரல் 23ல் ரெங்கூனைவிட்டு வெளியேறி விட்டன. இனியும் அங்கிருப்பது உசிதமல்லவென ஆ. ஹி. பொஜ் உயர்தர உத்தியோகஸ்தர்களும், மந்திரிமார்களும் நேதாஜியை வற்புறுத்தினர்.

அவர் தமது சகாக்களுடன் உடனே வெளியேற வேண்டுமெனக் கேட்டுக்கொண்டனர். நேதாஜி, முதலில் தாம் ரெங்கூனைவிட்டு அகலப்போவதில்லையென்றும் கடைசிவரை போராடித் தீர்ப்பதே தமது கடமையென்றும் கூறினார். அது உசிதமல்லவென்று மிகவும் மன்றாடிக் கேட்டுக்கொண்டதன் பயனாக, அவர் தம் முடிவை மாற்றிக்கொண்டார். நேதாஜி 1945ம் வருஷம் ஏப்ரல் மாதம் 24ந் தேதி தமது மந்திரி பிரதானிகளுடனும், தலைமைக் காரியாலய உத்தியோகஸ்தர்களுடனும், மலாயா, சயாம் முதலிய இடங்களில் இருந்து வந்திருந்த ஜான்ஸிராணி வீராங்கனைகளுடனும் மிகுந்த மனவேதனையுடன் ரெங்கூனை விட்டுப் புறப்பட்டார்.

பர்மாவிலுள்ள இந்தியர்களுக்கு நேதாஜி ரெங்கூனிலிருந்து புறப்படுமுன் ஒரு உருக்கமான செய்தியை விடுத்தார். ‘சகோதர சகோதரிகளே, நான் மிகவும் துக்கமான மனதுடன் பர்மாவைவிட்டகலுகிறேன். பர்மாவிலுள்ள என் தாய்நாட்டு மக்களாகிய நீங்கள் உங்களுடைய தாய்நாட்டிற்குக் கடமையாற்றியுள்ள விதமானது உலகின் ஆச்சரியத்தை தூண்டிவிட்டிருக்கிறது. நீங்கள் ஆள், பொருள் சாதனங்களைத் தாராளமாக அளித்துள்ளீர்கள், சர்வாம்சப் படைத் திரட்டலுக்கு நீங்கள் முதலாவது உதாரணத்தை ஏற்படுத்தினீர்கள்.

நேதாஜியின் செய்திகள்

‘குறிப்பாக நான் எனது தலைமைக் காரியாலயத்தை பர்மாவுக்கு மாற்றியது முதல் நீங்கள் காட்டியுள்ள தன்னலமற்ற தியாகஉணர்ச்சியானது நான் உயிருள்ள வரை ஒருபோதும் மறக்க முடியாததாகும்.

அவ்வுணர்ச்சியானது ஒருபோதும் நசுக்கப்பட முடியாததாகுமென்ற பூரண நம்பிக்கை எனக்கிருக்கின்றது. இந்திய விடுதலை லட்சியத்திற்காக அவ்வுணர்ச்சியை நிலையாகக் கொண்டிருக்கும்படியும், தலைநிமிர்ந்தே நிற்கும்படியும் இந்திய சுதந்திர யுத்தத்தை நடத்தும் சந்தர்ப்பம் மீண்டும் ஏற்படும் புனித தினத்திற்காக காத்திருக்கும்படியும் உங்களை நான் வெகுவாக கேட்டுக்கொள்ளுகிறேன்.

‘கடைசி இந்திய சுதந்திர யுத்தத்தின் சரித்திரம் எழுதப்படுங் காலையில் பர்மாவாழ் இந்தியர்கள் அதில் பிரதான இடம் பெறுவர்.

நேதாஜி ஆ. ஹி. பௌஜ் வீரர்களுக்கும், ஆபீஸர்களுக்கும் விடுத்த மற்ருேர் அறிக்கை வருமாறு:

'ஆஸாத் ஹிந்த் பௌஜின் வீர ஆபீஸர்களே, சிப்பாய்களே, நீங்கள் 1944 பிப்ரவரி முதல் பல வீரப் போர்களை நடத்தியதும் இன்னும் நடத்திக்கொண்டு இருப்பதுமான பர்மாவை விட்டு நான் மிகவும் துக்க மனதோடு அகலுகின்றேன். இம்பால் சமவெளி களிலும், அரக்கான் மலைக்காடுகளிலும், பர்மாவிலுள்ள எண்ணெய் பிரதேசம் மற்றும் இதர பகுதிகளிலும் நடந்த போரில் உங்களுடைய வீரச் செயல்களானவை நமது சுதந்திரப் போராட்டச் சரித்திரத்தில் என்றும் பிரகாசிக்கும்.

'தோழர்களே, இந்த நெருக்கடியான நேரத்தில் நான் உங்களுக்குக் கூறவேண்டியது ஒன்றுதான். நீங்கள் தற்காலிகமாய் வீழ்ச்சியடையவேண்டியதேற் படின் அவ்வீழ்ச்சியிலும் தேசிய மூவர்ணக் கொடியை உயர்த்திப்பிடியுங்கள்! வீரர்களாக வீழ்ச்சியடையுங்கள்! மகோன்னத கௌரவத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டி வீழ்ச்சியடையுங்கள். உங்களுடைய மாபெருந் தியாகத்தின் காரணமாக இனி அடிமைகளாகவின்றி சுதந்திரர்களாகப் பிறக்கும் இந்தியர்களின் எதிர்கால சந்ததியார் உங்களுடைய பெயர்களைப்போற்றி வணங்குவார்கள். அவர்களின் முதல் சந்ததியார் களாகிய நீங்கள் மணிப்பூரிலும், அஸ்ஸாமிலும், பர்மா விலும் வீரமாகப் போரிட்டீர்களென்றும் ஆனால், உங்களுடைய தற்காலிகத் தோல்வியின் மூலமாகவே இறுதி வெற்றிக்கும் மகத்துவத்திற்கும் வழிகோலினீர் களென்றும் அவர்கள் உலகிற்குப் பிரகடனம் செய்வார்கள்.

'இந்திய விடுதலையில் எனக்குள்ள அசையா நம்பிக்கை சற்றும் மாறவில்லை. நமது தேசிய மூவர்ணக் கொடியையும், தேசிய கௌரவத்தையும் இந்திய வீரர்

களின் உயரிய புகழையும் நான் உங்களுடைய பத்திர மான கரங்களில் ஒப்படைக்கின்றேன். இதர இடங் களில் போரைத் தொடர்ந்து நடத்தும் உங்களுடைய தோழர்களுக்கு எப்போதும் உத்வேகமூட்டும்படி உங்களுடைய அரிய உதாரணம் முன்னிற்குமாறு நீங்கள் இந்தியாவின் தேசிய கௌரவத்தை நிலைநாட்டு வதற்காக இந்திய விடுதலை ராணுவத்தின் முன்னணி வீரர்களாகிய நீங்கள்—சர்வத்தையும்' உயிரையும் தியாகம் செய்வீர்கள் என்பதில் எனக்கு யாதொரு சந்தேகமும் இல்லை.

"நான் என்னிஷ்டப்படி நடப்பதாயின், ஆபத்தில் உங்களோடு தங்கி, சகல கஷ்டங்களையும் உங்களுடன் பகிர்ந்துகொள்ள விருப்பங்கொண்டிருப்பேன். ஆனால் எனது மந்திரிகள், உயர்தர உத்தியோகஸ்தர்கள் முதலியோரின் ஆலோசனையின் பேரில் நான் விடுதலைப் போரைத் தொடர்ந்து நடத்துவதற்காகப் பர்மாவை விட்டகல வேண்டியிருக்கிறது. கிழக்காசியாவிலும் பாரத நாட்டிலுமுள்ள எனது தாய்நாட்டவரை நான் அறிந்த வனாதலின் அவர்கள் எவ்வித சந்தர்ப்பத்திலும் போரைத் தொடர்ந்து நடத்துவார்களென்றும் உங் களுடைய கஷ்டங்களும் தியாகங்களும் வீண்போகா வென்றும் நான் உங்களுக்கு உறுதிகூறமுடியும். என் சம்பந்தப்பட்டவரையில் நான் என் தாய்நாட்டு மக்களாகிய 38 கோடி பேர்களின் நலன்களுக்காக சேவைபுரியவும், அவர்களின் விடுதலைக்காகப் போர் நடத்தவும் என் சக்திக்கான சகலவற்றையும் செய்வ தென்று 1943 அக்டோபர் 21ந்தேதியன்று செய்து கொண்ட பிரதிக்ஞையை உறுதியோடு பின்பற்றுவேன். விடிவதற்கு முன்னரே எப்போதும் கரிய இருள் நேரம் வருமென்றும் அதுவும் விரைவினில் நீங்கிவிடுமென்றும்

என்னைப்போலவே நீங்கள் திட நம்பிக்கை கொண்டு இருக்கும்படி இறுதியாக உங்களை நான் கேட்டுக் கொள்ளுகிறேன். ஆண்டவன் உங்களுக்கு அருள் பாலிப்பானுக! ஜெய்ஹிந்த்.''

நேதாஜி தமது தலைமைக் காரியாலயத்தை பர்மாவிலிருந்து மாற்றிக்கொண்டாலும், அங்குள்ள இந்தியர்களை அனுதரவாக விட்டுவிடவில்லை. மேஜர் ஜெனரல் ஏ. டி. லோகனுதன் தலைமைஎல் 6,000 இ. தே. ராணுவத்தினர் ரெங்கூனில் வைக்கப்பட்டிருந்தனர். ராணுவ காரியாலயத் தலைவராக கர்னல் அர்ஷாத்தும், இ. சு. சங்கத் தலைவராக ஜே. என். பஹாதுரியும், பொதுக் காரியதரிசியாக கண்ணன் பில்லியும் நியமிக்கப்பட்டிருந்தனர். ரெங்கூன் நகரின் பாதுகாப்பு ஆ. ஹி. பௌஜிடமே இருந்துவந்தது. ஆட்சி பிரிட்டிஷாரிடம் மாறும்வரை இது நீடித்திருந்தது. இந்த நாட்களில் எவ்வித திருட்டோ, கொள்ளையோ, கொலையோ எதுவும் நடைபெறவில்லை. சமாதானமும் ஒழுங்கும் நிலவுவதற்கு அவ்வளவு கண்டிப்பாக நடந்து கொண்டது இ. தே. ராணுவம். ரெங்கூனில் மட்டுமல்ல, பர்மாவெங்குமுள்ள இ. சு. சங்க ஸ்தாபனங்களும், ஆ. ஹி. பௌஜ் பிரிவுகளும் இவ்விதமேநடந்துகொண்டன. இவ்விதமில்லாதிருந்தால் பர்மா வாழ் இந்தியர்களின் நிலை படுமோசமாகி இருக்கும்.

பர்மாவை மீண்டும் பிரிட்டிஷார் கைப்பற்றிக் கொண்டது தெரிந்தது. ஆனுல், நேதாஜியும் அவரது சகாக்களும் இருக்குமிடம் தெரியவில்லை.

நேதாஜி எங்கே?

நேதாஜி அவர்கள் எங்கே என்ற கேள்வி கிழக்காசியாவெங்கும் கிளம்பி எதிரொலித்தது. சில நாட்களில் நேதாஜியும் அவரது சகாக்களும் பர்மாவிலிருந்து வெளியேறி

விட்டனர் என்று செய்தி கிடைத்தது. எங்கே சென்றூர்கள் என்ற விபரம் தெரியவில்லை.

கிட்டத்தட்ட ஒருமாதம் ஆகிவிட்டது. நேதாஜியை பற்றி ஒரு தகவலும் கிடைக்கவில்லை. கிழக்காசியாவில் உள்ள இந்தியர்கள் புழுவெனத் துடித்தனர். தங்கள் அருமைத் தலைவர் என்னவாணூரோ என ஏங்கினர்.

இயக்கம் தோல்வியுற்றதைப் பற்றிக்கூட அவர்கள் கவலைப்படவில்லை. தங்கள் ஒப்பற்ற தலைவர் உத்தமர் சுபாஷ் பாபு எங்கே என்ற ஏக்கமே அவர்களை வாட்டியது. தாயைப் பிரிந்த கன்றுபோலாணூர்கள்.

இந்நிலைமையில் மே மாதம் 25ந் தேதி ஒரு அறிக்கை பாங்காக்கிலிருந்து வெளிவந்தது. அவ்வறிக்கையைக் கண்ட கிழக்காசிய இந்தியர்கள் அடைந்த ஆனந்தத்தை அளவிட்டுரைக்க இயலுமோ? இயலாது. தங்கள் அருமைத் தலைவர் பத்திரமாக பாங்காக் வந்து சேர்ந்தாரென்பதை அறிவிக்கும் அவ்வறிக்கையை கண்ட மக்கள் இழந்த தங்கள் உயிரை மீண்டும் பெற்றவர்கள்போலாணூர்கள். அவ்வறிக்கை வருமாறு:

'பாங்காக், மே 16ந் தேதி ஆ. ஹி. பௌஜின் பிரதம தளபதியுமான நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் தமது மந்திரிசபை அங்கத்தினர்களுடனும் உத்தியோகஸ்தர்களுடனும் இங்கு வந்து சேர்ந்துள்ளார்.,

தனிப்பெருந் தலைவர்

சுபாஷ் பாபு தலைவராக இருக்கவே பிறந்தவர் என்றுரைத்தார் இந்தியாவின் தந்தை - இணையற்ற தலைவர் மகாத்மா காந்தியடிகள். இது எவ்வளவு தீர்க்க தரிசனமும் உண்மையும் நிறைந்த வார்த்தைகளென் பதை கிழக்காசியா வாழ் மகாஜனங்கள் நிதர்ஸனமாக அறிந்து கொண்டனர். நேதாஜிக்கு இணையாக யாரைக் கூற முடியும்? அவருக்கு அவரேதான் இணை, வேறு ஒப்பு உவமை கூறமுடியாத உயர்ந்தவர் நேதாஜி. அவருடைய கம்பீரமான ஆகிருதியே அவரைப் பிறவித் தலைவரெனப் பறையறைவிக்கும். ஆறடி உயரமும் உயரத்திற்கேற்ற பருமனும் கொண்ட வசீகரமான அவருடம்புக்கு, ராணுவ உடை மேலும் ஒரு கம்பீரத் தையும் கவர்ச்சியையும் அளித்தது. எவ்வளவு பெரிய

மனிதரும் அவரைப் பார்த்த மாத்திரத்திலே தலை வணங்காதிருக்க முடியாது. அவருடைய பெருமையைப் பிறர்கூறவேண்டாம். அவருடைய தோற்றமே உறுதி கூறும்.

கிழக்காசியா வாழ் இந்தியர்கள் பாக்கியம் செய்தவர்கள். நேதாஜியின் அதிஅற்புத - மேதா விலாசங் கொண்ட தலைமைத்துவத்தின் கீழ் நடைபெற்ற புனித இயக்கத்தைக் கண்ணாரக் கண்டவர்கள். கிழக்காசியாவிலே நேதாஜி நிகழ்த்திய செயலை—அற்புதச்செயலை—எடுத்துக் காட்டுவது சாமானியப்பட்ட காரியமல்ல!

கிழக்காசியாவிலே நடைபெற்றதைப் போன்ற ஒரு பெரிய இயக்கத்திற்குத் தலைமை தாங்குவதென்பது சாமானியப்பட்ட காரியமன்று. அதிலும் பிரிட்டிஷ் ராணுவத்தில் பல வருடங்கள் இருந்து தேறிய பெரிய ஆபீஸர்களும் சிப்பாய்களுமே பெரும்பாலாகக் கொண்ட ஒரு ராணுவத்தின் பிரதம தளபதியாக இருந்து போர் நடத்துவ தென்றால் அதற்கு எவ்வளவு திறமையும் நெஞ்சத் துணிவும் வேண்டும் என்பதை அவரவரும் கற்பனையின் மூலமே தான் உணரமுடியும்.

இந்தியாவிலே இன்றுவரை தீர்க்கமுடியாமலிருந்துவரும் வகுப்புப் பிரச்னையைத் தலைகாட்டவிடாதபடி பார்த்துக் கொண்ட ஒரு செயலே அவருடைய தலைமைத்துவத் திறமைக்குப் போதுமான சாட்சியாகும்.

சுபாஷ் பாபு, ஷோனன் வந்து சேர்ந்து தலைமைப் பதவி ஏற்றுக்கொண்ட உடனே தலைமைக் காரியாலயம் ஒரு அறிக்கை விடுத்தது. இந்தியா விடுதலை யடையும் வரை ஒவ்வொரு இந்தியனின் கோஷம் ஜெய்ஹிந்த் என்பதாகவே இருக்கவேண்டும். புதிய சங்கத் தலைவர்

போஸை இனிமேல் நேதாஜி என்றுதான் அழைக்க வேண்டும் என்பதே.

நாமக்கல் கவிஞர் கூறுவதைப் போல் 'ஜெய்ஹிந்த்' என்கிற ஜீவ நன்னுதம் செய்த ஒற்றுமையையும் உத்வேகத்தையும், உணர்ச்சிப் பெருக்கையும் என்னென்று கூறுவது? எங்கு பார்த்தாலும் ஜெய்ஹிந்த் மயம். இந்தியர் ஒருவரை யொருவர் சந்திக்கும் பொழுதும் ஒருவருக் கொருவர் கடிதம் எழுதும் பொழுதும் முதலில் வருவது ஜெய்ஹிந்த் தான். அதைப்போலவே நேதாஜியைப் போஸ் என்று கூறுவது அகௌரவமாகக் கருதப் பட்டது. எவரைப் பார்த்தாலும் நேதாஜி என்றுதான் கூறுவர். இன்று அது உலகப் பிரசித்தமாய் விட்டது.

தேசாபிமானமே உருவெடுத்தார் போன்றவர்

அவருடைய தேசாபிமானத்தைப் பற்றிப் பேச யாரால் இயலும்? தேசபக்தியே ஓர் உருவம் பெற்றது போன்றவர் நேதாஜி. தேசத்தினிடம் கொண்ட பற்றுதல் காரணமாகத் தம்மையே தேசத்துக்கு அர்ப்பணம் செய்து கொண்ட தியாக சீலர் அவர். இந்தியாவின் அடிமைத் தனமே அவரை அரசியலில் இழுத்தது. இல்லாதிருந்தால் அவர் ஆத்மார்த்தத் துறைகளிலே ஈடுபட்டிருப்பார்.

இதைப் பற்றிய சம்பவ மொன்று நினைவுக்கு வருகிறது; 1943 செப்டம்பர் 4ந் தேதி யன்று மாலையில் நேதாஜி பினங்கிலுள்ள தண்ணீர்மலை ஆலயத்துக்கு விஜயம் செய்தார்; பக்தி சிரத்தையோடு பிரார்த்தனை செய்தார். பிறகு வெளி மண்டபத்திலே சிற்றுண்டி அளிக்கப்பட்டது. அங்கு நடைபெற்ற நிகழ்ச்சிகள்—ஆலயத்தின் சூழ்நிலை அவருடைய இருதயத்தின்

ஆழத்திலே மறைந்து கிடந்த பழைய நினைவுகளைக் கிளறிவிட்டன போலும்! அவர் உணர்ச்சி பரவசமாகி விட்டார். கண்களில் ஆனந்தக் கண்ணீர் சொரிய அவர் கூறிய வார்த்தைகளாவன :—

“ஆண்டவனின் சக்தி மகத்தானது. அந்த சக்திக்கு முன்னே நாம் எல்லாம் ஒரு தூசுக்குச் சமானம். ஆண்டவனின் சித்தப்படியே அனைத்தும் நடக்கின்றன. நான் இளைஞனாக இருக்கும் பொழுது ஆத்மார்த்தத் துறைகளிலே அதிக நாட்டம் செலுத்தி வந்தேன். மூவாசைகளைத் துறந்து, சன்னியாசியாகி ஞான மார்க்கத்திலே செல்லவேண்டுமென்றெண்ணினேன். ஆனால், நாட்டின் துர்ப்பாக்கிய நிலை அந்த எண்ணத்தைத் தடுத்துவிட்டது. புராதனப் பெருமை வாய்ந்த பரத கண்டம் அன்னியர்க்கு அடிமைப்பட்டுக் கிடப்பதும் அதன் பயனாக இந்தியர்கள், தங்கள் சொந்த நாட்டிலேயே கேவலமான வாழ்க்கை நடத்துவதும்-- கேவலமாக நடத்தப்படுவதும் கண்டு என்மனம் துடித்தது. பாரத நாட்டை விடுவித்து மேல்நிலைக்குக் கொண்டுவர வேண்டியதே முக்கிய கடமையென உணர்ந்தேன். அரசியல் சுழலிலே இறங்கிவிட்டேன். அதுவும் ஆண்டவன் சித்தமே” என்றார் நேதாஜி.

பதவிக்குந் தக்கபடி ஹிருதயமும் விசாலமுடையதாக இருக்கவேண்டியதவசியம். நேதாஜி, ஆ. ஹி.

விசால உள்ளம்

அரசாங்கத் தலைவரென்ற ஹோதாவிலே பல நன்கொடைகள் வழங்கினார். அவை அவருடைய தாராள மனப்பான்மைக்கு உதாரணங்களாயிருந்தன. அ. ஹி. த. அரசாங்கம் ஸ்தாபிக்கப்பட்ட தினத்தன்று நேதாஜி, நிப்பொன் சாம்ராஜ்யப் படைகளுக்கு

10 ஆகாய விமானங்கள் நன்கொடையளிப்பதாகத் தெரிவித்தார். அப்பொழுது அவர், நிப்பொன் அரசாங்கத்துக்கு எழுதிய கடிதத்திலே, பொது எதிரியைத் தொலைக்க நடக்கும் இந்த ஆசியப் பொதுப் போரிலே ஆசிய நாடுகளுக்கு நிப்பொன் புரிந்துவரும் பேருதவிக்கும், சகோதரத்தன்மை நிறைந்த அன்புக்கும் எங்கள் மகிழ்ச்சியை நிதரிசனப் படுத்துமுகத்தான் கிழக்காசியா இ. சு. சங்கத்தின்சார்பில் சிறு நன்கொடை பத்து ஆகாய விமானங்கள் செய்வதற்குரிய தொகையை வழங்க சந்தோஷத்தோடு விரும்புகிறோம்' என்று குறிப்பிட்டார்.

1943ம் வருஷம் வங்காளத்திலும் அஸ்ஸாமிலும் கொடிய உணவுப் பஞ்சம் ஏற்பட்டு லட்சக் கணக்கான மக்கள் மாண்டொழிந்தார்களல்லவா? இதைக் கேள்விப் பட்டவுடனே நேதாஜி, பர்மாவிலிருந்து ஒரு லட்சம் டன் அரிசி அனுப்பிவைப்பதாகக் கூறி அதை இந்திய அரசாங்கம் பெற்றுக்கொள்வதற்கான வழிவகைகளையும் குறிப்பிட்டிருந்தார். ஆனல் பிரிட்டிஷார் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. ஏற்றுக்கொண்டிருந்தால் லட்சக் கணக்கான மக்களைக் காப்பாற்றி இருக்கலாம்.

நேதாஜி, ரெங்கூனுக்கு விஜயம் செய்திருந்த சமயம் (24—9—43) நிருபரொருவர் இந்தியாவின் உணவுப் பிரச்சினை பற்றிக் கேள்வி கேட்டார். நேதாஜிக்கு ஆத்திரம் பீறிட்டுக்கொண்டு வந்தது. 'இந்தியாவின் பரிதாப நிலைக்குப் பிரிட்டனே காரணம்' எனக் கூறினர். மேலும் அவர் இந்தியாவில் பசிக் கொடுமை தாளமாட்டாமல் வருந்துபவர்களின் உபயோகத்திற்காக ஒரு லட்சம் டன் அரிசி அனுப்பித் தருவதாக இ. சு. சங்கம் முன்வந்ததென்றும் இந்திய

சர்க்காரிடமிருந்து இதுவரை அதற்கு யாதொரு பதிலும் கிடையாதென்றும் நேதாஜி தெரிவித்தார்.

இ. சு. இயக்கத்துக்கு தாய்லந்து அரசாங்கம் பரிவு காட்டி, உதவியளித்து வருவதற்காக வந்தனம் தெரிவிக்கு முகத்தான், நேதாஜி தமது தாய்லந்து விஜயத்தின்போது 50 ஆயிரம் பாட் நன்கொடை வழங்கினர். மேற்படி தொகையில் பாதிகாயமடைந்த தாய்லந்து வீரர்கள் நிதிக்கும், பாதி குணலங்கரன் சர்வகலா சாலைக்குமாக அளிக்கப்பட்டது.

பர்மாவின் அதிபதி பாமாவின் குமாரிக்கு திருமணம் நடைபெற்றது. நேதாஜி விவாகப் பரிசாக ஒரு லட்ச ரூபாய் வெகுமதி அளித்தார்.

பிரிட்டிஷாரின் விமானத் தாக்குக் காரணமாக பர்மாவில் முக்கியமாக ரெங்கூனில் பிரமாதமான பொருள் சேதம் விளைந்தது. சுமார் பதினைந்து லட்ச ரூபாய்வரை நேதாஜி நிதிக்கு வழங்கிய சூரத் வியாபாரி ஒருவர், குண்டு வீச்சின் காரணமாக தமது கோடிக் கணக்கான ரூபாய் பெருமதியுள்ள ஆஸ்திகளையும் குடும்பத்தையும் இழந்தார்.

விமானத் தாக்கு முடிந்தவுடன் வழக்கம்போல பாதிக்கப்பட்ட பிரதேசங்களைப் பார்வையிடச் சென்ற நேதாஜி, மேற்படி சூரத் வியாபாரியின் நிலையைக் கண்டு இரங்கி, அவரைத் தம்முடனே கூட்டி வந்து தமது வீட்டிலேயே சில நாட்கள் வைத்திருந்து, ஆறுதல் கூறித் தேற்றிப் பிறகு இரண்டு லட்ச ரூபாய் ஆ. ஹி. பாங்கிலிருந்து இனமாகக் கொடுக்கும்படி ஏற்பாடு செய்தனுப்பினர்.

மற்றொரு செட்டியாருக்கும் இதே போன்று பெருந் தொகை வழங்கினார். இவையொத்த நிகழ்ச்சிகள் பல.

ஆசாத் ஹிந்த் அரசாங்கம் பர்மாவுக்கு மாற்றப் படுவதற்கு வெகு நாட்களுக்கு முன்னரே அ. ஹி. பௌஜ் பிரிவுகள் மாற்றப்பட்டு வந்தன. ஆ. ஹி. பௌஜின் பிரதம சேனாதிபதியான நேதாஜி, அவ் வீரர்கள் முன்னேறிய பின்னரும் பின்னணியில் தாமதிக்க விரும்பவில்லை. 'என்னுடைய வீரர் போர்முனையில் இருக்கும்பொழுது, அவர்களின் தலைவனாகிய நான், பின்னால் தங்கமுடியாது. நான் இருக்கவேண்டிய இடம் என்னுடையவீரர்களுடனேயே, என்று கூறுவார்

சொல்லும் செயலும்

இது வெறும் வாசாலக வார்த்தையல்ல. பிறகு அவர் பர்மா சென்று போர்முனையில் வீரர்களுக்குச் சமீபத்திலேயே தம்முடைய காரியாலயத்தை அமைத்துக்கொண்டு அலுவல்களைக் கவனித்து வந்தார்,

'அஸாஹி ஷிம்புன்' என்ற பிரசித்தி பெற்ற பத்திரிகையினால் இந்திய பர்மா போர்முனைக்குப் பிரத்தியேகமாக அனுப்பப்பட்டவரும் பிரபல நாவலாசிரியருமான திரு. அஷி ஹேய் ஹினோ மேற்படி பத்திரிகைக்கு (16–5–44ந் தேதி) அனுப்பிய செய்தியில் போர்முனையைப் பற்றியும் நேதாஜியைப் பேட்டி கண்ட விபரத்தையும் குறிப்பிட்டிருந்தார்.

'ஆ. ஹி. அரசாங்கத்தலைவரான நேதாஜி சுபாஷ் சந்திரபோஸை இந்திய பர்மாப் போர்முனையில் ஓரிடத்தில் எதிர்பாராதவிதமாகப் பேட்டி காணும் பாக்கியத்தைப் பெற்றேன்' என்று குறிப்பிட்டிருந்தார் திரு ஹினோ.

நேதாஜியின் முன்னணி நடவடிக்கைகளை, 'யோமி யூரி ஹோச்சி' யுத்த நிருபர் வர்ணிப்பதைப் பாருங்கள்:

"ஆ. ஹி. பௌஜ் வீரர்களுடன் சேர்ந்தே நேதாஜி வசிக்கிறார். அவர் தினசரி மூன்று மணி நேரம் மட்டுமே உறங்குகிறார். பாக்கி நேரங்களை, அவர் தமது துருப்புகளின் நலனை நேரடியாகக் கவனிப்பதிலோ அல்லது முன்னணியில் பகைவருக்கெதிரான நடவடிக்கைகளை மேற்பார்த்து நடத்துவதிலோ ஈடுபடுத்துகிறார்."

இவ்விதம் போர்முனை நடவடிக்கைகளில் மிகத் துணிச்சலாக ஈடுபட்டிருந்த சமயங்களில் அபாயகரமான சம்பவங்கள் நிகழ்ந்து, மயிரிழையில் உயிர் தப்பி இருக்கிறார். அவருடைய ஆலோசகர்கள், 'நீங்கள் சற்றுக் கவனமாக நடந்துகொள்ள வேண்டும். உங்கள் உயிர் மதிப்பற்றது. அதை சர்வ ஜாக்கிரதையாகக் காப்பாற்றி வரவேண்டும்' என்பார்கள். அதற்கு சாவதானமாகப் பதிலளிப்பார்:—


'இந்தியா சுதந்திரமடைய வேண்டும். அதற்கு நான் பாடுபட வேண்டுமென்பது பரம்பொருளின் திருவருளானல் என்னுயிருக்கு எதுவும் இடர் விளைவிக்க முடியாது' என்று உறுதியாக மறுமொழியளிப்பார் நேதாஜி.

இது முற்றிலும் உண்மை. கிழக்காசிய இ. சு. இயக்கம், நேதாஜி ஒருவரின் பொறுப்பிலே நடைபெற்றதென்னலாம். சகல துறைகளிலும் அவர் தாமாகவே காரியங்களை செய்யவேண்டியதிருந்தது. அவருடைய ஆதர்ஸமே இயக்கத்துக்கு உயிரூட்டி நடத்திக்கொண்டிருந்தது. அவரில்லாமல் ஒருநாள்கூட நடைபெற்றிருக்க முடியாது.


இறுதியாக இவ்வத்தியாயத்தை முடிக்கு முன் ஒரு விஷயத்தைப் பிரஸ்தாபிக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. இன்று உலகம் எங்கும் ஒரு கேள்வி எழுந்துள்ளது. 'நேதாஜி எங்கே?' என்பதே அது. பலவித மாறுதலான செய்திகள் கிளம்பி நமது மூளையைக் குழப்பிவிட்டன. நாம் ஒரு முடிவுக்கு வர முடியாமல் திகைத்துக்கொண்டிருந்தோம்; சமீபத்தில் நேருஜி, வெளியிட்ட அறிக்கையைப் பார்த்த பிறகு பலருக்கு அந்தநம்பிக்கை குறைய ஆரம்பித்திருக்கிறது. ஆனல், இந்தியாவிலுள்ள முன்னணிக் கட்சியினர் நேதாஜி இருக்கிருரென்று அழுத்தமாகக் கூறி வருகின்றனர். ஆனல் அவர்கள் கூற்றுக்கு எவ்வித ஆதாரமும் காட்டப்படவில்லை.

நேதாஜி எங்கே?

தைஹெக்குவில் நடந்ததாகக் கூறப்படும் விபத்தை விடப் பிராணுபத்தான பல சம்பவங்களில் ஆச்சரியப் படத்தக்க விதத்தில் தப்பிய நேதாஜி, இறுதிக் காலத்தில் நடைபெற்றதாகக் கூறப்படும் விபத்தில் இறந்திருக்க முடியாது என்பதே பொதுவாகப் பலரின் நம்பிக்கை.



ஞாபகச்சின்ன அடிக்கல்



ஞாபகச்சின்னத்துக்கு அடிக்கல் நாட்டிவிட்டு
நேதாஜி வணக்கம் செலுத்துகிறார்

ஒற்றுமை, நம்பிக்கை தியாகம்

ஐரோப்பியப் போர் நிலையில் மாறுதல் ஏற்பட்ட அதேசமயத்தில், பர்மாவிலும் ஒரு நெருக்கடியை உண்டு பண்ணிய பிரிட்டிஷார், நிலைமையைப் பூரணமாகப் பயன்படுத்திக்கொண்டு, இந்தியாவிலே ஒரு அரசியல் தாக்குதலை ஆரம்பித்தார்கள். சிறையிலே நான்கு ஆண்டுகளாக அடைபட்டுக்கிடந்த தலைவர்கள் விடுவிக் கப்பட்டனர். சில தினங்களில் வேவல் பெருமான் அமெரியின் அனுசரணையோடு ஒரு சமரசத் திட்டம் வெளியிட்டார். இந்தியா விஷயத்திலே இருந்தாற் போலிருந்துஇவ்விரு 'கருணாமூர்த்தி'களுக்கும் 'கிருபை' பிறந்ததேன்?

ஆ. ஹி. அரசாங்க மந்திரி சபையின் விசேஷக் கூட்டம் ஒன்று 19—6—45ந் தேதி தாய்லந்தில் நடை பெற்றது: அதில் வேவல்—அமெரி ஆகியோரின் திட்டங்கள் பற்றிய பிரசங்கங்கள், காந்திஜி, நேருஜி மற்றுமிதர தலைவர்களின் அறிக்கைகள், இந்தியப் பத்திரிகைகளின் கருத்துக்கள் ஆகியவை பரிசீலனை செய்யப்பட்டன. அவைகளை ஆலோசித்து நீண்ட விவாதங்கள் நடத்திய பின்னர் மந்திரிசபை, மேற்படி திட்டம் மிகவும் பிற்போக்கு வாய்ந்ததாகக் கருதி, இந்திய மக்களும், மகாத்மா உள்ளிட்ட காங்கிரஸ் காரியக்கமிட்டி அங்கத்தினர் களும், அத்திட்டத்தை உதறித் தள்ள வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்வதெனத் தீர்மானித்தது.

ஆ. ஹி. அரசாங்க நிராகரிப்பு

இதைத் தொடர்ந்து நேதாஜி, பாங்காக் ஆ. ஹி. வானொலி மூலமாகவும், பின்னர் ஷோனன் ஆ. ஹி. வானொலி மூலமாகவும் நீண்ட அறிக்கைகள் விடுத்தார்.

ஆ. ஹி. அரசாங்கத் தலைவரும் ஆ. ஹி. பௌஜ் பிரதம சேனாதிபதியுமான நேதாஜி, ஷோனனிலுள்ள பின்னணித் தலைமைக் காரியாலயத் தைப் பார்வையிடுவதற்காக விஜயம் செய்தார். 1945 வருடம் ஜூன் மாதம் 25ந் தேதி ஷோனனில் நடைபெற்ற ஆ. ஹி. அரசாங்க தின மாதாந்திரப் பொதுக் கூட்டத் திலே நேதாஜி பேசினார். கூட்டம் ஆரம்பமாகுமுன் மழை பெய்துகொண்டிருந்தது. (முக்கியமான கூட்டம் நடைபெறும் பொழுதெல்லாம் மழை பெய்வது வழக்கம்) அப்படி இருந்தும் பல்லாயிரக்கணக்கான மக்கள் குழுமி யிருந்தனர். நேதாஜி ஹிந்துஸ்தானியில் சுமார் மூன்று மணிநேரம் பேசினார். அவருடைய பேச்சு வழக்கம்

ஷோனனில் நேதாஜி

போல உணர்ச்சியை உண்டுபண்ணக்கூடியதாகவே இருந்தது. தோல்வி மனப்பான்மை அதில் துளிகூடக் காணப்படவில்லை.

இந்தியாவின் விடுதலைக்காக நடைபெறும் புனிதப் போராட்டத்திலே, மலாயாவாழ் இந்தியர்கள்' தங்களுடைய ஊக்கத்தையும், உணர்ச்சியையும் சிறிதும் தளர்த்தக்கூடாதென்றும், பர்மாவில் ஏற்பட்ட சம்பவங்களைப் பொருட்படுத்தாமல் போராட்டத்தை இன்னமும் தொடர்ந்து நடத்துவதற்கு ஆதரவாக ஆட்கள், பணம், பொருட்களை அதிக தாராளமாக அளிக்கவேண்டுமென்றும் அவர் கேட்டுக்கொண்டார் இதன் பிறகு இந்தியாவின் அரசியல் நிலைமையை விளக்கியும் அங்கு காணப்படும் தோல்வி மனப்பான்மையைக் கண்டித்தும் பேசினர்.

வேவல் திட்டத்தை ஆலோசிப்பதற்காக சிம்லாவில் நடைபெறும் மகாநாட்டில் கலந்துகொள்வதென காங்கிரஸ் தலைவர்கள் முடிவுசெய்திருந்தனர். இதைக் கண்டித்து நேதாஜீ, ஷோனன் ஆ. ஹி. வானொலியில் தொடர்ச்சியாகப் பலநாட்கள் பேசினர். பிரிட்டிஷாரின் நயவஞ்சக ராஜதந்திர வலையில் விழ வேண்டாமென எச்சரிக்கை விடுத்தார்.

சிம்லா மகாநாடு

'காங்கிரஸ் தலைவர்களில் சிலர் பிரிட்டனுடன் சமரசத்திற்கு வர அதிக ஆவலுடையவர்களாக இருக்கிறார்கள். இந்தத் துடிதுடிப்பானது கௌரவமற்றதாகவும் தகுதியற்றதாகவும் இருக்கிற'தென நேதாஜி அபிப்பிராயப்பட்டார்.

இந்தியப்பிரச்னையை சர்வதேசப் பிரச்னையிலிருந்து உள்நாட்டுப் பிரச்னையாக்குவதற்கே பிரிட்டிஷார் இந்த 'மாய்மால வித்தையை' நடத்துகின்றனர் என்பதைப் பல திருஷ்டாந்தங்களுடன் — சர்வதேச நிகழ்ச்சிகளின் சாட்சியத்துடன்—நேதாஜி மிக விஸ்தாரமாக விளக்கிப்பேசினர். இந்த நாட்களில் நேதாஜிக்கு இரவு உறங்கக்கூட நேரமிருப்பதில்லை. இரவு முழுமையும் உட்கார்ந்து சர்வதேச ரேடியோ நிகழ்ச்சிகளையும் நிலைமைகளையும் மிக நுணுக்கமாக ஆராய்வார். அ. இ. ரேடியோவையும், பி. பி. ஸி. ரேடியோவையும், கவனமாகக் கேட்பார். சிம்லா மகாநாடு சம்பந்தமான விவகாரத்தை வெகு நுட்பமாகப் பரிசீலனை செய்வார். உடனுக்குடன் தமது அறிக்கையை, வானெலியிலே வெளியிடுவார்.

இந்நிலையிலே சிம்லா மகாநாடு முறிந்ததாகச் செய்தி கிடைத்தது. நேதாஜி அடைந்த ஆனந்தத்திற்கோர் அளவில்லை. நேதாஜியின் மனோரதம் பூர்த்தியானதைக் கண்டு கிழக்காசியா வாழ் இந்தியர்கள் பூரித்துப் பொங்கினர்.

நேதாஜி இதோடு விட்டுவிடவில்லை. சிம்லா மகாநாட்டிலிருந்து இந்தியா கற்றுக்கொள்ளவேண்டிய பாடம்பற்றி, மேலும் அவர் பல வானெலியில் அறிக்கைகள் விடுத்தார்.

யுத்தஞாபகச் சின்னம்

இந்திய சுதந்திரப் போராட்டத்தில் உயிர்நீத்த வீரத் தியாகிகளுக்காக ஸ்தாபிக்கப்பட்ட ஞாபகச் சின்னத்துக்கு நேதாஜி அஸ்திவாரக் கல் நாட்டினர். இவ் வைபவம் ஷோனன், கானுட் டிரைவிலுள்ள கடலோரப் பகுதியில் 1936 ஜூலை 9ந் தேதி நடைபெற்றது. இதற்குஉயர்தா நிப்பொன் அதிகாரிகளும்,ஆ. ஹி.

பௌஜ், ஆ. ஹி. அரசாங்க உத்தியோகஸ்தர்களும் இந்தியப் பிரமுகர்களும், இதர சமூகத் தலைவர்களும் விஜயம் செய்திருந்தனர். ஆ. ஹி. பௌஜும். ஜா. ரா. ரெஜிமெண்டும் அணிவகுத்து நின்றன. பால, பாலிகா சேனைகளும் கலந்து கொண்டன.

தேசிய கீதத்துடன் வைபவம் ஆரம்பமாயிற்று. தேசியக் கொடி பாதி தளர்த்திவிடப் பட்டுப் பறந்து கொண்டிருந்தது. இந்திய வீரர்களின் மகத்தான தியாகங்களைப் பாராட்டி நேதாஜி இந்துஸ்தானியில்பேசினார்.

"ஒருநீண்ட பிரசங்கம் செய்வதற்கு இதுசமயமல்ல. வார்த்தைகள் வரமுடியாமல் ஆழ்ந்த எண்ணங்கள் ஏற்படும் சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. அவ்விதப் புனித சந்தர்ப்பங்களிலே இதுவும் ஒன்றாகும். ஆகவே, அழியாப் புகழ்பெற்ற தியாகிகளுக்கு நமது வணக்கப் பாராட்டுதலை, அமைதியோடு செலுத்துவோம். அதே சமயம் நமது வீரர்களால் முடிக்காது விடப்பட்டுள்ள வேலையைத் தொடர்ந்து செய்து பூர்த்தியாக்க, நமக்கு பலம் அளிக்கும்படி நாம் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போம். அவர்களது அழியாத ஆத்மாக்கள், இன்று நம்முடனிருந்து நம்மை இன்னும் மகத்தான வீரபராக்கிரமச் செயல்களைச் செய்வதற்கு உத்வேகம் அளிக்கின்றன. ஆண்டவனின் திருவருளோடும், நம் வீரர்களால் நமக்களிக்கப்பட்ட ஆதர்ஸத்தோடும் நாம் தவறு செய்யாமலும், சமரசம் செய்துகொள்ளாமலும் இந்தியாவின் பூரண சுதந்திரம் சித்திக்கும் வரை போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துவோம். சகல நஷ்டங்களுக்கும் இடையூறுகளுக்கும், சோதனைகளுக்கும் துன்பங்களுக்குமிடையே நாம் இறுதி வெற்றியில் அசையா நம்பிக்கையும் அவ்வெற்றியை

அடைவதில் தீவிர உறுதியும் கொள்வோம்'' என்ருர் நேதாஜி.

பின்னர், படை அணிவகுப்பு அனைத்தையும் 'சாப்தான்'.போட்டு நிறுத்தப்பட்டு, மரியாதை அணி வகுப்புப் படையினர் தங்கள் ஆயுதங்களை திருப்பிப் பிடித்து நிற்க, இரண்டு நிமிஷநேரம் மௌனப் பிரார்த் தனை அனுஷ்டிக்கப்பட்டது.

அதன் பிறகு, நேதாஜி புஷ்பவளையம் வைத்தார். அதைத்தொடர்ந்து இதர தலைவர்களும் வைத்தனர். மரியாதை அணிவகுப்புப் படையினர் மும்முறை மரியாதைக் குண்டுகள் சுட்டதோடு வைபவம் முடிவுற்றது.

இறுதிவரை போராட உறுதி

நேதாஜி வாரம் வழக்கம்போல ஜூலை 4ந்தேதி முதல் 10ந் தேதிவரை சிறப்பான பல அம்சங்களுடன் கொண்டாடப்பட்டது. விழா ஆரம்ப தினத்தன்று நேதாஜி பொதுக்கூட்டம் ஒன்றில் பேசினுர். அதில் அவர் இறுதி வரை போராடத் தாம் உறுதிகொண் டிருப்பதை வலியுறுத்தினுர். "இம்பால் செல்லும் மார்க்கம் தற்காலிகமாகத் தடைப்பட்டிருந் தாலும் கூட டில்லி செல்லுவதற்கு அனேக மார்க்கங்கள் உண்டென்பதை மறந்துவிட வேண்டாம்.''

"கிழக்காசியா யுத்தம் எங்ஙனம் முடியுமென்பதை எவரும் கூறமுடியாது. இந்தியாவிலோ அல்லது உலகின் வேறெந்தப் பகுதியிலோ உள்ளவர்களைவிட நாம் இங்குள்ள நிலைமைகளை நன்கறிவோம். கிழக் காசியா யுத்தத்தில் நமக்கு என்ன ஆச்சரிய சம்பவங்கள் ஏற்படக் காத்திருக்கின்றன வென்று எவரும் கூற

முடியாது. 'ஒரு போரின் முடிவானது சிலசமயங்களில் கடைசி ஐந்து நிமிஷ நேரத்தில் தீர்மானிக்கப்படுகிற, தென்று நெப்போலியன் ஒரு சமயம் கூறினர்.

"நண்பர்களே, கடைசிச் சிப்பாயும், கடைசித் துப்பாக்கியும் உள்ளவரை எவ்வித சந்தர்ப்பங்களுக் கிடையிலும் போரைத் தொடர்ந்து நடத்துவதென்று ஆ. ஹி. த. அரசாங்கம் ஏற்கனவே தீர்மானித்து விட்டது. எனது ஆயுதந் தாங்கிய தோழர்களிடமிருந்து நான் கோருவது ரத்தம். மற்றவர்களிடமிருந்து நான் கோருவது அனுதாபமும், அடுத்த போருக்காக அதிகப் படியான ஆள், பொருள், சாதனங்களுமாகும்" என்று உரைத்தார்.

பாட்ஸ்டாம் மகாநாடு

மூன்று பெரிய வர்க்கமகாநாடு, பாட்ஸ்டாமில் ஆரம்பமாயிற்று. ஸ்டாலின், ட்ரூமன், அட்லி, ஆகிய வெற்றிகொண்ட நாடுகளின் தலைவர்கள் கூடிக்கலந்து பேசினர். இரண்டு வாரகாலம் மிகவும் அந்தரங்கமாக ஆலோசித்த பின்னர், எஞ்சியுள்ள அச்சுநாட்டை ஜப்பானை எவ்விதத்திலாயினும் வீழ்த்துவதென முடிவு செய்தனர்.

ஒரு பிரகடனம் விடுத்தனர். ஜப்பான் சரணாகதி யடையவேண்டுமென்பதே அதன் கோரிக்கை. இது ஆகஸ்ட் மாத ஆரம்பத்தில். ஆகஸ்ட் 9ந்தேதி சோவியத் ரஷியா, மஞ்சுகோ, சோவியத் எல்லைப்புறத்திலே நிப்பொன் மீது போர் தொடுத்தது. பாட்ஸ்டாம் பிரகடனத்தின் நெருக்குதலே இது. ஆனால் நிப்பொன் பணிய மறுத்துவிட்டது. தற்காப்புப் போரை உறுதியாக நடத்தியது.

அணுகுண்டு பிரயோகம்

படுபாதகச் செயல்என உலகம் ஒருமுகமாகத் தீர்ப்புக் கூறிய அணுகுண்டுப் பிரயோகம் 9—8—45ல் ஹிரோஷிமா மீதும் அதைத் தொடர்ந்து நாகாசாகி மீதும் செய்யப்பட்டது. இந்த அநியாயக் குண்டுவீச்சினால் சுமார் ஒன்றரை லட்சம் மக்கள் உயிருடற் சேத முற்றனர். பல மைல் விஸ்தீரணமுள்ள பூமி தீய்ந்து கருகி நாசமடைந்தது.

தென்னோ ஹெயிகா வென்றழைக்கப்படும் ஜப்பான் சக்ர வர்த்தி, அணுகுண்டுப் பிரயோகத்தினால் ஏற்பட்ட நஷ்டவிவரங்களைக் கேட்டவுடனே பதறித் துடித்து விட்டார். கதிகலங்கிக் கண்ணீர்வடித்து விட்டார். உடனே யுத்தத்தை நிறுத்தும்படியும் உத்தரவிட்டார். ஆகஸ்ட் 15ந் தேதி வெளியிடப்பட்ட இம்பீரியல் கட்டளையை பார்ப்பவர்கள் இதனை உணரலாம்.

இந்த முடிவு எதிர்பாராதநிலையில் ஏற்பட்டதாகும். எனவே, நேதாஜி தம்முடைய திட்டத்தைப் புனராலோசனை செய்யவேண்டியது அவசியமாயிற்று. தமது உண்மையான சகாக்களைக் கூட்டி ஆலோசித்தார். சிங்கப்பூரை விட்டு அவர் வெளியேற வேண்டுமென முடிவு செய்யப்பட்டது.

ஆகஸ்ட்மாதம் 16ந்தேதி நேதாஜி துயரம்நிறைந்த மனத்தோடு, சிங்கப்பூரை விட்டு விமானத்தில் வெளியேறினார். அவர் புறப்படு முன் இரண்டு அறிக்கைகளை விடுத்துச் சென்றார். அதுவே அவருடைய இறுதியான அறிக்கைகளாகும். அவைகளை இதன் கீழே கொடுப்பதோடு இப்புனித சரிதத்தைப் பூர்த்தி செய்யவேண்டியதிருக்கிறது.

இந்தியா விரைவிலே விடுதலை பெறும்

மலாயா, தாய்லாந்து, இந்தோ—சீனா, சீனா, ஜாவா சுமத்திரா, போர்னியோ, பிலிப்பைன், நிப்பொன் மற்றும் கிழக்காசியாவின் இதர பகுதிகளிலுள்ள இந்தியர்களுக்கு நேதாஜியின் விசேஷச் செய்தி:- சகோதர சகோதரிகளே! இந்தியாவின் விடுதலைப்போராட்ட சரித்திரத்தில் ஒரு மகத்தான அத்தியாயம் இப்பொழுது முடிவிற்கு வந்துவிட்டது. கிழக்காசியாவிலுள்ள பாரத புத்திர, புத்திரிகள் இவ்வத்தியாயத்தில் சாகா இடம் பெறுவர்.

இந்தியாவின் சுதந்திரத்திற்கான போராட்டத்திற்கு ஆட்கள், பணம், பொருட்களை வழங்கி, தேச பக்திக்கும் தியாக உணர்ச்சிக்கும் ஒருபிரகாசமிக்க உதாரணத்தை நீங்கள் ஏற்படுத்தினீர்கள்! எனது சர்வாம்சப் படைத்திரட்டு அழைப்பிற்கு நீங்கள் தாராளமாயும் ஆர்வத்தோடும் பதிலளித்தீர்கள். இதை நான் ஒருபோதும் மறக்கமாட்டேன்; ஆஸாத் ஹிந்த் பௌஜ், ஜான்ஸிராணி ரெஜிமெண்ட் ஆகியவற்றின் சோல்ஜர்களாகப் பயிற்சிபெற உங்களது புத்திரர்களையும், புத்திரிகளையும் நீங்கள் வற்றாத ஊற்றுப்போல வழங்கினீர்கள். ஆ. ஹி. த. அரசாங்க யுத்த நிதிக்கு நீங்கள் பணமும் பொருளும் தாராளமாக அளித்தீர்கள். சுருங்கக்கூறுமிடத்து இந்தியாவின் உண்மையான புத்திர, புத்திரிகளென்ற முறையில் நீங்கள் உங்களது கடமையைச் செய்தீர்கள். உங்களது கஷ்டங்களும் தியாகங்களும் உடனே பலனளிக்கவில்லை யென்பதற்காக உங்களைவிட நான் அதிகமாக வருந்துகிறேன்.

ஆனால், அவை வீணாகப் போய்விடவில்லை. ஏனெனில், அவை நம் தாய்நாட்டின் விமோசனத்தை

உறுதிப்படுத்தி இருப்பதோடு உலகெங்குமுள்ள இந்தியர்களுக்கு நித்திய உத்வேகமூட்டுவதாய் விளங்கும். வருங்காலம் உங்களது பெயரை வாழ்த்துவதோடு, இந்திய விடுதலையின் பலிபீடத்தில் நீங்கள் புரிந்த தியாகங்களைப் பற்றியும் உங்களது திட்டவட்டமான சாதனைகளைப் பற்றியும் பெருமையோடு பேசிக்கொள்ளும்.

நமது சரித்திரத்தில் முன்னெப்போதுமில்லாத நெருக்கடியான இச்சந்தர்ப்பத்தில் நான் கூறவேண்டிய ஒருவார்த்தை இருக்கிறது. நமது தற்காலிகத் தோல்வியினால் மனந்தளராதீர்கள். ஊக்கத்தோடும், உற்சாகத்தோடும் இருங்கள். எல்லாவற்றிற்கும் மேலாக இந்தியாவின் விதியில் உங்களது நம்பிக்கை ஒருபோதும் பிறழாதிருக்கட்டும். இந்தியாவை அடிமைத்தளையில் வைத்துக்கொண்டிருக்க உலகில் எந்த சக்தியுமில்லை. இந்தியா விடுதலைபெறும்—அதுவும் விரைவினிலே ஏற்படும்.

ஜெய்ஹிந்த்.
சுபாஷ் சந்திரபோஸ்,
1945 ஆகஸ்ட் 17உ

ஆ. ஹி. பௌஜ் ஆபீஸர்களுக்கும் சிப்பாய்களுக்கும் அதன் சூப்ரீம் கமாண்டரான நேதாஜி சுபாஷ் சந்திர

நம் வெற்றி எதனாலும் மாறாது

போஸின் விசேஷக் கட்டளை:- தோழர்களே! நம்தாய் நாட்டின் சுதந்திரத்திற்கான போராட்டத்தில் கனவிலுங் கருதாத ஒரு நெருக்கடி இப்போது நமக்கு ஏற்பட்டுள்ளது. இந்தியாவை விடுவிக்கும் கைங்கரியத்தில் நீங்கள் தவறிவிட்டதாக உணரலாம். ஆனால், இது தற்காலிகமானதென்றே

நான் கூறுவேன். எந்தத் தவறும் எந்தத் தோல்வியும் நீங்கள் முன்பு அடைந்துள்ள திட்ட வட்டமான சாதனைகளை இல்லாமற் செய்துவிட முடியாது. உங்களிற் பலர் இந்திய–பர்மா எல்லையிலும் இந்தியாவினுள்ளும் போரில் கலந்து சகலவிதமான கஷ்ட நஷ்டங்களையும் அனுபவித்திருக்கின்றனர். உங்களது தோழர்களிற் பலர் போர்க்களத்தில் உயிரைக்கொடுத்து, ஆஸாத் ஹிந்தின் அழியாப் புகழ்பெற்ற வீரத் தியாகிகளாகி இருக்கின்றனர். இந்த மகத்தான தியாகம் ஒரு போதும் வீண்போகாது.


தோழர்களே, இந்த இருளடைந்த நேரத்தில் நீங்கள் ஓர் உண்மையான புரட்சி ராணுவத்திற்குரிய ஒழுக்கத்தோடும் கௌரவத்தோடும் பலத்தோடும் நடந்துகொள்ள வேண்டுமென்று கூறுகிறேன். போர்க் களத்தில் வீரத்திற்கும் தியாக உணர்ச்சிக்கும் நீங்கள் ஏற்கனவே ருஜுக்களைக் காட்டியிருக்கின்றீர்கள். தற்காலிக தோல்வி நேரத்தில் உங்களுடைய மங்கா நம்பிக்கை உணர்ச்சியையும் அசையா மன உறுதியையும் காட்டவேண்டியது இப்பொழுது உங்கள் கடமையாகும். இந்தப்பெரும் பிரதிகூல நிலைமையிலும் நீங்கள் சிரம் நிமிர்ந்து பூரண நம்பிக்கை விசுவாசத்தோடு எதிர் காலத்தை நோக்குவீர்களென்பதை நான் சிறிதும் சந்தேகத்திற்கிடமின்றி அறிவேன்.

தோழர்களே, இந்த நெருக்கடியான நேரத்தில் நம் தாய் நாட்டிலுள்ள 38 கோடி தேசமக்களும் இந்திய விடுதலை ராணுவத்தினர்களாகிய நம்மை நோக்கு கின்றரென உணருகிறேன். ஆகவே, இந்தியாவுக்கு உண்மையா யிருங்கள். இந்தியாவின் விதியில் உங் களது நம்பிக்கை ஒருபோதும் பிறழாதிருக்கட்டும்.

டில்லி செல்லும் மார்க்கங்கள் பல இருக்கின்றன. டில்லியே இன்னும் நமது லட்சியமாயிருக்கின்றது. உங்களது அழியாப் புகழ்பெற்ற தோழர்களினுடையவும் உங்களினுடையவும் தியாகங்கள் நிச்சயமாக வெற்றி பெற்றே தீரும். இந்தியாவை அடிமைத் தளையில் வைத்திருக்க உலகில் எந்த சக்தியுமில்லை. இந்தியா விடுதலை பெறும். அதுவும் விரைவிலே ஏற்படும். ஜெய்ஹிந்த்.

சுபாஷ் சந்திரபோஸின் உத்திரவுப்படி
ஜே. ஏ. தீவி. காரியதரிசி
17—8—45

வீரத்தியாகிகளுக்கு அமைத்த ஞாபகச்சின்னம்



இதில் நேதாஜி அளித்த தாரக மந்திரம்–
ஒற்றுமை, நம்பிக்கை, தியாகம் – இலங்குகிறது.

பிரமச்சாரியின் கடிதம்

பூச்சோங் சுத்தசமாஜ ஸ்தாபகர், அமரர் சுவாமி சத்தியானந்தா அவர்களின் பூர்வாசிரமப் பெயர் கைலாசம் என்பதாகும். அவர் இளமையில் மலாயா தபால் இலாகாவிலே பணியாற்றினர். சில ஆண்டு களில் அதைத் துறந்து விட்டு சிங்கை இராமகிருஷ்ண ஆசிரமத்திலே சேர்ந்து பல வருடங்கள் சேவை புரிந்துகொண்டிருந்தார். அப்போது அவர் பிரமச்சாரி கைலாசம் என அழைக்கப்பட்டார். நேதாஜியினுல் ஆகர்ஷிக்கப்பட்ட சிரேஷ்டர்களில் அவர் ஒருவர். நேதாஜியுடன் அணுக்கமான தொடர்புகொண்டிருந் தவர்; அந்தரங்க நண்பர்களில் ஒருவர்.

நேதாஜி சம்பந்தமாக எனக்கேற்பட்ட சில சந்தேகங்களை நிவர்த்திக்க நான் பிரமச்சாரி அவர்களை [1946ல்] நாடினேன். அந்த விவரங்களை இதன்கீழே தருகிறேன்.

எனது கேள்விகள்

1. முடிவாக நேதாஜி மலாயாவிலே தங்கிவிட உறுதிகொண்டிருப்பதாக நம்பகமான செய்தி வந்ததே, பிறகு இம்முடிவை மாற்றக் காரணம் என்ன? 2. எங்கே செல்லும் உத்தேசத்தோடு புறப்பட்டார்? 3. சிங்கையை விட்டு அவர் புறப்பட்டது 16-ந்தேதியா அல்லது 17-ந் தேதியா?

4. அறிக்கை 17-ந் தேதியிட்டு 20-ந் தேதிப் பத்திரிகைகளில் வெளியிட்டிருக்கிறதே, தாமதத்திற்கு காரணம் என்ன?

5. நேதாஜியே அறிக்கையில் கையெழுத்திட்டிருந்தாரா? அல்லது பத்திரிகைகளில் இருக்கிறபடியே அவருக்காக திரு.தீவி கையெழுத்திட்டுவெளியிட்டாரா?

6, இந்த 21-வது அத்தியாயத்தில் திருத்த வேண்டிய அல்லது சேர்க்கவேண்டிய முக்கிய அம்சம் ஏதேனும் உண்டா?

தயவுசெய்து இவைகளுக்கு உங்களுடைய மேலான பதிலை அளியுங்கள்.

ஜெய்ஹிந்த்.

கு. மு. வீ.

1945-ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 11ந் தேதி ரயிலில் நான் சிங்கையிலிருந்து பத்துகாஜாவிற்குப் பிரயாணம் செய்துகொண்டிருந்தேன். அவ்வேளையில் நேதாஜி மலாக்காவில் இருந்தார்.

பிரமச்சாரியின் பதில்

12—8—45 மாலை ரயில், சிரம்பான் ஸ்டேஷனை அடைந்ததும், நேதாஜி மலாக்காவிலிருந்து டெலிபோன் செய்திமூலம் சிரம்பானில் என்னை நிறுத்தி உடனே சிங்கைக்குத் திரும்பும்படி அறிவித்தார். இதன் காரணம் எனக்குப் புரிந்துகொள்ளமுடியவில்லை. ஸ்டேஷனுக்குவந்திருந்த பிரமுகர்களாலும் எதுவும் சொல்ல இயலவில்லை. எதற்கும், பத்துக்காஜாவரை சென்றுவிட்டு அடுத்த நாளே சிங்கைக்குத் திரும்பிவிடலாமென்ற உத்தேசத்துடன் ரயிலில் பிரயாணத்தை தொடர்ந்து நடத்தினேன். அன்று நடுஜாமத்தில் ரயில் கோலாலம்பூர் ஸ்டேஷனை அடைந்ததும், அங்கு வந்திருந்த பிரமுகர்களில் இருவர் ஜப்பானின் சரணாகதி சம்பந்தமாகப் பிரஸ்தாபித்தார்கள். இதைக் கேட்டதும் உடனேயே சிங்கைக்குத் திரும்பத் தீர்மானித்துவிட்டேன். எனவே 13—8—45 அன்று கோலாலம்பூர் ஜப்பான் ராணுவ அதிகாரியிடமிருந்து அவசரப்பிரயாண அனுமதிச் சீட்டு ஒன்றைப் பெற்றுக்கொண்டு அன்று மாலை ரயிலில் சிங்கைக்குப் புறப்பட்டு, 14—8—45 அன்று காலை சிங்கை வந்து சேர்ந்தேன்.

நேதாஜி 13—8—45 காலையிலேயே சிங்கப்பூர் வந்து விட்டார். எனவே நான் சிங்கை வந்து சேர்ந்ததும் நேதாஜீக்கு டெலிபோன் பண்ணினேன். அவர் உடனே தனது மோட்டார் வண்டியை அனுப்பி, என்னை அவருடைய இல்லத்திற்கு அழைத்தார். அப்பொழுது சுமார் காலை 11 மணி இருக்கும். அன்று நான்

அவரைச் சந்திக்கும்போது மிகவும் ஆழ்ந்த அமைதி யைக் காட்டும் வதனத்துடன் வீட்டின் மேல் மாடியில் நின்றுகொண்டிருந்தார்.

"உங்களுக்கு ஏதாயினும் சிரமம் கொடுத்து விட்டேனு?" என்று புன்சிரிப்புடன் கேட்டு விட்டு மேலும், "செய்தியைத் தாங்கள் அறிந்திருக்கக் கூடும்? தங்களைக் கலந்தாலோசிக்க விரும்பியுள்ளேன்" என்ருர்.

"கேள்விப்பட்டேன். தங்கள் மந்திரிகளின் ஆலோசனை என்ன?" என்று கேட்டேன்.

நேற்றுமாலை (13-8-45) மந்திரிசபை கூடியது. அவர்கள் 'நான் இங்கேயே இருக்க வேண்டும் என்று கூறுகிருர்கள்' என்று பதிலளித்தார்.

"தாங்கள் இங்கிருந்து சரணடைந்தால் தங்களுக்கு என்ன நேரிடக்கூடும்?" என்று கேட்டேன். அதற்கு அவர், 'என்னைச் சுடுவார்கள். அல்லது தீவாந்திர சிட்சை விதிப்பார்கள். எனக்கு இது விஷயமாகக் கவலை யில்லை. நமது இலட்சியம் நிறைவேறினுல் போதும் என்பதுதான், என்று கூறினுர்.

"அப்போது இன்னும் இயக்கத்தை வேறு வழி களின் மூலம் தொடர்ந்து நடத்த நாம் எத்தனிப்பது தான் சரி" என்றேன்.

முன்னர் சில சம்பாஷணைகளில் நேதாஜி டோக்கியோவிலிருந்த சோவியத் ரஷிய ஸ்தானிகருடன் தான் கொண்டுள்ள தொடர்புகளைப் பற்றி என்னிடம் கூறியிருக்கிருர். எனவே, இப்பொழுது நேதாஜி, மஞ்சூரியா சென்று அங்கிருந்து கொண்டு ரஷியருடன்

தொடர்பு வைக்க முயற்சிப்பதென நேதாஜியும் நானும் ஆலோசனை செய்தோம். எங்கள் சம்பாஷணை இந்த நிலையிலே இருக்கும் போது, நேதாஜி சற்றுக்களைப் படைந்திருந்ததால், நான் மீண்டும் அன்றிரவு அல்லது மறுநாள் அவரைச் சந்திப்பதாகச் சொல்லிவிட்டு வந்து விட்டேன்.

அன்றிரவு நேதாஜி, தனது மோட்டார் வண்டியை அனுப்பி மறுபடியும் என்னை அழைத்தார். அப்பொழுது பொதுவாக கிழக்காசியா இந்தியர்கள் செய்துள்ள மகத்தான தியாகத்தைப் பற்றியும், எதிர்கால உலக நிலைமையைப் பற்றியும் சம்பாஷித்தார்.

அடுத்தநாள் (15-8-45) மாலை சுமார் மூன்றுமணி யளவிலே மீண்டும் மோட்டாரை அனுப்பி என்னை அழைப்பித்தார். நான் அவரில்லத்திற்குச் சென்று, இரண்டொரு நிமிஷங்களுக்குள்ளே ஜப்பானின் சரணகதி விமர்சனம், அவர் பங்களாவிலுள்ள ரேடியோ மூலம் வந்தது. அச்செய்தி டைப்படிக்கப் பட்டிருந்த கடிதம் ஒன்றை அவர் வீட்டிலுள்ள இந்திய சுதந்திரக் கழக உத்தியோகஸ்தர் ஒருவர் கொண்டுவந்து அவர் கையில் கொடுத்தார். அதை இரண்டு தடவை மௌன மாக வாசித்துவிட்டு, எனக்கு அதைப் படித்துக் காண் பித்தார்.

பின்னர், அமைதியான தோற்றத்துடன் 'இனி அடுத்தபடி என்ன?' என்று வினவினர்.

எனக்குப் பேச நா வெழவில்லை. அதோடு அன்று சாயந்தரம் ஜான்ஸிராணி முகாமில் ஒரு தேனீர் விருந்து இருந்தமையால், நேதாஜி அதற்குப் பின்னர் மீண்டும் தன்னைச் சந்திக்கும்படி என்னிடம் கூறினர்.

நான் அவரிடம் விடைபெற்றுக்கொண்டு, அவருக்குச் சற்று முன்னுல் ஷி தேனீர் விருந்துக்குச் சென்றேன். நேதாஜியும் அவரது பரிவாரங்களும் சற்று பின்னர் அங்கு வந்தார்கள். அங்குக் கூடியிருந்தவர்களுக்கு சரணுகதி சம்பந்தமாக எதுவும் தெரியாது. நேதாஜியின் முகத்தில் மாத்திரம் ஒருவிதமான ஆழ்ந்த அமைதியும் சிந்தனையும் தோன்றிக் கொண்டிருந்தது. விருந்திற்குப் பின்னர் சுமார் மாலை ஏழுமணியளவில் நேதாஜி அவர் பங்களா திரும்பினுர்.

நான் இந்திய சுதந்திர சங்கத் தலைமைக் காரியாலயத்து உயர்தர உத்தியோகஸ்தர்களைச் சந்தித்து மேலாக வேண்டிய வேலைகளைப்பற்றிப் பேசச் சென்றேன்.

மாலை சுமார் 9 மணியளவில் நேதாஜியின் டெலிபோன் இச்சங்கக் காரியாலயத்துக்கு வந்தது. அதற்குச் சற்று முன்னர் நான் ஜான்ஸிராணி முகாமிற்கு மறுபடியும் செல்ல நேரிட்டது. அங்கும் நேதாஜியின் டெலிபோன் வந்தது. பின்னர் நேதாஜி தனது மோட்டார் வண்டியை அனுப்பி என்னைத் தனது இல்லத்திற்கு அழைத்தார்.

'ஏன் இவ்வளவு சுணக்கம்' என்று வினவினுர்.

நான் மேற்படி காரணங்களைச் சொன்னேன்.

"நாளை (16-8-45) அதிகாலையில் நான் பிளேனில் பிரயாணம். இது எவருக்கும் தெரியக்கூடாது. என் பங்களாவிலுள்ளவர்கள் உங்களைக் கேட்பார்கள். நீங்கள் நான் தைப்பிங்கிற்கு [அங்கு தான் ஜப்பான் ராணுவ தலைமைக்காரியாயலம் இருந்தது.]போனதாகச் சொல்ல வேண்டும். பொதுஜனங்களுக்கும் இதர உத்தி

யோகஸ்தர்களுக்கும் அவ்விதமே சொல்லவேண்டும்'' என்ருர். என் மனது கசிந்தது. சில நிமிடங்கள் நானே நேதாஜியோ எதுவும் பேசமுடியவில்லே. இருவருக்கும் கண்கள் கலங்கின. பிறகு நேதாஜி 'நீங்கள் விரும்பினுல் என்னேடு வரலாம்' என்ருர்.

'சரி' என்றேன் நான்.

சில வினுடிகளுக்குப்பின்னர் நேதாஜி, ''ஆனுல், நீங்களும் வந்தால் சந்தேகத்திற்கு இடமாகும். அத்துடன் நீங்கள் இங்கே செய்ய வேண்டிய வேலே களுமுண்டு'' என்ருர்.

''நீங்கள் இங்கிருந்து முதலில் எவ்விடத்திற்குச் செல்லப்போகிறீர்கள்?'' என்று கேட்டேன்.

''பாங்காக்கிற்குச் சென்று, அங்கிருந்து நிலேமை களேத் தெரிந்துகொண்டு; பின்னர் மேலே செல்லு வேன். செல்ல இயலாத பட்சத்தில் சிங்கப்பூருக்குத் திரும்பிவிடுவேன்'' என்ருர். பிறகு தேசிய சம்பந்தமான சில விஷயங்கள் பேசினேம். கடைசியாக இருவரும் ஜாமம் 11-30 மணி அளவில் பிரிவதற்கு முன்னர் நேதாஜி,

'என்னுடைய விஷயங்கள் உங்களிடம் மாத்திரமே இருக்கட்டும். உங்களுடைய பிராண நண்பர்களிடங்கூட எதுவும் சொல்லக் கூடாது. நாளே (16–8–45) அதி காலேயில் தங்களுக்கு ஏதேனும் புதிய கருத்துக்கள் தோன்றினுல் வாருங்கள், இல்லாவிடில், தேவையில்லே' என்று கூறிமுடித்தார். இதற்குப் பிறகு இருவரும் பேசிக் கொள்ள நாவெழவில்லே. குரல் கம்மியது. ஸ்பர்ஸத்தி னுல் மாத்திரம் தழுவிக்கொண்டு பிரிந்துவிட்டோம்.

மறு நாட்காலே சுமார் 8-30 மணியளவில் நேதாஜி பிளேனில் புறப்பட்டுவிட்டார். கர்னல் ஹபிபுர்ரஹ்மான், கர்னல் பிரிதம் சிங், எஸ். ஏ. ஐயர் மூவரும் அவருடன் கூடச் சென்ருர்கள். அன்று மதியம் நேதாஜி தைப் பிங்கில் இறங்கி, ஜப்பான் பிரதம தளபதியைச் சந்தித்து விட்டு, அன்று சாயந்திரம் பேங்காக் சேர்ந்தார். அங்கிருந்து 17-ந் தேதி மதியம் புறப்பட்டு செய்கோன் சேர்ந்தார். அதன்பின் எவ்விதச் செய்தியும் கிடைக்க வில்லே. 20-8-45 அன்று கிடைத்தது, மரணச் செய்தி தான்!

அறிக்கை 17-ந் தேதியிட்டு, 20-ந்தேதி பத்திரிகை களில் வேண்டுமென்றே தாமதமாக வெளியிடப்பட்டது. நேதாஜி அவர்கள் சிங்கையிலேயே இருக்கிருரென்ற அபிப்பிராயத்தை உண்டுபண்ணவே அவ்வாறு செய்யப் பட்டது. நேதாஜியே அவ்வறிக்கையில் கையெழுத் திட்டிருந்தார். அது அவர் புறப்படும் முன்னர் எழுதப் பட்டது.

ஜெய்ஹிந்த். பிரமச்சாரி கைலாசம்.



பிழைதிருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
60	20	ஆயுத சின்பீன்	ஆயுதந் தாங்கிய சின்பீன்.
62	12	தெரிவித்	தெரிவித்துக்
77	14	ஐயோ	ஐயா!
113	13	விஷயம்	விஜயம்
162	17	ஆஸாத்	ஆஸாத் ஹிந்த்
166	5	கூறி	கூடி
229	10	ஞாபகமற்ற	ஞாயமற்ற
250	29	1936.	1945.
165	6	மட்டுமல்ல.	என்பதோடு ஆஸாத் ஹிந்த் பௌஜின் பிரதம சேனாதிபதியுமாவார் என்பதையும் சேர்த்துக்கொள்ள வேண்டுகிறோம்.

இந்நூல் கிடைக்குமிடம் :

கு. மு. முத்துராமன்

குன்னக்குடி

(ராமநாதபுரம் ஜில்லா)

The South India Press, Karaikudi-1.